©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price: Rs. 55.20 Paise.

# தமிழ்நாடு அரசிதழ்

## சிறப்பு வெளியீடு ஆணையின்படி வெளியிடப்பட்டது.

No. 379A] சென்னை, புதன்கிழமை, செப்டம்பர் 16, 2020
ஆவணி 31, சார்வரி, திருவள்ளுவர் ஆண்டு-2051

## பகுதி IV—பிரிவு 1

### தமிழ்நாடு சட்டமுன்வடிவுகள்

### பொருளடக்கம்

**சட்டமுன்வடிவுகள்:** *பக்கங்கள்.*

எண் 29/2020 தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். 2-4
எண் 30/2020 தமிழ்நாடு நிதி நிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. .. .. .. 5-6
எண் 31/2020 மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளிச் சட்டம் என வழங்கப்படும். .. .. 7-24
எண் 32/2020 தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. 25-26
எண் 33/2020 சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. .. .. .. 27-28
எண் 34/2020 தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. 29-30
எண் 35/2020 தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. 31-34
எண் 36/2020 தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. 35-38
எண் 37/2020 தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. 39-42
எண் 38/2020 தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. 43-44
எண் 39/2020 தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்தச்) சட்டம் என்று வழங்கப்பெறும். .. .. .. .. 45-48
எண் 40/2020 தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. .. .. .. 49-50
எண் 41/2020 தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டம் என வழங்கப்பெறும். .. 51-64
எண் 42/2020 அண்ணா பல்கலைக் கழகச் சட்டம் என வழங்கப்பெறும். .. .. 65-106
எண் 43/2020 அண்ணா பல்கலைக் கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. 107-112
எண் 44/2020 தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். .. .. .. 113-120
எண் 45/2020 தமிழ்நாடு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளைச் சட்டம் என்று வழங்கப்பெறும். .. .. .. .. 121-130
எண் 46/2020 தமிழ்நாடு மதிப்புக் கூட்டுவரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். .. 131-132
எண் 47/2020 தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டம் என வழங்கப்பெறும். .. 133-138

**2020–ஆம்** ஆண்டு செப்டம்பர் திங்கள் **16–ஆம்** நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130–ஆம்** விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 29/2020

### 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழஙகல் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்ட மன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

1. (1) இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2018 ஆம் ஆண்டு மே 27 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

12 ஆம் பிரிவிற்கான திருத்தம்

தமிழ்நாடு சட்டம் XX / 1951

2. 1951 ஆம் ஆண்டு தமிழ் நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 12–ஆம் பிரிவில், (3) ஆம் மற்றும் (3–a)–ஆம் உட்பிரிவுகளுக்காக பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் அதாவது:–

‘‘(3). (1)–ஆம் உட்பிரிவில், ‘‘ குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உறுப்பினர்களும், மாநில அரசினால் உருவாக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு ஒரு மாதத்திற்கு இருநூற்று ஐம்பது ரூபாய் வாடகை செலுத்துவதன்பேரில் ஒரு அடுக்குக் குடியிருப்பின் ஒதுக்கீட்டிற்கு உரிமையுடையவராகுதல் வேண்டும்’’.

12.E–எனும் புதிய பிரிவினைப் புகுத்துதல்

3. முதன்மைச் சட்டத்தின் 12–D ஆம் பிரிவுக்கு பின்பு பின்வரும் பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

**“12–E முன்னாள் உறுப்பினர்களுக்கு விடுதி இடவசதி.**– சட்டமன்றப் பேரவை அல்லது சட்டமன்ற மேலவையின் உறுப்பினராக இருந்த அனைத்து நபரும், மாநில அரசினால் உருவாக்கப்பட்ட விதிகளினால் தீர்மானிக்கலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் விதிகளில் வகுத்துரைக்கலாகிறவாறான அத்தகைய வீதங்களில் வாடகையைச் செலுத்துவதன் பேரில் விடுதியில் இடவசதிக்கு உரிமையுடையவராகுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** சென்னையில் சுதந்திர தின விழாவில் மற்றும் குடியரசு தின விழாவில் கலந்துகொள்வதற்காக பணம் செலுத்தாமலேயே இலவசமாக விடுதியில் இடவசதி வழங்குதல் வேண்டும்.

**நோக்க — காரண விளக்க உரை**

சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்காக, 2018 மே 27 அன்று தனி விடுதி ஒன்றினை அரசானது திறந்துள்ளது. மேலும், 2018 ஜூலை 5 அன்று சட்டமன்றப் பேரவையின் முன்னதாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள், சென்னையில் சுதந்திர தின மற்றும் குடியரசு தின விழாக்களில் வருகை புரிவதற்காக சட்டமன்றப் பேரவை மற்றும் சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினர்களுக்கு வாடகையில்லா விடுதி வசதி வழங்கப்படுதல் வேண்டுமென அறிவித்துள்ளார். எனவே, அரசானது, 1951 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்குதல் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் XX/1951) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**எடப்பாடி கே. பழனிசாமி,**
*முதலமைச்சர்.*

சென்னை,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/2020

**2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (இரண்டாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 16/2003.

4–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 2003–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமைச் சட்டத்தின் 4– ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில் (b) ஆம் கூறிற்காக பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும் ;– அதாவது

(b) ‘‘மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டில் நிதிநிலை பற்றாக்குறை விகிதத்தை 2022–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31–ஆம் தேதி வாக்கில் மூன்று விழுக்காட்டளவிற்கு மிகாதவாறு வைத்திருந்து அதன் பின்னர் அதே நிலையில் அதனைப் பின்பற்றுதல் வேண்டும் ;’’.

**நோக்கக் காரண விளக்கவுரை**

கோவிட் 19 பேரிடர் திடீர் தோன்றலின் காரணமாக மாநிலத்தின் வருவாய் திரட்டுதலில் கடுமையான குறைப்பு மற்றும் செலவின பெருக்கத்தின் விளைவாக, 2020–2021 ஆம் ஆண்டின் மாநிலத்தின் செலவின பொறுப்புகளுக்கு நிதி வழங்குவதற்காக மாநில மொத்த உற்பத்தி மதிப்பீட்டின் 2 விழுக்காடு வரை கூடுதல் கடன்களின் கட்டுப்பட்ட மற்றும் கட்டுப்படாத பகுதிக்கு நாடுவதற்கு முன்பு மாநில அரசுகள் மாநில நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை மற்றும் வரவு செலவுத் திட்ட மேலாண்மைச் சட்டத்தினை திருத்தம் செய்ய வேண்டுமென மைய அரசானது ஆணையிட்டது. எனவே அரசானது, நிதிநிலை பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் இலக்கினை எட்டுவதற்கான காலத்தை நீட்டிப்பதற்காக, 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 16/2003) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன நோக்கத்தினை எய்த விழைகிறது.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*துணை முதலமைச்சர்.*

சென்னை,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2020

சட்டத்துறையால் தயாரிக்கப்பட்ட வரைவு சட்ட முன்வடிவு

தமிழ்நாடு மாநிலத்தில் பொருளியல், அதனுடன் தொடர்புடைய பாடங்கள் மற்றும் மேலாண்மை துறைகளில் சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிறுவனத்தினை பதிவு செய்தல் மற்றும் அதைச் சார்ந்த அல்லது அதனுடன் தொடர்புடைய சில பிற பொருட்கூறுகளுக்கும் வழங்குதலுக்கான ஒரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்ற பேரவையால் பின்வருமாறு இயற்றப்படுவதாகுக :–

**அத்தியாயம்**– 1

**முன்னுரை**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளிச் சட்டம் என வழங்கப்படும்.

(2) இது, மாநில அரசு அறிக்கை வாயிலாக குறிக்கப்படலாகும் அத்தகைய நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. இச்சட்டத்தின் தருவாய் வேறுபொருள் குறித்தாலன்றி:–

வரையறைகள்.

(a) "கல்வி மன்றம்" என்பது , 20 ஆம் பிரிவின் படி அமைக்கப்பட்ட கல்வி மன்றம் என்று பொருள்படும்;

மையச் சட்டம் 52/1987.

(b) "ஏஐசிடிஇ" என்பது, 1987 ஆம் ஆண்டு அனைத்து இந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் படி நிறுவப்பெற்ற அனைத்து இந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றம் என்று பொருள்படும்;

(c) " குறிக்கப்பட்ட நாள்" என்பது, இச்சட்டத்தின் தொடக்கத்திற்காக குறிக்கப்பட்ட நாள் என்று பொருள்படும்;

(d) "அதிகாரஅமைப்புகள்" என்பது, நிறுவனத்தின் அதிகார அமைப்புகள் என்று பொருள்படும் ;

(e) "பொது நிதி மையம் " என்பது, பொது நிதி மற்றும் அதனோடு தொடர்புடைய பாடங்களில் கல்விசார் படிப்புகள் மற்றும் ஆராய்ச்சி நடைபெறும் நிறுவனத்தின் மையம் ஒன்று என்று பொருள்படும்;

(f) " புல முதல்வர்" என்பது, நிறுவனத்தின் மையம் அல்லது பள்ளியின் துறையின் தலைவர் அல்லது அவர் இல்லாதிருந்தால் அவ்வாறு செயல்படும் நோக்கத்திற்காக அமர்த்தப்பட்ட நபர் என்று பொருள்படும்;

(g) "துறை" என்பது, நிறுவனத்தின் ஆய்வுக்கான துறை ஒன்று என்று பொருள்படும் மற்றும் ஆய்வுக்கான மற்றும் ஆராய்ச்சிக்கான மையத்தை உள்ளடக்கியது;

(h) "பணியாளர்" என்பது, நிறுவனத்தால் அமர்த்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும், மற்றும் நிறுவனத்தின் ஆசிரியர் அல்லது ஊழியர்களின் பிற உறுப்பினர் எவரையும் உள்ளடக்கியது;

(i) "செயலாட்சி மன்றம்" என்பது, 19 ஆம் பிரிவின் படி அமைக்கப்பட்ட செயலாட்சி மன்றம் என்று பொருள்படும்;

(j) "புலப் பேராசிரியர்" என்பது, நிறுவனத்தின் புலப் பேராசிரியர் என்று பொருள்படும்;

(k) "ஆட்சிக்குழு" என்பது, 18 ஆம் பிரிவின் படி அமைக்கப்பட்ட ஆட்சிக் குழு என்று பொருள்படும்;

(l) "அரசு" என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

(m) "விடுதி" என்பது, நிறுவனத்தால் பேணப்பட்ட அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனத்தின் மாணவர்களுக்கான குடியிருப்பு ஒரு அலகு என்று பொருள்படும்;

(n) "நிறுவனம்" என்பது, மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளி, சென்னை என்று பொருள்படும்;

(o) "வகுத்துரைக்கப்பட்டது" என்பது, சட்டங்கள் மற்றும் அவசரச் சட்டங்களால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(p) "தகுதித் தேர்வு" என்பது, நிறுவனத்தின் படிப்பு எதற்கும் அனுமதிக்காக விண்ணப்பிக்க, கல்வி மன்றத்தால் நிபந்தனையாகக் குறிப்பிடப்படலாகும் அத்தகைய மதிப்பெண்களுடன் தேர்ச்சி பெற வேண்டிய சோதனை அல்லது தேர்வு என்று பொருள்படும்;

(q) "ஒழுங்கு முறை அமைப்பு" என்பது, உயர்கல்வியின் தரங்களை பேணுதலுக்காக உருவாக்கப்பட்ட பல்கலைகழக மானியக் குழு, அனைத்து இந்திய தொழில் நுட்பக் கல்வி மன்றம் போன்ற அத்தகைய அமைப்பு என்று பொருள்படும் மற்றும் உள்ளடங்கும்;

(r) "சங்கம்" என்பது, 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் படி பதிவு செய்யப்பட்ட மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளி என்று பொருள்படும்; தமிழ்நாடு சட்டம் 27/1975.

(s) "நிலைச் சட்டங்கள்" மற்றும் "அவசர விதிகள்" என்பது, இச்சட்டத்தின் படி முறையே அமைக்கப்பட்ட நிலைச் சட்டங்கள் மற்றும் அவசர விதிகள் என்று பொருள்படும்;

(t) "மாணவன்" என்பது, நிறுவனத்தின் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட ஒரு மாணவன் என்று பொருள்படும்;

(u) "ஆசிரியர்கள்" என்பது, பேராசிரியர்கள் உட்பட மதிப்புறு / மாண்பமை / தொடரடை பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள் / உதவிப் பேராசிரியர்கள் அல்லது அதன்பொருட்டு நெறிமுறைகளை பயிற்றுவிக்க நிறுவனத்தால் பணியமர்த்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்;

(v) "யுஜிசி" என்பது, 1956 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானியக்குழு சட்டத்தின் 4 ஆம் பிரிவின்படி நிறுவப்பட்ட பல்கலைக்கழக மானியக்குழு என்று பொருள்படும்; மையச் சட்டம் 3/1956.

**அத்தியாயம்–II**

**நிறுவனம்**

நிறுவனத்தினைப் பதிவு செய்தல்.

**3.** **(1)** குறிக்கப்பட்ட நாளில் மற்றும் அதிலிருந்து, மெட்ராஸ் பொருளாதாரப் பள்ளியானது அதே பெயரைக் கொண்ட கூட்டாண்மை அமைப்பாகுதல் வேண்டும்.

**(2)** நிறுவனமானது, இச்சட்டத்தின் வழிவகைகளுக்குட்பட்டு சொத்தினை அடைவதற்கும் மற்றும் வைத்துக் கொள்வதற்கும், ஒப்பந்தம் செய்வதற்கும் இச்சட்டத்தின் நோக்கத்திற்குத் தேவையான அத்தகைய பிறவற்றை செய்தலுக்கான அதிகாரங்களுடன் கூடிய தொடர்ந்த நிலைப்பாடு மற்றும் குறிப்பிட்ட இலச்சினையும் கொண்டிருக்கும் மற்றும் கூறப்பட்ட பெயரால் வழக்கிடுதலும் மற்றும் வழக்கிடப்படுதலும் வேண்டும்.

**(3)** நிறுவனமானது, வட்டார மையங்கள், கூடுதல் வளாகங்கள் மற்றும் கல்வி மையங்களை பல்கலைக்கழக மானியக்குழு மற்றும் பிற முறைப்படுத்துதல் அமைப்புகளின் விதிகளுக்குட்பட்டு இம்மாநில அரசானது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய இடங்களில் நிறுவலாம்.

**(4)** தமிழ்நாடு, சென்னையில் நிறுவனத்தின் தலைமையகம் இருத்தல் வேண்டும்.

நிறுவனத்தின் நோக்கங்கள்

**4.** **(1)** நிறுவனத்தின் நோக்கங்களானவை:

a) தேசிய வளர்ச்சியில் ஒரு பங்கு வகிப்பதற்காக பொருளியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாடங்களில் மற்றும் மேலாண்மை பாடத்தில் கல்வி மற்றும் அறிவினை மேம்படுத்துதல் மற்றும் பரப்புதல்;

b) பொருளியல், அதன் தொடர்பான பாடங்கள் மற்றும் மேலாண்மை பாடங்களை முன்னிறுத்திய உயர்கல்வி துறையில் உலகளாவிய புகழ்பெற்ற சீர்மிகு நிறுவனம் ஆக்குதல்;

c) கற்பித்தல், ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் கொள்கை பரப்புதலுக்கான மேம்பட்ட மையமாக நிறுவனத்தை வளரச் செய்தல்;

d) கொள்கை உருவாக்குபவர்கள் மற்றும் பொது மற்றும் தனியார் துறையிலிருந்து பிறருக்கான பயிற்சித் திட்டங்களை மேற்கொள்ளுதல்;

e) பொருளியல், அதனுடன் தொடர்புடைய பாடங்கள் மற்றும் மேலாண்மை துறைகளில் ஆலோசனை வழங்குதல் மற்றும் ஆதரவு பெற்ற திட்டங்களை ஏற்றுக் கொள்ளுதல்;

f) மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சி வல்லுநர்களில், உயர்கல்வித் துறையில் சமுதாயத்தில் பெரிய அளவில் சேவை செய்யும் பொறுப்புணர்வை வளர்த்தல் மற்றும் அறிவு வளரச் செய்ய சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், கலந்தாய்வுகள் மற்றும் மாநாடுகளை ஏற்பாடு செய்தல் மற்றும் சமுதாய வளர்ச்சிக்கான திறமை வாய்ந்த கருவிகளாக பொருளாதார உத்திகளை அமைத்தல்;

g) தேர்வுகளை நடத்துதல் மற்றும் பட்டங்கள் அல்லது பிற கல்வி சிறப்பு தகுதிகளை வழங்குதல்;

h) சமுதாய மற்றும் பொருளாதார வளர்ச்சியினை பொறுத்தவரையில், ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்காக அத்தகைய அனைத்து நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் அத்தகைய அனைத்து கல்வி நடவடிக்கைகளை நடத்த மற்றும் தேவையெனக் கருதும் அத்தகைய பிற கல்வி செயல்களை மேற்கொள்ளுதல்; மற்றும்

i) பொருளாதாரம், மேலாண்மை, கல்வி மற்றும் தொடர்புடைய அம்சங்களின் துறைகளில் அவ்வப்போது, மாநில அரசு அல்லது மைய அரசு அல்லது பிற அரசு முகமைகள் பொது அல்லது தனியார் கூட்டாண்மை அமைப்புகளால் ஒப்படைக்கப்படலாகும் பணிகளை எடுத்துக்கொள்ளுதல்.

நிறுவனத்தின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்.

**5.** நிறுவனம் பின்வரும் அதிகாரங்களை செயலாக்கம் செய்யலாம் மற்றும் பின்வரும் செயல்பாடுகளை நிறைவேற்றலாம், அதாவது:—

a) நிறுவனத்தின் நோக்கங்களை மேற்கொள்ள தேவைப்படலாகும் ஆராய்ச்சி, கல்வி மற்றும் நெறிமுறைகளுக்கான அத்தகைய மையங்களை நிர்வகித்தல் மற்றும் மேலாண்மை செய்தல்;

b) நிறுவனமானது அவ்வப்போது தீர்மானிக்கலாகும் அத்தகைய கல்விக்கான பிரிவுகளில் நெறிமுறைகளை வழங்குதல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத்திற்கான வழிவகைகளை ஏற்படுத்துதல் மற்றும் அறிவு மற்றும் திறமைகளை செயற்படுத்துதல்;

c) பொருளியல் கல்வி மற்றும் தொடர்புடைய பாடங்கள் மற்றும் மேலாண்மை படிப்புகளை வளாகத்திற்குள், வளாகத்திற்கு வெளியேயான மற்றும் துணை மையங்கள் அல்லது தொலைதூர கல்வித் திட்டங்கள் மூலம் பயிற்றுவித்தல் மற்றும் வளரச்செய்தல்;

d) கல்வி வல்லுநர்கள் மற்றும் கல்வியில் சிறப்புடையவர்களை மாண்பமை பேராசிரியராக அலங்கரித்து நன்மதிப்பளித்தல்;

e) நிறுவனம் தீர்மானக்கலாகும் மற்றும் அளிக்கலாகும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு, பட்டயங்கள், சான்றிதழ்கள், பட்டங்கள் அல்லது பிற கல்வி சிறப்புத் தகுதிகளை தேர்வுகள், மதிப்பாய்வு அல்லது பிற சோதனை முறைகள் எவற்றின் அடிப்படையில் வழங்குதல் மற்றம் நல்ல மற்றும் போதுமான காரணங்களுக்காக அத்தகைய பட்டயங்கள், சான்றிதழ்கள், பட்டங்கள் அல்லது பிற கல்வி சிறப்புத் தகுதிகளை திரும்பப் பெறுதல்;

f) அவசர விதிகளில் விதிக்கப்பட்டுள்ள முறையில் மாண்பமை பட்டங்கள் அல்லது சிறப்புத் தகுதிகளை நபர்களுக்கு அளித்தல்;

g) நிறுவனத்தின் உறுப்பினர்களல்லாத நபர்களாக தீர்மானிக்கப்படலாகும் அத்தகைய நபர்களுக்கு அஞ்சல்வழி மற்றும் அத்தகைய பிற படிப்புகள் உட்பட கல்வி மற்றும் பயிற்சி அளித்தல்;

h) நிருவாக, அமைச்சுப்பணி மற்றும் பிற பணியிடங்களை உருவாக்குதல் மற்றும் அதற்கு பணியமர்த்தம் செய்தல்;

i) பார்வையிடும் பேராசிரியர்கள், மாண்பமை பேராசிரியர்கள், ஆலோசகர்கள், ஆய்வாளர்கள், அறிஞர்கள், கலைஞர்கள், படிப்பு எழுத்தாளர்கள் மற்றும் நிறுவனத்தின் நோக்கங்களின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கலாகும் அத்தகைய பிற நபர்களை ஒப்பந்த அடிப்படையில் அல்லது பிற வகையில் பணி அமர்த்தம் செய்தல்;

j) பிற பல்கலைக்கழகங்கள் அல்லது அமைப்புகள் எதிலும் பணிபுரியும் சிறப்புடைய நபர்களை நிரந்தரமாக அல்லது குறிப்பிட்ட கால அளவிற்கு பணி அமர்த்துதல் அல்லது பணியில் ஈடுபடுத்துதல்;

k) இந்தியாவில் அல்லது வெளிநாட்டில் உள்ள பிற பல்கலைக்கழகம் அல்லது அதிகார அமைப்பு அல்லது நிறுவனம் எவற்றுடனும் நிலைச் சட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அத்தகைய முறையில் மற்றும் அத்தகைய நோக்கங்களுக்காக கூட்டமைத்தல், ஒத்துழைத்தல் மற்றும் சேர்தல்;

l) நிறுவனத்தின் கருத்துப்படி அதன்நோக்கங்களை மேற்கொள்ள தேவையான ஆராய்ச்சி மற்றும் நெறிமுறைகளுக்கான பள்ளிகள், மையங்கள், சிறப்பு ஆய்வகங்கள் அல்லது பிற அமைப்புகளை நிறுவுதல் மற்றும் பேணுதல்;

m) தகுதிவாய்ந்த மாணவர்களுக்கு ஆய்வுதவிகள், படிப்புதவித்தொகை, மாணவருதவித் தொகைகள், பதக்கங்கள் மற்றும் பரிசுகளை நிறுவுதல் மற்றும் வழங்குதல்;

n) மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் வசிப்பிடங்கள், விடுதிகளை நிறுவுதல், பேணுதல் மற்றும் கண்காணித்தல் மற்றும் உடல்நல மற்றும் பொதுநல நடவடிக்கைகளை வளரச் செய்தல் மற்றும் மாணவர்களுக்கான வசிக்கும் இடங்களை அங்கீகரித்தல்;

o) ஆராய்ச்சி மற்றும் கலந்தாய்வுக்கு வழிவகைகள் செய்தல் மற்றும் அந்த நோக்கத்திற்காக பிற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் நிறுவனம் தேவையெனக் கருதலாகும் அத்தகைய ஏற்பாடுகளை பதிவு செய்தல்;

p) நிலைச்சட்டங்களுக்கிணங்கி நேர்வுக்கேற்ப, ஒரு மையத்தை, ஒரு நிறுவனம், துறை அல்லது பள்ளியென விளம்புகை செய்தல்;

q) தேர்வு மதிப்பீடு அல்லது பிறவகை சோதனை எதையும் உள்ளடங்கி நிறுவனத்திற்குள் சேர்க்கைக்கான தரங்களை தீர்மானித்தல்;

r) கட்டணங்கள் மற்றும் பிற செலவுகளின் செலுத்துதலை வகுத்துரைத்தல், கேட்டல் மற்றும் பெற்றுக் கொள்ளுதல்;

s) பெண்கள் மற்றும் பிற குறைபாடுள்ள மாணவர்களின் வசிப்பிடம், ஒழுக்கம் மற்றும் கற்பித்தல் தொடர்பாக நிருவாகம் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்தல்;

t) பணியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு இடையேயான ஒழுக்க நெறிகளை ஒழுங்குபடுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் மற்றும் நிறுவனத்தால் அவசியமெனக் கருதலாகும் ஒழுங்கு நடவடிக்கையை எடுத்தல்;

u) படிப்புக்கு வெளியே கற்பித்தல் மற்றும் விரிவாக்க சேவைகளை அமைத்தல் மற்றும் மேற்கொள்ளுதல்;

v) நிறுவனம் அதன் நோக்கங்களை மேற்கொள்ளத் தேவையெனக் கருதுகிறவாறான அத்தகைய சிறப்பு மையங்கள், தனித்தன்மை வாய்ந்த ஆய்வு மையங்கள் அல்லது ஆராய்ச்சி மற்றும் நெறிமுறைகளுக்கான பிற அலகுகளை நிறுவுதல்;

w) நிறுவனத்திற்குத் தேவையான பேராசிரியர் பணிகள், இணைப் பேராசிரியர் பணிகள், உதவிப் பேராசிரியர் பணிகள் மற்றும் பிற கற்பித்தல், கல்வி அல்லது ஆராய்ச்சிப் பணிகளை நிறுவுதல்;

x) நிறுவனத்தின் நோக்கங்களுக்காக மற்றும் நோக்கங்களுக்கு உறுதுணையாகும் மானியங்கள், அறக்கட்டளை நிதியங்கள், பங்குத் தொகைகள், அன்பளிப்புகள் மற்றும் பரிசுகளைப் பெற்றுக் கொள்ளுதல்;

y) ஆட்சிக்குழுவின் முந்தைய ஏற்புடன், நிறுவனத்தின் நலத்திற்காக அசையும் அல்லது அசையாச் சொத்து எதையும் அடைய, வைத்துக்கொள்ள, மேலாண்மை செய்ய மற்றும் விற்பனை செய்தல்;

**வரம்புரையாக:** அரசு வழங்கிய எந்த நிலத்தையும் அரசின் முன் அனுமதியின்றி விற்பனை செய்தல் கூடாது:

z) ஆட்சிக்குழுவின் ஏற்புடன், பிணையமின்றி அல்லது நிறுவனத்தின் சொத்துக்கு எதிராக பிணையம் அல்லது அடைமானம் முறையில் பணக் கடன் வாங்குதல்;

aa) நிறுவனத்தின் நோக்கங்கள் அனைத்திற்கும் அல்லது எதற்கும் தேவைப்படும், இடைநிகழும் அல்லது அடைதலுக்கு இணங்கலாகும் அனைத்து அத்தகைய பிற செயல்களையும் பொருட்களையும் செய்தல்;

**6.** நிறுவனம் சுயநிதி நிறுவனமாகுதல்: மானியங்கள்.

வரம்புரையாக: தேவையெனக் கருதலாகும் குறிப்பிட்ட நோக்கம் எதற்காகவும் உதவி நல்கை அல்லது பிற நிதியுதவி அரசு ஒப்பளிக்கலாம்.

7. **(1)** நிறுவனமானது, இச்சட்டத்திற்கு மற்றும் பல்கலைக்கழக மானியக்குழுவின் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குமுறை நெறிகளுக்குட்பட்டு நேர்வுக்கேற்ப இனம், சமயம், சாதி அல்லது வகுப்பு அல்லது மதத்தைப் பொருட்படுத்தாமல் அனைத்து நபர்களுக்கும் பொதுவாக்குதல் வேண்டும். சேர்க்கை மற்றும் தரங்கள்.

**(2)** நிறுவனத்தின் பட்டங்கள் அல்லது தலைமைகள் அல்லது பட்டயங்களுக்கான தேர்வுகளின் சேர்க்கைக்காக நிறுவனத்தின் படிப்புக்கு பின்வரும் நபரெவரும் அனுமதிக்கப்பட மாட்டார்.

(i) அதற்கென வகுத்துரைக்கப்பட்ட தேர்வில் அவர் தேர்ச்சியடையாதிருந்தால்; மற்றும்

(ii) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற கல்வி நிபந்தனைகளை நிறைவேற்றாதிருந்தால்.

**(3)** **(1)** மற்றும் **(2)** உட்பிரிவுகளில் அடங்கிய எதுவும்,–

a) வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதி அல்லது தரத்தை பெற்றிருக்காத நபர் எவரையும் படிப்புப் பிரிவில் அனுமதித்தல்;

b) ஒரு பட்டம் அல்லது பிற கல்வி சிறப்புத் தகுதிகளை வழங்குவதற்கு தேவையான குறைந்தபட்ச தரத்திற்கு குறைவான கல்வி பதிவுரு கொண்ட மாணவர் எவரையும் நிருவாகத்தின் பட்டியலில் வைத்திருத்தல்;

c) நிருவாகத்தின் உறித்தமுடைமை அல்லது பிற மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளுக்கு முரணான நடத்தை கொண்டிருக்கும் நபர் எவரையும் அனுமதித்தல் அல்லது மாணவர் எவரையும் வைத்திருத்தல்; மற்றும்

d) படிப்பிற்கு வகுத்துரைக்கப்பட்ட தேவையான கட்டணங்களை செலுத்தத் தவறிய மாணவர் எவரையும் நிறுவனத்தின் பட்டியலில் வைத்திருத்தல் ஆகியவற்றை நிறுவனத்திடம் வேண்டக் கூடாது.

**(4)** **(1)**, **(2)** மற்றும் **(3)** ஆம் உட்பிரிவுகளின் வழிவகைகளுக்கு மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் நிறுவனத்தின் நிலையான சேர்க்கை நடைமுறைகளுக்குட்பட்டு, தமிழ்நாட்டை வசிப்பிடமாகக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு ஒவ்வொரு படிப்புப் பிரிவிலும் முப்பத்தைந்து விழுக்காடு இடங்களை நிறுவனம் இட ஒதுக்கீடு செய்தல் வேண்டும்.

**(5)** **(4)** ஆம் உட்பிரிவின் படி தமிழ்நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட மாணவர்களுக்காக, ஒதுக்கீடு செய்யப்பட்ட முப்பத்தைந்து விழுக்காடு இடங்களுக்கு மாணவர்களின் சேர்க்கையானது, நடைமுறையிலுள்ள சட்டத்தின்படி பின்பற்றப்படுகிற இடஒதுக்கீட்டின் படி ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

விளக்கம் – இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ''தமிழ்நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட மாணவர்கள்'' என்பது –

i. தகுதித் தேர்வுக்கு முன்னதாக, ஐந்தாண்டுகளுக்குக் குறையாததொரு கால அளவிற்கு தமிழ்நாடு மாநிலத்தில் குடியிருந்து வருகிற ஒரு மாணவர் அல்லது அவரின் பெற்றோரின் ஒருவர்; அல்லது

ii. தகுதித் தேர்வுக்குச் செல்லும் ஐந்தாண்டுகளுக்கு குறையாததொரு கால அளவிற்கு, தமிழ்நாடு மாநிலத்தில் ஏதேனுமொரு கல்வி நிறுவனத்தில் படித்து வருகிற ஒரு மாணவர்.

(6) (4) மற்றும் (5) ஆம் உட்பிரிவுகளில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், சேர்க்கைக்காக, தமிழ்நாட்டை வசிப்பிடமாகக் கொண்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாதவிடத்து, அத்தகைய மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்கள், தகுதியின் பேரில் மீதமுள்ள மாணவர்களால் நிரப்பப்படும்.

தேர்வுகளுக்கான சேர்க்கை

8. (1) நிறுவனத்தினால் நடத்தப்படும் தேர்வு ஒன்றிற்காக, ஒவ்வொரு தேர்வு நாடுநரும், கல்விக்குழுவின் பரிந்துரையின் பேரில் செயலாட்சி மன்றத்தினால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சிறப்பாணையினால் இந்த உட்பிரிவின் வழிவகைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டாலன்றி, நிறுவனத்தின் உறுப்பினராக பெயர் பதிவு செய்தல் வேண்டும். செயலாட்சி மன்றம் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய வரையறைகளுக்குட்பட்டு, ஏதேனும் அத்தகைய விலக்களிப்பானது ஏற்படுத்தப்படலாம்.

(2) கல்விக் குழுவின் பரிந்துரையின் பேரில், நிறைவேற்றப்பட்ட, செயலாட்சி மன்றத்தின் ஆணை ஒன்றினால், அவர் நிறுவனத்தின் உறுப்பினராக பெயர் பதிவு செய்தும், அதற்காக தேவைப்படுகிற வருகைப் பதிவு போன்ற தேவைகளில் மனநிறைவடைந்தாலன்றி அல்லது அத்தகைய பெயர் பதிவு செய்தலுக்கான தேவைகள் அல்லது வருகை அல்லது இரண்டிலிருந்தும் அவர் விலக்களிக்கப்பட்டாலன்றி தேர்வு நாடுநர், நிறுவனத்தினால் நடத்தப்படும் ஏதேனும் தேர்விற்கு அனுமதிக்கப்பட மாட்டார். இந்த பிரிவின் கீழ் வழங்கப்பட்ட விலக்களிப்பு எதுவும், செயலாட்சி மன்றம் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய வரையறைகளுக்குட்பட்டதாகும்.

(3) தேர்வு ஒன்றிற்காக, தேர்வுக் கட்டுப்பாட்டாளரின் ஆணை ஒன்றினால் நிறுவனத்தின் பட்டியலிலிருந்து பெயர் நீக்கம் செய்யப்பட்ட அல்லது ஓராண்டுக்கும் மேலாக தேர்வெழுதுவதிலிருந்து தடைசெய்யப்பட்ட மாணவர் அல்லது தேர்வு நாடுநர் எவரும் அத்தகைய ஆணையினைப் பெற்ற நாளிலிருந்து பத்து நாட்களுக்குள், இயக்குநரிடம் மேல்முறை செய்யலாம்.

(4) இது தொடர்பாக, இயக்குநரால் எடுக்கப்படும் முடிவு எதுவும் இறுதியானதாகுதல் வேண்டும்.

## அத்தியாயம் – III

## நிறுவனத்தின் அலுவலர்கள்

நிறுவனத்தின் அலுவலர்கள்.

9. பின்வருபவர்கள், நிறுவனத்தின் அலுவலர்களாக இருப்பர், அதாவது:–

a) இயக்குநர்;

b) நிருவாக அலுவலர்;

c) தேர்வுக் கட்டுப்பாட்டாளர்;

d) நிதி அலுவலர்;

e) புலத் தலைவர் (கள்) ; மற்றும்

f) நிறுவனத்தின் அலுவலர்களாக நிலைச் சட்டத்தினால் அறிவிக்கப்படலாகும் நிறுவனத்தின் அத்தகைய பிற அலுவலர்கள்.

இயக்குநர்.

10. (1) இயக்குநர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் ஆட்சிக் குழுவினால் பணியமர்த்தப்படுதல் வேண்டும் மற்றும் மூன்றாண்டுகள் கால அளவிற்கு பதவி வகித்தல் வேண்டும் மற்றும் மேலும் மூன்றாண்டுகள் கால அளவிற்கு மறு பணியமர்த்தத்திற்காக தகுதியுடையவராகுதல் வேண்டும்.

(2) இயக்குநரானவர் பொருளியல், நிதி மேலாண்மை, சமூக அறிவியல், கணிதவியல், புள்ளியியல், வங்கியியல் அல்லது பிற தொடர்புடைய, ஆகிய ஏதேனும் பாடங்களில் நிபுணத்துவமுடைய சிறந்த கல்வியாளராக இருத்தல் வேண்டும்.

(3) இயக்குநரானவர், நிறுவனத்தின் முழு நேர அலுவலராகவும் கல்வித் தலைவராகவும் மற்றும் முதன்மைச்செயல் அலுவலராகவும் இருத்தல் வேண்டும்.

(4) இயக்குநரானவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்துதலும், அத்தகைய பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

இயக்குநரின் பதவி காலியாக உள்ளபோது பணியின் ஏற்பாடுகள்.

11. விடுப்பு, உடல்நலக் குறைவு அல்லது பிறவற்றின் காரணத்தினால் இயக்குநர் இல்லாதிருக்கும் போது, ஆட்சிக் குழுவானது, நிறுவனத்தின் மூத்த பேராசிரியரை அல்லது இயக்குநராக நியமிக்கப்படத் தகுதியுயை ஏதேனும் பிற நபரை இயக்குநரின் அதிகாரங்களைச் செயல்படுத்துவதற்காகவும், கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும் தேவையான ஏற்பாடுகளை ஆட்சிக் குழு உருவாக்கும் வரையில், நிறுவனத்தின் பொறுப்பு வகுக்கக்கூடிய இயக்குநராகப் பணியிலமர்த்தலாம்.

12. (1) நிருவாக அலுவலர், நிறுவனத்தின் முழு நேர சம்பளம் பெறுகிற அலுவலராக இருத்தல் வேண்டும். நிருவாக அலுவலரின் பணியமர்த்தத்தின் நெறிமுறைகளும் பணியின் வரையறைகளும், வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகையவாறு இருத்தல் வேண்டும். நிருவாக அலுவலர்,

(2) நிருவாக அலுவலர், நிறுவனத்தின் சார்பாக உடன்படிக்கையினை ஏற்படுத்த, ஆவணங்களில் ஒப்பிமிட மற்றும் பதிவுறுகளைச் சான்றுறுதியிட அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்துதலும், அத்தகைய பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(3) நிருவாக அலுவலர், செயலாட்சி மன்றம் மற்றும் கல்விக்குழுவின் பதவி வழி செயலாளராக இருத்தல் வேண்டும்.

(4) நிறுவனத்தினால் அல்லது நிறுவனத்திற்கெதிரான அனைத்து வழக்கு மற்றும் பிற சட்ட நடவடிக்கைகளில், வாதுரைகளானது, நிருவாக அலுவலரால் ஒப்பமிடப்படுதலும் ஒப்பாய்வு செய்யப்படுதலும் வேண்டும் மற்றும் அத்தகைய வழக்குகள் மற்றும் நடவடிக்கைகளில் அனைத்து செயல்முறைக் கட்டளைகளும், நிருவாக அலுவலருக்கு வழங்கப்படுதலும் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(5) நிருவாக அலுவலர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்துதலும், அத்தகைய பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

13. (1) தேர்வுக்கட்டுப்பாட்டாளர், நிறுவனத்தின் முழு நேர அலுவலராக இருத்தல் வேண்டும். வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய நெறிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் உட்பட்டு நியமனஞ் செய்யப்படுதல் வேண்டும். தேர்வுக் கட்டுப்பாட்டாளர்.

(2) தேர்வுக் கட்டுப்பாட்டாளர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்துதலும், அத்தகைய பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

14. (1) நிதி அலுவலர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் நியமனஞ் செய்யப்படுதலும், அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்துதலும் அத்தகைய பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும். நிதி அலுவலர்.

15. (1) நிறுவனத்தின் ஒவ்வொரு புலத்திற்காகவும், தொடர்புடைய புலத்தின் முதன்மைக் கல்வி அலுவலராக இருக்கும் ஒரு புலத் தலைவர் இருத்தல் வேண்டும். புலத் தலைவர்.

(2) புலத்தலைவர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் நியமனஞ்செய்யப்படுதலும், அத்தகைய அதிகாரங்களைச் செயல்படுத்துதலும், அத்தகைய பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

16. வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு நிறுவனத்தின் பிற அலுவலர்களின் பணியமர்த்தம் மற்றும் பணிகள் மற்றும் கடமைகளின் விதமானது இருத்தல் வேண்டும். பிற அலுவலர்கள்.

## அத்தியாயம் – IV

## நிறுவனத்தின் அதிகார அமைப்புகள்

17. பின்வருவன, நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகளாக இருத்தல் வேண்டும்:– நிறுவனத்தின் அதிகார அமைப்புகள்.

1) ஆட்சிக் குழு;
2) செயலாட்சி மன்றம்;
3) கல்விக் குழு;
4) நிதிக் குழு;
5) திட்டக் குழு; மற்றும்
6) நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகளாக நிலைச் சட்டத்தினால் அறிவிக்கப்படலாகும் நிறுவனத்தின் அத்தகைய பிற அதிகார அமைப்புகள்.

18. (1) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் சங்கத்தின் ஆளுநர்கள் குழுவினால் ஆட்சிக் குழுவானது அமைக்கப்படுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய ஆட்சிக்குழுவின் உறுப்பினர்களின் பதவிக் காலம் இருத்தல் வேண்டும். ஆட்சிக் குழு.

(2) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, ஆட்சிக் குழு பின்வரும் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:—

a) நிறுவனத்தின் செயற்பாடுகளின் மீது முழு கண்காணிப்பினையும் செயல்படுத்துதல்;

b) நிறுவனத்தின், குழுக்கொள்கை மற்றும் செயல்முறைத் திட்டங்களை, அவ்வப்போது மறு ஆய்வு செய்யவும், நிறுவனத்தின் வேலை, மேம்பாடு மற்றும் வளர்ச்சிக்காக நடவடிக்கைகளை அறிவுறுத்துதல்;

c) நிறுவனத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகளின் மீது தீர்மானங்களை நிறைவேற்றவும் பரிசீலனை செய்யவும் மற்றும் அத்தகைய கணக்குகளின் அறிக்கையை தணிக்கை செய்யவும்;

d) அறிவுரைக்காக அதில் குறிப்பிடப்படலாகும் ஏதேனும் பொருள் குறித்து இயக்குநரிடம் அறிவுறுத்தல்; மற்றும்

e) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற பணிகளை நிறைவேற்றுதல்.

செயலாட்சி மன்றம்.

**19. (1)** செயலாட்சி மன்றம், நிறுவனத்தின் முதன்மை செயலாட்சி அமைப்பாக இருத்தல் வேண்டும்.

**(2)** செயலாட்சி மன்றமானது, பத்து உறுப்பினர்களுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். அதன் மூன்று உறுப்பினர்கள்:—

a) நிதித்துறையை பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி—வழி;

b) திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி—வழி; மற்றும்

c) உயர்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசு செயலாளர், பதவி—வழி;

—ஆக இருத்தல் வேண்டும்.

**(3)** செயலாட்சி மன்றத்தின் மீதமுள்ள ஏழு உறுப்பினர்கள், பொருளியல் மற்றும் தொடர்புடைய பாடங்களின் துறையிலும், மேலாண்மையிலும் சிறந்தவர்களுக்கிடையேயும் நிறுவனத்தின் பேராசிரியர்களுக்கிடையேயும் வகுத்துரைக்கப்படலாகிறவாறான முறையில் நியமிக்கப்படுதல் வேண்டும்.

**(4)** உறுப்பினர்களின் பதவிக் காலமும் செயலாட்சி மன்றத்தின் அதிகாரங்களும், செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

கல்விக் குழு.

**20. (1)** கல்விக்குழு, நிறுவனத்தின் முதன்மை கல்வி அமைப்பாக இருத்தல் வேண்டும் மற்றும் நிலைச் சட்டங்கள் மற்றும் அவசர விதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு, நிறுவனத்தின் கல்விக் கொள்கைகளின் மீது பொதுக் கண்காணிப்பினை ஒருங்கிணைக்கவும், செயல்படுத்தவும் வேண்டும்.

**(2)** கல்விக் குழுவின் அமைப்பு, அதன் உறுப்பினர்களின் பதவிக் காலம் மற்றும் அதன் அதிகாரங்களும், செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

நிதிக் குழு.

**21. (1)** நிதிக் குழு, நிறுவனம் தொடர்புடையவற்றினை கவனித்துக் கொள்ள, நிறுவனத்தின் முதன்மை நிதி அமைப்பாக இருத்தல் வேண்டும்.

**(2)** நிதிக் குழுவின் அமைப்பு, அதன் உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் அதன் அதிகாரங்களும், செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

திட்டக் குழு.

**22. (1)** திட்டக் குழு, நிறுவனத்தின் முதன்மை திட்டமிடும் அமைப்பாக இருத்தல் வேண்டும். திட்டக் குழுவானது, உள்கட்டமைப்பு மற்றும் கல்விக்கான ஆதரவு அமைப்பு, ஒழுங்குமுறை அமைப்புகளின் நெறிமுறைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்தல் வேண்டும்.

**(2)** திட்டக்குழுவின் அமைப்பு, அதன் உறுப்பினர்களின் பதவிக்காலம் மற்றும் அதன் அதிகாரங்களும், செயற்பணிகளும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

பிற குழுமங்கள். குழுக்கள் மற்றும் மன்றங்கள்.

**23.** நிறுவனத்தின் அதிகார அமைப்புகளாக, நிலைச்சட்டத்தினால் அறிவிக்கப்படலாகும் பிற குழுமங்கள், குழுக்கள் மற்றும் மன்றங்களின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் செயற்பணிகளானது, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகையவாறு இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் – V

## நிலைச்சட்டங்கள் மற்றும் அவசர விதிகள்

நிலைச் சட்டங்களைச் செய்வதற்கான அதிகாரம்.

**24. (1)** செயலாட்சி மன்றமானது, ஆட்சிக் குழுவின் ஒப்புதலுக்குட்பட்டு, இந்த சட்டத்தின் நோக்கங்களை மேற்கொள்வதற்காக நிலைச் சட்டங்களை செய்தல் வேண்டும்.

**(2)** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, நிலைச் சட்டங்களானது, பின்வரும் நிறுவனம் ஒன்றிற்கு தொடர்புடைய பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றுள் எதற்கும் வழிவகை செய்யலாம், அதாவது:—

a) அவ்வப்போது அறிவிக்கப்படலாகும் நிறுவனத்தின் அதிகாரஅமைப்புகளுடைய அமைப்பு, அதிகாரங்கள், செயற்பணிகள் மற்றும் கடமைகள்;

b) கூறப்பட்ட அதிகாரஅமைப்பின் உறுப்பினர்களின் பணியமர்த்தம் பதவியைத் தொடர்தல் அல்லது திரும்பப் பெறுதல் அல்லது நீக்குதல், உறுப்பினர்களின் காலியிடங்களை நிரப்புதல் மற்றும் அதிகாரஅமைப்புகளுக்குத் தொடர்புடைய பிற பொருட்பாடுகள் அனைத்தும்;

c) நிறுவனத்தின், அலுவலர்களுடைய பணியமர்த்தம் மற்றும் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் மற்றும் அவர்களின் ஊதியங்கள்;

d) பணியமர்த்தத்தின் முறை மற்றும் ஆசிரியர்கள் பிற கல்வி மற்றும் நிருவாகப் பணியாளர்களின் பணியமர்த்தம் மற்றும் அவர்களின் ஊதியங்கள்;

e) பணியாளர்களின் பணி நிபந்தனையானது, பணியாளர்களின் பணி மூப்பு, அவர்களின் ஊதியம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை போன்றவற்றை உள்ளடக்கியது;

f) பணியாளர்களின் ஓய்வூதிய பலன்கள், காப்பீடுகள் மற்றும் வருங்கால வைப்பு நிதிகளுக்கான வழிவகைகள்;

g) பணியாளர்களின் பணி மூப்பினை நிர்வகிக்கும் கொள்கைகள்;

h) பணியாளர்கள் அல்லது மாணவர்கள் மற்றும் நிறுவனத்திற்கிடையேயான பூசல்களை தீர்ப்பதற்கான நடைமுறை;

i) நிறுவனத்தின் அதிகாரி அல்லது அலுவலர் எவரின் நடவடிக்கைக்கு எதிராக பணியாளர் அல்லது மாணவர் எவராலும் நிர்வாகக் குழுவுக்கு மேல்முறையீடு செய்வதற்கான நடைமுறை;

j) கௌரவப் பட்டங்களை வழங்குதல்;

k) பட்டங்கள் மற்றும் பட்டயங்களை வழங்குவதற்கான பட்டமளிப்பு விழாவினை நடத்துதல் மற்றும் பட்டமளிப்பு விழாவிற்கு முன்னர் அவசரம் ஏற்பட்டால் பட்டப் படிப்பு சான்றிதழ்களை வழங்குதல்;

l) பட்டம், பட்டயம் , சான்றிதழ் அல்லது பிற கல்வி சிறப்பு தகுதிகளை திரும்பப் பெறுதல்;

m) துறைகள், மையங்கள் மற்றும் இதர நிறுவனங்களை நிறுவுதல் மற்றும் ஒழித்தல்;

n) ஆய்வு உதவித்தொகை, கல்வி உதவித்தொகை, மாணவர் உதவித்தொகை, பொருட்காட்சிகள், பதகங்கள் மற்றும் பரிசுகள் போன்றவற்றை நிறுவுதல்;

o) சேர்க்கைகள், நிறுவனத்தின் கட்டண முறைகள் மற்றும் நிறுவனத்தின் சேர்க்கைக்கு பட்டயம், பட்டயங்கள், தேர்வுகளை முறைப்படுத்துதல்;

p) நிறுவனத்தால் சேவைகளுக்காக வழங்கும் சேவைக் கட்டணத்தை வசூலித்தல்;

q) நிறுவனத்தில் ஏற்பட்டு உதவி பெற்ற ஆராய்ச்சி, ஆலோசனை, காப்புரிமை மற்றும் அறிவுசார் சொத்துரிமை, தொடர்ச்சியான கல்வி மற்றும் பிற விரிவாக்க சேவைகளை நிர்வகிக்கும் முறை;

r) நிறுவனத்தின் அலுவலர்கள் அல்லது அமைப்புகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களை ஒப்படைத்தல்;

s) ஆய்வு மையங்கள், ஆய்வுக் குழுமம், பல துறைகளின் ஒருங்கிணைந்த கல்வி, சிறப்பு மையங்கள், தனித்திறனுள்ள ஆய்வகங்கள் மற்றும் பிற குழுக்களை நிறுவுதல்;

t) கற்றறிந்த அமைப்பு அல்லது கழகம் உள்ளிட்ட பிற பல்கலைக்கழகங்கள் மற்றும் அமைப்புகளுடன் ஒத்துழைப்பு மற்றும் ஒத்துழைப்பு முறையில் செயல்படுதல்;

u) நிறுவனத்தின் மாணவர்களின் குடியிருப்புக்கான வரையறை ;

v) நிறுவனத்தினால் பராமரிக்கப்படாத விடுதிகளின் அங்கீகாரத்திற்கான வரையறை;

w) உடல் நலம் மற்றும் ஒழுக்கம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளுக்கு எதிராக நடக்கும் நிறுவனத்தின் மாணவர்கள்;

x) மாணவிகளின் குடியிருப்பு, ஒழுக்கம், கற்பித்தல் மற்றும் கற்பித்தலுக்கான மற்றும் நிறுவனத்திற்குள் அவர்களுக்கு சிறப்பு படிப்பு ஏதேனும் இருந்தால் சிறப்பு ஏற்பாடுகளைச் செய்தல்;

y) இந்தச் சட்டத்தினால் வகுத்துரைக்கப்படலாகும் அல்லது வகுத்துரைக்கப்படும் மற்ற எல்லா பொருட்கூறுகள்;

நிலைச் சட்டங்கள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது

**25.** **(1)** செயலாட்சி மன்றமானது, அவ்வப்போது சட்டங்களை செய்யலாம் மற்றும் இந்தப் பிரிவில் வழங்கப்பட்ட முறையில் இதன் பின்பு சட்டங்களைத் திருத்தலாம் அல்லது நீக்கம் செய்யலாம்:

**(2)** செயலாட்சி மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட நிலைச்சட்டம் ஒன்று அல்லது நிலைச் சட்டம் ஒன்றின் திருத்தம் அல்லது நீக்கம் குறித்து ஆட்சிக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஆட்சிக்குழு அதற்கு ஒப்புதல் அளிக்கலாம் அல்லது அதன் ஒப்புதலை நிறுத்தி வைக்கலாம். செயலாட்சி மன்றத்தினால் உருவாக்கப்பட்ட நிலைச்சட்டம் ஒன்றின் அல்லது அதன் திருத்தம் அல்லது நீக்கம் செய்வது குறித்து ஆட்சிக்குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கின்ற வரையிலும் அது செல்லுபடியாகாது. சட்டத்தின் நகலானது தகவலுக்காக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

அவசரவிதிகளை உருவாக்குவதற்கான அதிகாரம்.

**26.** **(1)** இந்தச் சட்டம், நிலை விதிகள் ஆகியவற்றின் வகை முறைகளுக்குட்பட்டு, செயலாட்சி மன்றத்தின் பரிந்துரை பேரில் கல்விக்குழுவானது அவசர விதிகளை உருவாக்க வேண்டும், ஆட்சிக்குழுவின் ஒப்புதலுக்குட்பட்டு, பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கேனும் வகை செய்யலாம், அதாவது:—

a) நிறுவனத்தில் மாணவர்களின் சேர்க்கை மற்றும் அவர்களின் பெயரை பதிவு செய்தல் போன்றவை;

b) நிறுவனத்தின் அனைத்து பட்டங்கள், பட்டயங்கள் சான்றிதழ் போன்றவைகளுக்கு அமைக்கப்படும் கல்விக்கான படிப்புகள்;

c) பயிற்று மொழி மற்றும் தேர்வு;

d) பருவ முறை திட்டம், நவீன தர நிர்ணய நடைமுறைகள் மற்றும் மாணவர்களின் செயல்திறனை மதிப்பிடுவதில் பிற புதிய முறைகள்;

e) பட்டங்கள், பட்டயங்கள், சான்றிதழ் மற்றும் பிற கல்வி சிறப்பு தகுதிகள், அதற்கான தகுதிகளை வழங்குதல் மற்றும் வழங்குவது மற்றும் பெறுவது தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய பொருட்கூறு;

f) நிறுவனத்தில் படிப்பதற்கான படிப்புகள் மற்றும் நிறுவனத்தின் சான்றிதழ்கள், பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் தேர்வுகள் ஆகியவற்றிற்கு உட்படுத்தப்பட வேண்டிய கட்டணங்கள்;

g) ஆய்வு உதவித்தொகைகள், கல்வி உதவித்தொகைகள், மாணவர் உதவித்தொகை, பதக்கங்கள் மற்றும் பரிசுகள் ஆகியவற்றை வழங்குவதற்கான வரையறைகள்;

h) நிறுவனத்தின் கல்வி பயணத்தொலைவை மேம்படுத்துவதற்காக தேவையானதாகக் கருதப்படும் வேறு அமைப்பு அதனின் உருவாக்கம், உட்கூறு மற்றும் செயல்பாடுகள்;

i) பதவிக்காலம், நியமன முறை மற்றும் தேர்வு நடத்தும் அமைப்பு, தேர்வாளர்கள் மற்றும் நடுவர் ஆகியோரின் கடமைகள் உள்ளிட்ட தேர்வுகளின் நடத்தை;

j) தேர்வாளர், நடுவர், மதிப்பீட்டாளர்கள் மற்றும் வரிசைப்படுத்துபவர் ஆகியோர்களுக்கு செலுத்த வேண்டிய மதிப்பூதியம்;

k) நிலைச்சட்டங்களில் செய்யப்பட்டுள்ள வழிவகைகளைத் தவிர்த்து பிற நபர்களின் பணியமர்த்தம் மற்றும் ஊதியங்கள்;

(2) செயலாட்சி மன்றத்தினால் இயற்றப்படும் அவசர விதிகள் அனைத்து அது நிர்ணயிக்கும் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**அத்தியாயம்–VI**

**நிதி மற்றும் கணக்குகள்.**

ஆண்டறிக்கை.

27. இப்பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை செயலாட்சி மன்றத்தின் வழகாட்டுதல்களின் படி தயாரிக்க வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய தேதியிலோ அல்லது அதற்கு முன்போ ஆட்சிக் குழுவிற்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும் மற்றும் ஆட்சிக் குழுவினால் அதன் ஆண்டுக் கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

மையச் சட்டம் XXXVIII/1949.

ஆண்டுக் கணக்குகள்

28. (1) நிறுவனத்தின் ஆண்டுக் கணக்குகள் மற்றும் இருப்புநிலைக் குறிப்பு ஆகியன செயலாட்சி மன்றத்தின் வழிகாட்டுதல்களின்படி தயாரிக்கப்பட வேண்டும், ஆட்சிக்குழுவினால் ஒப்புதல் பெறப்பட வேண்டும் மற்றும் 1949 ஆம் ஆண்டு பட்டயக் கணக்காளர் சட்டத்தின் வழிவகைகளின் படி தணிக்கை செய்ய தகுதியான பட்டயக் கணக்காளர்களின் நிறுவனத்தால் குறைந்தபட்சம் ஒவ்வொரு ஆண்டும் ஒருமுறை மற்றும் பதினைந்து மாதங்களுக்கு மிகாத இடைவெளியில் தணிக்கை செய்யப்பட வேண்டும்.

(2) ஆண்டுக் கணக்குகளின் நகல், அதன் தணிக்கை அறிக்கையுடன், ஆட்சிக்குழுவிற்கு அவர்களின் ஒப்புதலுக்காக குழுவின் குறித்துரையுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்

**அத்தியாயம்–VII**

**பணியாளர்கள்**

பணியாளர்களின் பணி வரையறைகள்.

29. (1) நிறுவனத்தின் ஒவ்வொரு பணியாளரும் நிலைச் சட்டத்தின் வழிவகைகளின் படி நியமனம் செய்ய அல்லது ஈடுபடுத்தப்பட வேண்டும்.

(2) நிறுவனம் மற்றும் கணிசமாக நியமிக்கப்பட்ட பணியாளர்கள் எவருக்கும் இடையே எழும் பூசல் எதுவும், பணியாளருக்கு குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் வாய்ப்பு ஒன்றை வழங்கிய பின்னர் பூசலைத் தீர்க்கும் இயக்குநரிடம் பரிந்துரைக்கப்படுவார்.

(3) இயக்குநரின் ஆணைக்கு எதிரான மேல்முறையீடு ஒன்றில் ஆட்சிக்குழுவிற்கு தாக்கல் செய்யலாம். மேல்முறையீட்டின் மீது ஆட்சிக்குழுவின் முடிவே இறுதியானதாகும்.

(4) தற்காலிக அல்லது இடைக்கால அல்லது பகுதிநேர அல்லது ஒப்பந்த அடிப்படையிலான பணியாளர்கள் எவரையும் பொறுத்த நேர்வில் பூசல் எதுவும் எழுந்தால் தொடர்புடைய துறைத்தலைவரால் கேட்கப்படும் மற்றும் தீர்மானிக்கப்படும் முடிவே இறுதியானதாகும்.

பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வூதியங்கள்.

30. நிறுவனம் தனது பணியாளர்களின் நலனுக்காக செயலாட்சி மன்றத்தினால் முடிவு செய்யப்படலாகும், அத்தகைய வரையறைகளுக்குட்பட்டு மற்றும் அத்தகைய முறையில் பொருத்தமெனக் கருதலாகும், அத்தகைய ஓய்வூதியம் அல்லது நலத்திட்டங்கள் அல்லது வருங்கால வைப்புநிதி அல்லது காப்பீட்டு திட்டங்களை வழங்குதல் போன்றவற்றை உருவாக்கலாம்.

**அத்தியாயம்**–VIII

**நிதிகள்**

நிரந்தர அறக்கட்டளை.

31. (1) நிறுவனமானது குறைந்தபட்சம் இருபத்து ஐந்து கோடி ரூபாய்க்கு நிரந்தர அறக்கட்டளை நிதியை நிறுவ வேண்டும்.

(2) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் நிரந்தர அறக்கட்டளை நிதியில் முதலீடு செய்ய நிறுவனத்திற்கு அதிகாரம் இருக்க வேண்டும்.

(3) நிறுவனம் தொகை எதையும் பொது நிதி அல்லது வளர்ச்சி நிதியிலிருந்து நிரந்தர அறக்கட்டளை நிதிக்கு மாற்றம் செய்யலாம்.

(4) (1) ஆம் உட்கூறில் குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தொகையை விட அதிகமான தொகை எதையும் நிறுவனத்தின் வளர்ச்சி நோக்கத்திற்காக நிறுவனத்தினால் நிரந்தர அறக்கட்டளையிலிருந்து திரும்பப் பெறலாம்.

பொது நிதி.

**32. (1)** நிறுவனம் ஒரு பொது நிதியை நிறுவி, அதற்கு பின்வரும் தொகையை வரவு வைக்க வேண்டும், அதாவது:—

a) கட்டணங்களிலிருந்து நிறுவனத்தால் பெறப்பட்ட வருமானம்;

b) தனிநபர்கள் அல்லது நிறுவனங்களால் வழங்கப்பட்ட விருப்பவண வழிக்கொடை, நன்கொடைகள், அறக்கட்டளை நிதியம் அல்லது பிற மானியங்கள் எதுவும்;

c) தொழில் முனைவோர், வர்த்தகர்கள், தொழிலகங்களிலிருந்து விருப்பாவண வழிக்கொடைகள் அல்லது பங்களிப்பு எதுவும்;

d) பிற மூலம் எதிலிருந்து பெறப்பட்ட அனைத்து தொகைகள்;

e) சங்கத்தினால் அளித்த அனைத்து பங்களிப்புகள்; மற்றும்

f) இந்த சட்டத்தினால் நடைமுறையிலிருக்கும் சட்டம் எதனாலும் தடைசெய்யப்படாத பிற நபர் அல்லது அமைப்பு எதனாலும் இதன் பொருட்டு வழங்கப்பட்ட அனைத்து பங்களிப்புகள்;

(2) பொதுநிதியில் வரவு வைக்கப்பட்ட தொகைகளானது நிறுவனம் சந்திக்கும் அனைத்து தொடர் செலவினங்களுக்கும் பயன்படுத்தப்பட வேண்டும்.

வளர்ச்சி நிதி.

**33. (1)** நிறுவனம் ஒரு வளர்ச்சி நிதியையும் நிறுவி, அதற்கு பின்வரும் தொகைகளை வரவு வைக்க வேண்டும், அதாவது:—

a) மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படலாகும் வளர்ச்சி கட்டணங்கள்;

b) நிறுவனத்தின் வளர்ச்சி நோக்கத்திற்காக பிற மூலங்களிலிருந்து பெறப்படும் அனைத்து தொகைகள்;

c) சங்கத்தினால் உருவாக்கப்பட்ட அனைத்து பங்களிப்புகள்;

d) இந்த சட்டத்தினால் நடைமுறையிலிருக்கும் சட்டம் எதனாலும் தடைசெய்யப்படாத பிற நபர் அல்லது அமைப்பு எதனாலும் இதன் பொருட்டு வழங்கப்பட்ட அனைத்து பங்களிப்புகள்; மற்றும்

e) நிரந்தர அறக்கட்டளை நிதியிலிருந்து பெறப்படும் அனைத்து வருமானம்;

அவ்வப்போது வளர்ச்சி நிதிக்கு வரவு வைக்கப்படும் தொகைகள் நிறுவனத்தின் வளர்ச்சிக்காக பயன்படுத்தப்பட வேண்டும்.

நிதியைப் பராமரித்தல்.

**34. 31, 32** மற்றும் **33**—ஆம் பிரிவுகளின்படி நிறுவப்பட்ட நிதிகள் ஆட்சிக் குழுவின் பொதுவான மேற்பார்வை மற்றும் கட்டுப்பாட்டுக்குட்பட்டு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் முறைபடுத்துதல் மற்றும் பராமரிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம்—IX

## நிறுவனத்தைக் கலைத்தல் அல்லது அங்கீகாரம் மறுத்தல்

நிறுவனத்தைக் கலைத்தல்.

**35. (1)** காரணம் எதற்காகவும் அதன் கலைப்பை நிறுவனமானது முன்மொழிந்தால், அது அரசிற்கு குறைந்தது ஆறு மாதங்களுக்குள் எழுத்துப்பூர்வமான அறிவிப்பினை கொடுக்க வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கை கிடைக்கப்பெற்றதன் பேரில், அரசு வகுத்துரைக்கப்பட்ட அத்தகைய முறையில் வழக்கமான படிப்புகளின் இறுதி தொகுதி மாணவர்கள் அவர்களின் படிப்புகளை அல்லது ஆய்வுகளை நிறைவு செய்யும்வரை, நிறுவனத்தின் கலைப்பின் தேதியிலிருந்து நிர்வாகத்திற்காக அத்தகைய ஏற்பாடுகளை அரசானது செய்தல் வேண்டும்.

கலைப்பின் போது நிறுவனத்தின் செலவினங்கள்,

**36. (1) 35** ஆம் பிரிவின் அதன் கலைப்பின் செய்முறையின் போது நிறுவனத்தின் நிர்வாகத்திற்கான செலவானது நிலையான அறக்கட்டளை நிதிகள், பொது நிதி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து செலவிடப்படுதல் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி குறிப்பிடப்பட்ட நிதிகள் நிறுவனத்தின் செலவினங்களை எதிர்கொள்ளப் போதுமானதாக இல்லையெனில், நிறுவனத்தின் சொத்துகள் அல்லது உடைமைகளை அரசால் விற்பனை செய்வதின் மூலம் அத்தகைய செலவினங்களை சந்திக்கலாம்.

37. (1) இந்த சட்டத்தின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையில் நிறுவனமானது செயல்படவில்லையென தேவையான மற்றும் போதிய அளவிலான குற்றச்சாட்டை அரசானது பெறுகிறவிடத்து, நிறுவனத்தின் அங்கீகாரத்தை ஏன் மறுத்தல் கூடாது என்ற புகாரின் நகலை குறிப்பிட்டு இரண்டு மாதங்களுக்கு மிகாமல் அத்தகைய நேரத்திற்குள் அது நிறுவனத்திடம் காரணம் கேட்கும் குறிப்பாணை ஒன்றினைக் கோரலாம். அரசால் நிறுவனத்தின் அங்கீகாரத்தை மறுத்தல்.

(2) (1) ஆம் உட்பிரிவின்படி வழங்கப்பட்ட அறிவிப்பிற்கு நிறுவனத்தின் பதில் கிடைக்கப் பெற்றதும், நிறுவனத்தின் செயல்முறைகளில், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் மீறுகை அல்லது தவறான மேலாண்மை உருவாகியுள்ளது என முதல் நோக்கி அரசானது மனநிறைவடைந்தால், அது தேவையெனக் கருதும் அத்தகைய விசாரணைக்கு ஆணையிடுதல் வேண்டும்.

(3) (2) ஆம் உட்பிரிவின்படி ஒரு விசாரணையின் நோக்கத்திற்காக, அரசானது அறிவிக்கையின் வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின் மீறலின் குற்றத்தின் விசாரணைக்கு விசாரணை அதிகாரியாக ஓர் அலுவலர் அல்லது அதிகாரி நியமிக்கப்படுதல் வேண்டும்.

(4) (3) ஆம் உட்பிரிவின்படி நியமிக்கப்பட்ட ஒவ்வொரு விசாரணை அதிகாரியானவர், இந்தச் சட்டத்தின்படி, அதன் செயல்முறைகளை நிகழ்த்தும் போது வழக்கினை நடத்துவதற்கு 1908 ஆம் ஆண்டு உரிமையியல் தொகுப்புச் சட்டத்தின்படி உரிமையியல் நீதிமன்றத்தின் அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருப்பார் மற்றும் குறிப்பாக பின்வரும் பொருட்கூறுகளினைப் பொறுத்த வகையில் அதாவது:—

a) சாட்சி எவரையும் அழைப்பாணை செய்து அவரின் வருகையை உறுதி செய்தல் மற்றும் உறுதிமொழியின் பேரில் அவரை விசாரணை செய்தல்;

b) ஆவணம் எதனையும் அளித்தல் மற்றும் கண்டுபிடிப்பினை வேண்டுதல்;

c) அலுவலகம் எதனிலுமிருந்து பொது பதிவுரு அல்லது அதன் நகலை கோருதல்;

d) ஆணை உறுதி ஆவணங்களில் சான்றுகளைப் பெறுதல்;

e) வகுத்துரைக்கப்பட்ட பிற பொருட்பாடுகள் எதுவும்;

(5) விசாரணை அறிக்கை கிடைக்கப் பெற்றதும், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் நிறுவனம் மீறியதாக அரசானது மனநிறைவடைந்தால், அது தேவையான முன்னேற்றங்களை செய்யவும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை முறையாக செயற்படுத்த பரிந்துரைக்கவும், நிறுவனத்திற்கு கட்டளையிடுதல் வேண்டும்.

(6) நிறுவனம் சட்டத்தை தொடர்ச்சியாக மீறுவதனால் நிறுவனத்தின் கல்வி தரத்தை அச்சுறுத்தும் தவறான நிதி மேலாண்மை மற்றும் நிறுவனத்தின் முறைகேடான நிர்வாகத்திற்கு வழிவகுக்குமானால் அது ஒரு நிருவாகியை நியமிக்கலாம்.

(7) (6) ஆம் பிரிவின்படி நியமிக்கப்பட்ட நிருவாகியானவர் இந்தச் சட்டத்தின்படி ஆட்சிக்குழுவின் அனைத்து அதிகாரங்களையும் செயல்படுத்தலாம் மற்றும் அனைத்து கடமைகளையும் நிறைவேற்றலாம் மற்றும் முறைப்படியான படிப்புகளின் இறுதி தொகுதி மாணவர்கள் அவர்களின் படிப்புகள் / பாடத்திட்டத்தினை நிறைவு செய்யும்வரை மற்றும் தேர்விற்கேற்ப அவர்கள் பட்டம், பட்டயப் படிப்புகள் அல்லது பிற கல்வி சிறப்புத் தகுதிகளுடன் வழங்கப்படும் வரையிலும் நிறுவனத்தின் விவகாரங்களை நிருவகிக்கலாம்.

(8) முறைப்படியான படிப்புகளின் இறுதி தொகுதி மாணவர்களுக்கு தேர்விற்கேற்ப பட்டம், பட்டயங்கள் அல்லது கல்வி சிறப்பு தகுதிகள் ஆகியவை வழங்கப்பட்ட பிறகு நிருவாகி அது குறித்து அரசிற்கு அறிக்கை கொடுக்கப்படுதல் வேண்டும்.

(9) (8) ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கை கிடைக்கப்பெற்றதும், அரசின் உரிய கவனத்திற்கு பிறகு, ஒத்த நோக்கங்களைக் கொண்ட பிற அமைப்பு அல்லது சங்கம் அல்லது அறக்கட்டளை எதிலும் ஆட்சிக்குழுவின் அதிகாரங்கள் உரிமை அளிக்கப்பெறுவதால் அல்லது பல்கலைக்கழக மானியக் குழுவின் முன் ஒப்புதலுடனாலும் மற்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட நிறுவனம் தொடர்பான பிற ஒழுங்குமுறை அமைப்புகளினாலும் நிறுவனத்தின் செயல்பாடுகளை தொடரலாம்.

(10) (9) ஆம் உட்பிரிவின்படி அங்கீகாரம் மறுத்தல் செயல்பாட்டின் போது அரசானது நிறுவனத்தின் விவகாரங்களின் மேலாண்மைகளின் நோக்கத்திற்காக நிரந்தர அறக்கட்டளை நிதி பொது நிதி அல்லது வளர்ச்சி நிதி ஆகியவற்றினை பயன்படுத்திக் கொள்ளலாம். நிறுவனத்தின் தேவையான செலவினங்களை சந்திக்க நிறுவனத்தின் விதிகள் போதுமானதாக இல்லையெனில் அரசானது கூறப்பட்ட செலவினங்களை சந்திப்பதற்கு நிறுவனத்தின் சொத்துகள் அல்லது உடைமைகளை விற்பனை செய்யலாம்.

கலைத்தல் அல்லது மறுத்தலில் சொத்துக்கள் பொறுப்புக்களின் நிலை.

**38.** நிறுவனத்தின் கலைப்பு அல்லது அங்கீகார மறுத்தலின் நேர்வில், அனைத்து சொத்துகள் மற்றும் நிலையான அறக்கட்டளை நிதி, பொது நிதி, வளர்ச்சி நிதி அல்லது பிற நிதி எவற்றையும் உள்ளடக்கிய அனைத்து உடைமைகள் மற்றும் நிதியத்தின் பொறுப்புகளும் சங்கத்திற்கு உரியதாக்குதல் வேண்டும்.

**அத்தியாயம்–X**

**பல்வகை மற்றும் நிலையற்ற வகைமுறைகள்.**

நிலையற்ற வகைமுறைகள்.

**39.** இந்தச் சட்டத்தில் மற்றும் நிலைச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,–

i. குறிப்பிட்ட நாளில், சங்கத்தின் அனைத்து கற்பித்தல் செயல்பாடுகள், மனித வளங்கள் சொத்துகள் மற்றும் பொறுப்புகளானது இந்தச் சட்டத்தின்படி நிறுவப்பட்ட நிறுவனத்திற்கு மாற்றியமைத்தல், ஒப்படைத்தல் வேண்டும், மற்றும்

ii. இயக்குநர், ஆட்சிக்குழுவின் முந்தைய ஒப்புதலுடன் மற்றும் நிதியின் இருப்பிற்கு உட்பட்டு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளை நிறைவேற்றுவதன் நோக்கத்திற்காக நிறுவனத்தின் அனைத்து அல்லது செயற்பாடுகள் எதனையும் விட்டுவிடாமல் மற்றும் இந்தச் சட்டம் நிலைச் சட்டங்கள் மற்றும் அவசர விதிகளினால் வழங்கப்பட்ட அத்தகைய அதிகார அமைப்பு நடைமுறைக்கு வரும்வரை இந்தச் சட்டத்தினால் நிலைச்சட்டங்களினால் மற்றும் அவசர விதிகளால் நிறுவனத்தின் அதிகார அமைப்பு எதனினாலும் செயல்முறைப்படுத்த அல்லது நிகழ்த்தப்பட வேண்டிய அதிகாரம் எதனையும் செயல்முறைப்படுத்தலாம் அல்லது கடமைகள் எதனையும் அந்த நோக்கத்திற்காக நிகழ்த்தலாம்.

iii. குறிப்பிட்ட நாளில், நிறுவனத்தில் இதுவரையில் பதிவுசெய்த மாணவர்கள், நிறுவனத்தின் மாணவர்களாகத் தொடருவர் மற்றும் கல்வி ஆண்டின் தொடர்ச்சியிலோ அல்லது நிறைவு செய்யப்பட்ட பகுதியிலோ அவர்களின் படிப்பை நிறைவு செய்தல் வேண்டும்.

ஈட்டுறுதி.

**40.** இந்தச் சட்டம் அல்லது நிலைச்சட்டங்கள் எதையும் அல்லது அவசர விதிகளுக்கிணங்கிய வகையில் நிறுவனம், நிறுவனத்தின் அதிகாரிகள், இயக்குநர் அல்லது பிற அலுவலர்கள் அல்லது பிற நபர் எவரும் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதிய எதனையும் பொறுத்து அவர்களுக்கெதிரான உரிமை வழக்கு அல்லது குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் தொடரப்படுதல் மற்றும் இழப்பீடுகள் எதுவும் கோரப்படுதல் கூடாது

தகவல் மற்றும் பதிவுருக்காக அழைப்பாணை விடுக்கும் அரசின் அதிகாரம்.

**41. (1)** அரசானது அழைப்பு விடுக்கலாகும்போது நிறுவனத்தின் நிர்வாகம் அல்லது நிதி மற்றும் பிற விவகாரங்கள் தொடர்பான அத்தகைய தகவல்கள் அல்லது பதிவுறுக்களை அளிப்பதற்கு நிறுவனத்தின் அலுவலர் அல்லது அதிகார அமைப்பு எதனின் அல்லது நிறுவனத்தின் கடமையாக இருத்தல் வேண்டும்.

கலைப்பின்போது நிறுவனத்தின் செலவினங்கள்.

**(2)** அரசு, சட்டம் அல்லது நிலைச் சட்டங்கள் அல்லது அவசர விதிகளின் விதிமுறைகள் ஏதேனும் மீறப்படுவதாகக் கருதினால், அது தேவையெனக் கருதும் **42** ஆம் பிரிவின் படி நிறுவனத்திற்கு அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம்.

கொள்கை பொருட்பாடுகளில் பணிப்புரைகள் வழங்குவதற்கு அரசின் அதிகாரம்.

**42.** அரசு இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுடன் கொள்கை பொருட்பாடுகளின் மீது பொருந்தாத நிறுவனத்திற்கு அவ்வப்போது அது தேவையெனக் கருதலாகும் அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம். அத்தகைய பணிப்புரைகள் நிறுவனத்துடன் இணங்கப்படுதல் வேண்டும்.

அதிகார அமைப்புகள் மற்றும் அமைப்புகளை நிறுவி அமைத்தலுக்கான பூசல்கள்.

**43.** நிறுவனத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பின் ஒரு உறுப்பினராக ஏற்றவாறு நபர் எவரும் தேர்ந்தெடுக்கப்பட்டாரா அல்லது நியமிக்கப்பட்டாரா அல்லது அதிகாரமளிக்கப்பட்டாரா என வினா எழுந்தால் அந்த விவகாரங்கள் ஆட்சிக்குழுவிற்கு பரிந்துரைக்கப்படுதலும், அதன் முடிவுகள் இறுதியனாதாக இருத்தலும் வேண்டும்.

குழுக்களை நிறுவி அமைத்தல்.

**44.** இந்தச் சட்டத்தின் அல்லது நிலைச் சட்டங்களின் படி அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனத்தின் அதிகார அமைப்பு ஏதேனும் குழுக்களை நிறுவி அமைப்பதற்கு, அத்தகைய குழுக்களானது பிறவற்றில் வழங்கப்பட்ட அதிகாரஅமைப்பு தொடர்பான உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் மற்றும் அது ஒவ்வொரு நேர்விலும், பொருத்தமானதாகக் கருதலாகும் அதிகாரஅமைப்பின் பிற நபர்களைக் கொண்டிருக்கும்.

**45.** நிறுவனத்தின் அதிகாரஅமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பின் உறுப்பினர்களுக்கிடையேயான அனைத்து காலியிடங்களானது, அவர் நியமிக்கப்பட்ட அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட எஞ்சியுள்ள காலத்திற்கு காலியாகிவிட்ட உறுப்பினர்களை நியமிக்கலாகும் அல்லது தேர்ந்தெடுக்கலாகும் நபரால் அல்லது அமைப்பால் கூடிய விரைவில் நிரப்பப்படுதல் வேண்டும். காலியிடங்களை நிரப்புதல்.

**46.** நிறுவனத்தின் அதிகாரஅமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பின் செயல் அல்லது நடவடிக்கையானது, ஒரு காலியிடம் இருக்கும் காரணத்தினால் அல்லது நிறுவனத்தின் அதிகாரஅமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பின் உறுப்பினரின் நியமனத்தில் குறைபாடு அல்லது முறைகேடு எதனாலும் அல்லது வழக்கின் தகுதிகளை பாதிக்காத அத்தகைய செயல் அல்லது நடவடிக்கைகளில் குறைபாடு அல்லத முறைகேடு எதனினாலும் அல்லது இந்தச் சட்டத்தின்படி வேண்டிய அத்தகைய இடைவெளியை நிறுவனத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பானது சந்திக்கவில்லை என்ற அடிப்படையில் செல்லாததாக ஆக்கப்படுதல் ஆகாது. நிறுவன அதிகார அமைப்புகள் மற்றும் அமைப்புகளின் நடவடிக்கைகள் காலியிடங்களால் செல்லத்தக்கது ஆகாது.

**47.** **(1)** செயலாட்சி மன்றமானது, செயலாட்சி மன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றப்படுவதன் மூலம் மற்றும் தற்போதுள்ள செயலாட்சி மன்றத்தின் கூட்டத்திற்கு வந்திருந்து வாக்களித்த உறுப்பினர்களில் மூன்றில் இரண்டு பங்கிற்கு குறையாத பெரும்பான்மையினால், மன்றத்தின் கருத்தில் ஒழுக்கக்கேட்டிற்கு உட்படுத்தும் ஒரு குற்றத்திற்காக அத்தகைய நபர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவராயிருப்பின் இதன் பொருட்டு உருவாக்கப்பட்ட எழுத்துப்பூர்வமான ஆணை ஒன்றின் மூலம், நிறுவனத்தின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் தகுதியிலிருந்தும் நபர் எவரையும் நீக்கலாம். நிறுவனத்தின் உறுப்பினர் தகுதியிலிருந்து நீக்குதல்.

**(2)** செயலாட்சி மன்றமானது, மேலும் அவர் மனநிலை பாதிக்கப்பட்டவரானால் அல்லது ஒரு நொடித்த நிலையராக தீர்ப்பளிக்கப்பட்டவரானால் அதன்பொருட்டு எழுத்துப் பூர்வமானதொரு ஆணையினால் நிறுவனத்தின் அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் தகுதியிலிருந்தும் நபர் எவரையும் நீக்கலாம்.

**(3)** தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கையினை எடுப்பதற்கெதிராக, காரணம் கேட்கும் குறிப்பாணைக்கு ஒரு நியாயமான வாய்ப்பு வழங்கப்பட்டாலன்றி நபர் எவருக்கும் எதிராக இந்தப் பிரிவின் படி நடவடிக்கை எடுக்கப்படுதல் கூடாது.

**(4)** நேர்வுக்கேற்ப **(1)** ஆம் உட்பிரிவு அல்லது **(2)** ஆம் உட்பிரிவின் படி ஏற்படுத்தப்பட்ட ஒவ்வொரு ஆணையின் படியானது, அது ஏற்படுத்தப்பட்ட பிறகு, வகுத்துரைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய நபருக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

**48.** நிறுவனத்தின் ஏதேனும் அதிகார அமைப்பு அல்லது குழுவின் ரசீது, விண்ணப்பம், அறிவிக்கை, செயல்முறை ஆணை, தீர்மானம் அல்லது நிறுவனத்தின் உடைமையிலுள்ள பிற ஆவணங்கள் ஆகியவை நிருவாக அலுவலரால் சான்றளிக்கப்பட்டால் அத்தகைய ரசீது, விண்ணப்பம், அறிக்கை, ஆணை, செயல்முறை ஆணை அல்லது தீர்மானம், ஆவணங்கள் அல்லது பதிவேட்டில் உள்ள இருப்பு ஆகியவை முதல் நோக்குச் சான்றாக பெறப்படுதல் வேண்டும் மற்றும் ஏற்புடைச் சாட்சியாக அளிக்கப்பட்டால் மூலத்தில் உள்ள பொருண்மைகள் மற்றும் நடவடிக்கைகளின் சான்றாக ஒப்பு கொள்ளப்படுதல் வேண்டும். நிறுவனத்தின் பதிவுருக்களின் சான்று முறை.

**49.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் அல்லது நிறுவனத்தின் அதிகார அமைப்பு எதனின் நிறுவுதல் அல்லது மறு நிறுவுதலுக்கு இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசு அறிவிக்கையின் மூலம் அந்த இடர்பாட்டை நீக்குவதற்கு தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அதற்குத் தோன்றுகிறவாறான இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம். இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

**வரம்புரையாக:** அத்தகைய அறிவிக்கை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலஅளவு முடிவடைந்ததற்கு பின்னர் வழங்கப்படுதல் கூடாது.

**நோக்கக் காரண விளக்கவுரை**

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/1975) படி பதிவு செய்யப்பட்டு அறம் சார்ந்த சங்கமாக சென்னை நகரத்தில் 1993 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மெட்ராஸ் பொருளியல் பள்ளியானது இந்தியாவில் பொருளாதாரம் மற்றும் அதன் தொடர்புடைய பாடங்கள் மற்றும் மேலாண்மையில் மேம்பட்ட படிப்புக்கான மிகவும் மதிப்புமிக்க நிறுவனங்களில் ஒன்றாக வளர்ந்துள்ளது. இருப்பினும், பட்டங்கள் மற்றும் பட்டயங்களை வழங்குவதற்கு அதற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை மற்றும் பல்வேறு பல்கலைக்கழகங்களின் இணைவினை தேடுவதற்கு இது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது, இது தன்னாட்சி மற்றும் பயனுள்ள செயல்பாட்டை பாதிக்கிறது.

2. மாநில அரசு, அதன் பொது நிதிகள் தொடர்புடைய பொருட்பாடுகளில் உயர்தர கொள்கை அறிவுரைகளைப் பெற விரும்புகிறது. எனவே பொது நிதியத்தில் ஆராய்ச்சி நடத்துவதற்கும், அரசிற்கு கொள்கை அறிவுரையை வழங்குவதற்கும், கல்விப் படிப்புகளை நடத்துவதற்கும் பொது நிதி மையத்தை நிறுவுவதற்கும் மெட்ராஸ் பொருளாதார பள்ளியை ஆதரிக்க பெரும் முயற்சி செய்கிறது.

3. எனவே, மாநில அரசு மெட்ராஸ் பொருளியல் பள்ளியை ஒரு சிறப்பு முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனமாக அங்கீகரிக்க முடிவு செய்து மற்றும் தனது சொந்த பட்டங்கள் மற்றும் பட்டயங்களை வழங்குவதற்கும், அதற்கிணங்க அதன் ஒருங்கிணைப்பு மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகளுக்கான சட்டத்தை மேற்கொள்வதற்கும் முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*துணை முதலமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

இந்தச் சட்டமுன்வடிவானது சட்டமாக இயற்றப்படும் போது மாநிலத் தொகு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும் இந்த நிலையில் கருதப்படும் சட்டத்தின் விளைவாக, ஏற்படக்கூடிய செலவினத்தை எந்தக் கோணத்திலும் துல்லியமாக மதிப்பிட இயலாது.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*துணை முதலமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு குறித்த குறிப்புரை**

இச்சட்ட முன்வடிவின் 1 (2), 10, 12 முதல் 16, 18 முதல் 27, 30, 31, 34, 35, 42 மற்றும் 49 ஆம் கூறுகள், அறிவிக்கை அல்லது ஆணை வழங்குவதற்காக அல்லது தீர்மானிக்கப்பட்ட சட்டத்தின் நோக்கங்களை செய்து முடிக்க நேர்வுக்கேற்ப மாநில அரசு அல்லது நிறுவனத்தின் செயலாட்சி மன்றத்திற்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி சிறப்புத் தன்மை வாய்ந்தவையல்ல.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*துணை முதலமைச்சர்.*

சென்னை,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/2020

***1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.***

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்

**1.** (1) இந்தச் சட்டம் 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 35/1972.

20—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 20—ஆம் பிரிவில், (2)—ஆம் உட்பிரிவில்,—

(1) (b)—ஆம் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) (c)—ஆம் கூறிற்காக, பின்வரும் கூறானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(c) திட்டத்தினால் உள்ளடக்கப்பட்ட பகுதி;"

21—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவில், "பகுதியில் உள்ள நிலங்கள் மற்றும் கட்டடங்களின் உரிமையாளர்களுடன் வகுத்துரைக்கப்பட்ட முறையில் கலந்தாலோசித்த பின்பு" என்ற சொற்றொடர் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

**நோக்க – காரண விளக்கவுரை**

1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவானது விரிவான வளர்ச்சித் திட்டத்தின் முன்னேற்பாட்டின் அறிவிப்பின் வெளியீடு, பிறவற்றுக்கிடையில், திட்டத்தில் உள்ளடங்கிய பகுதியிலுள்ள அனைத்து நிலங்கள் மற்றும் கட்டடங்களின் உரிமை விவரங்களை உள்ளடங்க வேண்டுமென வழங்குகிறது. மேலும் கூறப்பட்டச் சட்டத்தின் 21 ஆம் பிரிவானது, நகர் ஊரமைப்பு இயக்குநரிடம் அவரது ஒப்புதலுக்காக விரிவான வளர்ச்சித் திட்டத்தினை அனுப்பும் முன்பு அப்பகுதியின் நிலங்கள் மற்றும் கட்டடங்களின் உரிமையாளர்களுடன் கலந்தாய்வு செய்யக் கோருகின்றது.

(2) விரிவான வளர்ச்சித் திட்டம் மற்றும் கூறப்பட்ட திட்டத்திற்கான சரியான செயல்படுத்தலுக்கிடையேயான கால அளவு குறிப்பிடத்தக்க காலத்தை எடுத்துக்கொள்கிறது மற்றும் இடைப்பட்ட காலத்தில் நிலத்தின் உரிமை மாற்றம் செய்யப்பட்டால், அது 'A' பதிவேடு போன்ற வருவாய் ஆவணங்கள் அல்லது கூறப்பட்ட திட்டத்தில் உள்ளடங்கிய அனைத்து உரிமையாளர்களின் கூறப்பட்ட அடங்கலிலுள்ள விவரங்களை திரட்டுதல் தொடர்பான தேவையற்ற குழப்பம் மற்றும் அளவிற்கு மேற்பட்ட கால தாமதத்தை உருவாக்குகின்றது. மேலும், தனியார் நிலங்களின் உரிமையானது மாற்றத்துக்குள்ளாகும்.

(3) விரிவான வளர்ச்சித் திட்டத்தின் முன்னேற்பாடுகளின் செயல்முறையை எளிதாக்கும் பொருட்டு, கூறப்பட்டத் திட்டத்தில், அந்த பகுதியிலுள்ள அனைத்து நிலங்கள் மற்றும் கட்டடங்களின் உரிமை விவரங்களை குறிப்பிடும் தேவையை விட்டொழிக்க அரசு முடிவு செய்துள்ளது. கூறப்பட்ட சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் விரிவான வளர்ச்சித் திட்டத்தின் முன்னேற்பாட்டின் அறிவிப்பானது திட்டம் தொடர்பான மறுப்புகள் மற்றும் ஆலோசனைகளை எழுத்து வடிவத்தில் நபரெவரிடமிருந்து வரவேற்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் மற்றும் அத்தகைய கோரிக்கையை செய்த நபரெவருக்கும் கேட்கப்படுதலுக்கான நியாயமான வாய்ப்பு வழங்கப்படுவதால், மேற்சொன்ன 21 ஆம் பிரிவின் கீழ் நிலங்கள் மற்றும் கட்டட உரிமையாளர்களுடன் ஆலோசனை செய்யும் தேவையை விட்டொழிக்க மேலும் முடிவு செய்யப்பட்டுள்ளது. எனவே திட்டத்தில் உள்ளடங்கிய பகுதியிலுள்ள நிலங்கள் மற்றும் கட்டடத்தின் உரிமையாளர்கள் உட்பட உரித்தமுடைய நபரெவருக்கும் ஆட்சேபனை, ஏதேனும் இருப்பின், எழுப்புவதற்கான மற்றும் திட்டத்தின் மேம்பாட்டிற்கு ஆலோசனைகள் வழங்கவும் வாய்ப்பு வழங்கப்படுகிறது. எனவே, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 35/1972–ஐ மேற்சொன்ன நோக்கங்களுக்காக தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்துள்ளது.

(4) இந்த சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**ஓ.பன்னீர்செல்வம்,**
*துணை முதலமைச்சர்.*

சென்னை,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 33/2020

### 2010 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டத்தினை திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம் 2020 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பு (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 44/2010.

4 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான 2010 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டத்தின் 4 ஆம் பிரிவில்.

(1) (1)ஆம் உட்பிரிவில், (a), (b) மற்றும் (c) ஆம் கூறுகளுக்குப் பதிலாக பின்வரும் கூறுகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

‘‘(a) முதலமைச்சர், பதவி வழித் தலைவராக இருப்பார்;

(b) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையைப் பொறுப்பில் கொண்ட அமைச்சர், பதவி வழித் துணைத் தலைவராக இருப்பார்;

(c) போக்குவரத்துத் துறையைப் பொறுப்பில் கொண்ட அமைச்சர், பதவி வழி;

(cc) அரசு தலைமைச் செயலாளர், பதவி வழி;

(ccc) சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர், பதவி வழி;’’;

(2) (3) ஆம் உட்பிரிவில், ‘‘இரண்டு துணைத் தலைவர்களில் ஒருவர், முதுநிலையில் உள்ளவர்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘துணைத் தலைவர்’’ என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

22 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 22 ஆம் பிரிவில் ‘‘துணைத் தலைவர்கள்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘துணைத் தலைவர்’’ என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

2010 ஆம் ஆண்டு சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 44/2010) 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி, சென்னை ஒருங்கிணைந்த பெருநகரப் போக்குவரத்து அதிகார அமைப்பின் பதவி வழித் தலைவராக போக்குவரத்துத் துறையை பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சரும், பதவி வழித் துணைத் தலைவர்களாக அரசு தலைமைச் செயலாளர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவரும் இருத்தல் வேண்டும். ஒரே நிர்வாகத்தின் கீழ் அனைத்துத் துறைகளிடையேயும் மிக உச்சநிலை பங்கேற்புடன், கூறப்பட்ட அதிகார அமைப்பினை மிகுதியான துடிப்பான செயற்பாட்டினை உடையதாய் ஆக்குவதற்கும் மற்றும் அதற்கிணங்கியவாறு பதவி வழித் தலைவராக முதலமைச்சர், பதவி வழித் துணைத் தலைவராக வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையை பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர் மற்றும் பதவி வழி உறுப்பினர்களாக போக்குவரத்துத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், அரசு தலைமைச் செயலாளர் மற்றும் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் துணைத் தலைவர் ஆகியோர் இருக்குமாறு கூறப்பட்ட அதிகார அமைப்பினை மாற்றியமைப்பதற்கும், அரசு முடிவு செய்துள்ளது. மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 44/2010–ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்குச் செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**ஓ.பன்னீர்செல்வம்,**
*துணை முதலமைச்சர்.*

சென்னை,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 34/2020

### 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1983. 2. 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (இதன்பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் (1) ஆம் கூறின் இறுதியில் ''மற்றும் இடைக்கால செயலாட்சியர் உள்ளடங்கலாக'' என்ற சொற்றொடர் சேர்க்கப்படுதல் வேண்டும். 2—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 88 ஆம் பிரிவில்,— 88—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

(1) (1) ஆம் உட்பிரிவிற்கான முதலாம் வரம்புரைக்காக பின்வரும் வரம்புரைகள் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:—

''எனினும் ஏதேனும் அத்தகைய பதிவு செய்யப்பட்ட சங்கத்தினுடைய நிர்வாக சபையின் தொடர்ச்சியான செயல்பாடானது சங்கத்தின் நலனுக்கு மேலும் ஊறுவிளைவிக்கக்கூடியது என பதிவாளர் கருதினால், பதிவாளர், நிர்வாக சபையைக் கலைப்பதற்கான அறிவிப்பைப் பின்பற்றி ஆணை பிறப்பிக்கும் வரை நிர்வாக சபையை இடைநீக்கம் செய்யலாம் மற்றும் சங்கத்தின் அலுவல்களை நிருவகிக்க இடைக்கால செயலாட்சியரை பணியமர்த்தலாம்:

எனினும் மேலும் அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாதத்திற்குள்ளாக மேற்சொன்ன அறிவிப்பைப் பின்பற்றி ஓர் ஆணை வழங்கப்படுதல் வேண்டும்.''

(2) (4) ஆம் உட்பிரிவில் ''கலைப்பதற்கான கால அளவின் போது'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''நிர்வாக சபை இடைநீக்கம் செய்யப்பட்டுள்ள அல்லது கலைக்கப்பட்டுள்ள கால அளவின்போது'' எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) (6) ஆம் உட்பிரிவில் ''(1) (a) (i) ஆம் உட்பிரிவின் கீழ் ஆணை பிறப்பிப்பதற்கு முன்னர்'' எனும் சொற்றொடருக்குப் பதிலாக ''(1) ஆம் உட்பிரிவின் கீழ் நிர்வாக சபையை கலைத்து செயலாட்சியரை பணியமர்த்தம் செய்வதற்கான ஆணையை பிறப்பிப்பதற்கு முன்னர்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

1983–ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 30/1983) 88–ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவானது, கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபையைக் கலைப்பதற்காகவும் சங்கத்தின் அலுவல்களை நிர்வகிப்பதற்காகவும் அதில் குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக, ஆறு மாதங்களுக்கு மிகாத கால அளவிற்கு செயலாட்சியர் ஒருவரை பணியமர்த்துவதற்கு வழிவகை செய்கிறது. குறித்த சில நேர்வுகளில் பதிவாளரால், நிர்வாக சபை கலைப்பிற்கான அறிவிப்பு வழங்கப்பட்ட உடனேயே, நிர்வாக சபை, நிதி முறைகேடுகள் அல்லது மோசடி அல்லது கையாடல்களில் ஈடுபட்டு கணக்குகளை கையாளுகிறது அல்லது கணக்குப் புத்தகங்களை உள்நோக்கங்களுடன் அழிக்கிறது. அத்தகைய நிகழ்வுகளைத் தவிர்ப்பதற்காக, நிர்வாக சபை கலைப்பு அறிவிப்பு வெளியான உடனேயே அத்தகைய நிர்வாக சபையை இடைநீக்கம் செய்யவும் சங்கத்தின் அலுவல்களை நிர்வகிக்க இடைக்கால செயலாட்சியரை பணியமர்த்தவும் பதிவாளருக்கு அதிகாரம் வழங்கலாம் எனவும், மேற்கண்ட அறிவிப்பு வெளியான நாளிலிருந்து இரண்டு மாதங்கள் காலத்திற்குள் அதனைப் பின்பற்றி ஓர் ஆணை வழங்கப்படுதல் வேண்டும் எனவும் அரசானது முடிவு செய்துள்ளது. எனவே, மேற்சொன்ன நோக்கத்திற்காக, கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 30/1983 ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்டமுன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

***செல்லூர் கே. ராஜு,***
*கூட்டுறவுத் துறை அமைச்சர்.*

சென்னை,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/2020

**தமிழ்நாடு மாநிலத்திலுள்ள மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகள் தொடர்பான சட்டங்களை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**பகுதி–I.**

**முன்னுரை.**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** **(1)** இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2020 ஆம் ஆண்டு ஜூலை 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**பகுதி–II.**

**1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் IV/1919.

414–B ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**2.** 1919 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டத்தின் 414-B ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி–III.**

**1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் V/1920.

375–B ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**3.** 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் 375–B ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாகஅமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி–IV.**

**1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 15/1971.

510–AAA ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. 1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் 510–AAA ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி–V.**

**1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 25/1981.

511-AAA ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**5.** 1981 ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டத்தின் 511–AAA ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி–VI.**

**1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 27/1994.

10–Aஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** 1994 ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டத்தின் 10–A ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

பகுதி–VII.

**1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

10–Aஆம் பிரிவிற்கான திருத்தம்.

**7.** 1994 ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டத்தின் 10–A ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 28/1994.

பகுதி–VIII.

**1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

10–Aஆம் பிரிவிற்கான திருத்தம்.

**8.** 1994 ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டத்தின் 10–A ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 29/1994.

பகுதி–IX.

**2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**9.** 2008 ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 7/2008.

பகுதி–X.

**2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**10.** 2008 ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 8/2008.

பகுதி–XI.

**2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**11.** 2008 ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 26/2008.

பகுதி–XII.

**2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**12.** 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/2008.

பகுதி–XIII.

**2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**13.** 2013 ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், "2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடருக்குப் பதிலாக, "2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை" என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 24/2013.

**பகுதி–XIV.**

**2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 25/2013.

9–A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**14.** 2013 ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டத்தின் 9–A ஆம் பிரிவில், “2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி–XV.**

**2019 ஆம் ஆண்டு ஒசூர் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 10/2019.

10 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**15.** 2019 ஆம் ஆண்டு ஒசூர் மாநகராட்சிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்,(4) ஆம் உட்பிரிவில் “2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி–XVI.**

**2019 ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 11/2019.

10 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**16.** 2019 ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்,(4) ஆம் உட்பிரிவில் “2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**பகுதி–XVII.**

**2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டத்திற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் 24/2019.

10 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

17. 2019 ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின்,(4) ஆம் உட்பிரிவில் “2020 ஆம் ஆண்டு ஜூன் 30 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடருக்குப் பதிலாக, “2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை” என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2020.

நீக்கறவு மற்றும் காப்புரை.

**18.** (1) 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தம்) அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

தமிழ்நாடு சட்டம் IV/1919.
தமிழ்நாடு சட்டம் V/1920.
தமிழ்நாடு சட்டம் 15/1971.
தமிழ்நாடு சட்டம் 25/1981.
தமிழ்நாடு சட்டம் 27/1994.
தமிழ்நாடு சட்டம் 28/1994.
தமிழ்நாடு சட்டம் 29/1994.
தமிழ்நாடு சட்டம் 7/2008.
தமிழ்நாடு சட்டம் 8/2008.
தமிழ்நாடு சட்டம் 26/2008.
தமிழ்நாடு சட்டம் 27/2008.
தமிழ்நாடு சட்டம் 24/2013.
தமிழ்நாடு சட்டம் 25/2013.
தமிழ்நாடு சட்டம் 10/2019.
தமிழ்நாடு சட்டம் 11/2019.
தமிழ்நாடு சட்டம் 24/2019.

**(2)** அத்தகைய நீக்கறவு இருந்த போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான **1919** ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிச் சட்டம், **1920** ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், **1971** ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டம், **1981** ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சிச் சட்டம், **1994** ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சிச் சட்டம், **1994** ஆம் ஆண்டு திருநெல்வேலி மாநகராட்சிச் சட்டம், **1994** ஆம் ஆண்டு சேலம் மாநகராட்சிச் சட்டம், **2008** ஆம் ஆண்டு திருப்பூர் மாநகராட்சிச் சட்டம், **2008** ஆம் ஆண்டு ஈரோடு மாநகராட்சிச் சட்டம், **2008** ஆம் ஆண்டு வேலூர் மாநகராட்சிச் சட்டம், **2008** ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சிச் சட்டம், **2013** ஆம் ஆண்டு தஞ்சாவூர் மாநகராட்சிச் சட்டம், **2013** ஆம் ஆண்டு திண்டுக்கல் மாநகராட்சிச் சட்டம், **2019** ஆம் ஆண்டு ஒசூர் மாநகராட்சிச் சட்டம், **2019** ஆம் ஆண்டு நாகர்கோயில் மாநகராட்சிச் சட்டம் மற்றும் **2019** ஆம் ஆண்டு ஆவடி மாநகராட்சிச் சட்டம் ஆகியவற்றின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

2016 அக்டோபர் 4 ஆம் தேதியிட்ட நீதிப்பேராணை மனு எண் 33984/2016–ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆணைக்கிணங்கி பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் தனி அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டனர். பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் கூறப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்காலமானது அவ்வப்போது நீட்டிக்கப்பட்டும், இறுதியாக 2020 ஜூன் 30ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டது.

2. புதிதாக மறுசீரமைக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களில், அதாவது, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசியில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் சிற்றொகுதிகளின் எல்லை மறுவரையறை தொடர்பாக 2019 டிசம்பர் 11ஆம் தேதியிட்ட நீதிப்பேராணை (உரிமையியல்) எண் 1443/2019 உடனிணைந்த, 2019 டிசம்பர் 6 ஆம் தேதியிட்ட உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண்கள் 5467–5469/2017இன் இடைக்கால மனு எண் 182868/2019 இல் மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி தமிழ்நாடு மறுவரையறை ஆணையமானது புதிதாக உருவாக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களில் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் சிற்றொகுதிகளை இறுதி செய்வதற்காக மாவட்ட மறுவரையறை அமைப்புடன் தொடர்ச்சியான கூட்டங்களை நடத்தியது மற்றும் அதன் பரிந்துரைகளை அரசிற்கு சமர்ப்பித்தது மற்றும் அவை அரசின் தீவிர பரிசீலனையின் கீழ் உள்ளன. மேலும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களை நடத்துவதற்காக தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமானது, உள்ளாட்சி அமைப்பின் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல், வாக்குச் சாவடிகளை அடையாளம் காணுதல், சில சிற்றேடுகளைத் திருத்தம் செய்தல், மின்னணு வாக்கு இயந்திரங்களை கையாளுவதற்கு அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களின் தோராயப்படுத்துதலுக்காகவும், மின்னணு வாக்கு இயந்திரங்களுக்காகவும் மென்பொருளினை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கான விரைவான நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளது.

3. இதற்கிடையில், கோவிட்–19 என்ற பெயருடைய தொற்றுநோயின் திடீர் பரவலின் காரணமாக, தீவிர எச்சரிக்கை / பொது முடக்கமானது, மைய அரசு மற்றும் மாநில அரசுகளினால் அறிவிக்கப்பட்டுள்ளன மற்றும் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் 2/1974) 144 ஆம் பிரிவின் படியான ஆணை ஒன்றும் வெளியிடப்பட்டது. மேற்கூறப்பட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, அரசு அலுவலகங்களில் அரசின் குறிப்பிட்ட அளவு ஊழியர்கள் மட்டுமே பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். மேலும், அரசு இயந்திரம் மற்றும் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள், கோவிட்–19 இன் திடீர் பரவலின் காரணமாக, மக்களுக்கு ஏற்பட்ட துன்பத்தினை தணிப்பதற்காக, போர்க்கால அடிப்படையில் தடுப்பு, பாதுகாப்பு, துயர் தணிப்பு மற்றும் நலன் சார்ந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ளன. எனவே, மறுசீரமைக்கப்பட்ட புதிய ஒன்பது மாவட்டங்களில் பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் சிற்றொகுதிகளின் எல்லைகளை வரையறுப்பதற்கான அறிவிக்கையையும் சாதாரண தேர்தல்களை நடத்துதலுக்கான முன்னேற்பாடான பணிகளையும் திட்டமிட்டபடி நிறைவு செய்ய இயலவில்லை.

4. மேலும், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் சிற்றொகுதிகளின் எல்லை மறுவரையறை அறிவிக்கைக்குப் பின்னர், புதிதாக மறுசீரமைக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களின் அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் சிற்றொகுதிகளில் பட்டியல் இனத்தவர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இடஒதுக்கீடானது அறிவிக்கப்படுதல் வேண்டும். அதன்பின்பு மட்டுமே, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமானது நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான சாதாரண தேர்தல்களை நடத்துவதற்கான அட்டவணையை அறிவிக்கை செய்ய இயலும். மேற்சொன்னதன் காரணமாக, நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவதற்கு முன்னேற்பாடான பணிகளை பூர்த்தி செய்ய தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு கூடுதல் கால அவகாசமானது தேவைப்படுகிறது.

5. மேற்கண்ட சூழ்நிலைகளில், தனி அலுவலர்களின் பதவிக்காலமானது 2020 ஜூன் 30 ஆம் தேதியன்று முடிவடைவதன் காரணமாக, தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை 2020 டிசம்பர் 31 வரையிலான மேலும் ஆறு மாத காலத்திற்கு அல்லது பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளுக்கான சாதாரண தேர்தல்களுக்கு பின்பு நடத்தப்படும் மன்றத்தின் முதல் கூட்டம் வரை, இதில் எது முந்தையதோ அது வரையில் நீட்டிப்பதற்காக பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகள் தொடர்பான சட்டங்களை திருத்தம் செய்ய அரசானது முடிவு செய்தது. அதற்கிணங்கிய வகையில், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (மூன்றாம் திருத்தம்) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 8/2020) 2020 ஜூன் 30 ஆம் நாள் அன்று ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்டு, அது, 2020 ஜூலை 1 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

6. இந்தச் சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்கு மாற்றாக அமைய விழைகிறது.

**எஸ்.பி.வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி*
*சிறப்புத் திட்டங்கள் செயலாக்க அமைச்சர்.*

சென்னை,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/2020

### 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது 2020 ஆம் ஆண்டு ஜுலை 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 21 / 1994.

261—A ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் 261—A ஆம் பிரிவில், “2017ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் தொடங்கப்பட்ட நாளுக்குப் பின்பு அல்லது 2020 ஆம் ஆண்டு ஜுன் 30 ஆம் நாள் வரை” கூறப்பட்ட ஊராட்சிகளுக்கு என்ற சொற்றொடருக்குப் பதிலாக “2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம் தொடங்கப்பட்ட நாளுக்குப் பின்பு அல்லது 2020 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் நாள் வரை காஞ்சிபுரம், செங்கல்பட்டு, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களில் கூறப்பட்ட ஊராட்சிகளுக்கு” என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/2020

நீக்கறவு மற்றும் காப்புரை.

3. (1) 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகின்றது.

தமிழ்நாடு சட்டம் 21/1994

(2) அத்தகைய நீக்கறவு செய்யப்பட்டிருந்த போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்டவாறான 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்கக் – காரண விளக்கவுரை**

2016 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4 ஆம் தேதியிட்ட, நீதிப்பேராணை மனு எண் 33984/2016–ல் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். மூன்றடுக்கு ஊராட்சிகளில் கூறப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்காலமானது, அவ்வப்போது நீட்டிக்கப்பட்டு, இறுதியாக 2020 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள்வரை நீட்டிப்பு செய்யப்பட்டது.

2. 2019 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11 ஆம் தேதியிட்ட நீதிப் பேராணை (உரிமையியல்) மனு எண் 1443/2019 உடனிணைந்த, 2019 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6 ஆம் தேதியிட்ட உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண்கள் 5467–5469/2017 இல் இடைக்கால மனு எண் 182868/2019 இல் மாண்பமை இந்திய உச்சநீதிமன்றமானது, மற்றவற்றுடன் புதியதாக உருவாக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களான காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகியவை நீங்கலாக கிராம, இடைநிலை மற்றும் மாவட்ட அளவிலான ஊராட்சிகளுக்கு மூன்று மாதங்களுக்குள் தேர்தலை நடத்துவதற்கு எதிர் மனுதாரர்–அதிகார அமைப்புகளுக்கு கட்டளையிட்டது. அதற்கிணங்கிய வகையில் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமானது புதியதாக உருவாக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களைத் தவிர கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் வார்டு உறுப்பினர்கள் மற்றும் கிராம ஊராட்சிகளின் தலைவர் பதவிக்கான சாதாரண தேர்தல்கள் நடத்தி முடித்து, தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் 06.01.2020 அன்று தங்களின் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார்கள்.

3. 2019 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 11 ஆம் தேதியிட்ட நீதிப் பேராணை (உரிமையியல்) மனு எண் 1443/2019 உடனிணைந்த, 2019 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 6 ஆம் தேதியிட்ட உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண்கள் 5467–5469/2017 இல் இடைக்கால மனு எண் 182868/2019 இல் மாண்பமை இந்திய உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி, தமிழ்நாடு மாநில தொகுதி வரையறை ஆணையமானது புதியதாக உருவாக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களைப் பொறுத்தவரையில் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் ஆகியவற்றின் தொகுதி மறுவரையறையை இறுதி செய்வதற்காக மறுவரையறை அலுவலர்களுடன் தொடர் கூட்டங்களை நடத்தியது. அதன் பரிந்துரைகளை அரசிற்கு சமர்ப்பித்து அவை அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமானது ஊரக உள்ளாட்சி தேர்தல் நடத்தும் பொருட்டு உள்ளாட்சி அமைப்பின் வாக்காளர் பட்டியல்களை தயாரித்தல், வாக்குச் சாவடிகளை அடையாளம் காணுதல், சில குறிப்பேடுகளை திருத்தம் செய்தல், தேர்தல்களை நடத்துவதற்காக அலுவலர்களுக்கு பயிற்சியளித்தல் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களின் தோராயப்படுத்துதலுக்கான மென்பொருளினை உருவாக்குதல் ஆகியவை தொடங்கப்பட்டுள்ளது.

4. இதற்கிடையில், கோவிட்–19 என்ற பெருந்தொற்று நோயின் திடீர்த் தோன்றலின் காரணமாக, உச்ச எச்சரிக்கை / பொது முடக்கமானது, மைய அரசு மற்றும் மாநில அரசுகளினால் அறிவிக்கப்பட்டுள்ளது மற்றும் 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (மையச் சட்டம் 2/1974) 144 ஆம் பிரிவின்படியான ஆணை ஒன்றும் வெளியிடப்பட்டது. இந்த நடவடிக்கைகளின் விளைவாக, அலுவலகங்களில் அரசின் வரையறுக்கப்பட்ட ஊழியர்கள் மட்டுமே பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டார்கள். மேலும் அரசு இயந்திரங்களானது, கோவிட்–19 நோய்த் தொற்று திடீர் தோன்றலின் காரணமாக மக்களின் துன்பத்தினை தணிப்பதற்காக, போர்க்கால அடிப்படையில் தடுப்பு, பாதுகாப்பு, துயர் தணிப்பு மற்றும் நலன் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் ஈடுபட்டுள்ளது. எனவே, புதியதாக உருவாக்கப்பட்ட ஒன்பது மாவட்டங்களில் மூன்றடுக்கு ஊராட்சிகளின் வட்டார எல்லைக்குட்பட்ட தொகுதிகளை வரையறை செய்வதற்கான அறிவிக்கையையும் முன்னேற்பாடான பணிகளையும் திட்டமிடப்பட்ட நடவடிக்கை பட்டியலின்படி நிறைவு செய்ய இயலவில்லை.

5. மேலும், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் வட்டார எல்லைக்குட்பட்ட தொகுதிகளை வரையறுப்பதற்கான அறிவிக்கைக்குப் பின்னர், அனைத்து மூன்றடுக்கு ஊராட்சிகளிலும் பட்டியலின வகுப்பினர், பட்டியலின பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான தொகுதி இட ஒதுக்கீடானது, அறிவிக்கப்படுதல் வேண்டும். அதன்பின்பு, அனைத்து மூன்றடுக்கு ஊராட்சிகளிலும் பட்டியலின வகுப்பினர், பட்டியலின பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான தலைமைப் பதவியின் ஒதுக்கீடானது, அரசால் அறிவிக்கப்படுதலும் வேண்டும். அதன் பின்பு மட்டுமே தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமானது, மாண்பமை உச்ச நீதிமன்றத்தினால் ஆணையிடப்பட்டவாறு, மறு சீரமைக்கப்பட்ட புதிய ஒன்பது மாவட்டங்களில் கிராமப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாதாரண தேர்தல்களை நடத்துவதற்கான அட்டவணையை அறிவிப்பு செய்திட முடியும். மேற்சொன்னதன் காரணமாக, கிராமப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்துவதற்காக முன்னேற்பாடான பணிகளை முடிப்பதற்கு தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திற்கு கூடுதல் கால அவகாசமானது தேவைப்படுகிறது.

6. மேற்கண்ட சூழ்நிலைகளில் காஞ்சிபுரம், செங்கல்பட்டு, வேலூர், திருப்பத்தூர், ராணிப்பேட்டை, விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருநெல்வேலி மற்றும் தென்காசி ஆகிய மாவட்டங்களின் கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் தனி அலுவலர்களின் பதவிக்காலமானது 2020 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 தேதியன்று முடிவடையவிருந்தது. அதன் காரணமாக தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை 2020 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் தேதி வரை மேலும் ஆறு மாத காலத்திற்கு அல்லது கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கான சாதாரண தேர்தல்களுக்குப் பின்பு நடத்தப்படும் முதல் கூட்டம் வரை, இதில் எது முந்தையதோ அது வரையில் நீட்டிப்பதற்காக, 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 261–A ஆம் பிரிவினை திருத்துவதென அரசானது முடிவு செய்துள்ளது.

**7.** அதற்கிணங்கிய வகையில், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 7/2020) 2020 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள் ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்டு, அது 2020 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 1 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசு சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

**8.** இந்தச் சட்ட முன்வடிவானது மேற்சொன்ன அவசரச் சட்டத்திற்கு மாற்றாக அமைய விழைகிறது.

**எஸ்.பி.வேலுமணி,**
*நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்க அமைச்சர்.*

சென்னை,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 37/2020

### குறித்த சில இயற்றுச் சட்டங்களை நீக்கறவு செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.

இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்றுச் சட்டங்கள் வழக்கத்திலிருந்தவை அல்லது மற்றபடி வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற அல்லது குறித்த வகையில் மற்றபடி வெளிப்படையாக நீக்கறவு செய்யப்பட்டதன் மூலம் தவிர பிறவாறு நடைமுறையில் இருக்கக்கூடியது அற்றுபோகக் கூடியவையான இருப்பவை கட்டாயமாக நீக்கறவு செய்யப்படுதல் வேண்டும் என்பது உகந்ததாய் இருப்பதாலும்;

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீக்கறவு செய்தல் (இரண்டாம்) சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

**2.** இணைப்புப்பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்றுச் சட்டங்கள் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்பட்டுள்ளன. குறித்த சில இயற்றுச் சட்டங்களின் நீக்கறவு.

**3.** இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படும் இயற்றுச் சட்டம் எதுவும் பிற இயற்றுச் சட்டம் எதனையும் பாதிக்காது. அதில் நீக்கறவு செய்யப்பட்ட இயற்றுச் சட்டம் பயன்படுத்தப்பட்டிருக்கிற போதும், சேர்க்கப்பட்டிருக்கிற போதும் அல்லது சுட்டப்படும் போதும்; காப்புரைகள்.

மற்றும் இந்தச் சட்டம் செல்லுந்தன்மையையோ, செல்லாத் தன்மையையோ அல்லது செல்திறத்தையோ அல்லது ஏற்கனவே செய்து முடிக்கப்பட்ட எதனையும் அல்லது பாதிக்கப்பட்டதை அல்லது உரிமையையோ, உரிமை மூலத்தையோ, கடப்பாட்டையையோ அல்லது ஏற்கனவே பெறப்பட்ட கடப்பாட்டினை அதிகப்படியானதையோ அல்லது ஏற்படுத்தப்பபட்டிருப்பதையோ அல்லது தீர்வு எதனையும் அல்லது தொடர்பான நடைமுறையை அல்லது பற்று எதனலிருந்தும் அல்லது பற்றினை விடுவிப்பதை, தண்டம், உதவியையோ, கடப்பாட்டினையோ, கோருதலையோ அல்லது தேவையையோ ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழியையோ அல்லது நிரூபிக்கப்படும் கடந்தகால செயல் அல்லது விசயம் எதனையும் பாதிக்காது;

கொள்கை எதனையும் அல்லது சட்டத்தின் ஆட்சியை அல்லது ஏற்படுத்தப்பட்ட அதிகாரவரம்பை அல்லது அமைவுமுறையையோ அல்லது வாதுரையின்போதோ, வழக்கத்தையோ அல்லது நடைமுறையையோ அல்லது இருந்து வரும் பழக்கவழக்கத்தையோ, வழக்காறையோ, சலுகையையோ, தடையையோ, விலக்கையோ, அலுவலகத்தையோ அல்லது பணியமர்த்தத்தையோ எவ்வாறிருப்பினும் அவை முறையே எந்த முறையிலும் ஈங்கிதனால் இயற்றுச் சட்டத்தில் அல்லது இயற்றுச் சட்டம் எதிலிருந்தும் எந்த முறையிலும் உறுதி செய்யப்பட்டிருக்கலாம் அல்லது ஏற்பளிக்கப்பட்டிருக்கலாம் அல்லது அதன்மூலம் பெறப்பட்டிருக்கலாம் என்றிருக்கிற எதுவும் பாதிக்காத வகையில் இருக்கும்;

இயற்றுச் சட்டம் எதுவும் புத்துயிரளித்தல் அல்லது அதிகாரவரம்பு எதனையும் மீட்டெடுத்தல், அலுவலகம், பழக்கவழக்கம், பொறுப்பு, உரிமை, உரிமை மூலம், சலுகை, தடை, விலக்கு, பயன்படுத்துதல், செய்தொழில், நடைமுறை அல்லது பிற பொருட்பாடு அல்லது தற்பொழுது இல்லாமல் இருக்கும் பொருள் அல்லது செல்லாற்றலிலுள்ளவை இந்தச் சட்டத்தால் நீக்கறவு செய்யப்படுவதால் பாதிப்பிற்குள்ளாகாது.

## இணைப்புப் பட்டியல்.

நீக்கறவுகள்.

(2ஆம் பிரிவைக் காண்க.)

| வ.எண் | ஆண்டு | எண் | குறுந்தலைப்பு |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | குடியரசுத் தலைவரின் சட்டம். |
| 1. | 1988 | 6 | 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| | | | தமிழ்நாடு சட்டங்கள் |
| 2. | 1957 | X | 1957 ஆம் ஆண்டு கூலி கொடுத்தல் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். |
| 3. | 1958 | XVI | 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு பேறுகாலச் சலுகை (திருத்தச்) சட்டம். |
| 4. | 1958 | XVII | 1958 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டம். |
| 5. | 1959 | 7 | 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 6. | 1960 | 9 | 1960 ஆம் ஆண்டு தமிழ்நாடு நாணயமடித்தல் (குறிப்பினை மாற்றுதல்) சட்டம். |
| 7. | 1960 | 24 | 1960 ஆம் ஆண்டு தொழிலக வேலைவாய்ப்பு (நிலை ஆணைகள்) (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். |
| 8. | 1964 | 10 | 1964 ஆம் ஆண்டு நில மேம்பாட்டுக் கடன்கள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம். |
| 9. | 1965 | 1 | 1965 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 10. | 1969 | 17 | 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 11. | 1975 | 7 | 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 12. | 1975 | 33 | 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய ( இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 13. | 1981 | 28 | 1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 14. | 1982 | 5 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 15. | 1982 | 21 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய ( இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 16. | 1982 | 44 | 1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (மூன்றாம் திருத்தச்) சட்டம். |
| 17. | 1983 | 31 | 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 18. | 1985 | 30 | 1985 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 19. | 1986 | 67 | 1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 20. | 1987 | 4 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 21. | 1987 | 40 | 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய ( இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 22. | 1989 | 9 | 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 23. | 1989 | 32 | 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய ( இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 24. | 1990 | 5 | 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 25. | 1992 | 4 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |
| 26. | 1992 | 49 | 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய ( இரண்டாம் திருத்தச்) சட்டம். |
| 27. | 1993 | 12 | 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்தச்) சட்டம். |

**நோக்கக் காரண விளக்கவுரை**

தமிழ்நாடு மாநில சட்ட ஆணையமானது பல்வேறு இயற்றுச் சட்டங்கள் மிகவும் பழமையானதாக மற்றும் வழக்கத்தில் இல்லாமல் போயிருக்கிற சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு தன்னுடைய முப்பது, முப்பத்தி இரண்டு, முப்பத்தி மூன்று, முப்பத்தி நான்கு மற்றும் முப்பத்தி ஆறாம் அறிக்கைகளில் பரிந்துரை செய்துள்ளது. ஆகையால், அரசானது, கூறப்பட்ட இயற்றுச் சட்டங்களை கவனமுடன் பரிசீலித்த பின்பு சட்டங்களை நீக்கறவு செய்வதற்கு முடிவு செய்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவு மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

சென்னை,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

**2020—**ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் **16—**ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் **130—**ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 38/2020

### 2009 – ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின் வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

**1.** **(1)** இந்தச் சட்டம், **2020** ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் (திருத்த)ச் சட்டம் என வழங்கப்பெறும்.

**(2)** இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் **21/2009.**

5 ஆம் பிரிவின் திருத்தம்.

**2.** **2009**— ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டத்தின் **5** ஆம் பிரிவில் **(1)** ஆம் உட்பிரிவில் ‘‘அந்த திருமணம் நடைபெற்றுள்ள இடத்தின்’’ சொற்றொடருக்கு பின்பு ‘‘அல்லது திருமணத்தின் ஒரு அல்லது இரு தரப்பினருக்கும் தங்களின் நிரந்தரத் தங்குமிடத்தைக் கொண்டுள்ள அந்த அதிகார வரம்பிற்குள்’’ என்னும் சொற்றொடரானது புகுத்தப்படுதல் வேண்டும்.

**நோக்கக்காரண விளக்கவுரை.**

2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/2009)–ன் படி திருமணம் எந்த பகுதியில் நடைபெறுகிறதோ அப்பகுதியின் பதிவாளரின் அலுவலகத்தில் மட்டுமே திருமணத்தை பதிவு செய்ய முடியும். மாண்புமிகு வணிகவரிகள் மற்றும் பதிவுத்துறை அமைச்சர் அவர்கள், சட்டப்பேரவையின் 2019–2020 ஆம் ஆண்டின் வணிக வரிகள் மற்றும் பதிவுத்துறை தொடர்பான மானியக் கோரிக்கை நடைபெறுகையில், மணமகன் அல்லது மணமகளின் தங்குமிடத்திலுள்ள பதிவாளரின் அலுவலகத்திலும் திருமணம் பதிவு செய்வதை எளிதாக்குவதற்கு கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 21/2009–ல் தேவையான திருத்தம் செய்யப்படுமென அறிவித்தார். கூறப்பட்ட அறிவிப்பிற்கு செயல் வடிவம் கொடுப்பதற்காக 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டதை (தமிழ்நாடு சட்டம் 21/2009) தக்கவாறு திருத்தம் செய்வதென அரசு முடிவெடுத்துள்ளது.

2. இந்தச் சட்ட முன்வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

சென்னை,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 39/2020

**1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தினை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த)ச் சட்டம் என்று அழைக்கப்பெறும்.

(2) இது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடுசட்டம் XIV/1955.

61, 63 மற்றும் 72 ஆம் பிரிவுகளுக்கான திருத்தம்.

2. 1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தின் (இதன் பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 61, 63 மற்றும் 72 ஆம் பிரிவுகளில் ''வருவாய் வாரியம்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக அது வருகின்ற இடங்களிலெல்லாம் ''1980 ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வாரிய ஒழிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 36/1980) 4 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் படி வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய அதிகார அமைப்பு'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

73, 75, 80, 81 மற்றும் 82 ஆம் பிரிவுகளுக்கான திருத்தம்.

3. முதன்மைச் சட்டத்தின் 73, 75, 80, 81 மற்றும் 82 ஆம் பிரிவுகளில் ''புனித ஜார்ஜ் கோட்டை இதழ்'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, அது வருகின்ற இடங்களிலெல்லாம், ''தமிழ்நாடு அரசிதழ்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

68 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 68 ஆம் பிரிவில், ''II ஆம் அட்டவணையின் 11 (g) மற்றும் (u) உறுப்பு'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''II ஆம் அட்டவணையின் 11 (g) மற்றும் 11 (s) உறுப்பு'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

72 ஆம் பிரிவிற்கான திருத்தம்.

5. முதன்மைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவில், (xiv) ஆம் கூறில், ''மாநில இருப்பூர்தி'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''இந்திய இருப்பூர்தி'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

75ஆம் பிரிவிற்கான திருத்தம்.

**6.** முதன்மைச் சட்டத்தின் **75** ஆம் பிரிவானது, அந்தப் பிரிவின் **(1)** ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு மறு எண்ணாக்கம் செய்யப்பட்ட **(1)** ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

‘‘**(2)** இந்தப்பிரிவு மற்றும் **74** ஆம் பிரிவின் நோக்கத்திற்காக’’

(a)‘‘முத்திரை வில்லை’’ என்பது மாநில அரசால் உரியவாறு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஏதேனும் முகவாண்மை அல்லது நபர் எவராலும் செய்யப்படும் குறியீடு, முத்திரை அல்லது ஏற்பிசைவு என்று பொருள்படும்;

(b) ‘‘மின்னணு – முத்திரை வில்லை’’ என்பது இணைய வழிவாயிலாக அல்லது மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறித்துரைக்கப்படலாகிறவாறான வகையில் அதனை ஒத்த மென்பொருள் வாயிலாக கட்டணம் செலுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு தனித்தன்மையுடைய எண் என்று பொருள் படும்.

(c) ‘‘முத்திரையிடப்பட்ட முத்திரை வில்லை’’ என்பது மாநில அரசால் உரியவாறு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள ஏதேனும் முகவாண்மை அல்லது நபர் எவராலும், மின்கட்டண அஞ்சல் முத்திரைப் பொறி அல்லது பிற பொறி எவற்றினாலும் செய்யப்படும் முத்திரை என்று பொருள் படும்.’’

நீக்கறவு மற்றும் காப்புரை.

**7. (1) 2020** ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த) அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் **2/2020.**

**(2)** அத்தகைய நீக்கறவு இருந்த போதிலும், மேற்சொன்ன அவசரச்சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான **1955** ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதி மன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டுச் சட்டத்தின் படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான மேற்சொன்ன அவசரச்சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## நோக்கக் காரண விளக்கவுரை

**1955** ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு (திருத்த)ச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் XIV/**1955**) – **74** மற்றும் **75** ஆம் பிரிவுகளின் படி, அந்தச் சட்டத்தின் கீழ் பெறப்படும் அனைத்து கட்டணங்களும் முத்திரையிடப்பட்ட முத்திரை வில்லைகள், ஒட்டு வில்லைகள் அல்லது மின்னணு வில்லைகள் மூலம் வசூலிக்கப்படுதல் வேண்டும். ''மின்னணு முத்திரை'' என்ற சொல்லுக்குப் பொருள் வரையறை இல்லாத நிலையில், நீதிமன்ற கட்டணத்தை மின்னணு செலுத்தும் முறையின் மூலமாக வசூலிக்க முடியாது. எனவே, நீதிமன்றக் கட்டணத்தை மின்னணு செலுத்தும் முறையின் மூலமாக எளிதாக செலுத்த, கூறப்பட்ட **1955** ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டம் XIV/**1955**–ஐ திருத்துவதற்கு சென்னை உயர்நீதிமன்ற தலைமைப்பதிவாளர் அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். எனவே, மின்னணு செலுத்தும் முறையின் மூலமாக நீதிமன்றக் கட்டணங்களை வசூலிக்க வழிவகுக்கும். 'மின்னணு முத்திரை' என்ற சொல்லை வரையறை செய்யவும் அதேபோல் கூறப்பட்ட சட்டத்தில் முத்திரை மற்றும் முத்திரையிடப்பட்ட முத்திரைவில்லை என்ற சொற்களை வரையறை செய்யவும் முடிவு செய்துள்ளது.

**2.** மேலும், கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் XIV/**1955** இல் ''புனித ஜார்ஜ் கோட்டை இதழ்'' ''வருவாய் வாரியம்'' மற்றும் ''மாநில இருப்பூர்தி'' ஆகிய சொற்றொடர்களுக்கு பார்வை குறிப்புகள் உள்ளன. புனித ஜார்ஜ் கோட்டை இதழானது தமிழ்நாடு அரசிதழ் என மறு பெயரிடப்பட்டது; **1980** ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வாரிய ஒழிப்புச் சட்டத்தினால் (தமிழ்நாடு சட்டம் **36/1980**) வருவாய் வாரியம் ஒழிக்கப்பட்டது மற்றும் இருப்பூர்திகள் மாநிலத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லை, கூறப்பட்ட சொற்றொடர்களையும் தக்கவாறு திருத்தம் செய்யப்படுதல் வேண்டும். எனவே, மேற்சொன்ன நோக்கங்களுக்காக **1955** ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் மதிப்பீட்டு சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் XIV/**1955**) திருத்தம் செய்வதெனஅரசானது முடிவு செய்துள்ளது.

**3.** அதற்கிணங்க, **2020** ஆம் ஆண்டு தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணங்கள் மற்றும் உரிமை வழக்குகள் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச்சட்டம் **2/2020**) **2020** ஆம் ஆண்டு மே திங்கள் **14** ஆம் நாளன்று ஆளுநரால் பிரகடனம் செய்யப்பட்டு மற்றும் அது, **2020** ஆம் ஆண்டு மே திங்கள் **15** ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு சிறப்பிதழில் வெளியிடப்பட்டது.

**4.** இந்தச் சட்டமுன் வடிவு மேற்சொன்ன அவசரச்சட்டத்தை மாற்றியமைக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

சென்னை,
**2020** செப்டம்பர் **16**.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 40/2020

### 1999—ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்ட முன் வடிவு

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2020—ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியத் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) மாநில அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

2. 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியச்சட்டத்தின் (இதன் பின்பு முதன்மைச்சட்டம் என குறிப்பிடப்படுவதான) 12ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இரண்டு ரூபாய்" என்ற சொற்றொடருக்கு ''பத்து ரூபாய்'' என்ற சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 25/1999.

15 —ஆம் பிரிவிற்கான திருத்தம்.

3. முதன்மை சட்டத்தின் 15—ஆம் பிரிவில்,

(1) (3)—ஆம் உட்பிரிவில் "நூறு ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்காக "ஐநூறு ரூபாய்" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) (4)—ஆம் உட்பிரிவில் "நூறு ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்காக "ஐநூறு ரூபாய்" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

(3) (5)—ஆம் உட்பிரிவில் "இரண்டாயிரம் ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்காக "ஐந்தாயிரம் ரூபாய்" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

16—ம் பிரிவிற்கான திருத்தம்.

4. முதன்மைச் சட்டத்தின் 16—ஆம் பிரிவில் (2)—ஆம் உட்பிரிவில் "இரண்டு இலட்சம் ரூபாய்" என்கின்ற சொற்றொடருக்காக "நான்கு லட்சம் ரூபாய்" என்ற சொற்றொடர் மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறைகளின் மாண்புமிகு அமைச்சர், சட்டமன்றப் பேரவையில் 2020–2021 ஆம் ஆண்டிற்கான நீதி நிருவாகம் தொடர்பான மானியக் கோரிக்கை நடைபெறுகையில், ஒரு வழக்கறிஞரின் எழுத்தர் இறந்தால் தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 25/1999) படி பெயர்குறித்து அமர்த்தப்பட்டவருக்கு செலுத்தப்படும் நிதியுதவியை இரண்டு இலட்சம் ரூபாயிலிருந்து நான்கு இலட்சம் ரூபாயாக அதிகரிப்பதாக அறிவித்திருந்தார். அதன் பயனாக 17.06.2020 ஆம் நாளிட்ட உள்துறை, அரசாணை (2D) எண் 138ல் நிர்வாக ஆணைகள் வெளியிடப்பட்டது.

2. மேலும், கூறப்பட்ட நல நிதியத்திற்கு கூடுதல் நிதியினை உண்டாக்கும் பொருட்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியக் குழுவின் செயலாளர், விண்ணப்பத்தின் கட்டணம், உறுப்பினராகுதல் கட்டணம் மற்றும் வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதிய முத்திரையின் முகமதிப்பினை அதிகப்படுத்துவதற்குப் பரிந்துரைத்தார். தீவிர பரிசீலனைக்குப்பின்பு, அரசானது, கூறப்பட்ட சட்டத்தின் கீழ் செலுத்தப்படலாகும் பல்வேறு கட்டணங்களையும் நல நிதிய முத்திரையின் மதிப்பையும் திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

3. மாண்புமிகு அமைச்சரின் மேற்சொன்ன அறிவிப்பிற்கு செயல் வடிவம் கொடுக்கவும் மேற்சொன்ன முடிவுக்கு செயல் வடிவம் கொடுக்கவும், அரசானது, 1999 ஆம் ஆண்டு தமிழ்நாடு வழக்குரைஞர்களுடைய எழுத்தர்கள் நல நிதியச் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 25/1999) தக்கவாறு திருத்தம் செய்வதென முடிவு செய்துள்ளது.

4. இந்தச் சட்டமுன் வடிவு, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது .

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

## சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 41/2020

### தமிழ்நாடு மாநிலத்திலுள்ள பொது அறக்கட்டளைகளை ஒழுங்குமுறைபடுத்துவதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக.

**அத்தியாயம்** - I

**முன்னுரை**

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இச்சட்டம் மாநில அரசால் அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகையத் தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில் தறுவாயின் தேவை வேறு பொருள் குறித்தாலன்றி,—

(அ) ''மாவட்ட ஆட்சியர்'' என்பது, மாவட்ட ஆட்சியர் அல்லது மாவட்ட ஆட்சியரின் பணிகளைச் செய்ய அரசால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள வேறு அலுவலர் எவரும் என்று பொருள்படும்;

(ஆ) ''நீதிமன்றம்'' என்பது, முதலேற்பு அதிகார வரம்பினையுடைய முதன்மை உரிமையியல் நீதிமன்றம் என்று பொருள்படும்;

மையச் சட்டம் XVI/1908.

(இ) ''மாவட்டம்'' என்பது, 1908 ஆம் ஆண்டு பதிவுச்சட்டத்தின் 5 ஆம் பிரிவின்படி உருவாக்கப்பட்ட மாவட்டம் என்று பொருள்படும்;

(ஈ) ''அரசு'' என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் 27/1975.

(உ) ''உரித்தம் உள்ள நபர்'' என்பது, பொறுப்பாட்சியர் எவரும் அல்லது ஒரு பொது அறக்கட்டளையின் பயனாளர் மற்றும் 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி ஒரு அங்கமாக பதிவு செய்யப்பட்ட ஒரு பொது அறக்கட்டளையைப் பொறுத்தவரை அத்தகைய சங்கத்தின் உறுப்பினர் எவரும் என்று பொருள்படும்;

(ஊ) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

தமிழ்நாடு சட்டம் 22/1959.

மையச் சட்டம் 43/1995.

தமிழ்நாடு சட்டம் 44/2018.

(எ) ''பொது அறக்கட்டளை'' என்பது, பொது அல்லது அறஞ்சார்ந்த காரணங்களுக்காகவோ அல்லது இவ்விரண்டிற்காகவோ உருவாக்கப்பட்ட வெளிப்படையான அல்லது கட்டமைப்புடைய ஒரு அறக்கட்டளை அல்லது பொது அல்லது அறஞ்சார்ந்த காரணங்களுக்காக அல்லது இவ்விரண்டிற்காகவும் உருவாக்கப்பட்ட ஒரு சங்கம் என்று பொருள்படும், ஆனால், 1959ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும் அறநிலைக் கொடைகள் சட்டத்தின் கீழுள்ள ஒரு சமய அல்லது அறநிலைக் கொடைகள் மற்றும் 1995 ஆம் ஆண்டு இசுலாமிய அறக்கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ள ஒரு இசுலாமிய அறக்கட்டளையையும் 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு வன்னியகுல சத்திரியர் பொது அறக்கட்டளைகள் மற்றும் அறக்கொடைகள் (பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு) சட்டத்தின்படியான ஒரு அறக்கட்டளையும் உள்ளடங்காது;

மையச் சட்டம் XVI / 1908.

(ஏ) ''பதிவாளர்'' என்பது 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் அமர்த்தப்பட்ட ஒரு மாவட்டத்தின் பதிவாளர், அல்லது இச்சட்டத்தின் கீழ் பதிவாளரின் அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையும் செயலாக்கம் செய்வதற்காக அரசினால் அதிகாரமளிக்கப்பட்ட நபரெவரும் என்று பொருள்படும்;

(ஐ) ''மாநிலம்'' என்பது தமிழ்நாடு மாநிலம் என்று பொருள்படும்;

(ஒ) ''பொறுப்பாட்சியர்'' என்பது, தனித்தோ அல்லது பிற நபர்களுடன் இணைந்தோ, அறக்கட்டளைச் சொத்தின் நிருவாகத்திற்காக உரிமையளிக்கப்பட்டுள்ள ஒரு நபர் என்று பொருள்படும் மற்றும் மேலாளரையும் உள்ளடக்கும்;

(ஓ) ''செயலாற்று பொறுப்பாட்சியர்'' என்பது, ஒரு பொது அறக்கட்டளையின் பொறுப்பாட்சியர்கள் அந்த அறக்கட்டளையின் சொத்தை நிருவாகம் செய்வதற்காக தங்களுக்குள் அமர்த்தப்பட்ட நபரெவரும் என்று பொருள்படுவதோடு ஒரு மேலாளரையும் உள்ளடக்கும்.

(ஔ) இச்சட்டத்தில் பயன்படுத்தப்பட்டு ஆனால் பொருள் வரையறை செய்யப்படாத சொற்களுக்கு 1882 ஆம் ஆண்டு இந்திய அறக்கட்டளைச் சட்டத்தால் பொருள் வரையறை செய்யப்பட்ட சொற்கள் மற்றும் சொற்றொடர்களுக்கு செய்யப்பட்ட பொருள் வரையரையைக் கொண்டிருத்தல் வேண்டும். மையச் சட்டம் 2/1882.

## அத்தியாயம் - II.

## பொது அறக்கட்டளை உருவாக்கம்.

அசையாச் சொத்தின் அறக்கட்டளை.

**3.** அறக்கட்டளையை, தோற்றுவித்தவரால் எழுதி, கையெழுத்திடப்பட்டு மற்றும் பதிவு செய்யப்பட்ட ஒரு உயில்வழி அல்லாத ஆவணத்தினால் அல்லது அறக்கட்டளை தோற்றுவித்தவரின் உயிலினால் சாற்றுவிக்கப்பட்டாலன்றி அசையாச் சொத்து தொடர்பான பொது அறக்கட்டளை செல்லுந்தன்மை பெறாது.

அசையும் சொத்தின் அறக்கட்டளை.

**4.** அறக்கட்டளை தோற்றுவித்தவரால் எழுதி, கையெழுத்திடப்பட்ட ஒரு உயில்வழி அல்லாத ஆவணத்தினால் சாற்றுவிக்கப்பட்டாலன்றி அல்லது அச்சொத்தின் உரிமை பொறுப்பாட்சியருக்கு மாற்றம் செய்யப்பட்டாலன்றி, அசையும் சொத்து தொடர்பான ஒரு பொது அறக்கட்டளை செல்லுந்தன்மை பெறாது.

பொது அறக்கட்டளையின் உருவாக்கம்.

**5.** 3 மற்றும் 4 ஆம் பிரிவுகளின் வகையங்களுக்குட்பட்டு, அறக்கட்டளையினை தோற்றுவித்தவரால் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு பொது அறக்கட்டளை உருவாக்கத்தின் ஆவணமானது,–

(அ) ஒரு பொது அறக்கட்டளை உருவாக்க அவர் தரப்பிலான எண்ணம்;

(ஆ) பொது அறக்கட்டளையின் நோக்கங்கள்;

(இ) பயனாளி;

(ஈ) பொது அறக்கட்டளை சொத்து;

(உ) பொறுப்பாட்சியருக்கு பொது அறக்கட்டளைச் சொத்தின் மாற்றம்; ஆகியவை உள்ளடங்கி இருக்க வேண்டும்.

பொது அறக்கட்டளை எவரால் உருவாக்கப்படலாம்.

**6.** ஒரு பொது அறக்கட்டளையானது,

(அ) 1872 ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்த சட்டத்தின் கீழ் ஒப்பந்தம் செய்ய தகுதியுள்ள நபர் ஒவ்வொருவராலும்; மற்றும் மையச் சட்டம் IX /1872

(ஆ) நீதிமன்றத்தின் அனுமதியுடன் அல்லது ஒரு இளையவரின் சார்பிலும் உருவாக்கப்படலாகும்.

## அத்தியாயம் - III.

## பொது அறக்கட்டளைகளை பதிவுசெய்தல்.

பொது அறக்கட்டளையை பதிவு செய்தல்.

**7.** பொது அறக்கட்டளை ஏதேனும் இச்சட்டத்தின்கீழ் தக்கவாறு பதிவு செய்திருந்தாலன்றி, நபரெவராலும் உருவாக்கப்படக் கூடாது:

**வரம்புரையாக**: இச்சட்டத்தின் தொடக்க நாளில் நடைமுறையிலுள்ள ஒவ்வொரு பொது அறக்கட்டளையும், அந்நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் பதிவுசெய்ய விண்ணப்பித்தல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக**: இச்சட்டத்தின் தொடக்க நாளில் நடைமுறையிலிருக்கும் ஒவ்வொரு பொது அறக்கட்டளையும் அத்தகைய அறக்கட்டளை பதிவுசெய்ய விண்ணப்பிக்கப்படாதிருந்தால், நான்கு மாதங்களுக்குள் மற்றும் அவ்வாறு பதிவுசெய்யப்படும் வரையில் அல்லது அத்தகைய விண்ணப்பம் முடிவு செய்யப்படும் வரை இவற்றில் எது முந்தையதோ அதுவரை அதன் தொழிலை அல்லது அலுவலை தொடர்ந்து செய்தலை நிறுத்துதல் வேண்டும்.

பொது அறக்கட்டளை பதிவு செய்தலுக்கான விண்ணப்பம்.

**8. (1)** பொது அறக்கட்டளையை பதிவு செய்வதற்கான விண்ணப்பமானது, அறக்கட்டளையின் முதன்மைத் தொழிலிடம் அமைந்திருக்கும் மாவட்டத்தின் பதிவாளரிடம், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் சமர்ப்பித்தல் வேண்டும், மற்றும் பிறவற்றுக்கிடையில், பின்வரும் விளக்கங்களை உள்ளடக்கியிருக்க வேண்டும்; அதாவது,–

(i) பொது அறக்கட்டளையின் தோற்றம், தன்மை மற்றும் நோக்கம்;

(ii) பொது அறக்கட்டளையின் முதன்மை அலுவல் அல்லது முதன்மை தொழிலிடம் எங்கு அமைந்துள்ளதோ அவ்விடம்;

(iii) செயலாற்று பொறுப்பாட்சியர் அல்லது மேலாளரின் பெயர்கள் மற்றும் முகவரிகள்;

(iv) பொறுப்பாட்சியரின் அலுவலுக்கான வழியுரிமையின் முறை;

(v) மாவட்டத்திலுள்ள அசையும் மற்றும் அசையா அறக்கட்டளை சொத்தின் பட்டியல் மற்றும் அவற்றை அடையாளம் காண போதுமானதாகும், அத்தகைய விவரம் மற்றும் விளக்கங்கள்;

(vi) அசையும் மற்றும் அசையா அறக்கட்டளைச் சொத்தின் தோராய மதிப்பு;

(vii) விண்ணப்பம் செய்யப்பட்ட நாளிலிருந்து உடனடியாக முன்சென்ற மூன்று ஆண்டுகாலத்தில் அல்லது அறக்கட்டளை உருவாக்கப்பட்டதிலிருந்து கழிந்த கால அளவின் மொத்த ஆண்டு வருமானம் மற்றும் புதிதாக உருவாக்கப்பட்ட பொது அறக்கட்டளையின் நேர்வில், அத்தகைய மூலங்களிலிருந்து வரும் மதிப்பிட்ட வருமானம், ஏதேனும் இருப்பின், அதன் அடிப்படையிலான அசையும் மற்றும் அசையா அறக்கட்டளைச் சொத்திலிருந்து மற்றும் பிற மூலம் எவற்றிலுமிருந்தும் கிடைக்கின்ற வருமானம்;

(viii) viiஆம் கூறின் கீழுள்ள விளக்கங்கள் தொடர்பான கால அளவிற்குள் உள்ளாகும் செலவீனத்தின் மீது மதிப்பிட்ட பொது அறக்கட்டளை தொடர்பான சராசரி ஆண்டு செலவீனத் தொகை;

(ix) பொது அறக்கட்டளை தொடர்பிலுள்ள செயலாற்று பொறுப்பாட்சியர் அல்லது மேலாளருக்கு செய்தித் தொடர்பு ஏதேனும் அனுப்பப்படலாகும் முகவரி; மற்றும்

(x) வகுத்துரைக்கப்படலாகிறவரான பிற விவரங்கள்.

(2) ஐந்தாயிரம் ரூபாய்க்கு மிகாது வகுத்துரைக்கப்படலாகும் கட்டணம் ஏதேனும் இருப்பின், அத்தகைய கட்டணத்துடன் விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

மையச் சட்டம் V/1908.

(3) 1908 ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணை முறைத் தொகுப்புச் சட்டத்தில் வாதுரைகளில் கையெழுத்திடுதல் மற்றும் சரிபார்த்தலுக்காக வகுத்தமைக்கப்பட்டுள்ள முறைக்கிணங்க (1) ஆம் உட்பிரிவின் கீழ் விண்ணப்பிக்கப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பத்திலும் கையெழுத்திட்டு சரிபார்க்கப்படுதல் வேண்டும். அதனுடன் அறக்கட்டளையின் முறையாவணத்தின் நகல் மற்றும் அறக்கட்டளைச் சொத்தில் அசையாச் சொத்து சேர்ந்திருக்குமிடத்தில், கூறப்பட்ட சொத்தினை அறக்கட்டளையை தோற்றுவித்தவர் எதன்மூலம் அடைந்தாரோ, அந்த பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் நகலுடன் இணைத்தல் வேண்டும்.

பதிவு செய்தலுக்கான விசாரணை.

9. (1)ஆம் பிரிவின் கீழ் ஒரு விண்ணப்பத்தை பெற்றுக்கொண்டபின் அல்லது ஒரு பொது அறக்கட்டளையில் உரித்தமுடைய நபரெவராலும் செய்யப்பட்ட ஒரு விண்ணப்பத்தின் பேரில் அல்லது அவருடைய சொந்த முயற்சியில், வகுத்துரைக்கப்படலாகும் முறையில், –

(i) அறக்கட்டளை ஒரு பொது அறக்கட்டளையா ;

(ii) சொத்து ஏதேனும் அத்தகைய அறக்கட்டளையின் சொத்தா;

(iii) அறக்கட்டளையின் நுதல்பொருளின் முழு அல்லது கணிசமான பகுதி அவரின் அளாவுகைக்குள் அமைந்துள்ளதா ;

(iv) அத்தகைய அறக்கட்டளையின் பொறுப்பாட்சியர் அல்லது மேலாளரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் ;

(v) அத்தகைய அறக்கட்டளையின் பொறுப்பாட்சியரின் அலுவலுக்கு பின்தொடர்வதற்கான வழிகள் ;

(vi) அத்தகைய அறக்கட்டளையின் தோற்றம், தன்மை மற்றும் நோக்கம் ;

(vii) அத்தகைய அறக்கட்டளையின் மொத்த சராசரி ஆண்டு வருமானம் மற்றும் செலவினத் தொகை ; மற்றும்

(viii) 8 ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் கீழ் அளிக்கப்பட்ட பிற விவரங்களின் சரிநிலை அல்லது மற்றவகை. இவற்றை உறுதிப்படுத்துவதற்காக ஒரு விசாரணை செய்ய வேண்டும்.

(2) பதிவாளர் (1) ஆம் உட்பிரிவின் கீழ் செய்யப்பட்டிருக்கும் விசாரணையின் பொது அறிவிப்பினை வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் வெளியிட்டு மற்றும் விசாரணையின் கீழுள்ள பொது அறக்கட்டளையில் உரித்தமுடைய நபர்களை அத்தகைய அறக்கட்டளையின் தொடர்பாக மறுப்பு, ஏதேனும் இருப்பின், அதனை அளிக்க அழைத்தல் வேண்டும்.

பதிவாளரின் முடிவுகள்.

10. 9ஆம் பிரிவின் கீழ் விசாரணை நிறைவடைந்ததும், பதிவாளர் அவரது முடிவுகளை காரணங்களுடன் பதிவு செய்தல் வேண்டும்.

பதிவாளர் பதிவேட்டில் பதிவு செய்தல்.

11. (1) பதிவாளர் 10ஆம் பிரிவின் கீழ் அவரால் பதிவு செய்யப்பட்ட முடிவுகளுக்கிணங்கிய வகையில், பதிவேட்டில் பதிவுகளை பதிவு செய்தல் வேண்டும் மற்றும் பதிவேட்டில் செய்யப்பட்ட பதிவுகளை அவரது அலுவலக அறிவிப்பு பலகையில் வெளியிடுதல் வேண்டும்.

(2) செய்யப்பட்ட பதிவுகள், 12ஆம் பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு அறுதியானது மற்றும் முடிவானதாகும்.

பதிவாளரின் முடிவுகளுக்கு எதிரான உரிமையியல் வழக்கு.

12. (1) 10 ஆம் பிரிவின் கீழ் பதிவாளரின் முடிவு எதனாலும் பாதிக்கப்பட்ட பொறுப்பாட்சியர் எவரும் அல்லது பொது அறக்கட்டளையில் உரித்தமுடைய நபர் 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் அத்தகைய முடிவுகளை அறவு செய்தல் அல்லது மாற்றியமைத்தலுக்கு நீதிமன்றத்தில் ஒரு வழக்கை தாக்கல் செய்யலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு வழக்கிலும் நீதிமன்றமானது பதிவாளர் மூலமாக அரசுக்கு அறிவிப்பு வழங்குதல் வேண்டும், மற்றும் அரசு, அது விரும்பினால், வழக்கிற்கு ஒரு வாதியாக சேர்க்கப்படுதல் வேண்டும்.

(3) வழக்கின் இறுதி முடிவுகளில், பதிவாளர் தேவைப்பட்டால், அத்தகைய முடிவிற்கு இணங்கிய வகையில் பதிவேட்டில் செய்த பதிவுகளை சரிசெய்தல் வேண்டும்.

பொது அறக்கட்டளையில் மாற்றம்.

13. (1) பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பதிவுகள் எதிலும் ஏதேனும் மாற்றம் நேர்ந்தால் பணிபுரியும் பொறுப்பாட்சியர், அத்தகைய மாற்றம் நேர்ந்த நாளிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் அல்லது அத்தகைய பொது அறக்கட்டளையின் நிர்வாகத்தின் நலனுக்காக அத்தகைய பதிவுகளில் விரும்பும் எந்த மாற்றமும் வகுத்துரைக்கப்படலாகும். முறையில் பதிவாளரிடம் அத்தகைய மாற்றம் அல்லது முன்மொழியப்பட்ட மாற்றத்தை தெரிவித்தல் வேண்டும்.

(2) அத்தகைய அறிக்கை கிடைக்கப்பெற்ற மற்றும் பதிவாளர் தேவையெனக் கருதும் அத்தகைய விசாரணையை மேற்கொண்ட பிறகும் அவர், ஒரு மாற்றம் நேர்ந்திருக்கிறது அல்லது பொது அறக்கட்டளை தொடர்பாக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள எந்த பதிவும் தேவையென மனநிறைவடைந்தால் அவர் அதற்கான காரணத்துடன் ஒரு முடிவினை பதிவு செய்தல் வேண்டும்; மற்றும் (3)ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள வகைமுறைகளுக்குட்பட்டு அத்தகைய முடிவிற்கிணங்கிய வகையில் பதிவேட்டில் உள்ள பதிவினை திருத்தம் செய்யலாம்.

(3) 12ஆம் பிரிவின் வகைமுறைகள் 10ஆம் பிரிவின் கீழ் முடிவு ஒன்றிற்கு அவை பொருந்துவது போல இந்தப் பிரிவின் கீழ் எடுக்கப்படும் முடிவுகளுக்கும் பொருந்தும்.

அறக்கட்டளை சொத்து குறித்து ஆட்சியருக்கு தகவல் தெரிவித்தல்.

14. (1) பொது அறக்கட்டளையின் அறக்கட்டளை சொத்தின் பகுதி ஏதேனும் ஒரு மாவட்டத்திற்கு மேலான எல்லைக்குள்ளாக அமைந்திருந்தால், பதிவாளர், அறக்கட்டளை சொத்தின் பகுதி ஏதேனும் அமைந்துள்ள அவருடைய அதிகார வரம்பிற்குள்ளான அனைத்து ஆட்சியர்களுக்கும் அந்த பொது அறக்கட்டளையினைப் பொறுத்தவரை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பதிவுகளின் நகலை மேலனுப்பிவைப்புதல் வேண்டும்.

2. (1)ஆம் உட்பிரிவின் கீழ் பதிவுகளின் நகலைப் பெற்றவுடன், ஆட்சியர் அதன் பொருட்டு வகுத்துரைக்கப்பட்ட ஒரு பதிவேட்டில் அத்தகைய பதிவுகளின் விவரங்களை பதிவு செய்தல் வேண்டும்.

உயில் மூலம் பொது அறக்கட்டளை.

**15.** ஒரு உயிலின் விருப்பாவணத்தின் விளைவாக உருவாக்கப்பட வேண்டிய பொது அறக்கட்டளையின் நேர்வில், அத்தகைய உயிலின் நிறைவேற்றுபவர், உயிலின் விருப்புறுதிச் சான்றிதழ் நல்கிய நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அல்லது விருப்பாவணம் எழுதியவர் இறந்த நாளிலிருந்து உயிலின் விருப்பாவண சான்றிதழ் தேவைப்படாத போது ஆறு மாதங்களுக்குள், 8ஆம் பிரிவில் வகை செய்த முறையில் பொது அறக்கட்டளையின் பதிவிற்கு ஒரு விண்ணப்பம் செய்யப்படுதல் வேண்டும்.

பொது அறக்கட்டளை உருவாக்குவதற்கு பொருள்படும் ஆவணம் தாக்கல் செய்யப்பட்ட நடவடிக்கையில் பதிவாளருக்கு தெரிவித்தல்.

**16.** ஒரு நீதிமன்றம் அல்லது ஒரு வருவாய் அலுவலர் முன்பு உள்ள செயல் நடவடிக்கை எதுவும், பொது அறக்கட்டளை உருவாக்குவதற்கு பொருள்படும் ஆவணம் எதுவும் அல்லது அத்தகைய நீதிமன்றம் அல்லது அலுவலர் முன்பு உள்ள வினா எதுவும் பதிவேட்டில் உள்ள பதிவை பாதிக்கக் கூடினால், அத்தகைய நீதிமன்றம் அல்லது அலுவலர் அத்தகைய செயல் நடவடிக்கைகளின் பதிவாளருக்கு அறிவிப்பு வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் அதன் பொருட்டு பதிவாளர் விண்ணப்பித்தால், அத்தகைய செயல் நடவடிக்கைகளுக்கு அவரை ஒரு தரப்பினராக உருவாக்கலாம்.

பொறுப்பாட்சியருக்கான தகுதியின்மை.

**17.** பொது அறக்கட்டளையின் பொறுப்பாட்சியராக பணியமர்த்தம் செய்யப்படுவதற்கோ அல்லது பொறுப்பாட்சியராக தொடர்வதற்கோ பின்வருபவர்கள் தகுதியற்றவராவர்,

(அ) ஒழுக்கக் கேட்டை உள்ளடக்கிய குற்றச்செயல் எவற்றிற்கேனும் ஒரு குற்றவியல் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவராயின்;

(ஆ) ஒரு இந்தியக் குடிமகனாக இல்லயெனில்;

(இ) ஒரு பரம்பரை பொறுப்பாட்சியரைத் தவிர, மற்றவர் இருபத்தைந்து வயதிற்கு குறைவாக இருப்பாராயின்;

(ஈ) அவர் ஒரு விடுவிக்கப்படாததொரு நொடித்த நிலையராக இருப்பாராயின்;

(உ) அவர் ஒரு மனச்சீர் கேடுற்றவராக அல்லது மனக்குறைபாட்டால் துன்புறுபவர் அல்லது பொறுப்பாட்சியரின் கடமைகளை நிறைவேற்ற மற்றும் செயற்பாடுகளை செய்ய தகுதியற்றவராக்கும் உடல் தளர்ச்சி உடையவரானால்;

(ஊ) அவர் மைய அரசு அல்லது மாநில அரசு எதனின் அல்லது உள்ளூர் அதிகார அமைப்பு எதனின் கீழும் பணியிலிருந்து நீக்கப்பட்டு அல்லது விலக்கப்பட்டவரானால்;

(எ) அவர் பொது அறக்கட்டளைகள் எதனின் உரித்தத்திற்கு எதிராக செயல்படுவரானால்;

(ஏ) பொது அறக்கட்டளைக்கு ஏதேனும் அவர் செலுத்த வேண்டிய தொகை நிலுவையிலிருந்தால்; அல்லது

மையச் சட்டம் 2/1974.

(ஐ) 1973 ஆம் ஆண்டு குற்றவியல் விசாரணைமுறைச் சட்டத்தின் 82ஆம் பிரிவின் கீழ் அவருக்கு எதிராக சாற்றாணை வழங்கப்பட்டிருந்தால்.

பணிப்புரைகளை வழங்குவதற்கு பதிவாளருக்குள்ள அதிகாரம்.

**18.** (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, பதிவாளரானவர், பொது அறக்கட்டளையின் பொறுப்பாட்சியர் எவருக்கும் பொது அறக்கட்டளை எந்த நோக்கங்களுக்கு மற்றும் குறிக்கோளுக்காக ஏற்படுத்தப்பட்டதோ அதன்படி முறையாக நிர்வகிக்கபடுவதை உறுதி செய்யவும் மற்றும் அதன் வருமானம் முறையாக கணக்கில்கொள்வதற்கும் அல்லது தக்கவாறு ஒதுக்கப்பட்டு மற்றும் முறையாக செலவு செய்யப்படுவதற்கும் அவ்வப்போது ஆணைகளை பிறப்பிக்கலாம்.

(2) (1)ஆம் உட்பிரிவின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்க அனைத்து பொறுப்பாட்சியரின் அல்லது அதனுடன் இணைந்த நபரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் -IV.

### பொது அறக்கட்டளை சொத்தின் மேலாண்மை.

பொது அறக்கட்டளை பணத்தின் முதலீடு.

**19.** பொது அறக்கட்டளையின் அன்றாட செலவினங்களுக்குத் தேவையான பணத்தைத் தவிர, பொது அறக்கட்டளைக்குச் சொந்தமான அனைத்துப் பணங்களும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது ஒரு அஞ்சலக சேமிப்பு வங்கி அல்லது 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வங்கி எதிலும் இருப்பு வைத்திருக்கப்படுதல் வேண்டும்:

தமிழ்நாடு சட்டம் 30/1983.

வரம்புரையாக: பதிவாளர், பொது அல்லது சிறப்பு ஆணையின் மூலம் பொது அறக்கட்டளை எதனின் பொறுப்பாட்சியர் அத்தகைய பொது அறக்கட்டளையின் பணத்தை பிற வகையான பொது அறக்கட்டளைகளில் பணத்தை முதலீடு செய்ய பிறமுறையில் அனுமதிக்கலாம்.

பொது அறக்கட்டளைக்கு உரியதாயிருக்கிற சொத்தின் விற்பனை போன்றவைகளின் நேர்வில், பதிவாளரின் முன் ஒப்பளிப்பு.

**20.** **(1)**அறக்கட்டளையின் முறையாவணத்தில் கட்டளைகள் அல்லது ஏதேனும் நீதிமன்றத்தினால் இந்தச் சட்டத்தின் படி அல்லது ஏதேனும் பிற சட்டத்தின் படி வழங்கப்பட்ட ஏதேனும் கட்டளைக்குட்பட்டு, –

(அ) ஏதேனும் அசையாச் சொத்தின் விற்பனை, அடமானம், பரிமாற்றம் அல்லது கொடை ஆகியன இல்லை எனின்; மற்றும்

(ஆ) வேளாண் நிலத்தினைப் பொறுத்த நேர்வில், ஐந்தாண்டுகளுக்கு மேற்பட்ட கால அளவிற்கு அல்லது வேளாண் சாரா நிலம் அல்லது கட்டடத்தினைப் பொறுத்த நேர்வில், மூன்றாண்டுகளுக்கு மேற்பட்ட கால அளவிற்கு குத்தகை இல்லை எனின்;

பொது அறக்கட்டளைக்கு உரியதாயிருக்கிறவைகள், பதிவாளரின் முந்திய ஒப்பளிப்பின்றி செல்லுந் தன்மையுடையது ஆகாது.

**(2)** பதிவாளர், அத்தகைய பரிவர்த்தனையானது பொது அறக்கட்டளையின் உரித்தத்திற்கு ஊறு விளைவிக்குமென அவரது கருத்தில் கொண்டாலன்றி, **(1)** ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் பரிவர்த்தனை குறித்து அவரது முன் ஒப்பளிப்பினை மறுத்தல் ஆகாது.

## அத்தியாயம் -V.

### கணக்குகள் மற்றும் தணிக்கை.

கணக்குப் பேணுகை.

**21.** **(1)** பொது அறக்கட்டளையின் பணிபுரியும் பொறுப்பாட்சியர், அனைத்து அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களின் ஒழுங்கு முறையான கணக்குகளை வைத்திருத்தல் வேண்டும்.

**(2)** அத்தகைய கணக்குகளானது, வகுத்துரைக்கப்–படலாகிறவாறான அத்தகைய படிவத்திலும் மற்றும் அத்தகைய விவரங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கணக்குத் தணிக்கை.

**22.** **(1)** **21**ஆம் பிரிவின் படி வைத்திருக்கும் கணக்குகளானது, ஒவ்வொரு ஆண்டின் மார்ச் **31**ஆம் நாளில் அல்லது பதிவாளரால் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய பிற நாளில் சமன் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**(2)** கணக்குகளானது, பட்டயக் கணக்கரால், ஆண்டுதோறும் தணிக்கை செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**(3)** **(2)** ஆம் உட்பிரிவின் படி பணியாற்றுகிற ஒவ்வொரு கணக்குத் தணிக்கையாளரும், அவரின் உடமையிலுள்ள அல்லது பணிபுரியும் பொறுப்பாட்சியாளரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள கணக்குகள், அனைத்து குறிப்பேடுகள், செலவுச்சீட்டுகள், பிற ஆவணங்கள் மற்றும் பதிவுறுக்கள் ஆகியவற்றை ஆய்வு செய்ய உரிமை கொண்டிருத்தல் வேண்டும்.

**(4)** **(1)** மற்றும் **(2)** ஆம் உட்பிரிவுகளுக்கு மாறாக, எது எவ்வாறிருப்பினும், பதிவாளர், அவரது கருத்தில் அத்தகைய சிறப்புத் தணிக்கை தேவையானதெனக் கருதும் போதெல்லாம், ஏதேனும் பொது அறக்கட்டளையின் கணக்குகளின் சிறப்பு தணிக்கை ஒன்றிற்கு ஆணையிடலாம்.

**(5)** **(2)** மற்றும் **(3)** ஆம் உட்பிரிவுகளின் வகைமுறைகளானது, பொருந்தக்கூடிய வரையில் அத்தகைய சிறப்புத் தணிக்கைக்காக வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய கட்டணத்தின் கொடுப்பிற்கு ஆணையிடலாம் மற்றும் அறக்கட்டளைச் சொத்திலிருந்து அதனை செலுத்த பணிபுரியும் பொறுப்பாட்சியர் பொறுப்புடையவராகுதல் வேண்டும்.

ஐந்தொகை குறிப்பினை ஆயத்தப்படுத்துதல் மற்றும் முறைகேடுகளை தெரிவித்தல் முதலியவற்றிற்கான தணிக்கையாளரின் கடமை.

**23.** **(1)** ஐந்தொகை குறிப்பு மற்றும் வரவு செலவுக் கணக்கினை ஆயப்படுத்துவதற்கு **22** ஆம் பிரிவின் படி பொது அறக்கட்டளை ஒன்றின் கணக்குகளை தணிக்கை செய்வதும், அதனை பொது அறக்கட்டளை பதிவு செய்யப்பட்ட அதிகார வரம்பிற்குள் உள்ள பதிவாளரிடம் மேலனுப்புவதும் ஒவ்வொரு தணிக்கையாளரின் கடமையாகுதல் வேண்டும்.

(2) தணிக்கையாளர், அவரது அறிக்கையில், முறைகேடுகளின் அனைத்து நிகழ்வுகள், சட்ட முரணான அல்லது தவறான செலவு அல்லது பணங்கள் திரும்பப் பெறுவதை தவறுதல் அல்லது விட்டுவிடல் அல்லது பொது அறக்கட்டளைக்கு உரியதாயிருக்கிற பிற சொத்து அல்லது வீண் செலவு அல்லது அதன் பிற சொத்து ஆகியவற்றினை குறிப்பிடுதலும், பொறுப்பாட்சியாளர்கள் அல்லது ஏதேனும் பிற நபர்கள் தரப்பின் நம்பிக்கை முறிவு, அல்லது தவறாகப் பயன்படுத்துதல் அல்லது ஏதேனும் பிற தவறான நடத்தையின் விளைவுகளினால் அத்தகைய செலவு, தவறுகை, விடுபடல், இழப்பு அல்லது கழிவானது ஏற்பட்டதா என விளக்கிக் கூறுதலும் வேண்டும்.

**24.** மொத்த ஆண்டு வருமானமானது ஒரு லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட ஒவ்வொரு பொது அறக்கட்டளையில் பணிபுரியும் பொறுப்பாட்சியர், ஆண்டு தோறும், பின்தொடர்கிற ஆண்டில் நிகழக்கூடிய அறக்கட்டளைச் சொத்தின் பற்றுச் சீட்டுகள் மற்றும் பணம் வழங்குதலைக் காட்டுகின்ற வரவு செலவுத் திட்டமொன்றை, வகுத்துரைக்கப்படலாகிறவாறான, அத்தகைய தேதிக்கு முன்னதாகவும், அத்தகைய வடிவிலும் பதிவாளருக்கு பணிந்தனுப்புதல் வேண்டும். வரவு செலவுத் திட்டம்.

**25.** பொது அறக்கட்டளையின் வரவு செலவுத் திட்டம், ஐந்தொகைக் குறிப்பு மற்றும் வரவு செலவுக் கணக்கு மற்றும் தணிக்கை அறிக்கை ஏதேனுமிருப்பின், அவை, வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய கட்டணத்தின் செலுத்தத்தின் பேரில், அத்தகைய அறக்கட்டளையில் உரித்தத்தினைக் கொண்டுள்ள எந்தவொரு நபரினாலும் பதிவாளரின் அலுவலகத்தில் ஆய்விற்கு வெளிப்படையாக இருத்தல் வேண்டும். வரவு செலவுத் திட்டம் முதலானவைகளின் ஆய்வு.

**26.** பொது அறக்கட்டளையில் பணிபுரியும் பொறுப்பாட்சியாளர், வகுத்துரைக்கப்படலாகிறவாறு விவர அறிக்கை மற்றும் அறிக்கைகளை பதிவாளருக்கு அளித்தல் வேண்டும். விவர அறிக்கை மற்றும் அறிக்கைகள்.

**27.** அத்தகைய வரையறைகளுக்குட்பட்டும் வகுத்துரைக்கப் படலாகிறவாறான அத்தகைய கட்டணத்தின் செலுத்தத்தின் பேரிலும், பதிவாளர், பொது அறக்கட்டளையில் உரித்தத்தைக் கொண்டுள்ள எந்தவொரு நபரினாலும் செய்யப்படுகிற விண்ணபத்தின் பேரில், அனைத்தின் சான்றிட்ட படி அல்லது **25**ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஆவணங்களை அந்த நபருக்கு வழங்கலாம். சான்றிட்ட படியினை வழங்குதல்.

## அத்தியாயம் -VI.

## கட்டுப்பாடு.

**28.** பதிவாளர், –

(அ) பொது அறக்கட்டளை ஒன்றிற்கு உரியதாயிருக்கிற சொத்து எதிலும் நுழைவதற்கும் ஆய்வு செய்வதற்கும் அல்லது நுழைவதையும் ஆய்வு செய்வதையும் நிகழ்த்துவதற்கும்: பதிவாளரின் அதிகாரம்.

வரம்புரையாக: ஏதேனும் அறக்கட்டளைச் சொத்தின் மேலான நுழைவுக்கு முன்னதாக, நாற்பத்தி எட்டு மணி நேரத்திற்குக் குறையாதவொரு கால அளவிற்கான அறிவிப்பானது, பணிபுரியும் பொறுப்பாட்சியருக்கு அளிக்கப்படுதல் வேண்டும்;

(ஆ) பொது அறக்கட்டளை ஒன்றின் பொறுப்பாட்சியாளர்களின் ஏதேனும் நடவடிக்கைகளை அல்லது பொறுப்பாட்சியாளர்களின் கட்டுப்பாட்டின் கீழுள்ள அல்லது உடமையிலுள்ள ஏதேனும் குறிப்பேடு அல்லது கணக்குகளைக் கோருவதற்கும் ஆய்வு செய்வதற்கும்;

(இ) பொறுப்பாட்சியாளர்களிடமிருந்து அல்லது பொது அறக்கட்டளை ஒன்றினுடன் தொடர்புடைய ஏதேனும் நபரிடமிருந்து அவர் பொருத்தமெனக் கருதலாகும் ஏதேனும் விவர அறிக்கை, அறிக்கை, கணக்குகள் அல்லது ஆய்வறிக்கை ஆகியவற்றைக் கோருவதற்கும்; அதிகாரங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**29. (1) 23** ஆம் பிரிவின் படி அளிக்கப்பட்ட தணிக்கையாளரின் அறிவிக்கையானது, பதிவாளரின் கருத்தில், பொது அறக்கட்டளையின் நிருவாகத்தில் குறைபாடுகள் உள்ளதெனக் காட்டுமாயின், பதிவாளர், அவர் பொருத்தமெனக் கருதும் அத்தகைய கால அளவிற்குள் அதன் மீதான விளக்கத்தினை அனுப்புமாறு பணிபுரியும் பொறுப்பாட்சியாளரிடம் கோரலாம். பதிவாளரால் அறிக்கை பெறப்பட்ட பின்பு நடவடிக்கை

(2) தணிக்கையாளரின் அறிக்கையினை கருத்தில் கொண்டு, பணிபுரியும் பொறுப்பாட்சியரால் அளிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் விளக்கம் ஏதேனும் இருப்பின், பதிவாளர் வகுத்துரைக்கப்பட்ட முறையில் விசாரணை நடத்தி தொடர்புடைய நபருக்கு ஒரு வாய்ப்பை வழங்கிய பின்பு, பொறுப்பாட்சியர்கள் அல்லது பிற நபர் எவரும் பொது அறக்கட்டளைக்கு இழப்பை விளைவிக்கக்கூடிய கடுங்கவனமின்மை, நம்பிக்கை முறிவு அல்லது தவறான நடத்தையின் குற்றமுற்றவரென மனநிறைவடைந்தால், அவர் ஒரு ஆணையின் மூலம் பின்வருவனவற்றை தீர்மானித்தல் வேண்டும்,–

(அ) பொது அறக்கட்டளைக்கு விளைந்த இழப்பின் அளவு ;

(ஆ) அத்தகைய இழப்பானது, நபர் எவரின் தரப்பினுடைய ஏதேனும் நம்பிக்கை முறிவு அல்லது தவறான நடத்தையின் விளைவாக ஏற்பட்டதா என;

(இ) அத்தகைய இழப்பிற்காக பொறுப்பாட்சியாளர்கள் எவரும் அல்லது பிற நபர் எவரும் பொறுப்புடையவரா; அல்லது

(ஈ) பொறுப்பாட்சியர் எவரும் அல்லது ஏதேனும் பிற நபரும் அத்தகைய இழப்பிற்காக, பொது அறக்கட்டளைக்கு தொகையை செலுத்தப் பொறுப்புடையவரா.

(3) (2)ஆம் உட்பிரிவின் (ஈ) கூறுக்கிணங்கிய வகையில் ஏதேனும் பொறுப்பாட்சியர் அல்லது பிற நபரின் மீதான மேல்வரித் தொகையானது, பதிவாளர் தீர்மானிக்கலாகும் அத்தகைய காலத்திற்குள் பொறுப்பாட்சியாளரால் அல்லது மேல்வரி விதிக்கப்பட்ட நபரால் செலுத்தப்படுதல் வேண்டும்.

மேல்முறையீடு.

30. (1) 29 ஆம் பிரிவின்படி பதிவாளரின் ஆணை ஒன்றினால் இடருற்ற நபர் எவரும், ஆணை பெறப்பட்ட நாளிலிருந்து அறுபது நாட்களுக்குள் நீதிமன்றத்தில் மேல்முறையீடு ஒன்றினை செய்து கொள்ளலாம்.

(2) நீதிமன்றம், அது பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய சான்றினை எடுத்த பின்னர், ஆணையினை உறுதிப்படுத்தலாம், திருத்தியமைக்கலாம் அல்லது அறவு செய்யலாம் அல்லது மேல்வரித் தொகையினை செலுத்தலாம் மற்றும் வழக்கின் சூழ்நிலைகளில் அது பொருத்தமெனக் கருதுகின்ற செலவிற்கென அத்தகைய ஆணையினை ஏற்படுத்தலாம்.

(3) (2) ஆம் உட்பிரிவின் படி மேல்முறையீடு ஒன்றின் தீர்வு நிலுவையிலுள்ள போது, மேல்வரிக்கான அனைத்து நடவடிக்கைகளும், தடுப்பு ஆணை ஒன்றை வழங்குவதற்காக காட்டப்படுகின்ற காரணங்கள் போதுமானதாக இருப்பதன் பேரில், தடை செய்யப்படலாம்.

(4) (2) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்தின் முடிவுக்கு எதிரான கூடுதல் மேல்முறையீடு, அத்தகைய முடிவு ஒரு தீர்பாணையாயிருப்பின் எங்கு இயல்பாக மேல்முறையீடு இருக்குமோ அங்கிருத்தல் வேண்டும்.

காலியிடங்களை நிரப்புதல்.

31. (1) பொறுப்பாட்சியர்கள் குழுமத்தின் மேலாண்மையின் கீழ் பொது அறக்கட்டளை இருக்குமிடத்து, பணிபுரியும் பொறுப்பாட்சியர், குழுமத்தில் காலியிடம் தோன்றிய உடன், அத்தகைய காலியிடம் மற்றும் அதனை நிரப்புவதற்கு அவர் தீர்மானித்த கால அளவு மற்றும் முறை ஆகியவற்றை பதிவாளரிடம் தெரிவித்தல் வேண்டும்.

(2) அத்தகைய தகவல்களைப் பெற்றதன் பேரில், பதிவாளர், தேவையானதென அவர் கருதினால், இதில் குறிப்பிடப்பட்ட அறக்கட்டளையின் முறையாவணத்திற்கு அல்லது வழிஉரிமையின் முறைக்கு முரணாக அல்லாத, அத்தகைய காலியிடத்தை நிரப்புவது தொடர்பாக, பணிபுரியும் பொறுப்பாட்சியருக்கு ஏதேனும் ஆணையினை வழங்கலாம் மற்றும் பணிபுரியும் பொறுப்பாட்சியர் அத்தகைய ஆணை எதனையும் கடைபிடித்தல் வேண்டும்.

(3) பணிபுரியும் பொறுப்பாட்சியர், அத்தகைய தகவல் எதனையும் கொடுப்பதற்கு அல்லது அவரால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் காலியிடத்தினை நிரப்புவதற்கு அல்லது பதிவாளரால் வழங்கப்பட்ட ஆணை எதனையும் கடைபிடிப்பதற்குத் தவறினால், பதிவாளர், எழுத்துப் பூர்வமானதொரு ஆணையின் மூலமாக, காலியிடத்தினை நிரப்பலாம் மற்றும் பதிவாளரின் ஆணையினால் இடருக்குள்ளாகும், பொது அறக்கட்டளையில் உரித்தத்தையுடைய எந்தவொரு நபரும், அத்தகைய ஆணையின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் பதிவாளரின் ஆணையினை செல்லாததாக்குவதற்காக நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

**32. (1)** பொது அறக்கட்டளையில் உரித்தத்தையுடைய எந்தவொரு நபரினாலும் கொடுக்கப்பட்ட புகாரின் பேரில், நீதிமன்றத்தின் ஆணைக்காக விண்ணப்பம் செய்தல்.

(அ) பொது அறக்கட்டளையின் முதன்னை நோக்கமானது தவறி விட்டது எனின்;

(ஆ) அறக்கட்டளைச் சொத்தானது முறையாக நிருவகிக்கப்படவோ அல்லது ஆளப்படவோ இல்லை எனில்; அல்லது

(இ) பொது அறக்கட்டளையின் நிர்வாகத்திற்காக நீதிமன்றத்தின் ஆணையானது, தேவையானது என பதிவாளர் மற்றவகையில் மனநிறைவடைவாராயின், அவர் பணிபுரியும் பொறுப்பாட்சியருக்கு கேட்டறிதலுக்கான வாய்ப்பொன்றினை வழங்கிய பின்னர், அத்தகைய பொறுப்பாட்சியரை, பதிவாளரால் குறிப்பிடப்பட்ட காலஅளவிற்குள் நீதிமன்ற ஆணைபெற விண்ணப்பிக்க ஆணையிடலாம்.

**(2)** அவ்வாறு ஆணையிடப்பட்ட பொறுப்பாட்சியர் தேவையானதொரு விண்ணப்பத்தை செய்யத் தவறினால், அல்லது பொது அறக்கட்டளையின் பொறுப்பாட்சியர் இல்லாதிருந்தால், அல்லது ஏனைய பிற காராணங்களுக்காக, அவ்வாறு செய்வது உகந்ததென பதிவாளர் கருதினால், அவர் நீதிமன்றத்திற்கு தாமாகவே விண்ணப்பம் செய்தல் வேண்டும்.

**33. (1) 32**ஆம் பிரிவின் படியான விண்ணப்பம் பெறப்பட்டதன் பேரில், நீதிமன்றம் பொறுத்தமெனக் கருதும் அத்தகைய விசாரணையை செய்யவோ அல்லது அமையும்படி நிகழ்த்தவோ வேண்டும் மற்றும் தக்கதென கருதலாகும் அத்தகைய ஆணைகளை பிறப்பித்தல் வேண்டும். நீதிமன்றத்தின் விண்ணப்பத்தை விசாரிக்கும் அதிகாரம்.

**(2) (1)**ஆம் உட்பிரிவின் கீழ் அதிகாரத்தை செலுத்தும் பொழுது நீதிமன்றமானது, பிற அதிகாரங்களுக்கிடையில், பின்வருவனவற்றிற்கானதொரு ஆணையை பிறப்பிக்கும் அதிகாரத்தை பெற்றிருத்தல் வேண்டும்:—

(அ) பொறுப்பாட்சியர் எவரையும் நீக்குதல்;

(ஆ) புது பொறுப்பாட்சியரொருவரை பணி அமர்த்துதல்;

(இ) அறக்கட்டளையின் தனிப்பட்ட நோக்கமெவற்றிற்காகவும் அறக்கட்டளை சொத்தின் அல்லது அவ்விடத்தில் உரித்தமுடைய எந்த பாகம், பங்கீடு செய்யப்பட வேண்டுமென விளம்புகை செய்தல்;

(ஈ) அறக்கட்டளை சொத்தின் நிர்வாகத்திற்காக திட்டத்திற்கு வழிவகை செய்தல்;

(உ) பொது அறக்கட்டளை எவற்றின் முதன்மை நோக்கம் தோல்வியடைந்ததோ, அவற்றின் நிதியை, அறக்கட்டளையை உருவாக்கியவருடைய முதன்னை உள்நோக்கம், அல்லது எந்த நோக்கத்திற்காக அறக்கட்டளை தோற்றுவிக்கப்பட்டதோ அவ்வாறே செலவழிக்கப்பட வேண்டுமென கட்டளையிடுதல்; அல்லது

(ஊ) வழக்கின் தன்மைக்கு தேவைப்படலாகும் கட்டளை எதையும் பிறப்பிக்கலாம்.

**(3) (2)** ஆம் உட்பிரிவின் கீழ் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை எதுவும் அத்தகைய நீதிமன்றத்தின் தீர்ப்பாணையென கருதப்பட வேண்டும் மற்றும் அதிலிருந்தொரு மேல்முறையீடானது உயர்நீதிமன்றத்திற்கு செய்தல் வேண்டும்.

மையச் சட்டம் V/1998. **(4) 1908** ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புச்சட்டத்தின் **92** ஆம் பிரிவின் கீழ் பொது அறக்கட்டளையுடன் தொடர்புடைய எந்தவொரு வழக்கும், **32** ஆம் பிரிவின் கீழ் செய்யப்படும் முறையீடு எவற்றின் தொடர்புடையதொரு பொருட்பாட்டின் மீது நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படாது.

## அத்தியாயம்-VII.

### பல்வகை.

விசாரணை மேற்கொள்ளும் அலுவலர்கள் உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரங்களை கொண்டிருத்தல்.

34. இச்சட்டத்தின் கீழ் விசாரணை மேற்கொள்கையில், 1908 ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணைமுறைத் தொகுப்புச் சட்டத்தின் கீழ், ஒரு வழக்கை பின்வரும் பொருட்பாடுகள் தொடர்பாக விசாரிக்கையில், நீதிமன்றத்திற்கு அளிக்கப்பட்டிருக்கும் அதே அதிகாரங்களை பதிவாளர் கொண்டிருத்தல் வேண்டும். மையச் சட்டம் V/1908.

(அ) ஆணை உறுதி ஆவணம் மூலம் பொருண்மையின் சான்று;

(ஆ) நபர் எவருக்கும் அழைப்பாணை அனுப்புதல் மற்றும் வருகையை நடைமுறைபடுத்துதல் மற்றும் அவரை உறுதிமொழியின் பேரில் விசாரணை செய்தல்;

(இ) ஆவணங்களை தாக்கல் செய்தலைக் கட்டாயப்படுத்துதல்;

(ஈ) பணிப்பாணை வழங்குதல்;

விசாரணையானது நீதிமுறை நடவடிக்கைகளாகும்.

35. இச்சட்டத்தின் கீழ் வரும் அனைத்து விசாரணைகளும் இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 193, 219 மற்றும் 228ஆம் பிரிவுகளின் பொருளின்படி நீதிமுறை நடவடிக்கைகளாகக் கருதப்படுதல் வேண்டும். மைய சட்டம் XLV/1860.

இச்சட்டத்தின் கீழான நடவடிக்கைகளுக்கு உரிமையியல் விசாரணைமுறை தொகுப்புச் சட்டம் பொருந்துதல்.

36. இச்சட்டத்தில் உள்ளடங்கிய எதுவும் முரண்பாடாக இருந்தாலன்றி, இச்சட்டத்தின் நீதிமன்றத்தின் முன்னிலையிலான அனைத்து நடவடிக்கைகளுக்கும், 1908 ஆம் ஆண்டு உரிமையியல் விசாரணைமுறைத் தொகுப்பு சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துதல் வேண்டும். மையச் சட்டம் V/1908.

நிலுவைத் தொகைகளை வசூல் செய்தல்.

37. 29 மற்றும் 30 ஆம் பிரிவுகளின் கீழ் அல்லது விதி எதற்கும் கீழ் செலுத்த வேண்டிய அனைத்து தொகைகளும் செலுத்தப்படாதிருப்பின், சட்டம் எதிலும் உள்ளடங்கிய எது எதுவாயிருப்பினும், மற்றும் இந்த அல்லது பிற சட்டத்தின் கீழ், எடுக்கப் பொறுப்புடைய நடவடிக்கை எதற்கும் ஊறு பயக்காதவாறு நிலுவையிலுள்ள நில வருவாயை வசூலித்தல் போன்று திரும்பப் பெறுதல் வேண்டும்.

பதிவாளரின் விசாரணை.

38. இச்சட்டத்தின் கீழ், பதிவாளரால் வழக்கு எவற்றையும் விசாரணை செய்யப்படுமிடத்தில், அவர் தானே விசாரணை செய்யலாம் அல்லது அவ்வழக்கினை புலனாய்வுக்காக அனுப்பலாம் மற்றும் வருவாய் கோட்டாட்சிரியரின் படிநிலைக்கு குறையாத வருவாய் அலுவலரெவரிடமும் அறிக்கை செய்யலாம்.

விதிகளை செய்வதற்கான அதிகாரம்.

39. (1) அரசானது இச்சட்டத்தின் வகைமுறைகளின் நிறைவேற்றுவதற்காக விதிகளை செய்யலாம்.

(2) (அ) இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட அனைத்து விதிகளும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுதல் வேண்டும் மற்றும் குறிப்பிட்ட நாளில் நடைமுறைக்கு வருமென வெளிப்படையாக குறித்தாலன்றி, அவை வெளியிடப்பட்ட நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(ஆ) இச்சட்டத்தின் கீழ் வெளியிடப்படும் அனைத்து அறிவிக்கைகளும் குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருமென வெளிப்படையாகக் குறித்தாலன்றி, அவை வெளியிடப்பட்ட அந்நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் கீழ் அரசினால் வகுக்கப்படும் ஒவ்வொரு விதி அல்லது வெளியிடப்படும் ஆணை அல்லது அறிவிக்கையும், அது வகுக்கப்பட்ட அல்லது வெளியிடப்பட்டதன் பின்பு, இயன்ற வரைவில் சட்டப் பேரவையின் முன் வைத்தல் வேண்டும், மற்றும் அவ்வாறு வைக்கப்பட்ட அமர்வின் அல்லது அடுத்த அமர்வின் காலமுடிவுக்கு முன்னர், அத்தகைய விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை எதிலும் பேரவை மாற்றம் எதையும் செய்தால் அல்லது அவ்விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை வகுக்கப்பட அல்லது வெளியிடப்பட கூடாதென பேரவை முடிவுசெய்திருந்தால், அதன்பின்பு, அவ்விதி அல்லது ஆணை அல்லது நேர்வுக்கேற்ப அறிவிக்கை அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறையிலிருக்கும், அல்லது நடைமுறையிலிருக்காது. எனினும், அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் அவ்விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கையின்கீழ் முன்னதாக செய்த எவற்றின் செல்லுந்தன்மைக்கும் ஊறுபயக்காதவாறிருத்தல் வேண்டும்.

**40.** இச்சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல்வடிவம் அளிப்பதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், அந்த இடர்பாடுகளை களையும் நோக்கத்திற்காக தேவைப்படலாகும், அல்லது உகந்ததாகும், இச்சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரண்பாடற்ற அத்தகைய வகைமுறைகளை அரசானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டதொரு ஆணையினால் வகைமுறைகளைச் செய்யலாம். இடர்பாடுகளை நீக்கம் செய்யும் அதிகாரம்.

**வரம்புரையாக:** ஆனால், இச்சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளின் முடிவுக்கு பிறகு, இப்பிரிவின்கீழ் ஆணை பிறப்பிக்கப்படக்கூடாது.

**41.** இச்சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய ஆணைகளை அரசானது அவ்வப்போது பிறப்பிக்கலாம். அரசின் கட்டளையிடும் அதிகாரம்.

**42.** தற்போது நடைமுறையிலுள்ள மாநில சட்டப்பேரவையால் இயற்றப்பட்ட பிற சட்டமெதிலும் உள்ளடங்கிய முரண்பாடான எது எவ்வாறுயிருப்பினும், இச்சட்டத்தின் வகைமுறைகளே மேலோங்கி நிற்கும். சட்டமானது பிற சட்டங்களை விட மேலோங்கி இருத்தல்.

மையச் சட்டம் XIV/1920. **43.** இச்சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து, 1920 ஆம் ஆண்டு அற மற்றும் சமயப் பொறுப்புக் கட்டளைகள் சட்டம் இம்மாநிலத்தின் பொது அறக்கட்டளைகளுக்கு பொருந்தாது. சமய மற்றும் அறக்கட்டளைகள் சட்டம், 1920 பொருந்தாது.

**நோக்கக் காரண விளக்கவுரை.**

பொது அறக்கட்டளைகளின் முறையான செயல்பாட்டிற்காக திட்டம் அல்லது வழிமுறைகளை உருவாக்குவதற்கும் மேற்பார்வை குழுக்களை அமைப்பதற்கும், 29.05.2018 ஆம் தேதியிட்ட செய்த முறையீட்டினை மாநில அரசு கருத்தில் கொள்வதனைச் செயலுறுத்தும் நீதிப்பேராணை ஒன்றினைக் கோரி வழக்கறிஞர் திரு.எம்.காந்தி தாக்கல் செய்த நீதிப்பேராணை (எம்.டி) எண்.12686/2018 இல் 05.07.2018 ஆம் தேதியிட்ட ஆணையில் சென்னை உயர்நீதிமன்றமானது மனுதாரரின் முறையீட்டினை தகுதி அடிப்படையாக கருத்தில் கொண்டும் மற்றும் அதனை செயல்படுமாறும் மாநில அரசுக்கு கட்டளையிட்டது. மேலும், குற்றச் செயலுக்காக தண்டிக்கப்பட்ட நபர்களை பொது அறக்கட்டளையின் அலுவலைப்புரிவதிலிருந்து விலக்கவும் ஒழுங்கீனச் செயல்களுக்குள்ளான குற்றச் செயல் எதற்கும் அவருக்கு குற்றத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பின் பொது அறக்கட்டளையின் பொறுப்பாட்சியர் தானாக தகுதியின்மையாகுதலுக்காக, இந்திய அரசுக்கு கட்டளையிடக் கோரி டாக்டர்.பி.ஆர். சுபாஷ் சந்திரன் தாக்கல் செய்த நீதிப்பேராணை (உரிமையியல்) எண். 472/2018 இல் 02.07.2018ஆம் தேதியிட்ட அதன் ஆணையில், இந்திய உச்சநீதிமன்றமானது, பொது அறக்கட்டளையின் பொறுப்பாட்சியர் தண்டிக்கப்பட்ட நபராக இருத்தல் கூடாதென ஒரு சட்டம் இல்லாத தொடர்புடைய மாநிலங்களுக்கு முறையீடுகளை சமர்ப்பித்தலே மனுதாரரின் தரப்பில் தற்போது பொருத்தமானதாயிருக்கும் என்றும் மற்றும் விரிவான முறையீடு சமர்ப்பிக்கப்பட்டால், தொடர்புடைய மாநிலமானது அதனை முறையான தொலைநோக்குடன் கருத்தில் கொள்ளலாமெனவும் கருத்துறை தெரிவித்தது. தமிழ்நாடு மாநிலம் உள்ளடங்கிய பல்வேறு மாநிலங்களின் தலைமைச் செயலாளர்களிடம் டாக்டர்.பி.ஆர்.சுபாஷ் சந்திரன் 10.07.2018ஆம் தேதியிட்ட முறையீட்டினை சமர்ப்பித்துள்ளார்.

2. தற்போது, இந்து சமய அறக்கட்டளை மற்றும் இசுலாமிய அறக்கட்டளைகள் தவிர பிற அறஞ்சார் தன்மையுடைய பொது அறக்கட்டளைகள் சில வரையரையிட்ட நோக்கங்களுக்கு மட்டும் வழங்குகின்ற 1920ஆம் ஆண்டு அற மற்றும் சமய பொறுப்புக் கட்டளைகள் சட்டத்தினால் (மையச் சட்டம் XIV/1920) கட்டுப்படுத்தப்படுகிறது. தீவிர பரிசீலனைக்கு பின்பு, அரசானது மாநிலத்தின் பொது அறக்கட்டளைகளை முறைப்படுத்த பிறவற்றிற்குள், அறக்கட்டளைகளை பதிவு செய்தல், பொறுப்பாட்சியராயிருக்கத் தகுதியின்மை, அறக்கட்டளைகளால் கணக்குகளைப் பேணுதல் மற்றும் அதன் தணிக்கை, மற்றும் அறக்கட்டளைகளின் நிர்வாகத்தின் மீதான கட்டுப்பாடுகளை வழங்க, ஒரு முழுமையானச் சட்டத்தை மேற்கொள்வதென முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவு, மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

**சட்டமியற்றும் அதிகார ஒப்படைவு பற்றிய விவரக் குறிப்பு.**

சட்டமுன்வடிவின் 1 (2), 8, 9, 13(1), 18(1), 19, 21(2), 22(5), 24, 25, 26, 27, 29 (2) மற்றும் (3), 39, 40 மற்றும் 41 ஆம் கூறுகளானது அதில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காக அறிவிக்கைகள், ஆணைகள் அல்லது பணிப்புரைகளை வழங்க அல்லது நேர்வுக்கேற்ப விதிகளை உருவாக்க அரசு அல்லது பதிவாளருக்கு அதிகாரம் அளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவே அன்றி தனித்தன்மை வாய்ந்தவை அல்ல.

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு.**

2020ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் சட்ட முன்வடிவானது இயற்றப்படும் போது மாநிலத்தின் தொகு நிதியத்திலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும் கருதப்பட்டுள்ள இச்சட்டத்தை இயற்றுவதன் விளைவாக ஏற்படக்கூடிய செலவீனத்தை இந்த நிலையில் எந்தக் கோணத்திலும் துல்லியமாக மதிப்பிட இயலாது.

**சி.வி. சண்முகம்,**
*சட்டம், நீதிமன்றங்கள் மற்றும்*
*சிறைச்சாலைகள் துறை அமைச்சர்.*

2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.42/2020**

**2020 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்ட முன்வடிவு**

**கூறுகளின் வரிசையமைப்பு**

**அத்தியாயம் I.**

**முன்னுரை**

கூறுகள்:

1. குறுந்தலைப்பு, பொருந்துகை, அளாவுகை மற்றும் தொடக்கம்.
2. வரையறைகள்.

**அத்தியாயம் II.**

**பல்கலைக்கழகம்**

3. பல்கலைக்கழகம்.
4. பல்கலைக்கழகத்தின் அதிகாரங்களும், நோக்கங்களும்.
5. பொறியியல் கல்லூரிகள் பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப்பெறுதல் ஆகாது என்பதும் கல்வி நிலையங்களுக்கு பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவளிக்கப் பெறுதலும்.
6. பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல்.
7. மேற்பார்வை அதிகாரம்.

**அத்தியாயம் III.**

**பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்**

8. பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்.
9. வேந்தர்.
10. இணை வேந்தர்.
11. துணை வேந்தர்.
12. துணைவேந்தரின் அதிகாரங்களும், கடமைகளும்.
13. புலங்களின் தலைவர்கள் மற்றும் இயக்குநர்கள்.
14. பதிவாளர்.
15. நிதி அலுவலர்.
16. தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்.
17. துணை வேந்தர் மற்றும் பிற அலுவலர்கள் முதலானோர் பொது ஊழியர்களாக இருத்தல்.

**அத்தியாயம் IV.**

**பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்**

18. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்.
19. உறுப்பினருக்கான தகுதிக்கேடு.
20. ஒரு சில நேர்வுகளில் ஆட்சிக்குழு மற்றும் கல்வி மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கான அல்லது பெயர் குறித்து நியமிப்பதற்கான தகுதிக்கேடுகள்.
21. ஆட்சிக்குழு.
22. ஆட்சிக்குழுவின் அதிகாரங்கள்.
23. ஆட்சிக் குழுவின் கூட்டங்கள்.
24. கல்வி மன்றம்.
25. கல்விமன்றத்தின் அதிகாரங்களும் அலுவல்களும்.
26. கல்விமன்ற கூட்டங்கள்.
27. நிதிக்குழு.
28. திட்டமிடும் குழு.
29. பாடக்குழுக்கள்.
30. புலன்களை அமைத்துரு வாக்குதலும் செயற்பணிகளும்.
31. பிற அதிகார அமைப்புகளை அமைத்துருவாக்குதல்.

32. குழுக்களை அமைத்துருவாக்குதல் மற்றும் அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.

**அத்தியாயம் V.**

**நிலைவிதிகள், துணைமுறை விதிகள், ஒழுங்குமுறை விதிகள்**

33. நிலை விதிகள்.
34. நிலை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது.
35. துணைமுறை விதிகள்
36. துணைமுறை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது.
37. ஒழுங்குமுறை விதிகள்.

**அத்தியாயம் VI.**

**மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதலும், அவர்களின் தங்கும் இடமும்**

38. பல்கலைக்கழக படிப்புப் பிரிவுகளுக்குச் சேர்த்துக் கொள்ளுதல்.
39. பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளுதல்.
40. பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கான வருகைப் பதிவு குறித்த தகுதி.
41. தங்குமிடமும், மாணவர் விடுதியும்.

**அத்தியாயம் VII.**

**பல்கலைக்கழக நிதியங்கள், ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்**

42. பொது நிதியங்கள்.
43. பிற நிதியங்கள்
44. நிதியங்களை மேலாண்மை செய்தல்
45. ஆண்டறிக்கை
46. ஆண்டுக் கணக்குகள்

**அத்தியாயம் VIII.**

**பணி வரைக்கட்டுகள் (நிபந்தனைகள்)**

47. ஓய்வூதியம், பணிக்கொடை முதலானவை.
48. பணிவரைக் கட்டுகள்.
49. தெரிவுக்குழு.
50. துறைத் தலைவர்களின் பணி வரையறைகளும், வரைக்கட்டுகளும்.
51. புலன்களின் தலைவர்கள்.

**அத்தியாயம் IX.**

**கல்லூரிகளை மாற்றுதல்**

52. ஒருசில கல்லூரிகளை பல்கலைக்கழகத்திற்கு மாற்றுதல்.
53. தமிழ்நாடு சட்டம் 30/1978 பொருந்தாது.

**அத்தியாயம் X.**

**மாறுதல்கால வகைமுறைகள்**

54. முதல் துணை வேந்தரின் நியமனம்.
55. முதல் பதிவாளரின் நியமனம்
56. முதல் துணை வேந்தரின் மாறுதல் கால அதிகாரங்கள்.

**அத்தியாயம் XI.**

**பல்வகைப்பட்டவை**

57. தற்செயல் காலி இடங்களை நிரப்புதல்.
58. பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளின் மற்றும் பிற அமைப்புகளின் நடவடிக்கைகள், காலி இடங்கள் காரணமாக செல்லாதவையாக ஆக்கப்படுதல் ஆகாது.
59. பல்கலைக்கழக உறுப்பினர் பதவி நீக்கல்.
60. பல்கலைக்கழக அதிகார அமைப்புகளையும், பிற அமைப்புகளையும் அமைத்துருவாக்குதல் பற்றிய தகராறுகள்.
61. தகவல் பெறுவதற்கான அதிகாரம்.
62. பட்டதாரிகளை பதிவு செய்தல்.
63. சிறப்பு நியமன முறை.
64. இணைக்கப்பட்ட கல்லூரி மீதான அறிக்கை.
65. இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.
66. பணிப்புரைகள் வழங்க அரசுக்கு உள்ள அதிகாரம்.

**சென்னையில் அண்ணா பல்கலைக்கழகமொன்றை நிறுவியமைப்பதற்கு வகை செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

அத்தியாயம் I. முன்னுரை

குறுந்தலைப்பு, பொருந்துகை அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2020–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, அண்ணாமலை பல்கலைக்கழக சட்டம் 2013ல் 1 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவு குறிப்பிடப்பட்டுள்ளவாறாக அண்ணாமலை நகர் நீங்கலாக தமிழ்நாடு மாநிலம் முழுமைக்கும் அளாவி நிற்கும்.

(3) இது, இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளவையும், இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட நிலை விதிகள், அவசர விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றிற்கு இணங்க அதனால் பேணப்படுபவையும், இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பெறும் அல்லது அதனால் ஒப்புதலளிக்கப் பெறுபவையுமான அனைத்துக் கல்லூரிகளுக்கும், கல்வி நிலையங்களுக்கும் பொருந்துவதோடு, இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருப்பனவாக அல்லது அதனால் ஒப்புதலளிக்கப்பட்டிருப்பனவாகக் கொள்ளப்படும் அனைத்துக் கல்லூரிகளுக்கும் கல்வி நிலையங்களுக்கும் கூடப் பொருந்தும்.

(4) இஃது அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தின், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி, –

(1) "கல்வி ஆண்டு" என்றால், இப்பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வருகிற அனைத்துக் கல்லூரிகளையும், நிறுவனங்களையும் பொறுத்தவரையிலோ அல்லது அதன் குறிப்பிட்ட கல்லூரி எதனையும் பொறுத்தவரையிலோ ஆட்சிக் குழுவானது குறித்துரைக்கக்கூடியவாறான அத்தகைய தேதி அன்று தொடங்குகிற பன்னிரெண்டு மாத கால அளவு ஒன்று எனப் பொருள்படும்.

(2) "இணைவுக் கல்லூரி" என்றால், இணைக்கப்பட்ட கல்லூரிஇப்பல்கலைக் கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளதும் இப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டதும் மற்றும் இப்பல்கலைக் கழகத்தின் பட்டங்களுக்கான, பட்டயங்களுக்கான, அல்லது பிற கல்வி சிறப்புகளுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளப் படுவதற்கான பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான அறிவியலில் குறித்த கால படிப்பு பிரிவு வகைகளுக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி அல்லது நிறுவனம் எனப் பொருள்படும், மற்றும் இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்பட்ட கல்லூரி ஒன்றையும் மற்றும் தன்னாட்சி கல்லூரி ஒன்றையும் உள்ளடக்கும்;

(3) "உதவி பெறும் கல்லூரி" என்றால், அரசு நிதியங்களிலிருந்து உதவி பெறுகிற, ஆனால் அரசு கல்லூரி அல்லாத பிற கல்லூரி ஒன்று எனப் பொருள்படும்.

.மையச் சட்டம் 52/1987

(4) "தொழில்நுட்பக் கல்விக்கான அகில இந்திய மன்றம்" என்றால், 1987–ஆம் ஆண்டு அகில இந்திய தொழிற்கல்வி மன்றச் சட்டத்தின் 3–ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட மன்றம் என்று பொருள்படும்.

(5) "குறிக்கப்பட்ட நாள்" என்றால், 1–ஆம் பிரிவின் (4)–ஆம் உட்பிரிவின்படி அரசு அறிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதி என்று பொருள்படும்.

(6) "ஒப்புதலளிக்கப்பெற்ற கல்லூரி" என்றால், இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ளதும், இப்பல்கலைக்கழகத்தால் ஒப்புதல் அளிக்கப் பெற்றுள்ளதும் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் விருதுகள் மற்றும் பட்டயங்களுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளப் படுவதற்கான குறித்த கால படிப்புப் பிரிவுகளுக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி எதுவும் எனப் பொருள் படுவதோடு, இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகத்தின் ஒப்புதல் அளிக்கப்பெற்றிருப்பதாகக் கொள்ளப்பெற்ற நிறுவனம் ஒன்றையும் உள்ளடக்கும்.

(7) "தன்னாட்சி கல்லூரி" என்றால், இப்பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவால் ஒரு தன்னாட்சி கல்லூரி என பெயர் குறிக்கப்பெற்ற இணைக்கப்பெற்ற கல்லூரி எதுவும் எனப் பொருள்படும்.

(8) "புலத்தின் தலைமையாளர்" என்றால், இப்பல்கலைக்கழகத்தின் புலம் ஒன்றின் தலைமையாளர் என்று பொருள்படும்;

(9) "கல்லூரி" என்றால், இப்பல்கலைக்கழகத்தால் அமைக்கப்படும் அல்லது பேணிவரப்படும் அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்பெற்றுள்ள அல்லது அத்துடன் இணைக்கப் பட்டுள்ள மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்வி சிறப்புகளுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான அறிவியல் குறித்த கால படிப்புப் பிரிவுகளுக்கு அல்லது பயிற்சிக்கு வகை செய்கின்றதுமான கல்லூரி ஒன்று அல்லது நிறுவனம் ஒன்று எனப் பொருள்படும்;

(10) "உறுப்பமை கல்லூரி அல்லது பல்கலைக்கழக கல்லூரி" என்றால், பட்டங்கள், பட்டயங்கள் அல்லது பிற கல்வி சிறப்புகளுக்கான தேர்வுகளுக்கு மாணவர்களை அனுப்புவதற்காக பொறியியல் தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான அறிவியலில் குறித்தகால படிப்பு பிரிவு அல்லது பயிற்சி எதனையும் வழங்குவதற்காக இப்பல்கலைக் கழகத்தால் நிறுவப்படும் அல்லது பேணிவரப்படும் கல்லூரி ஒன்று எனப் பொருள்படும்.

(11) "இயக்குநர்" என்றால், வகுத்துரைக்கப்படக் கூடியவாறான ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தலைவர் அல்லது மேற்படிப்பு மையம் ஒவ்வொன்றின் தலைவர் எனப் பொருள்படும்.

(12) "புலம்" என்றால், பல்கலைக்கழகத்தின் புலம் ஒன்று பொருள்படும்.

(13) "அரசு" என்றால், மாநில அரசு என்று பொருள்படும்.

(14) "மாணவர் விடுதி" என்றால், இந்த சட்டத்தின் வகைமுறைகளுக்கிணங்க இப்பல்கலைக்கழகத்தால் பேணி வரப்பெறும் அல்லது ஏற்பிசை அளிக்கப்பெற்றுள்ள, இப்பல்கலைக் கழகத்தின் மாணவர்கள் தங்கியிருப்பதற்கான ஓரிடம் என்று பொருள் பெறுவதோடு, இந்தச் சட்டத்தின்படி இப்பல்கலைக்கழகத்தால் ஏற்பிசை அளிக்கப் பெற்றிருப்பதாக கொள்ளப்பெறும் மாணவர் விடுதியொன்றையும் உள்ளடக்கும்;

(15) "வகுத்துரைக்கப்பெற்ற" என்றால், இந்த நிலை விதிகளாலோ, அவசர விதிகளாலோ, ஒழுங்குமுறை விதிகளாலோ வகுத்துரைக்கப்பெற்ற என்று பொருள்படும்;

(16) "முதல்வர்" என்றால், இணைக்கப்பட்ட கல்லூரியொன்றின் தலைவர் என்று பொருள்படும்;

(17) "பதிவு செய்யப்பட்ட பட்டதாரி" என்றால், இந்தச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்ட பட்டதாரி ஒருவர் எனப் பொருள்படும்;

(18) "நிலை விதிகள்", "அவசர விதிகள்" மற்றும் "ஒழுங்குமுறை விதிகள்" என்பவை, இந்த சட்டத்தின்படி செய்யப் பெற்றுள்ள அல்லது தொடர்ந்து செயலாற்றல் பெற்றிருக்குமாறு செய்யப் பெற்றுள்ள, முறையே இப்பல்கலைக்கழகத்தின் நிலை விதிகள், அவசர விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் என்று பொருள்படும்;

(19) "ஆசிரியர்கள்" என்றால், ஆசிரியர்களென நிலை விதிகளால் விளம்பப்படக்கூடிய பல்கலைக்கழக கல்லூரிகளில் அல்லது ஆய்வுக்கூடங்களில் இணைக்கப் பெற்ற அல்லது ஒப்புதல் அளிக்கப் பெற்ற கல்லூரிகளில் அல்லது மாணவ விடுதிகளில் கல்வி கற்பிக்கின்ற உதவிபேராசிரியர்கள், இணைப்பேராசிரியர்கள், பேராசிரியர்கள், இயக்குநர்கள் மற்றும் கல்வி கற்பிக்கின்ற பிற நபர்கள் என்றும் நூலகர்கள் மற்றும் அதுபோன்ற பிற நபர்கள் என்றும் பொருள்படும்;

(20) "பல்கலைக்கழக ஆசிரியர்கள்" என்றால், இப்பல்கலைக்கழகத்தின் சார்பாக கல்வி கற்பிப்பதற்காக, பல்கலைக்கழகத்தால் நியமிக்கப் பெற்றுள்ளவர்கள் என்று பொருள்படும்;

(21) "பல்கலைக் கழகம்" என்றால், 3–ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழகம் என்று பொருள்படும்;

(22) பல்கலைக்கழக பரப்பிடம் என்றால் அண்ணாமலை பல்கலைக்கழக சட்டம் 2013ல் பிரிவு 1ல் உள்ள உட்பிரிவு 3 ல் குறிப்பிடப்பட்டுள்ள அண்ணாமலை நகர் நீங்கலாக தமிழ்நாடு மாநிலம் முழுவதுமான பரப்பிடம் என பொருள்படும்.

(23) "பல்கலைக் கழக மையம்" என்றால், உயர்கல்வி கற்பிப்பதிலும், ஆராய்ச்சிப் பணியிலும் ஈடுபடுத்திக் கொள்வதற்குத் தகுதி வாய்ந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளை அல்லது கல்லூரிகளைக் கொண்டிருக்கிற பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்த பரப்பிடம் எதுவும் என்று பொருள்படும்;

(24) "பல்கலைக்கழக ஆய்வுக்கூடம்" என்றால், இப்பல்கலைக் கழகத்தால் நிறுவப் பெற்றதாயினும் இல்லாவிடினும் அதனால் பேணிவரப்படுவதும், ஆராய்ச்சிப் பணியை செய்துவருவதற்காகவும் அதனை மேம்படுத்துவதற்காகவுமென்று கருதப் பெற்றுள்ளதுமான ஓர் ஆய்வுக்கூடம் என்று பொருள்படும்;

(25) "பல்கலைக்கழக உதவிப்பேராசிரியர்" "பல்கலைக்கழக இணைப் பேராசிரியர்" "பல்கலைக்கழக பேராசிரியர்" என்றால், பல்கலைக்கழகத் துறைகளில், கல்லூரிகளில் மற்றும் மையங்களில் இப்பல்கலைக்கழகத்தால் இத்தகையவராக நியமிக்கப் பெற்றுள்ள அல்லது நியமிக்கப்பட்டிருப்பதாக கொள்ளப்பட்ட, முறையே விரிவுரையாளர்/ உதவிப் பேராசிரியர்/சிறப்புப் பேராசிரியர் உதவிப்பேராசிரியர், இணைப்பேராசிரியர் அல்லது பேராசிரியர் ஒருவர் என்று பொருள்படும்;

(26) "பல்கலைக்கழக நூலகம்" என்றால், இப்பல்கலைக் கழகத்தால், நிறுவப்பெற்றதாயினும் இல்லாவிடினும், அதனால் பேணி வரப்பெறும் ஒரு நூலகம் என்று பொருள்படும்.

## அத்தியாயம் II

### பல்கலைக்கழகம்.

3. (1) "அண்ணா பல்கலைக்கழகம்" என்ற பெயரில் பல்கலைக்கழகமொன்று அமைக்கப்படுதல் வேண்டும். பல்கலைக்கழகம்.

(2) இப்பல்கலைக்கழகம், ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் என்பதோடு, நிலையான தொடர்பாட்டு உரிமையையும் தனித்த ஓர் இலச்சினையையும் பெற்றிருத்தலும் வேண்டும்; மேலும் மேற்சொன்ன பெயரில் தான் வழக்கிடுதலும், வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) இப்பல்கலைக்கழகத்தின் தலைமையகம், சென்னை பெருநகர மாநகராட்சி எல்லைக்குள்ளோ அல்லது அத்தகைய எல்லைகளைச் சுற்றியுள்ள ஐம்பது கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் உள்ள இடம் எதிலுமோ அமைந்திருக்கும்.

4. இப்பல்கலைக்கழகம் பின்வரும் அதிகாரங்களையும், அலுவல்களையும் நோக்கங்களையும் பெற்றிருக்கும், அவையாவன:- பல்கலைக் கழகத்தின் அதிகாரங்களும் நோக்கங்களும்.

(1) அறிவுறுத்தல், பயிற்சியளித்தல், ஆராய்ச்சி செய்தல் மேம்பாடு மற்றும் விரிவாக்கம் மற்றும் பல்கலைக்கழகம் தக்கதெனக் கருதுகிற, அத்தகைய பிற முறைகளில் உயர்கல்விக்கான வசதிகளை வழங்குவதற்கு மற்றும் வாய்ப்புகளை அளிப்பதற்கும்:-

(2) அதன் ஆராய்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் மற்றும் பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் பிற தொடர்பான அறிவியலில் அறிவைப் பரப்புவதற்கு;

(3) பொறியியலும், தொழில்நுட்பத்திலும் அது தொடர்பான அறிவியலிலும் பட்டங்கள், விருதுகள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை நிறுவுவது:-

(4) தேர்வுகள் வைத்து பட்டங்கள், விருதுகள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை,—

(a) பல்கலைக் கழக கல்லூரி ஒன்றிலோ, ஆய்வுக் கூடம் ஒன்றிலோ அல்லது இணைக்கப்பெற்ற அல்லது ஒப்புதல் அளிக்கப்பெற்ற கல்லூரி ஒன்றிலோ, ஒப்புதல் அளிக்கப்பெற்ற குறித்த கால படிப்புப் பிரிவைத் தொடர வேண்டியதில்லை என நிலை விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் விலக்களிக்கப்பட்டிருந்தாலொழிய, அத்தகைய குறித்த கால படிப்புப் பிரிவை தொடர்ந்துள்ளதோடு, இப்பல்கலைக்கழகத்தின் வகுத்துரைக்கப்பட்ட தேர்வுகளில் தேறியும் உள்ள நபர்களுக்கு; அல்லது

(b) வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி, பல்கலைக் கழகத்தால் ஏற்பளிக்கப்பட்ட வேறுபிற மையம் அல்லது நிறுவனம் எதிலுமோ ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தியுள்ளவர்களுக்கு வழங்குவது;

(5) தன்னாட்சிக் கல்லூரியொன்றில், ஒப்புதல் அளிக்கப் பெற்ற குறித்த கால படிப்புப் பிரிவை தொடர்ந்துள்ளவர்களுக்குப் பட்டங்கள், விருதுகள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குவது;

**(6)** இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் தங்கியிருப்பவ ரானாலும் அவ்வாறில்லையாயினும், அஞ்சல் வழிக் கல்வியின் மூலம் ஒப்புதல் அளிக்கப்பட்ட குறித்த கால படிப்புப் பிரிவு ஒன்றை தொடர்ந்துள்ளவர்களுக்கு தேர்வுகள் வைத்துப் பட்டங்கள், விருதுகள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றை வழங்குவதும் மற்றும் வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி, இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்கு தங்கியிருப்பவர்களல்லாதவர்களுக்கு அத்தகைய விரிவுரைகளுக்கும் கல்வியளிப்பிற்கும் வகை செய்வதும்;

**(7)** வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி, மதிப்புறு பட்டங்களையோ அல்லது பிற கல்விச் சிறப்புகளையோ வழங்குவது;

**(8)** இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு தேவையான ஆராய்ச்சி நிலையங்கள், பல்கலைக் கழக கல்லூரிகள் மையங்கள் மற்றும் ஆய்வுக்கூடங்கள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள் மற்றும் பிற கல்வி நிலையங்கள் ஆகியவற்றை நிறுவுதலும், பேணுதலும், மேலாண்மை செய்தலும்;

**(9)** வகுத்துரைக்கப்பட்ட வரைக்கட்டுகளின்படி, கல்லூரிகளை, இணைத்தல் மற்றும் கல்லூரிகளிலிருந்து இணைப்பை விலக்கிக் கொள்ளுதல்:-

**(10)** வகுத்துரைக்கப்பட்ட, வரைக்கட்டுகளின்படி இப் பல்கலைக்கழகத்தின் விருதுகள் மற்றும் பட்டயங்களுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான குறித்தகால படிப்புப் பிரிவுகளுக்கு வகை செய்கின்ற கல்லூரிகளுக்கு ஒப்புதல் அளிப்பதும் அவ்வாறு அளிக்கப்பெற்ற ஒப்புதலை விலக்கிக் கொள்ளுவதும்;

**(11)** வகுத்துரைக்கப்பட்ட முறையிலும் வரைக்கட்டுகளின்படியும் கல்லூரி எதனையும் அரசின் இசைவுடன் தன்னாட்சிக் கல்லூரியென பெயரிட்டுக் குறிப்பிடுவதும் அவ்வாறு குறிப்பிடப்பட்டதை நீக்கிக் கொள்வதும்;

**(12)** உதவிப்பேராசிரியர் பதவிகள், இணைப்பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள் மற்றும் இப்பல்கலைக்கழகத்திற்கு தேவைப்படும் பிற ஆசிரியர் பதவிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதும், அத்தகைய உதவிப்பேராசிரியர் பதவிகள், இணைப் பேராசிரியர் பதவிகள், பேராசிரியர் பதவிகள் மற்றும் மற்ற ஆசிரியர் பதவிகளுக்கு நபர்களை நியமிப்பதும்;

**(13)** நிலை விதிகளுக்கிணங்க பட்டதாரி உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவிச் சம்பளங்கள், ஆதரவுப் படித்தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதும் வழங்குவதும்;

**(14)** பல்கலைக்கழகத்தின் மாணவர்களுக்கான விடுதி களையும் பல்கலைக்கழகத்தின் பணியிடங்களுக்கான குடியிருப்பிடத்தையும் அமைத்தல் மற்றும் பேணிவருதல் அல்லது ஏற்பிசைவு அளித்தலும், மற்றும் அத்தகைய ஏற்பிசைவினை விலக்கிக் கொள்ளுதலும்;

**(15)** மாணவர்களின் உடல் நலன், பொதுநலன், ஒழுங்கு முறை நடத்தை ஆகியவற்றை எய்தும் வகையில் பல்கலைக்கழகத்துறைகளில் மாணவர்களின் மீது கட்டுப் பாட்டதிகாரம் செலுத்தி வருவது;

**(16)** இப்பல்கலைக்கழகத்தின் நிலைக்கொடைகளையும் பிற சொத்துக்களையும் மற்றும் நிதியங்களையும் வைத்து நிர்வகித்து வருவது;

**(17)** இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக இப்பல்கலைக்கழகத்தின் சொத்துப் பிணையத்தின் மீது, அரசின் ஒப்புதல் அளிப்புடன், பணத்தைக் கடன் வாங்குவது;

**(18)** கட்டணங்களை நிருணயிப்பதும், வகுத்துரைக்கப் படக்கூடிய கட்டணங்களை கோரிப் பெறுவதும்;

**(19)** தேசிய மாணவர் படையின் (NCC) பேணுகைக்காக இப்பல்கலைக்கழகத்து நிதியங்களிலிருந்து மானியங்களை அளிப்பது;

**(20)** பல்கலைக்கழக விரிவாக்கக் குழு ஒன்றை அமைத்துப் பேணி வருவது;

(21) (a) வெளியீட்டுப் பிரிவொன்றை;

(b) வேலைவாய்ப்புப் பிரிவொன்றை;

(c) மாணவர் சங்கங்களை;

(d) பல்கலைக்கழக உடற்பயிற்சி குழு;

(e) அவை போன்ற பிற சங்கங்களை அமைத்து அவற்றின் பேணுகைக்காக நிதியங்களுக்கு வகை செய்வது;

(22) இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் உள்ள கல்லூரிகள் ஆய்வுக் கூடங்கள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றிற்கிடையே ஒத்துழைப்பை வளர்ப்பதும், இப் பல்கலைக்கழகம் தீர்மானிக்கக்கூடிய முறையிலும் நோக்கங்களுக்காகவும் பிற பல்கலைக் கழகங்களுடனும் பிற அதிகார அமைப்புடனும் ஒத்துழைப்பதும்;

(23) தேவைப்படும் கால அளவுக்கிடையே மதிப்பீடுகளையோ அல்லது ஆய்வுகளையோ செய்தலும் மற்றும் கல்லூரிகளின் கல்விச் சிறப்பினை மேம்படுத்த வகுத்துரைக்கப்பட்டவாறான தக்க நடவடிக்கையை எடுத்தல்;

(24) உயர்வான கல்விச் சிறப்பினை எய்துவதற்காக கட்டுப்பாட்டு அமைப்பு முறையை வகுத்துரைப்பதன் பொருட்டு இணைக்கப்பட்ட கல்லூரிகளை கல்வி முறையில் கண்காணித்தல்:

(25) பொதுவாக, இப்பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை மேம்படுத்துவதற்கு தேவையாயிருக்கக் கூடிய அல்லது விரும்பத்தகாததாக இருக்கக்கூடிய பிற செயல்கள் அனைத்தையும் செய்வது அல்லது நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்பது;

பொறியியல் கல்லூரிகள் பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப்பெறுதல் ஆகாது என்பதும் கல்வி நிலையங்களுக்கு பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவளிக்கப் பெறுதலும்.

5. (1) அண்ணா பல்கலைக்கழகம் தவிர, தமிழ்நாடு மாநிலத்தில் பிற பல்கலைக்கழகம் எதிலும், இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள்ளாக பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் பிற அறிவியல்களில் படிப்புப் பிரிவுகளையோ அல்லது பயிற்சியையோ வழங்குகிற கல்லூரி எதுவும் இணைக்கப்படுதல் கூடாது;

(2) தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள பிற பல்கலைக்கழகம் எதனுடனும் இணைக்கப்பட்டுள்ள அல்லது அதனோடு தொடர்புடைய அல்லது அதனால் பேணி வரப்படும் கல்லூரி எதுவும் அரசின் மற்றும் மேற்சொன்ன பிற பல்கலைக் கழகத்தின் முந்திய ஒப்புதலளிப்புடனல்லாமல், எந்த நோக்கத்திற்காகவும் இப்பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவு அளிக்கப்படுதலாகாது.

பல்கலைக் கழகத்திற்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல்.

6. (1) இந்தச் சட்டத்தின் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட நிலை விதிகளின் வகைமுறைகளுக்குட்பட்டு இப்பல்கலைக்கழகமானது அனைத்து நபர்களுக்கும் பொதுவானதாக இருத்தல் வேண்டும்;

(2) (1)—ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும்,-

(a) வகுத்துரைக்கப்பட்ட கல்வித் தகுதியை அல்லது தரத்தைப் பெற்றிருக்காத எவரையும் எந்தப் படிப்பு பிரிவு எதிலும் மாணவரை சேர்க்குமாறு;

(b) பட்டம், பட்டயம், அல்லது இதர கல்விச் சிறப்புகள் வழங்க தேவையான குறைந்த அளவு தரத்திற்கும் கீழேயுள்ள எம்மாணவரையும் பல்கலைக்கழக பட்டியலில் வைத்திருக்குமாறு;

(c) பல்கலைக்கழகத்தின் நலனுக்கோ அல்லது இதர மாணவர் மற்றும் ஆசிரியரின் உரிமைகள் சிறப்புரிமைகளுக்கு ஊறுவிளைவிக்கும் விதத்தில் நடந்து கொள்ளும் எவரையும் சேர்க்குமாறு அல்லது எம்மாணவரையும் வைத்திருக்குமாறு; கோருதல் கூடாது.

மேற்பார்வை அதிகாரம்.

7. (1) அரசானது, தாம் பணிக்கக் கூடியவரால் அல்லது பணிக்கக் கூடியவர்களால், இப்பல்கலைக் கழகத்தை அதன் கட்டடங்களை, ஆய்வுக் கூடங்களை, நூலகங்களை, அருங்காட்சியகங்களை, பட்டறைகளை மற்றும் தளவாடத்தையும்; மற்றும் இப்பல்கலைக்கழகத்தால் பேணி வரப்படுகின்ற, ஏற்பிசைவு அளிக்கப்பட்டுள்ள அல்லது ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள அல்லது அதனுடன் இணைக்கப்பட்டுள்ள கல்வி நிலையம் ஏதொன்றையும், மேலும் இப்பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் அல்லது செய்யப்படும் தேர்வுகள் கல்வி கற்பித்தல், பிற பணிகள் ஆகியவற்றையும், ஆய்வு அல்லது விசாரணை செய்யப்படுமாறு செய்விப்பதற்கும், இப்பல்கலைக்கழகம் தொடர்புடைய பொருட்பாடு எதனையும் பொறுத்து விசாரணை ஒன்று செய்யப்படுமாறு செய்விப்பதற்குமான அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

(2) அரசு அவ்வாறு ஆய்வு செய்யப்படுமாறு அல்லது விசாரணை செய்யப்படுமாறு செய்விப்பதற்கான தனது எண்ணம் குறித்து ஒவ்வொரு நேர்விலும், இப்பல்கலைக்கழகத்திற்கு அறிவிப்பு கொடுத்தல் வேண்டும்; மற்றும் இப்பல்கலைக்கழகம் அதில் தன்தரப்பை எடுத்துரைப்பதற்கு உரிமை தகுதியுடையதாக இருக்கும்.

(3) அரசு, அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் முடிவுகள் குறித்து தமது கருத்துக்களை பல்கலைக்கழகத்திற்கு தெரிவித்தல் வேண்டும் என்பதுடன், அதன் பேரிலான பல்கலைக்கழகத்தின் கருத்தை கண்டறிந்த பின்பு, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை என்னவென்பது குறித்து இப்பல்கலைக் கழகத்திற்கு ஆலோசனை கூறலாம்; மேலும் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதற்கான காலவரம்பொன்றையும் நிர்ணயிக்கலாம்.

(4) பல்கலைக்கழகம் அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் முடிவுகளின் மீது அல்லது அரசினால் வழங்கப்பட்ட ஆலோசனையின்பேரில் எடுக்கக் கருதியுள்ள அல்லது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை ஏதேனுமிருப்பின், அது குறித்து அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள்ளாக அரசுக்கு அறிக்கை கொடுத்தல் வேண்டும். அத்தகைய அறிக்கையானது அரசு பணிக்கக் கூடிய அத்தகைய காலத்திற்குள் அனுப்பப்படுதல் வேண்டும்.

(5) நியாயமான காலத்திற்குள்ளாக பல்கலைக்கழகமானது அரசு நிறைவேறும்படி நடவடிக்கை எதனையும் எடுக்காதவிடத்து, அரசானது பல்கலைக்கழகத்தால் கொடுக்கப்பட்ட விளக்கம் எதனையுமோ அல்லது செய்யப்பட்ட முறையீடு எதனையுமோ பரிசீலனை செய்ததற்குப் பின்னர், தக்கதென கருதக்கூடிய அத்தகைய பணிப்பாணைகளைப் பிறப்பிக்கலாம்; மற்றும் பல்கலைக்கழகமானது அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும். பல்கலைக்கழகமானது அரசினால் நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளாக அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடக்காத நேரத்தில், அரசானது அத்தகைய பணிப்பாணைகளை இணங்கி நடப்பதற்கு நபர் எவரையுமோ அல்லது அமைப்பு எதையுமோ நியமிக்கவும் அதற்கான செலவுகளுக்காக தேவைப்படக் கூடிய அத்தகைய ஆணைகளைச் செய்யவும் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் – III

## பல்கலைக்கழகத்தின் அலுவலர்கள்

பல்கலைக் கழகத்தின் அலுவலர்கள்

8. இப்பல்கலைக்கழகம் பின்வரும் அலுவலர்களை கொண்டிருக்கும், அதாவது:-

(1) வேந்தர்,

(2) இணைவேந்தர்,

(3) துணைவேந்தர்,

(4) இயக்குநர்கள்,

(5) புலங்களின் தலைமையாளர்கள்,

(6) பதிவாளர்,

(7) நிதி அலுவலர்,

(8) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், மற்றும்

(9) இப்பல்கலைக்கழகத்தின் அலுவலர்களென நிலை விதிகளால் விளம்பப்படக்கூடியஅத்தகைய பிற நபர்கள்.

வேந்தர்

9. (1) தமிழ்நாடு ஆளுநர், இப்பல்கலைக்கழகத்தின் வேந்தராக இருப்பார். அவர் தமது பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழகத்தின் தலைவராக இருப்பார் என்பதுடன், இப்பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழா எதற்கும் வந்திருக்கும்போது அதற்கு தலைமை வகித்தலும், பட்டங்கள், விருதுகள், பட்டயங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புக்களை அவற்றை பெறுவதற்கு உரிமையுடையவர்களுக்கு வழங்குவார்.

(2) அதிகார அமைப்புகளுக்கு நபர்களை பெயர் குறித்து நியமிப்பதற்கான அதிகாரம் வேந்தருக்கு வழங்கப்பட்டிருக்கிறவிடத்து, வேந்தர் துணைவேந்தருடன் கலந்தாய்வு செய்தும், தேவையான அளவுக்கும் மற்றபடி போதிய அளவு சார்பான்மை பெற்றிராத பிரிவுகளை சேர்ந்தவர்களின் நலன்களுக்கு சார்பாளர்களாக அமையும் பொருட்டு அப்பிரிவுகளை சேர்ந்தவர்களை பெயர் குறித்து நியமிப்பார்.

(3) வேந்தர், தாமே முற்பட்டோ, அல்லது விண்ணப்பத்தின் மீதோ நடவடிக்கைகள் எவற்றையும் பொருத்து, அத்தகைய நடவடிக்கைகளின் முறைமை குறித்தோ, அவற்றில் எடுக்கப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட ஆணை ஏதொன்றின் சீர்மை, சட்டமுறைமை, அல்லது பொருத்தமுடைமை குறித்தோ, தெளிவுர உறுதிபடுத்திக்கொள்ளும் பொருட்டு, இப்பல்கலைக் கழகத்தின் அலுவலர் எவரின் அல்லது அதிகார அமைப்பு ஏதொன்றின் பதிவுக் கட்டினையும் தருவித்து ஆய்வு செய்யலாம் மற்றும் எந்த நேர்விலும் அத்தகைய முடிவு அல்லது ஆணை எதுவும் திருத்தியமைக்கப்படவோ, அறவு செய்யப்படவோ, எதிர் மாறாகப்படவோ அல்லது மறுபரிசீலனைக்காக திருப்பியனுப்பி வைக்கப்படவோ வேண்டும் என்று வேந்தருக்கு தோன்றுமானால் அவர் அதன்படியே ஆணைகளைப் பிறப்பிக்கலாம்:

முதலாம் **வரம்புரை** :- ஆனால், இந்தப் பிரிவின் படியான அதிகாரங்களைச் செலுத்தப் படுவதற்காக வேந்தரிடம் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் அந்த விண்ணப்பம் தொடர்புடையதாகவிருக்கிற நடவடிக்கை, முடிவு அல்லது ஆணை எந்தத் தேதியில் அவ்விண்ணப்பதாரருக்கு தெரிவிக்கப்பட்டதோ, அந்தத் தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்:

இரண்டாம் **வரம்புரை**:– மேலும், எவரொருவருக்கும், ஊறு விளைவிக்கத்தக்கதான ஆணை, எதுவும் அத்தகைய ஆள் தன் முறையீடுகளைச் செய்து கொள்வதற்கான வாய்ப்பொன்று அத்தகையவருக்குக் கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, பிறப்பிக்கப் படுதலாகாது.

(4) நபர் எவருக்கும், வேந்தரின் முந்தைய ஒப்புதலளிப்பின்றி இப்பல்கலைக் கழகத்தால் மதிப்புறு பட்டம் அல்லது பிற சிறப்பு எதுவும் வழங்கப்படுதலாகாது.

(5) வேந்தர், இந்தச் சட்டத்தின் வகைமுறைகளாலோ அல்லது அதனை அடியொற்றியோ, தமக்கு வழங்கப்படக்கூடிய அதிகாரங்களை செலுத்தி வருவார், பிற கடமைகளை புரிந்து வருவார்.

10. (1) தமிழ்நாடு மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வித் துறைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், இப்பல்கலைக் கழகத்தின் இணை வேந்தராக இருந்து வருவார். இணைவேந்தர்.

(2) இணை வேந்தர் இந்தச் சட்டத்தின் மூலமாக அல்லது அதன்படி தமக்கு வழங்கப்படக் கூடிய பிற அதிகாரங்களை செலுத்தி வருவார்; பிற கடமைகளை புரிந்து வருவார்.

(3) வேந்தர் இல்லாது இருக்கும்போது அல்லது வேந்தர் செயற்பட இயலாது இருக்கும்போது இணைவேந்தர், வேந்தரின் அனைத்து அதிகாரங்களையும் செலுத்தி அனைத்து கடமைகளையும் ஆற்றுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 30/1978 11. (1) துணை வேந்தரின் ஒவ்வொரு நியமனமும் (2)ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்படும் குழுவினால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று பெயர்களைக் கொண்ட பெயர் பட்டியல் ஒன்றிலிருந்து வேந்தரால் செய்யப்படும் மற்றும் அத்தகைய பெயர் பட்டியலில் மேற்சொன்ன குழுவின் உறுப்பினர் எவருடைய பெயரும் அடங்கியிருத்தல் ஆகாது: துணைவேந்தர்.

**வரம்புரை** :- ஆனால் அக்குழுவினால் அவ்வாறு பரிந்துரை செய்யப்பட்ட பெயர்ப்பட்டியலில் உள்ள நபர்களில் எவரொருவருக்கும் வேந்தரானவர் ஒப்புதல் அளிக்கவில்லையாயின், (2) ஆம் உட்பிரிவிற்கிணங்கிய வகையில் மூன்று பெயர்களைக் கொண்ட புதிய பெயர்ப் பட்டியலை கொடுப்பதற்கு அவர் மற்றொரு குழுவினை அமைத்துருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கலாம் மற்றும் அவர் புதிய பெயர்ப்பட்டியலில் பெயர்க்குறிப்பிட்டுள்ள நபர்களில் எவரொருவரையும் துணைவேந்தராக நியமிப்பார்.

(2) .(1) ஆம் உட்பிரிவின் நோக்கத்திற்காக, அந்தக்குழு,–

(i). வேந்தரால் நியமிக்கப்படுபவரும் உச்சநீதிமன்றத்தின் அல்லது உயர்நீதிமன்றத்தின் எதனின் ஓய்வுபெற்ற நீதிபதியுமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளராக இருக்கும் ஒருவரை;

(ii) அரசினால் நியமிக்கப்படுபவரும் அரசு முதன்மைச் செயலாளர் படிநிலைக்கு குறையாத மாநில அரசின் ஓய்வு பெற்ற அல்லது பணி புரியும் அலுவலராக இருப்பவருமான ஒருவரை அல்லது சிறந்த கல்வியாளராக இருக்கும் ஒருவரை; மற்றும்

(iii) ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படுபவரும், சிறந்த கல்வியாளராக இருப்பவருமான ஒருவரைக் கொண்டது ஆகும் .

விளக்கம்,– இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, ''சிறந்த கல்வியாளர்'' என்பது,–

(i) மாநில அரசால் அல்லது மைய அரசால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகம் எதனின் துணைவேந்தராக இருக்கிற அல்லது இருந்துள்ள; அல்லது

(ii) மாநில அல்லது மைய பல்கலைக்கழகத்தில் அல்லதுஇரண்டினையும் சேர்த்து குறைந்தது பத்தாண்டுகள் பேராசிரியராக அனுபவம் பெற்றுள்ள புகழ் பெற்ற கல்வியாளராக இருக்கிற; அல்லது

(iii) தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிறுவனம் எதனின் இயக்குநராக அல்லது தலைவராக இருக்கிற அல்லது இருந்துள்ள நபர் என்று பொருள்படும்:

**வரம்புரை:** ஆனால், அவ்வாறு நியமிக்கப்பட்ட நபர், பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளில் எதனின் உறுப்பினராக இருத்தல் ஆகாது அல்லது பல்கலைக்கழகத்துடன் அல்லது பல்கலைக்கழகத்தின் கல்லூரி எதனுடனும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் எதனுடனும் தொடர்புடையவராக இருத்தல் ஆகாது.

(3) துணைவேந்தராக நியமிக்கப்படுவதற்காக குழுவால் பரிந்துரைக்கப்பட்ட நபர்––

(i) உயர்ந்தளவு தகுதி, நேர்மை, ஒழுக்கம், அமைப்பு மூலமான பொறுப்புடைய புகழ்பெற்ற கல்வியாளராக இருப்பார்;

(ii) தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட ஆணையின் மூலம், வேந்தருடன் கலந்தாய்வு செய்து மாநில அரசால் குறித்துரைக்கப்படலாகும் கல்வித்தகுதிகள் மற்றும் அனுபவம் கொண்டிருப்பார்.

(4) வேந்தரால், அரசு மற்றும் ஆட்சிக் குழுவினால் குழுவிற்கு உறுப்பினர்களை நியமிக்கும் நடைமுறையானது, துணைவேந்தரின் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு ஆறுமாதங்களில் தொடங்குதல் வேண்டும் மற்றும் துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய தேதிக்கு முன்பு நான்கு மாதங்களில் முடிவடைதல் வேண்டும்.

(5) துணைவேந்தராக நியமனம் செய்வதற்கு தகுதியுள்ள நபர்களின் தேர்ந்த பெயர்ப்பட்டியலைத் தயாரிப்பதற்கான நடைமுறையானது, துணைவேந்தர் பதவியில் காலியிடம் நியாயமாக ஏற்படக்கூடிய நாளுக்கு முன்பு குறைந்தது நான்கு மாதங்களில் தொடங்குதல் வேண்டும்.

(6) அந்தக்குழு, அது அமைக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் வேந்தருக்குத் தன்னுடைய பரிந்துரையை அனுப்புதல் வேண்டும். மேற்சொன்ன கால அளவிற்குள் வேந்தருக்கு அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்பாதிருக்குமானால், வேந்தர் அந்தக்குழு தன்னுடைய பரிந்துரையை அனுப்புவதற்கு மேலும் கால அவகாசம் அளிக்கலாம் அல்லது (2) ஆம் உட்பிரிவிற்கிணங்க, மற்றொரு குழுவை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.''.

(7) துணைவேந்தர் மூன்றாண்டுகளுக்கு பதவி வகிக்கலாம்

**முதலாம் வரம்புரை:–** துணை வேந்தர், வேந்தருக்கு முகவரியிட்டு தாம் கையொப்பமிட்டு எழுத்து வாயிலாகவும் இரண்டு திங்கள் கால அறிவிப்பு கொடுத்ததற்குப் பின்பும் பதவியை விட்டு விலகலாம்.

**இரண்டாம் வரம்புரை:–** மேலும் துணைவேந்தராக நியமிக்கப் பெற்ற ஒருவர் தம்முடைய பதவிகாலத்தின் போது எழுபது வயதினை அவர் நிறைவெய்துவாரானால், பதவியிலிருந்து ஓய்வு பெறுதல் வேண்டும்.

(8) துணைவேந்தரின் பதவியில் தற்காலிக காலியிடம் ஏதேனும் ஏற்படும்போது அல்லது அத் துணைவேந்தர் நோய், பணிக்கு வராமை என்ற காரணத்தாலோ அல்லது ஏதேனும் பிற காரணத்தாலோ, தம்முடைய பதவியின் அதிகாரங்களை செலுத்தி வரவும், கடமைகளைப் புரிந்து வரவும், இயலாதிருப்பாரானால், இப்பல்கலைக்கழகத்தின் மிக்க முதுநிலைப் பேராசிரியர், துணைவேந்தரின் அதிகாரங்களை செலுத்தி வருதலும் அப்போதைய கடமையைப் புரிந்து வருதலும் வேண்டும்.

(9) துணைவேந்தர் அவர்களை வேண்டுமென்றோ அல்லது இந்தச் சட்டத்தின் கூறுகளை செயல்படுத்த மறுப்பது அல்லது அவரிடம் உள்ள அதிகாரங்களை தவறாக பயன்படுத்தியது தவிர மற்ற காரணங்களுக்காக அவரை பதவியிலிருந்து நீக்க இயலாது. உட்பிரிவு 10–ன் கீழ் ஆணையிடப்பட்ட விசாரணை அறிக்கையின் அரசால் வழங்கப்பட்ட அறிவுரையின் படி நீக்கப்படவேண்டும்.

(10) பிரிவு 9–ன் கீழ் விசாரணை நடத்துவதற்கு தலைமைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத அரசின் அலுவலர் ஒருவர் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் நியமிக்கப்படவேண்டும். விசாரணை அலுவலர் அத்தகைய துணைவேந்தர் தமது முறையீட்டைச் செய்துகொள்வதற்கு வாய்ப்பொன்றை அளித்து விசாரணை நடத்தப்படவேண்டும். பின்னர் தண்டனை ஏதேனும் வழங்கப்பட இருந்தால் அது உள்ளடக்கிய அறிக்கையினை அரசுக்கு அளிக்க வேண்டும். அரசு அவ்வறிக்கையினை பரிசீலனை செய்து வேந்தருக்கு அறிவுரை வழங்கலாம். வேந்தர் அந்த அறிவுரையின் அடிப்படையில் நடவடிக்கை எந்த நிகழ்வாக இருந்தாலும் மூன்று மாதங்களுக்குள் செயல்படுத்த வேண்டும்.

**(11)** துணைவேந்தர், இப்பல்கலைக் கழகத்தின் ஒரு முழுநேர அலுவலராக இருப்பார்; மற்றும் அவருடைய ஊதியங்களும் பணிகுறித்த வரையறைகள் மற்றும் வரைக் கட்டுகளும் பின்வருமாறு இருந்துவரும்:-

(a) துணைவேந்தருக்கு திங்களொன்றுக்கு இரண்டு இலட்சத்து பத்தாயிரம்ரூபாய் சம்பளம் அல்லது அரசால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய உயர்வான சம்பளம் கொடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் அவருடைய பதவிக் காலம் முழுவதும் அறைகலன்களுடனான குடியிருப்பொன்றை (Furnished Residence) வாடகை செலுத்தமின்றிப் பயன்படுத்துவதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராவார்; மேலும் அவர் குடியிருப்பை பேணி வருவது பொறுத்த செலவுப் பொறுப்பு எதுவும் தனிப்பட்டு அத்துணைவேந்தரை சார்தல் ஆகாது. அவர், நிலை விதிகளில் வகை செய்யக் கூடிய அத்தகைய பிற இடை ஆதாயம் பெற உரிமையுடையவராவார்.

(b) துணைவேந்தர், அவ்வப்போது வேந்தரின் ஒப்புதலளிப்புடன், ஆட்சிக் குழுவால் தீர்மானிக்கப்படக்கூடிய பணிமுடிவுநிலை நன்மைகளுக்கும் (Terminal Benefits) படித்தொகைகளுக்கும் உரிமைத் தகுதியுடையவராவார்:

**வரம்புரை:–** ஆனால், (i) இப்பல்கலைக் கழகத்தின் அல்லது

(ii) வேறேதேனும் பல்கலைக்கழகத்தின் அல்லது பல்கலைக்கழகம் எதனாலும் பேணிவரப் பெறும் அல்லது அதனோடு இணைக்கப் பெற்றுள்ள கல்லூரி அல்லது கல்வி நிலையத்தின் பணியாளர் ஒருவர் துணை வேந்தராக நியமிக்கப்படுமிடத்து, அவர் தொகையளிப்புச் செய்பவராக உள்ள வருங்கால வைப்பு நிதியத்திற்கு தொடர்ந்து தொகையளிக்க அவர் அனுமதிக்கப் பெறுவார். மேலும், இப்பல்கலைக் கழகத்தின் பங்களிப்பானது துணை வேந்தராக அவர் நியமிக்கப்படுவதற்கு அடுத்து முன்பு அவர் பங்களித்திருந்த அளவுக்கு மட்டுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(c) துணைவேந்தர் ஆட்சிக்குழுவினால் தீர்மானிக்கப்படக் கூடிய வீதங்களில் பயணப் படிகளுக்கு உரிமைத் தகுதியுடையவராயிருப்பார்;

(d) துணைவேந்தர் செயலார்ந்த பணியிலிருக்கையில் அவரால் பணியில் செலவழிக்கப்பட்ட கால அளவுகளில் பதினொன்றில் ஒரு பங்கு முழுச் சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்புக்கு அவர் உரிமைத் தகுதியிடையவராயிருப்பர்;

**வரம்புரை**:- ஆனால் அவர்தம் பதவிக் கால அளவு முடிவடைந்த தேதியன்று அவர்தம் பதவிக் கால அளவின் முடிவடையும் தேதிக்கு முன்பாக ஈட்டிய விடுப்பானது அவரால் எடுக்கப்படாமல் இருந்தால் அவர்தம் பதவியை விட்டு விலகியதற்குப் பின்னர் பெருமளவு இருநூற்று நாற்பது நாட்களுக்கு உட்பட்டு தம்முடைய கணக்கில் இருப்பில் உள்ள ஈட்டிய விடுப்பைப் பொறுத்து, விடுப்பு சமயத்திற்கு சம மதிப்புள்ள பணத்தைப் பெறுவதற்கு அவர் உரிமைத் தகுதி உடையவராய் இருப்பார்.

(e) துணை வேந்தரானவர் அவர்தம் பதவிக் கால அளவின்போது மூன்று திங்களுக்கு மேற்படாத கால அளவு ஒன்றுக்கு சம்பளமின்றி மருத்துவக் காரணங்களுக்காக அல்லது பிறவாறாக விடுப்பு எடுத்துக் கொள்வதற்குத் தகுதி உடையவராவார்.

**வரம்புரை**:- ஆனால், அத்தகைய விடுப்பானது, (d) ஆம் கூறின்படி எந்த அளவுக்கு ஈட்டிய விடுப்புக்கு அவர் உரிமைத் தகுதியுடையவராயிருக்கின்றாரோ அந்த அளவுக்கு முழுச் சம்பளத்துடன் கூடிய விடுப்புக்கு மாற்றிக் கொள்ளப்படலாம்.

துணைவேந்தரின் அதிகாரங்களும் கடமைகளும்

12. **(1)** துணை வேந்தர், இப்பல்கலைக் கழகத்தின் கல்வித் தலைவராகவும் முதன்மை நிர்வாக அலுவலராகவும் இருந்து வருவார்.

**(2)** துணை வேந்தரானவர் வேந்தரும் இணை வேந்தரும் வருகை தராதபோது, இப்பல்கலைக்கழகத்தில் பட்டமளிப்பு விழா எதிலும் தலைமை வகித்து பட்டங்களை, விருதுகளை, பட்டயங்களை அல்லது பிற கல்விச் சிறப்புறை, அவற்றை பெறுவதற்கு உரிமை தகுதியுடையவர்களுக்கு வழங்குவார்.

**(3)** துணை வேந்தர், பல்கலைக்கழகத்தின் அலுவல்கள்மீது கட்டுப்பாட்டைச் செலுத்துவதற்கும் பல்கலைக்கழகத்தில் உரிய முறையில் ஒழுக்கத்தினைப் பேணுவதற்கும் பொறுப்பினைக் கொண்டவராவர்.

**(4)** துணை வேந்தர் ஆனவர் இந்தச் சட்டத்தின் மற்றும் அதன் கீழ் செய்யப்பட்ட நிலை விதிகள், அவசர விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளின் வகை முறைகளுக்கு இணங்கிய வகையில் உண்மையிலேயே நடைபெறுகிறதா என்பதை உறுதி செய்தல் வேண்டும்; மற்றும் அவர் இந்த நோக்கத்திற்காக தேவைப்படக் கூடிய அனைத்து அதிகாரங்களையும் செலுத்துதல் வேண்டும்.

**(5)** துணை வேந்தர், இப்பல்கலைக்கழகத்து ஆசிரியர்கள் பிற பணியாளர் ஆகியோரின் நியமனம், தற்காலிக பணிநீக்கம், பணியறவு ஆகியவை தொடர்பாக ஆட்சிக் குழுவின் ஆணைகளை செயற்படுத்துவார்.

**(6)** நெருக்கடியான காலம் எதிலும் துணை வேந்தர் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுவது தேவையானது என கருதுவாராயின் அவர் ஆணையின் வாயிலாக அவசியமானது என அவர் கருதுகிற அத்தகைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்; மற்றும் அவர் எடுத்த நடவடிக்கை பற்றிய அறிக்கையை, எந்த அலுவலர் அல்லது அதிகார அமைப்பு அல்லது அமைப்பானது வழக்கமான முறையில் அந்தப் பொருட்பாட்டின் மீது நடவடிக்கை எடுக்குமோ அந்த அலுவவருக்கு அந்த அதிகார அமைப்புக்கு அல்லது அமைப்புக்கு எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக அனுப்புதல் வேண்டும்;

**வரம்புரை**:- அத்தகைய ஆணை எதுவும், பெரும்பாலும் ஊறுபடக்கூடியவருக்கு (பாதிக்கப்படக் கூடியவருக்கு) கேட்கப் படுவதற்கான நியாயமானதொரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, பிறப்பிக்கப்படுதலாகாது.

**(7) (6)**—ஆம் உட்பிரிவின்படியான துணை வேந்தரின் ஆணை எதனாலும் குறையுற்ற நபர் எவரும் அவருக்கு அத்தகைய ஆணையானது தெரிவிக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாள்களுக்குள்ளாக ஆட்சிக் குழுவிற்கு மேல் முறையீடு ஒன்றை தாக்கல் செய்யலாம். மற்றும் துணை வேந்தர் அத்தகைய மேல் முறையீட்டின் மீது ஆட்சிக் குழுவினால் பிறப்பிக்கப்பட்ட ஆணைக்குச் செயல்வடிவம் கொடுத்தல் வேண்டும்.

**(8)** துணை வேந்தரானவர் ஆட்சிக்குழு கல்விமன்றம் மற்றும் நிதிக்குழு ஆகியவற்றின் பதவிவழி தலைவராக இருப்பார். துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு எதனின் கூட்டமெதிலும் வந்திருந்து உரை நிகழ்த்துவதற்கு உரிமை தகுதியுடையவராயிருப்பார்; ஆனால், அத்தகைய அதிகார அமைப்பின் அல்லது அமைப்பின் உறுப்பினர் ஒருவராக அவர் இருந்தாலன்றி அதில் வாக்களிக்க உரிமைத் தகுதியுடையவராக மாட்டார்.

**(9)** துணை வேந்தர், ஆட்சிக்குழு, கல்விமன்றம், நிதிக்குழு ஆகியவற்றின் கூட்டங்களை கூட்டுவதற்கு அதிகாரம் பெற்றிருப்பார்.

**(10)** துணை வேந்தர், கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி விரிவாக்க கல்வி மற்றும் பாடத்திட்டமேம்பாடு ஆகியவற்றுக்கான ஒத்திசைவிற்கும் (Co-ordination) ஒருங்கிணைப்பிற்கும் பொறுப்புடையவராயிருப்பார்.

**(11)** துணை வேந்தர், நிலைவிதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்தி வருவார்; பிற கடமைகளைப்புரிந்து வருவார்.

புலங்களின் தலைவர்கள் மற்றும் இயக்குநர்கள்.

**13.** புலங்களின் தலைவர் ஒவ்வொருவரும் மற்றும் இயக்குநர் ஒவ்வொருவரும் நிலை விதிகளால் வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய முறையில் நியமிக்கப்படுவதுடன் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தி அத்தகைய கடமைகளை ஆற்றுதல் வேண்டும்.

பதிவாளர்.

**14. (1)** பதிவாளர் ஆட்சிக் குழுவினால் நியமிக்கப்படும் இப்பல்கலைக் கழகத்தின் சம்பளம் பெறும் முழுநேர அலுவலராக இருத்தல் வேண்டும்; தகுதிகளும் நியமன முறையும் வகுத்துரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்; பதிவாளரின் பணி குறித்த வரையறைகளும் வரை கட்டுகளும் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.-

(a) பதிவாளரின் பதவியை வகிப்பவர், பல்கலைக் கழகத்தில் அல்லது அரசு பொறியியல் கல்லூரியில் உள்ள பேராசிரியர் ஒருவரின் படிநிலைக்கு குறையாத, கல்வியாளர் ஒருவராக இருத்தல் வேண்டும்.

(b) பதிவாளர், மூன்றாண்டுகால அளவுக்கு பதவி வகிப்பார்.

**வரம்புரை**:- ஆனால், பதிவாளர் பல்கலைக் கழக பேராசிரியர் ஒருவரின் நேர்வில் அறுபது வயது வரையிலும், அரசு பொறியியல் கல்லூரிபேராசிரியர் ஒருவரின் நேர்வில் ஐம்பத்தொன்பது வயது வரையிலும் அல்லது இந்தக் கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள கால அளவு முடிவடைந்ததும் இவற்றில் எது முந்தியோ அதன் பேரில், ஓய்வு பெறுதல் வேண்டும்.

(c) பதிவாளரின் ஊதியங்களும் பணி குறித்த வரையறைகளும் வரைகட்டுகளும் வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருந்து வரும்;

(d) பதிவாளரின் பதவி காலியாக இருக்கும்போது அல்லது பதிவாளர் நோய், பணிக்கு வராமை என்கிற காரணத்தால் அல்லது பிற காரணம் எதற்காகவேனும் தம்முடைய பதவிக் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கும்போது பதிவாளரின் பதவிக் கடமைகளை அந்த நோக்கத்திற்காக துணைவேந்தர் நியமிக்கும் ஒருவரால் புரிந்து வரப்படும்.

(2) (a) பதிவாளர், பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் கல்வித் துறை பணியாளர்கள் நீங்கலாக, ஆட்சிக் குழுவின் ஆணைகளில் குறிப்பிடப்படக்கூடிய பணியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கும் விசாரணை நடத்தப்படுவதற்கிடையே அவர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்வதற்கும் அவர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதற்கு அல்லது அவர்கள் மீது கண்டனத் தண்டனை விதிப்பதற்கு அல்லது சம்பள நிறுத்தி வைப்பதற்குமான அதிகாரத்தை பெற்றிருப்பார்.

**வரம்புரை**:- ஆனால், அத்தகைய தண்டனை எதுவும் தொடர்புடயவருக்கு, அவரை பொறுத்து எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கெதிராக காரணம் காட்டுவதற்கான நியாயமானதொரு வாய்ப்பு அவருக்கு கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, விதிக்கப்படுதலாகாது.

(b) (a)எனும் கூறில், குறித்துரைக்கப்பட்டுள்ள தண்டனைகளில் எதையும் விதிக்கின்ற பதிவாளரின் ஆணை எதற்கும் எதிராக துணைவேந்தரிடம் மேல்முறையீடு ஒன்றை செய்து கொள்வதற்கு உரிமை உண்டு;

(c) பதிவாளரின் அதிகாரங்களுக்கு அப்பாற்பட்ட பணத் தண்டனை தேவைப்படுகிறது என்று அந்த விசாரணை வெளிப்படுத்துகிற நேர்வு எதிலும் பதிவாளர் அந்த விசாரணை முடிவடைவதன் பேரில் அறிக்கை ஒன்றை, தம்முடைய பரிந்துரைகளோடு துணைவேந்தருக்கு கொடுத்தல் வேண்டும்.

**வரம்புரை**:- ஆனால் பணத்தண்டனை எதையும் விதிக்கின்ற துணைவேந்தரின் ஆணை ஒன்றுக்கு எதிராக ஆட்சிக்குழுவிடம் மேல்முறையீடு ஒன்றைச் செய்து கொள்வதற்கு உரிமை உண்டு.

(d) (b)எனும் கூறின்படி அல்லது (c) எனும் கூறின்படியான மேல்முறையீடு எதுவும், எந்த ஆணைக்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டதோ அந்த ஆணையை விண்ணப்பதாரர் பெற்ற தேதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவடைந்த பின்பு முன்னிடப்படுத்தலாகாது.

(3) இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர பதிவாளர், ஆட்சிக்குழு, கல்வி அலுவல் நிலைக்குழு, புலங்கள் (Faculties) பாடக்குழுக்கள் ஆகியவற்றின் பதவி வழிச்செயலாளராக இருந்து வருவார். ஆனால், இந்த அதிகார அமைப்புகளில் ஏதொன்றின் உறுப்பினராகவும் கொள்ளப்படுதல் ஆகாது.

(4) (a) பதிவுக்கட்டுகளுக்கும் தனித்த இலச்சினைக்கும் தம்முடைய பொறுப்புக்கு ஆட்சிக்குழு அனுப்ப வேண்டிய இப்பல்கலைக் கழகத்தின் பிற சொத்துக்கும் பாதுகாவலராக இருப்பது;

(b) ஆட்சிக்குழு கல்விமன்றம், புலங்களின் (Faculties) பாடக்குழுக்களின் தேர்வாளர் குழுக்களின் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளினால் நியமிக்கப்படும் குழு ஏதொன்றின் கூட்டங்களையும் கூட்டுகிற அறிவிப்பு அனைத்தையும் அனுப்புவது;

(c) ஆட்சிக்குழு, கல்விமன்றம், புலங்களின் பாடக்குழுக்களின், தேர்வாளர் குழுக்களின் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளினால் நியமிக்கப்படும் குழு ஏதொன்றின் கூட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் பற்றிய நடவடிக்கைக் குறிப்பேடுகளை வைத்து வருவது:

(d) ஆட்சிக்குழுவின் கடிதத்தொடர்பை நடத்தி வருவது;

(e) இப்பல்கலைக் கழகத்தின் அதிகார அமைப்புக் கூட்டங்களின் பொருள் நிரலின் படிகளை, அவை அனுப்பப்பட்டவுடனும் அத்தகைய கூட்ட நடவடிக்கைகளின் குறிப்புரைகளையும் வேந்தருக்கு அனுப்புவது மற்றும்

(f) நிலை விதிகளில், அவசர விதிகளில் அல்லது ஒழுங்குமுறை விதிகளில் குறித்துரைக்கப் படக்கூடிய அல்லது ஆட்சிக்குழுவாலோ, துணை வேந்தராலோ, அவ்வப்போது கோரப்படக்கூடிய பிற அதிகாரங்களை செலுத்திவருவதும் பிற கடமைகளை புரிந்து வருவதும் பதிவாளரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(5) இப்பல்கலைக்கழகத்தினால் அல்லது அதற்கு எதிராகத் தொடரப்படும் உரிமை வழக்குகள் மற்றும் எடுக்கப்படும் பிற சட்ட நடவடிக்கைகள் அனைத்திலும் வாதுரைகள் (Pleadings) பதிவாளரால் கையொப்பமிடப்பட்டு உண்மையென உறுதிமொழி அளிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய உரிமை வழக்குகளில் மற்றும் நடவடிக்கைகளில் நீதிமுறைக் கட்டளைகள் (Processes) அனைத்தும் பதிவாளருக்கு விடுக்கப்பட்டு, அவருக்குச் சார்பு செய்யப்படுதல் வேண்டும்;

நிதி அலுவலர்.

**15.** **(1)** நிதி அலுவலர், இதன் பொருட்டு ஆட்சிக்குழுவால் குறிப்பிடக்கூடிய கால அளவுக்கு அந்த ஆட்சிக் குழுவால் நியமிக்கப்படும் நிதி அலுவலர் இப்பல்கலைக்கழகத்தின் சம்பளம் பெறும் முழுநேர அலுவலராக இருப்பார்.

**(2)** நிதி அலுவலரின் நியமனம் ஒவ்வொன்றும் அரசினால் மேற்குறித்து அனுப்பப்படும் மூன்று அலுவலர்களைக் கொண்ட பெயர்ப் பட்டியல் (Panel) ஒன்றிலிருந்து துணைவேந்தரின் பரிந்துரையின்பேரில் ஆட்சிக் குழுவால் செய்யப்படும்.

**(3)** நிதி அலுவலரின் ஊதியங்களும் பணி குறித்த வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளும் வகுத்துரைக்கப்படக் கூடியவாறு இருத்தல் வேண்டும்.

**(4)** நிதி அலுவலர், ஐம்பத்தொன்பது வயதினை எய்தியதின்பேரில் அல்லது **(1)**–ஆம் உட்பிரிவின்படி ஆட்சிக் குழுவினால் குறித்துரைக்கப்படும் கால அளவு முடிவடைதன்பேரில் இவற்றில் எது முந்தியதோ அதன் பேரில் ஓய்வு பெறுதல் வேண்டும்;

**(5)** நிதி அலுவலரின் பதவி காலியாக இருக்கும்போது அல்லது நிதி அலுவலர் நோய், பணிக்கு வராமை என்கிற காரணத்தால் அல்லது பிற காரணம் எதனாலேனும் தம்முடைய பதவிக் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கும்போது நிதி அலுவலரின் பதவிக்கடமைகள் அந்த நோக்கத்திற்காக துணைவேந்தர் நியமிக்கக் கூடிய அத்தகைய நபரால் புரிந்து வரப்படும்.

**(6)** நிதி அலுவலர், நிதிக் குழுவிற்கு பதவி வழிச் செயலாளர் ஆக இருத்தல் வேண்டும்; ஆனால் அவர் அத்தகைய குழுவின் உறுப்பினர் ஒருவராகக் கொள்ளப்படுதல் ஆகாது.

**(7)** நிதி அலுவலர் –

(a) இப்பல்கலைக்கழகத்தின் நிதியங்களின் மீது பொதுவான கண்காணிப்புச் செலுத்தி வருவார்; மற்றும், பல்கலைக்கழகத்தின் நிதிக் கொள்கை குறித்து அதற்கு ஆலோசனை வழங்குவார்; மற்றும்

(b) ஆட்சிக்குழுவினால் தமக்குக் குறித்தளிக்கப்படக் கூடிய அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தி வருவார்; பிற நிதி சார்ந்த அலுவல்களை புரிந்து வருவார்;

**வரம்புரை**:- ஆனால் நிதி அலுவலர் ஆட்சிக்குழுவின் முன் ஒப்புதலளிப்பின்றி செலவு எதையும் செய்தாலோ, வகுத்துரைக்கப்படக்கூடிய தொகைக்கு மேற்படும் முதலீடு எதையும் செய்தாலோ ஆகாது.

**(8)** ஆட்சிக்குழுவின் கட்டுப்பாடு அதிகாரத்திற்குட்பட்டு நிதி அலுவலர் –

(a) ஓராண்டிற்கான தொடர் மற்றும் தொடராச் செலவினங்களுக்காக ஆட்சிக்குழுவால் நிருணயிக்கப்பட்ட வரம்புகள் மேற்படாதவாறும் பணம் அனைத்தும் அவை வழங்கப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட நோக்கங்களுக்காகச் செலவிடப்படுவதையும் உறுதி செய்து கொள்வார்.

(b) இப்பல்கலைக்கழகத்தின் ஆண்டுக்கணக்குகள், நிதி மதிப்பீடுகள் வரவு–செலவுத் திட்டம் ஆகியவற்றைத் தயாரிப்பதற்கும் ஆட்சிக்குழுவிடம் அவற்றை அளிப்பதற்கும் பொறுப்புடையவராவார்;

(c) பணம் (ரொக்கம்) மற்றும் வங்கி இருப்புகளையும் முதலீடுகளையும் இடைவிடாது கண்காணித்து வருவார்;

(d) வருவாய் வசூலின் (தண்டலின்) வளர்ச்சியைக் கண்காணித்து வசூல் (தண்டல்) செய்வதற்குப் பயன்படுத்தப்படும் முறைகள் குறித்து ஆலோசனை வழங்குவார்;

(e) கட்டடங்கள், நிலம், அறைகலன் (furniture) சாதனம் ஆகியவற்றின் பதிவேடுகள் நாளது தேதிவரை வைத்துப் பேணி வரப்படுவதையும், இப்பல்கலைக்கழகத்தால் பேணி வரப்படும் அலுவலகங்கள், சிறப்பு மையங்கள், தனி சிறப்பு ஆய்வுக் கூடங்கள், கல்லூரிகள் ஆகிய அனைத்திலுமுள்ள சாதனங்கள் மற்றும் பிற நுகரத்தக்க பொருள்களின் இருப்பு நிலையைச் சரிப்பார்க்கும் பணி நடத்தப்படுவதையும் உறுதி செய்து கொள்ளுவார்.

(f) அதிகாரமளிக்கப்படாத செலவினம் எதுவும் பற்றி அல்லது பிற நிதிசார் முறைகேடு பற்றித் துணைவேந்தரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்; மற்றும் தவறு செய்துள்ளவர் மீது எடுக்கப்பட வேண்டிய உரிய நடவடிக்கை குறித்து கருத்தாலோசனை வழங்குவார்; மற்றும்

(g) தம்முடைய கடமைகளைப் புரிவதற்காகத் தாம்தேவையெனக் கருதக்கூடியதகவல் அல்லது விவர அறிக்கைகள் எவற்றையும் இப்பல்கலைக்கழகத்தினால் பேணி வரப்படும் அலுவலகம், துறை மையம் ஆய்வுக் கூடம், கல்லூரி ஆகிய எதிலிருந்தும் தருவிப்பார்.

(9) இப்பல்கலைக்கழகத்திற்கு செலுத்தத் தக்க பணம் எதற்காகவும் நிதி அலுவலரோ அல்லது ஆட்சிக் குழுவால் இதற்கென உரியவாறு அதிகாரமளிக்கப்பட்ட நபரோ, அதிகாரமளிக்கப்பட்ட நபர்களோ, அளிக்கும் பற்று சீட்டானது, அப்பணம் செலுத்தித் தீர்க்கப்பட்டதற்கான போதிய நிறைவேற்ற சான்றாகும்.

தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர்.

16. (1) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், ஆட்சிக்குழுவினரால் நிர்ணயிக்கப்பட்ட வகுத்துரைக்கப்படாலாகும் வரையறைகள் மற்றும் வரைக்கட்டுக்களின் பேரிலும், ஆட்சிக்குழுவால் நியமிக்கப்படும், இப்பல்கலைக் கழகத்தின் பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் இது தொடர்பான அறிவியல் களத்தில் உள்ள ஒரு கல்வியாளர் ஒருவராகவும் ஒரு முழுநேர அலுவலராகவும் இருப்பார்.

(2) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், மூன்றாண்டுகளுக்கு பதவி வகிப்பார். மேலும் மூன்றாண்டுகளுக்கு மறு நியமனத்திற்கு தகுதியுடையவராவார்.

**வரம்புரை** பணி வயது ஓய்வினை அடைந்தவரை தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலராக நியமனம் செய்தல் கூடாது.

(3) தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர், வகுத்துரைக்கப் படக்கூடிய அதிகாரங்களைச் செலுத்தி வருவார், கடமைகளைப் புரிந்து வருவார்.

மையச் சட்டம் ஓடுஎ/1860

துணைவேந்தர் மற்றும் பிற அலுவலர்கள் முதலானோர் பொது ஊழியர்களாக இருத்தல்

17. துணைவேந்தர், பதிவாளர், நிதி அலுவலர், தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் மற்றும் இப்பல்கலைக் கழகத்தின் பிற பணியாளர்கள் ஆகியோர், இந்தச் சட்டத்தின் வகை முறைகளில் எதனையுமொட்டிச் செயற்படுகின்றபோது அல்லது செயற்படுவதாகப் புலப்படுகின்றபோது, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21ஆம் பிரிவின் பொருளின்படி பொது ஊழியர்களாகக் கொள்ளப்பெறுவார்கள்.

## அத்தியாயம் – IV

## பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள்

பல்கலைக் கழகத்தின் அதிகார அமைப்புகள்.

18. இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் பின்வருவன ஆகும். அவையாவன:

(1) ஆட்சிக்குழு;

(2) கல்வி மன்றம்;

(3) நிதிக்குழு;

(4) திட்டமிடும் குழு;

(5) பாடத்திட்டக் குழுக்கள்;

(6) புலங்கள்; மற்றும்

(7) நிலைவிதிகளால் இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளென விளம்புகை செய்யப்பட்ட அத்தகைய பிற அமைப்புகள்.

உறுப்பினருக்கான தகுதிக்கேடு

19. (1) நபரெவரும் தேர்தல் அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படும் தேதியன்று அவர்,

(a) மனச்சீர்கேடுற்றவராகவோ அல்லது செவிட்டு ஊமையராகவோ அல்லது

(b) நொடிப்பு நிலையரொருவராக நீதிமுறையில் தீர்மானிக்கப்பட வேண்டி விண்ணப்பித்துக் கொண்டுள்ள ஒருவராக அல்லது விடுவிக்கப்படாத நொடிப்பு நிலையரொருவராக இருப்பாராயின்; அல்லது

(c) ஒழுக்கக்கேட்டினை உள்ளடக்குகின்ற குற்றச்செயல் எதற்காகவும் குற்றவழக்கு நீதிமன்றமொன்றினால் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டவராக இருப்பாராயின் இப் பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் எதனின் உறுப்பினரொருவராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ இருப்பதற்கு தகுதி உடையவராகமாட்டார்.

(2) (1)–ஆம் உட்பிரிவின்படி நபரொருவர் தகுதியற்றவரா என்பது குறித்து பூசல் அல்லது ஐயம் ஏற்படும் நேர்வில் ஆட்சிக்குழுவானது அதனைத் தீர்மானித்தல் வேண்டும் என்பதோடு அதன் முடிவே அறுதியானதாகவும் இருக்கும்.

ஒருசிலநேர்வுகளில் ஆட்சிக்குழு மற்றும்கல்வி மன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப் படுவதற்கான அல்லது பெயர் குறித்து நியமிக்கப் படுவதற்கான தகுதிக்கேடுகள்.

**20. (1)** 21 மற்றும் 24ஆம் பிரிவுகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக்குழுவிலோ அல்லது கல்வி மன்றத்திலோ அல்லது இரண்டிலுமோ ஆறு ஆண்டுகள் மொத்த கால அளவு ஒன்றுக்கு உறுப்பினரொருவராகப் பதவி வகுத்த நபரெவரும் மேற்சொன்ன இரண்டு அதிகார அமைப்புகளில் ஏதொன்றுக்கும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ தகுதி உடையவர் ஆகார்.

முதலாம் **வரம்புரை**:- ஆனால் இந்த உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள ஆறு ஆண்டுகள் என்கிற மொத்தக் காலத்தினை கணக்கிடும் நோக்கத்திற்காக ஒரு அதிகார அமைப்பில் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலமாகவோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதன் மூலமாகவோ பதவிவகித்த மூன்றாண்டுக்கால அளவும் மற்றும் மற்றொரு அதிகார அமைப்பில் தேர்ந்தெடுக்கப்படுவதன் மூலமாகவோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதன் மூலமாகவோ பதவிவகித்த மூன்றாண்டுக்கால அளவும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் அதற்கிணங்கிய வகையில் ஆட்சிக் குழுவிற்கோ அல்லது கல்வி மன்றத்திற்கோ தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கு அத்தகைய நபர் தகுதி உடையவர் ஆகார்.

இரண்டாம் **வரம்புரை**:- மேலும் இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக தற்காலிக காலியிடத்தில் இந்த உட்பிரிவில் சுட்டப்பட்டுள்ள அதிகார அமைப்பு ஏதொன்றிலும் ஓராண்டிற்கு குறையாமல் பதவி வகித்திருக்கிற நபரொருவர் அந்த அதிகார அமைப்பில் மூன்று ஆண்டுகள் காலஅளவு ஒன்றிக்குப் பதவி வகித்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

மூன்றாம் **வரம்புரை**:– அதோடுகூட இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக நபர் ஒரு அதிகார அமைப்பிற்கு தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பின் அல்லது பெயர் குறித்து நியமிக்கப் பட்டிருப்பின் மற்றும் அத்தகைய நபர் முதலில் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பில் உறுப்பினராக இருந்ததன் விளைவாக மற்றொரு அதிகார அமைப்பிற்கு உறுப்பினராயிருப்பின் முதலில் குறிப்பிடப்பட்ட அதிகார அமைப்பில் பதவிவகித்த அந்த காலத்தை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**(2)** **(1)**– ஆம் உட்பிரிவில் உள்ள எதுவும்,

(i) 21ஆம் பிரிவில் சுட்டப்பட்டுள்ள பதவி வழி உறுப்பினர்கள் தொடர்பாகவோ ஆனால்

(ii) 24ஆம் பிரிவின் சுட்டப்பட்டுள்ள, பதவிவழி உறுப்பினர்கள் தொடர்பாகவோ பொருந்தாது.

ஆட்சிக்குழு.

**21. (1)** வேந்தர் 54—ஆம் பிரிவின்படி முதல் துணை வேந்தர் நியமிக்கப்பட்டதற்குப் பின்பு, கூடியவிரைவில் ஆட்சிக்குழுவினை அமைத்தல் வேண்டும்.

**(2)** ஆட்சிக் குழுவானது துணை வேந்தருக்குக் கூடுதலாக பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அதாவது:-

**வகை I பதவிவழி உறுப்பினர்கள்**

(a) உயர்கல்வித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(b) தொழில்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(c) தகவல் தொழில்நுட்பத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(d) சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்; மற்றும்

(e) தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்

**வகை II பிற உறுப்பினர்கள்**

(a) துணைவேந்தரின் பரிந்துரையின்பேரில் புலங்களின் தலைவர்கள் இடையேயிருந்து வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(b) துணைவேந்தரின் பரிந்துரையின்பேரில் அரசு பொறியியல் கல்லூரிகளின் பேராசிரியர்கள் மற்றும் துறைத்தலைவர்களுக்கிடையே இருந்து வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்;

(c) பொது மற்றும் தனியார் தொழில் துறையில் சார்பாற்றம் செய்கின்றவரான அரசால் நியமிக்கப்பட்ட ஒரு உறுப்பினர்;

(d) தொழில் மற்றும் வணிகத்தில் சிறப்பு அறிவையும், செயல்முறை பட்டறிவையும் கொண்டிருந்து ஆராய்ச்சி நிறுவனங்களை சார்பாற்றம் செய்கிற வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒரு உறுப்பினர்;

(e) அரசின் பரிந்துரையின்பேரில் இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்களிடமிருந்து வேந்தரால் பெயர் குறித்து அமர்த்தப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்;

(f) அரசின் பரிந்துரையின்பேரில், இணைக்கப்பட்ட உதவிபெறும் மற்றும் தன்னாட்சி பொறியில் கல்லூரிகளின் மேலாண்மைகளிடையே இருந்து வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் இருவர்.

(g) மாநிலத்தின் சட்டமன்ற பேரவை உறுப்பினர்களால் அவர்களுக்கிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்.

(3) துணை வேந்தர் ஆட்சிக் குழுவின் பதவிவழித் தலைவராக இருப்பார்.

(4) (i) உயர்கல்வியைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது தொழில்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது தகவல் தொழில்நுட்பத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ காரணம் எதற்காகவும் ஆட்சிக் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாது இருக்கும் நேர்வில், அவர் தன்னுடைய துறையில் அரசின் துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத அலுவலர் எவரையும் கூட்டங்களில் அவர் சார்பாக கலந்து கொள்வதற்கு அனுப்பலாம்.

(ii) வேறு காரணம் எதற்காகவும், தொழிற் கல்வி இயக்குநர், ஆட்சிக் குழுவின் கூட்டங்களுக்கு வருகை தர இயலாது இருக்கும் நேர்வில் அவர் துணை இயக்குநர் படிநிலைக்கு குறையாத துறையின் அலுவலர் எவரைவும் கூட்டங்களில் அவர் சார்பாகக் கலந்துகொள்ள அனுப்பலாம்.

(5) (1) பிறவாறு வகைசெய்யப்பட்டிருந்தால் தவிர, பதவிவழி உறுப்பினர்கள் அல்லாத ஆட்சிக் குழுவின் உறுப்பினர்கள், மூன்று ஆண்டுக் கால அளவிற்குப் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் அத்தகைய உறுப்பினர்கள் இன்னொரு மூன்று ஆண்டுக் கால அளவிற்கு தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர்குறித்து அமர்த்தப்படுவதற்கோ உரிமைத் தகுதி உடையவர் ஆவர்.

(2) தற்காலிக காலி இடத்தில், ஆட்சிக்குழுவிற்கு உறுப்பினரொருவர் தேர்ந்தெடுக்கப்படுகிறவிடத்து அல்லது பெயர்குறித்து நியமிக்கப்படுகிறவிடத்து, அத்தகைய உறுப்பினர் எவரும் ஓராண்டிற்கு குறையாமல் வகித்த பதவிக் கால அளவானது முழுமையான மூன்று ஆண்டுகள் கால அளவாகக் கருதப்படுதல் வேண்டும்.

முதலாம் **வரம்புரை**:- குறிப்பிட்டதொரு வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பின் உறுப்பினர் அல்லது ஒரு குறிப்பிட்ட நியமனப் பதவியை வகிக்கிறார் என்ற தகுதியினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருக்கிற ஆட்சிக்குழுவின் உறுப்பினர் ஒருவர் அவர் அந்த குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் அல்லது நேர்விற்கேற்ப அந்த நியமனப் பதவியில் உறுப்பினராக இருப்பது அற்றுப் போகும் தேதியிலிருந்து ஆட்சிக் குழுவின் உறுப்பினரொருவராக இருப்பதும் அற்றுப்போதல் வேண்டும்.

இரண்டாம் **வரம்புரை**:- மேலும் ஆட்சிக்குழுவின் தேர்ந்தெடுக்கப் பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்தப் பதவியின் காரணமாக ஆட்சிக்குழுவின் பதவிவழி உறுப்பினராக இருப்பதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராக இருக்கிறாரோ அந்தப் பதவிகள் எதற்கேனும் தற்காலிகமாக நியமிக்கப்படுகிறவிடத்து அவர்தாம் நியமன பொறுப்பை எடுத்துக் கொள்கிற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக தாம் தேர்ந்தெடுக்கப்பட்டதன் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டதன் காரணமாக ஆட்சிக்குழுவின் உறுப்பினராகத் தாம் தொடர்ந்து இருப்பதற்கு விரும்புகிறாரா அல்லது அத்தகைய உறுப்பினராக இருக்கும் பதவியை விட்டு நீங்கி தம்முடைய நியமனத்தின் காரணமாகப் பதவி வழி உறுப்பினராக ஆவதற்கு விரும்புகிறாரா என்பதைத் தம்மால் கையொப்பமிடப்பட்டு துணைவேந்தருக்கு தெரிவிக்கப்பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாக, தெரிவு செய்தல் வேண்டும்; மற்றும்; அத்தகைய விருப்பத் தெரிவானது அறுதியானதாக இருத்தல் வேண்டும். அந்த விருப்பத் தெரிவை செய்யத் தவறுவதின்பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக உள்ள தம்முடைய பதவியை விட்டு அவர் நீங்கியிருப்பதாகக் கொள்ளப் பெறுவர்.

**(6)** ஒருவர் ஆட்சிக்குழுவின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும்போது, அவர் ஆட்சிகுழுவில் தமக்கிருந்த உறுப்பினர் பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழக அமைப்புகளில் எதிலேனும் உறுப்பினராக அவர் இருப்பதும் அற்றுப்போகும்.

**(7)** ஆட்சிக்குழுவின் உறுப்பினர்கள், வகுத்துரைக்கப்படக் கூடிய நாட்படி மற்றும் பயணப்படிகள் தவிர, இப்பல்கலைக்கழகத்திடமிருந்து ஊதியம் எதையும் பெறுவதற்கு உரிமைத்தகுதியுடையவர்கள் ஆக மாட்டார்கள்:

**வரம்புரை**: ஆனால் இந்தக் உட் கூறில் அடங்கியுள்ள எதுவும், உறுப்பினர் எவரையும், தாம் வகிக்கிற பதவியின் காரணமாக தாம் உரிமைத் தகுதியுடையவராயிருக்கிற தம்முடைய இயல்பான ஊதியங்களைப் பெறுவதை தடைசெய்யலாகாது.

**(8)** ஆட்சிக்குழுவின் பதவிவழி உறுப்பினர் அல்லாத பிற உறுப்பினர் ஒருவர், தமது பதவி முடிவடைகிற கால அளவிற்கு முன்பு எந்தச் சமயத்திலும் தம்முடைய உறுப்பினர் பதவியை விட்டு விலகலாம். அத்தகைய பதவி விலகலானது, வேந்தருக்கு அவ்வுறுப்பினரால் எழுத்துருவிலான கடிதம் ஒன்றின் மூலமாகத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்: மற்றும், அப்பதவி விலகலானது, வேந்தரால் அது ஏற்கப்படும் தேதியிலிருந்து செயல்விளைவு பெறுதல் வேண்டும்.

ஆட்சிக்குழுவின் அதிகாரங்கள்

**22. (1)** ஆட்சிக் குழுவினானது பின்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கும் அதாவது:-

(a) நிலைவிதிகளை இயற்றுதல் மற்றும் திருத்தம் செய்தல் அல்லது அதனை நீக்கறவு செய்தல்;

(b) அவசரச் சட்டங்களை இயற்றுதல் மற்றும் திருத்தம் செய்தல் அல்லது அவற்றை நீக்கறவு செய்தல்;

(c) ஆட்சிக்குழுவானது அது தீர்மானிக்கலாகும் அத்தகைய முறையிலும் மற்றும் நோக்கங்களுக்காகவும் பிற பல்கலைக்கழகங்களுடனும் பிற கல்வி அதிகார அமைப்புகளுடனும் கல்லூரிகளுடனும் ஒத்துழைத்தல்;

(d) ஆட்சிக்குழுவானது அது, தான் தக்கதெனக் கருதுகிற அத்தகைய கல்வி கற்கும் பிரிவுகளில் கல்வி கற்பித்தலுக்கும் பயிற்சிக்கும் வகை செய்தல்;

(e) பல்கலைக்கழகத்தின் விருதுகளுக்கு அல்லது பட்டயங்களுக்கு மாணவர்களை தயார் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ள கல்லூரிகளுக்கு அல்லது கல்விநிலையங்களுக்கு ஒப்புதல் அளிப்பதற்கான வரைக்கட்டுகளை வகுத்துரைப்பதற்கும் அத்தகைய ஒப்புதலளிப்பை விலக்கிக் கொள்வதற்கும் மற்றும் அத்தகைய கல்லூரிகள் மற்றும் கல்வி நிலையங்கள் தொடர்பான கல்வி ஆண்டினைக் குறித்துரைத்தல்;

(f) ஆராய்ச்சி செய்வதற்கும், மேம்பாடு செய்வதற்கும் அறிவைப் பரப்புவதற்கும் வகை செய்தல்;

(g) பல்கலைக்கழகத்திற்கு தேவைப்படும் உதவிபேராசிரியர் பதவிகள், இணைப்பேராசிரியர் பதவிகள் பேராசிரியர் பதவிகள், மற்றும் பிற ஆசிரியர் பதவிகளை ஏற்படுத்துதல்;

(h) பல்கலைக்கழகத்தோடு கல்லூரிகளை இணைப்பதற்கும் கல்லூரிகளிலிருந்து இணைப்பினை விலக்கிக் கொள்வதற்குமான வரைக்கட்டுக்களை வகுத்துரைத்தல் மற்றும் அத்தகைய கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பான கல்வியாண்டினை குறித்துரைத்தல்;

(i) கல்லூரியொன்று எந்த முறையிலும் மற்றும் எந்தவரைக்கட்டுகளுக்குட்பட்டு தன்னாட்சிக் கல்லூரியென பெயரிட்டுக் குறிப்பிடலாம் என்பதையும், அவ்வாறு பெயரிட்டுக் குறிப்பிடுவதாவது அறவு செய்யப்படலாம் என்பதையும் வகுத்துரைத்தல்;

(j) பல்கலைக் கழக கல்லூரிகளின், இணைக்கப்பட்ட கல்லூரிகளின் மற்றும் ஏற்பளிக்கப்பட்ட கல்லூரிகளின் மாணவர்களுக்காக கல்வி மன்றமானது அத்தகைய விரிவுரை வழங்குவதற்கும் மற்றும் கற்பிப்பதற்கும் வகை செய்தல் மற்றும் கல்லூரிகளின் மாணவர்களாக இராத நபர்களுக்கு விரிவுரை வழங்கவும் மற்றும் கற்பிப்பதற்கும் மற்றும் அவர்களுக்குப் பட்டயங்கள் வழங்கவும்கூட வகை செய்தல்;

(k) கல்லூரிகள் மற்றும் உணவு விடுதிகள் அனைத்தையும் ஆய்வு செய்வதற்கு வகை செய்தல்;

(l) பட்டங்கள், விருதுகள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புப் பட்டங்களை ஏற்படுத்துதல்;

(m) (i) பல்கலைக்கழகக் கல்லூரி அல்லது ஆய்வுக்கூடத்தில் அல்லது இணைக்கப்பட்ட அல்லது ஒப்பளிக்கப்பட்ட கல்லூரியொன்றில் ஒப்புதல் அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரியொன்றில் ஒப்புதல் அளிக்கப்பட்ட குறித்தகாலப் படிப்பொன்றைத் தொடர்ந்திருந்து, வகுத்துரைக்கப்பட்ட முறையில் அதிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்து மற்றும் பல்கலைக் கழகத்தின் வகுத்துரைக்கப்பட்ட தேர்வுகளில் தேறியுள்ளவர்களுக்கு;

(ii) வகுத்துரைக்கப்படலாகிற வரைக்கட்டுகளின் படி ஆராய்ச்சியினை நடத்தியுள்ளவர்களுக்கு பட்டங்கள், விருதுகள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்பு பட்டங்களை அளித்தல்.

(n) ஆட்சிக்குழுவின் மூன்றில் இரண்டு பங்குக்குக் குறையாத உறுப்பினர்களின் பரிந்துரையின்பேரில், கௌரவப்பட்டங்களை அல்லது கல்விச் சிறப்புப் பட்டங்களை அளித்தல்;

(o) மாணவர் விடுதிகளை நிறுவியமைத்துப் பேணிவருதல்;

(p) பட்டதாரி உதவித்தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித்தொகைகள், உதவி சம்பளங்கள், ஆதரவுப்படித் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்துதல்;

(q) கல்லூரிகளுக்கு ஒப்புதலளிப்பதற்காகவும் இணைப்பதற்காகவும், இப்பல்கலைக்கழகத்தின் தேர்வுகள், பட்டங்கள், விருதுகள், பட்டயங்கள் ஆகியவற்றிற்கு அனுமதிக்கப்படுவதற்காகவும், பட்டதாரிகளைப் பதிவு செய்வதற்காகவும், அத்தகைய பதிவினைப் புதுப்பிப்பதற்காகவும் மற்றும் 4ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்கள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றுள் எதற்காகவும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்களை வகுத்துரைத்தல்,

(r) ஆண்டறிக்கை, ஆண்டுக்கணக்குகள், நிதிநிலை மதிப்பீடுகள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்தலும், அவற்றின் மீது தான் பொருத்தமெனக் கருதக்கூடிய நடவடிக்கையை எடுத்தலும்;

(s) பல்கலைக்கழக விரிவாக்கக்குழு ஒன்றை ஏற்படுத்தி அதைப் பேணிவருதல்;

(t) நூல் வெளியீட்டுப் பிரிவு, மாணவர் சங்கங்கள், வேலைவாய்ப்புப்பிரிவு, பல்கலைக் கழக உடற்பயிற்சிக் கழகங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி அவற்றைப் பேணி வருதல்;

(u) நிறுவனங்களில் ஏதொன்றின் மேலாண்மையை மேற்கொள்வதற்காகவும் அதன் சொத்துக்களையும் கடப்பாடுகளையும் எடுத்துக் கொள்வதற்காகவும் அல்லது இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்கு முரணாகயிராத பிற நோக்கங்கள் எவற்றிற்காகவும் மைய அரசு அல்லது மாநில அரசு அல்லது தனியார் நிறுவனம் எதனுடனும் உடன்படிக்கை எதையும் செய்துகொள்ளுதல்.

(v) பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளுக்கான தேர்தல் முறையையும், கல்விமன்றம், ஆட்சிக்குழு மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற அதிகார அமைப்புகள் ஆகியவற்றின் கூட்ட நடைமுறையையும், பல்கலைக்கழகத்தின் கல்விமன்றம் அல்லாத பல்கலைக்கழகத்தின் பிற அதிகார அமைப்புகளினால் அலுவல் நடத்தப்பெறுவதற்குத் தேவைப்படும் உறுப்பினர்களின் குறைவெண் வரம்பினையும் முறைப்படுத்துகின்ற நிலை விதிகளைச் செய்தல்;

(w) பல்கலைக்கழகத்தின் சொத்துக்களையும் நிதியங்களையும் வைத்துவருதல், கட்டுப்பாடு செய்தல், நிருவகித்து வருதல்;

(x) பல்கலைக்கழகத்தின் தனித்த இலச்சினையின் வடிவம், அதைப் பாதுகாப்பில் வைத்திருப்பது, பயன்படுத்துவது ஆகியவை குறித்து பணித்தல்;

(y) இந்தச் சட்டத்திற்கும், நிலை விதிகளுக்கும் துணை முறை நிதி விதிகளுக்கும், ஒழுங்கு விதிகளுக்கும் இணங்கிய வகையில், பல்கலைக்கழகம் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளையும் முறைப்படுத்துதலும் முடிவு செய்தலும்;

(z) திட்டவட்டமான நோக்கங்களுக்காக, இப்பல்கலைக் கழகத்தின் பொறுப்பில் விடப்பட்டுள்ள சொத்துக்கள் நிதியங்கள் ஆகிய அனைத்தையும் நிருவகித்தல்;

(aa) (i) பல்கலைக் கழக உதவிப் பேராசிரியர்கள், பல்கலைக்கழக இணைப் பேராசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஆகியோரை நியமித்தல், அவர்களுடைய ஊதியங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை நிர்ணயம் செய்தல். அவர்களுடைய கடமைகளையும் அவர்களது பணிகள் குறித்த வரைக்கட்டுகளையும் வரையறுத்தல் மற்றும் தற்காலிக காலியிடங்களை நிரப்புவதற்கு வகை செய்தல்;

(ii) நிருவாக மற்றும் அதுபோன்ற பிற பதவிகளுக்கான நியமன முறையை வகுத்துரைத்தல்; மற்றும் அவற்றின் ஊதியங்கள் எவையேனும் இருப்பின் அவற்றை நிர்ணயித்தல்; அவற்றினுடைய கடமைகளையும் அவற்றின் பணி நிபந்தனைகளையும் வரையறுத்தல் மற்றும் தற்காலிகக் காலி இடங்களை நிரப்புவதற்கு வகை செய்தல்;

(ab) பல்கலைக்கழக உதவிப்பேராசிரியர்கள், பல்கலைக்கழக இணைப்பேராசிரியர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் பிற பணியாளர்கள் ஆகியோரைத் தற்காலிகப் பணிநீக்கம் செய்தல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல்;

(ac) பல்கலைக்கழகத்திடம், அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் எவையேனும், நிலைக்கொடைகள், விருப்ப ஆவண வழிக்கொடைகள், நன்கொடைகள், மானியமளிப்புகள் மற்றும் உரிமை மாற்றங்கள் மூலமாக அளிக்கப்படும்போது அவற்றை பல்கலைக்கழகத்தின் சார்பாக, ஏற்றுக் கொள்ளுதல்

(ad) (i) மைய அல்லது மாநில அரசு எதனிடமிருந்தும்அல்லது பொதுமக்களிடமிருந்து அல்லது மைய அல்லது மாநில அரசு எதற்கேனும் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள கழகம் எதனிடமிருந்தும், பல்கலைக்கழகத்தின் சார்பாகக்கடன்களைப் பெறுதல்;

(ii) பல்கலைக்கழகத்தின் நோக்கங்களுக்காக பல்கலைக் கழகச் சொத்தின் பிணையத்தின்பேரில், அரசின் ஒப்புதலளிப்புடன் பணத்தைக் கடன்வாங்குதல்;

(ae) பல்கலைக்கழகத்தின் பரப்பிடத்திற்குள் உள்ள கல்லூரிகளை பல்கலைக்கழகத்துடன் இணைத்தலும் கல்லூரிகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளாக ஏற்பிசைவு அளித்தல்;

(af) கல்லூரி எதனையும் தன்னாட்சிக் கல்லூரியாகப் பெயரிட்டுக் குறிப்பிடுதலும், அவ்வாறாகப்பெயரிட்டு குறிப்பிட்டதை நீக்கிவிடுதலும்;

(ag) பல்கலைக்கழகத்தால் பேணி வரப்படாத மாணவர் விடுதிகளுக்கு ஏற்பிசைவளித்தல் மற்றும் துணைமுறை விதிகளுக்கிணங்கவும் அதன்படி விதிக்கப்பட்ட வரைக்கட்டுகளுக்கிணங்கவும் நடத்தப்பெறாத மாணவர் விடுதி எதனின் ஏற்பிசைவையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்தல் அல்லது விலக்கிக் கொள்ளுதல்;

(ah) பல்கலைக்கழகக் கல்லூரிகள், இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகள், மாணவர் விடுதிகள் ஆகிய அனைத்தையும் ஆய்வு செய்வதற்கு ஏற்பாடு செய்தலும் ஆய்வு செய்யப்பணித்தலும்;

(ai) பல்கலைக்கழகக் கல்லூரிகள், இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகள், மாணவர் விடுதிகள் ஆகியவற்றிலுள்ள ஆசிரியர்களின் தகுதிப்பாடுகளை வகுத்துரைத்தல்;

(aj) பட்டதாரி உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்பு உதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவிச் சம்பளங்கள், ஆதரவு படித்தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை நிலைவிதிகளுக்கிணங்க வழங்குதல்;

(ak) வகுத்துரைக்கப்படக்கூடிய கட்டணங்களை விதித்தலும் வசூலித்தலும்;

(al) பல்கலைக்கழகத் தேர்வுகளை நடத்துதலும் அவற்றின் முடிவுகளுக்கு ஒப்புதலளித்து வெளியிடுதலும்;

(am) பல்கலைக்கழகத்தில் மாணவர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பாக அல்லது பல்கலைக்கழகத் தேர்வுகளுக்குச் சமமாய் இருப்பதாக ஏற்பிசைவு அளிக்கப்படுவதற்கான தேர்வுகளை வகுத்துரைக்கின்ற அவசர விதிகளைச் செய்தல்;

(an) பாடக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமித்தல்;

(ao)(i) பாடக்குழுக்களின் பரிந்துரைகளை பரிசீலனை செய்ததற்குப் பின்பு, தேர்வாளர்களை நியமிப்பது; மற்றும்

(ii) அவர்களுடைய ஊதியங்களை நிர்ணயித்தல்;

(ap) பல்கலைக்கழகத்துறைகளை மற்றும் உறுப்பமைக் கல்லூரிகளைச் சார்ந்த மாணவர்கள் தங்கியிருக்கும் இடத்தையும் மாணவர்களின் ஒழுங்கு நடத்தையும் கண்காணித்துக் கட்டுப்பாடு செய்தல், அவர்கள் உடல் நலமும் பொது நலமும் பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்தல்;

(aq) பல்கலைக்கழக மையங்கள், பல்கலைக்கழகக் கல்லூரிகள் மற்றும் ஆய்வுக் கூடங்கள், நூலகங்கள், அருங்காட்சியகங்கள், ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தால் அமைக்கப்படும் அல்லது பேணிவரப்படும் பிற நிறுவனங்கள் ஆகியவற்றை நிறுவுதலும், மேலாண்மை செய்தலும்;

(ar) பல்கலைக்கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட மாணவர் விடுதிகளை மேலாண்மை செய்தல்;

(as) பல்கலைக்கழக விரிவாக்கக் குழுவின் செயற்பாட்டை முறைப்படுத்துதல்;

(at) பல்கலைக்கழகத்தால் ஏற்படுத்தப்பட்ட நூல் வெளியீட்டுப் பிரிவு, மாணவர் சங்கங்கள், வேலைவாய்ப்புப் பிரிவு, பல்கலைக்கழக உடற்பயிற்சிக் கழகங்கள் ஆகியவற்றை மேலாண்மை செய்தல்;

(au) பல்கலைக்கழகத்தில் கற்பித்தலையும் பயிற்று வித்தலையும் மறு ஆய்வு செய்தல்;

(av) பல்கலைக்கழகத்திற்குள் ஆராய்ச்சியை வளர்த்தலும், அத்தகைய ஆராய்ச்சி பற்றி அவ்வப்போது அறிக்கைகளைக் கோருதலும்;

(aw) சட்டத்தினாலோ, அல்லது நிலைவிதிகளினாலோ, அவசர விதிகளினாலோ அல்லது ஒழுங்குமுறை விதிகளினாலோ தனக்கு வழங்கப்படக்கூடிய அல்லது விதிக்கப்படக் கூடிய பிற அதிகாரங்களைச் செலுத்துதலும் பிற கடமைகளைப் புரிந்து வருதலும்;

(ax) தன் அதிகாரங்களில் எதையும் துணை வேந்தருக்கோ தன் உறுப்பினர்களுக்கிடையேயிருந்து அமைந்த குழுவொன்றிக்கோ அல்லது நிலை விதிகளுக்கிணங்க நியமிக்கப்பட்ட குழுவொன்றிற்கோ ஒப்படைவு செய்தல்;

(2) ஆட்சிக்குழு, பொருட்பாடு எதனைப் பொறுத்தும் கல்விமன்றத்தை கலந்தாய்வது தேவையானதென்று தான் கருதுகிறவிடத்து அவ்வாறு கலந்தாய்வு செய்யலாம்,

23. (1) ஆட்சிக்குழுவானது குறைந்தது இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையேனும் வகுத்துரைக்கப்படக்கூடிய காலங்களிலும், இடங்களிலும் கூடுதல் வேண்டும்; மற்றும் **(2)**, **(3)** ஆகிய உட்பிரிவுகளின் வகைமுறைகளுக்கு உட்பட்டு, தன் கூட்டங்களின் குறைவெண்வரம்பு உள்ளடங்கலாக, அக்கூட்டங்களில் அலுவல் நடத்துவது தொடர்பாக, வகுத்துரைக்கப்படக்கூடிய நடைமுறை விதிகளைக் கடைபிடித்தல் வேண்டும்; ஆட்சிக்குழுவின் கூட்டங்கள்.

(2) துணை வேந்தர் அல்லது அவர் வராதபோது, வந்திருக்கும் உறுப்பினர்களால் தெரிந்தெடுக்கப்படும் உறுப்பினர் எவரேனும், ஆட்சிக் குழுவின் கூட்டமொன்றுக்குத் தலைமை வகிப்பார்;

(3) ஆட்சிக்குழுவின் கூட்டம் எதிலும் எழும் அனைத்துக் கேள்விகளும், வந்திருந்து வாக்களிக்கின்ற உறுப்பினர்களின் வாக்குகளின் பெரும்பான்மையினால் முடிவு செய்யப்படுதல் வேண்டும்; மற்றும் வாக்குகள் சமமானவையாக அமைகின்ற நேர்வில்; துணை வேந்தரோ அல்லது நேர்விற்கேற்ப தலைமை வகிக்கின்ற உறுப்பினரோ, இரண்டாவது அல்லது அறுதி வாக்கு ஒன்றைப் பெற்றிருத்தலும் அதை செலுத்துதலும் வேண்டும்;

(4) (a) ஆட்சிக்குழு, கலந்தாய்வு செய்யும் நோக்கத்திற்காக, பரிசீலனையில் உள்ள பொருள் எதிலும் சிறப்பு அறிவையோ அல்லது நடைமுறைப் பட்டறிவையோ பெற்றிருக்கின்ற எவரையும் கூட்டம் எதற்கும் வருகை தருமாறு அழைப்பு விடுக்கலாம். அத்தகையவர் அத்தகைய கூட்டங்களின் நடவடிக்கைகளில் பேசலாம்; மற்றும் மற்றபடி நடவடிக்கைகளில் பங்கேற்கலாம்; ஆனால் வாக்களிப்பதற்கு உரிமைத் தகுதியுடையவராகமாட்டார்;

(b) அவ்வாறு அழைக்கப்பட்டவர் ஆட்சிக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு அனுமதிக்கத் தக்கதான, நாட்படி மற்றும் பயணப் படிகளுக்கு உரிமைத் தகுதியுடையவராய் இருப்பார்;

கல்வி மன்றம்.

24. (1) கல்விமன்றமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் அதாவது:-

**வகை – I – பதவிவழி உறுப்பினர்கள்**

(a) வேந்தர்

(b) புலங்களின் தலைவர்கள்

(c) பல்கலைக்கழக நூலக இயக்குநர்

(d) அரசு மற்றும் அரசு உதவிபெறும் அனைத்து பொறியியல் கல்லூரிகளின் முதல்வர்கள்

**வகை – II – பிற உறுப்பினர்கள்**

(a) துணைவேந்தரின் பரிந்துரையின் பேரில் பல்கலைக்கழக பேராசிரியர்களிடமிருந்து வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட எட்டு உறுப்பினர்கள்;

(b) அரசின் பரிந்துரையின்பேரில் இணைக்கப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்களிடையேயிருந்து வேந்தரால் பெயர்குறித்து அமர்த்தப்பட்ட பெயர்குறித்து நியமிக்கப்பட்ட பதினைந்து உறுப்பினர்;

(c) அரசின் பரிந்துரையின்பேரில், கல்வி, ஆராய்ச்சி மற்றும் கல்வி நிருவாகம் பொது மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பொருட்பாடுகளில் செயல் திறமை வாய்ந்த வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று கல்வியாளர்கள்;

(d) துணை வேந்தரின் பரிந்துரையின்பேரில் மாநில அரசுத்துறைகள் இருப்பூர்தி இராணுவ பொறியியல் பணிகள், பாதுகாப்பு, அஞ்சல் மற்றும் தந்திகள் தொலைபேசிகள் மற்றும் மாநிலத்தில் பிற சுய நிறுவனங்கள் ஆகியவற்றின் முதன்மை பொறியாளர்கள் அல்லது பொது மேலாளர்களிடமிருந்து வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்கள்.

(e) அரசின் பரிந்துரையின்பேரில் தொழில் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான பொருட்பாடுகளில் செயல்திறமைவாய்ந்த தனியார் தொழில்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களிலிருந்து வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மூன்று நபர்கள்;

(f) அரசின் பரிந்துரையின்பேரில் தொழில்கள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான பொருட்பாட்டில் செயல்திறமைவாய்ந்த மாநிலத்தில் உள்ள மைய மற்றும் மாநிலத் துறைகளின் பொதுத்தொழில் துறைகளிடமிருந்து வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் மூன்று நபர்கள்;

(g) அரசின் பரிந்துரையின்பேரில் தொழில்சார்ந்த பொறியியல் சங்கங்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து அல்லது அமைப்புகளிடமிருந்து அல்லது சங்கங்களிடமிருந்து வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மூன்று நபர்கள்;

(h) துணை வேந்தரின் பரிந்துரையின்பேரில் வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மைய மற்றும் மாநில அரசு ஆகிய இரண்டில் சிறுதொழில் அல்லது தொழில்முனைவர் வளர்ச்சி வாரியத்திலிருந்து அல்லது தொழில்பழகுநர் வாரியத்திலிருந்து உயர்சிறப்பு வாய்ந்த மூன்று நபர்கள்;

(i) துணை வேந்தரின் பரிந்துரையின்பேரில் பின்வரும் நிறுவனங்கள் ஒவ்வொன்றில் ஆசிரியர்களுக்கிடையேயிருந்து வேந்தரால் நியமிக்கப்படும் நபர் ஒருவர்;

(i) இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூர்

(ii) இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை

(iii) இந்திய மேலாண்மை நிறுவனம் பெங்களூர்

(iv) தேசிய தொழில்நுட்ப நிறுவனம், திருச்சிராப்பள்ளி

(j) மேலே உள்ள இனங்கள் எவற்றிலும் உள்ளடக்கப்படாத ஆட்சிக்குழுவின் உறுப்பினர்கள்:

**வரம்புரை** :- பாடக்குழுவொன்றின் தலைவர் எவரையும் அவர்தம் சிறப்பு அறிவானது கலந்துரையாடலின் இனங்களுக்குத் தொடர்புடையதாக இருக்குமேயானால், அவரை கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கலாம்.

**(2)** (i) **(1)**—ஆம் உட்பிரிவில் வகை ஐஐ பிற உறுப்பினர்கள் என்பதன் கீழ் (i) எனும் இனத்தின் பொருட்டு கல்விமன்றத்தின் உறுப்பினராக உள்ள உயர்கல்வித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ, அல்லது தொழில்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ அல்லது சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசின் செயலாளரோ, கல்வி மன்றத்தின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாது இருக்கும் நேர்வில் அவர் அரசின் துணைச் செயலாளரின் படிநிலைக்கு குறையாத அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்துகொள்ள அனுப்பி வைக்கலாம்;

(ii) **(1)**—ஆம் உட்பிரிவில் வகை இரண்டு பிற உறுப்பினர்கள் என்பதன் கீழ் (j) எனும் இனத்தின் பொருட்டு கல்விமன்றத்தின் உறுப்பினராக உள்ள தொழில்நுட்ப கல்வியின் இயக்குநர் காரணம் எதற்காகவும் கல்விமன்றத்தின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலாது இருக்கும் நேர்வில், அவர் துணை இயக்குநர் படிநிலைக்குக் குறையாத துறை அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்து கொள்ள அனுப்பி வைக்கலாம்.

(3) (a) பிறவாறு வகைசெய்யப்பட்டிருந்தால் தவிர, தேர்வு செய்யப்பட்ட மற்றும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட கல்வி மன்றத்தின் உறுப்பினர், மூன்றாண்டுக் கால அளவு ஒன்றுக்குப் பதவி வகித்தல் வேண்டும் மற்றும் அத்தகைய உறுப்பினர் மற்றுமொரு மூன்றாண்டுகள் கால அளவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கோ அல்லது பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ உரிமைத் தகுதி உடையவர் ஆவார்.

(b) உறுப்பினர் ஒருவர் கல்விமன்றத்தின் தற்செயல் காலியிடத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டிருக்குமிடத்து அத்தகைய உறுப்பினர் எவராலும் ஓராண்டுக்கும் குறையாமல் வகித்து வரப்பட்ட பதவியின் கால அளவானது ஒரு முழுமையான மூன்று ஆண்டுகளை கொண்ட கால அளவாக கருதப்படவேண்டும்.

முதலாம் **வரம்புரை** :- ஆனால், குறிப்பிட்டதொரு வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் உறுப்பினர் அல்லது ஒரு குறிப்பிட்ட நியமனப் பதவியை வகிக்கிறார் என்ற தகுதியினைக் கல்விமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்டிருக்கிற ஓர் உறுப்பினர், அல்லது அவர் அந்தக் குறிப்பிட்ட வாக்காளர் தொகுதியில் அல்லது அமைப்பில் அல்லது நேர்விற்கேற்ப அந்த நியமனப் பதவியில் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும் தேதியிலிருந்து கல்விமன்றத்தின் உறுப்பினராக இருப்பதும் அற்றுப்போதல் வேண்டும்.

இரண்டாம் **வரம்புரை**:— கல்விமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்தப் பதவியின் காரணமாக கல்விமன்றத்தின் பதவிவழி உறுப்பினராக இருப்பதற்கு அவர் உரிமைத் தகுதியுடையவராக இருக்கிராறோ அந்தப்பதவிகள் எதற்கேனும் தற்காலிகமாக நியமிக்கப்படுகிற விடத்து அவர்தாம் நியமன பொறுப்பை எடுத்துக் கொள்கிற தேதியிலிருந்து ஏழு நாட்களுக்குள்ளாக தாம் தேர்ந்து எடுக்கப் பட்டதன் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டதன் காரணமாக கல்விமன்றத்தின் உறுப்பினராகத் தாம் தொடர்ந்து இருப்பதற்கு விரும்புகிறாரா அல்லது அத்தகைய உறுப்பினராக இருக்கும் பதவியை விட்டு நீங்கி தம்முடைய நியமனத்தின் காரணமாகப் பதவி வழி உறுப்பினராக ஆவதற்கு விரும்புகிறாரா என்பதைத் தம்மால் கையொப்பமிடப்பட்டு துணை வேந்தருக்கு தெரிவிக்கப் பட்ட எழுத்துருவிலான அறிவிப்பின் மூலமாக தெரிவு செய்தல் வேண்டும்; மற்றும்; அத்தகைய விருப்பத்தெரிவானது அறுதியானதாக இருத்தல் வேண்டும். அந்தச் விருப்பத் செய்யத் தவறுவதின் பேரில், தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினராக உள்ள தம்முடைய பதவியை விட்டு அவர் நீங்கியிருப் பதாகக் கொள்ளப் பெறுவர்.

(4) நபரொருவர் கல்விமன்றத்தின் உறுப்பினராக இருப்பது அற்றுப்போகும்போது, அவர் கல்விமன்றத்தில் தமக்கிருந்த உறுப்பினர் பதவியின் காரணத்தால் இப்பல்கலைக்கழக அதிகார அமைப்புகள் எதிலேனும் உறுப்பினராக அவர் இருப்பதும் அற்றுப்போதல் வேண்டும்.

(5) கல்விமன்றத்தின் உறுப்பினர்கள் வகுத்துரைக்கப் படலாகிற நாட்படிகள் மற்றும் பயணப்படிகள் தவிர இப்பல்கலைக் கழகத்திலிருந்து ஊதியம் எதனையும் பெறுவதற்கு உரிமையுடையவர்கள் ஆகார்.

**வரம்புரை:**– இந்த உட்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் உறுப்பினர் எவரும் தாம் வகிக்கிற பதவியின் காரணமாகத் தாம் உரிமைத் தகுதியுடையவராயிருக்கிற தன்னுடைய இயல்பான ஊதியங்களைப் பெறுவதைத் தடை செய்தல் ஆகாது.

(6) பதவிவழி உறுப்பினர் அல்லாத கல்விமன்றத்தின் ஓர் உறுப்பினர், தமது பதவிக்காலம் முடிவதற்கு முன்பு எந்த நேரத்திலும் தமது உறுப்பினர் பதவியிலிருந்தான பதவி விலகலைக் கொடுக்கலாம்; அத்தகைய பதவி விலகலானது அவ்வுறுப்பினரால் எழுத்துருவிலான கடிதமொன்றின் வாயிலாக வேந்தருக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அப்பதவி விலகலானது, வேந்தரால் அது ஏற்கப்படும் தேதியிலிருந்து செயல்விளைவு பெறுதல் வேண்டும்;

கல்விமன்றத்தின் அதிகாரங்களும் அலுவல்களும்.

**25.** **(1)** கல்விமன்றமானது பல்கலைக் கழகத்தின் முதன்மையான கல்வி அமைப்பாக இருந்துவரும்; மற்றும் இந்தச் சட்டத்தின் மற்றும் நிலைவிதிகளுக்கும் உட்பட்டு இப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பித்தலுக்கும் தேர்வுக்குமான கட்டுப்பாட்டினையும் பொது ஒழுங்குமுறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும். அவற்றின் தரநிலைகள் பேணிவரப்படுவதற்குப் பொறுப்பினை உடையதாக இருத்தல் வேண்டும். மேலும் இப்பல்கலைக்கழகத்தின் பரவலான கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் மறு ஆய்வு செய்யும், அமைப்பாகவும் கூட செயற்படுதல் வேண்டும்.

**(2)** கல்விமன்றமானது இப்பல்கலைக்கழகத்தின் முதன்மைக் கல்வி அமைப்பாகவும் பின்வரும் அதிகாரங்களையும் செயற்பணிகளையும் கொண்டு இருக்கும்.

(a) கற்பித்தல் மற்றும் பிற கல்வித் திட்டங்கள் மீது பொதுவான ஆளுகை அதிகாரத்தைச் செலுத்தி, அதன் தரங்களைப் பேணுதலும் உயர்த்துதலும்;

(b) ஒழுங்குமுறை விதிகளைச் செய்தல்; அவற்றைத் திருத்துதல் அல்லது நீக்கம் செய்தல்;

(c) (i) பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை அனுமதித்தல் தொடர்பாக மற்றும் அனுமதிக்கப்படவிருக்கும் மாணவர்களின் எண்ணிக்கை;

(ii) பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள், ஆகியவற்றுக்கான தொடர் கோவைப் படிப்பு குறித்து; மற்றும்

(iii) தேர்வுகளை நடத்துதல், கல்வித் தரங்களைப் பேணுவதும் உயர்த்துவது குறித்து;

(iv) பிற பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் நிறுவனங்கள் மற்றும் குழுமங்களின் சமமான தேர்வுகள் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் சான்றிதழ்களை வகுத்துரைத்தல்;

(v) பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு அல்லது பிற கல்வி சிறப்புகளில் தொழில் பயிற்சியானது தேவைப்பாட்டின் பகுதியாக அமையுமிடத்து அந்தப் பயிற்சி குறித்து;

(vi) மாணவர் செயல்திறனை மதிப்பீடு செய்தல், சீர்தூக்கிப் பார்த்தல் மற்றும் தரப்படுத்துதல் குறித்து

(d) நூலகங்களைக் கட்டுப்பாடு செய்து பேணுதல் உள்ளிட்ட அனைத்து கல்வி சார்ந்த பொருள்களிலும், ஆட்சிக் குழுவிற்கு அறிவுரை கூறுதல்;

(e) பேராசிரியர், இணைப்பேராசிரியர், உதவிப்பேராசிரியர், பதவிகளுடன் ஆய்வு பிற ஆசிரியர் உள்ள இதர ஆசிரியப் பதவிகளை நிறுவுவதற்கும், அப்பதவிகளுக்குரிய கடமைகள் மற்றும் ஊதியங்கள் குறித்து அட்சிக்குழுவுக்கு பரிந்துரை செய்தல்;

(f) கற்பித்தல் மற்றும் ஆய்வுத் துறைகளை அமைக்கவும், மாற்றியமைக்கவுமான திட்டங்களை உருவாக்குதல், மாற்றியமைத்தல், திருத்தியமைத்தல்;

(g) முதுநிலைக் கல்விகற்பித்தல் மற்றும் , ஆய்வு குறித்து ஆட்சிக்குழுவுக்கு பரிந்துரைகளைச் செய்தல்;

(h) பல்கலைக்கழகத்தின் கற்பிப்பதற்கான வகுத்துரைக்கப்பட வேண்டிய கல்வித் தகுதிகள் குறித்து ஆட்சிக் குழுவுக்கு பரிந்துரைகளைச் செய்தல்;

(i) கௌவர பட்டங்கள் மற்றும் இதர சிறப்பு பட்டங்கள் வழங்குவது குறித்து ஆட்சிக் குழுவுக்கு பரிந்துரை செய்தல்;

(j) விதிகள் வகுத்தல், ஒழுங்கு விதிமுறைகள், பாடத்திட்டம் மதிப்பீட்டு முறைகள், புதிய பாடப்பிரிவுகளை அறிமுகம் செய்தல் இருக்கின்ற பாடங்களை மாற்றியமைத்தல் ஆகியவை குறித்த பாடக்குழுவின் கருத்துருக்களை மறு ஆய்வு செய்து செயல்படுத்துதல்;

(k) பட்டதாரி உதவித்தொகைகள் மற்றும் படிப்பு உதவித் தொகைகள் குறித்து ஆட்சிக்குழுவிற்கு பரிந்துரை செய்தல்;

(l) தொழில் நிறுவனங்களும் அரசுப்பணி தருநர்களும் ஒருபுறமும் மறுபக்கத்தில் பல்கலைக்கழகத்திற்கும் இடையே கூட்டு முயற்சியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஆட்சிக் குழுவிற்கு பரிந்துரை செய்தல்.

(m) துணைவேந்தருக்கோ அல்லது கல்வி மன்றத்தின் ஏதேனும் ஒரு குழுவிற்கோ அதன் அதிகாரங்களில் எதனையும் ஒப்படைவு செய்தல்;

(n) ஒவ்வொரு துறைக்கும் தேவையான இட வசதி, கருவிகள், சாதனங்கள் நூலகம் பேணுகை மேலும் பிற இயற்பொருள் சார்ந்த வசதிகள் குறித்த தரத்தினை மதிப்பீடு செய்து பரிந்துரைத்தல்;

(3) இச்சட்டத்தின் பிற வகைமுறைகளுக்குட்பட்டு, மறு ஆய்வு செய்யும் திறன் கொண்ட குழு என்ற வகையில் கல்விமன்றம் பின்வரும் அதிகாரங்களையும், செயற்பணிகளையும் கொண்டிருக்கும் அதாவது:-

(a) பல்கலைக்கழகத்தின் பரவலான கொள்கைகளையும் செயல்பாடுகளையும் அவ்வப்போது மறு ஆய்வு செய்து பல்கலைக்கழக முன்னேற்றம், மேம்பாட்டிற்கான வழிமுறைகளை கூறுதல்;

(b) ஏதாவது பொருள் குறித்து பல்கலைக்கழக வேந்தருக்கு ஆலோசனை அளிக்கக் கோரும்போது அவ்வாறு ஆலோசனை அளித்தல் ; மற்றும்

(c) நிலைமுறை விதிகளில் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற அதிகாரங்களை செலுத்துதல் மற்றும் அலுவற்பணிகளை ஆற்றுதல்;

26. (1) கல்விமன்றம் துணை வேந்தரால் நிர்ணயிக்கப்படும் தேதிகளில் ஆண்டு ஒவ்வொன்றிலும் குறைந்தது இருமுறையாவது கூடுதல்வேண்டும். அவற்றில் ஒன்று ஆண்டுக் கூட்டமென வழங்கப்படுதல் வேண்டும். கல்விமன்றமானது அது, அவ்வப்போது தீர்மானிக்கக்கூடிய அத்தகைய பிற காலங்களிலும்கூட கூடலாம். கல்விமன்றம் கூட்டங்கள்.

(2) கல்விமன்றக் கூட்டமொன்றுக்குத் தேவைப்படக்கூடிய கோரெண் என்பது, கல்விமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்றிலொரு பங்காக இருத்தல் வேண்டும்.

**வரம்புரை**:- ஆனால், அத்தகைய கோரெண் இப்பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பிற்கோ அல்லது பட்டங்கள் விருதுகள் பட்டயங்கள் அல்லது பிற கல்விச் சிறப்புகளை வழங்கும் நோக்கத்திற்காக நடத்தப்படும் கல்விமன்றக் கூட்டமொன்றிற்கோ தேவை இல்லை.

(3) துணை வேந்தர் பொருத்தமென்று தாம் கருதுகிற போதெல்லாம், கல்விமன்றத்தின் உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் நூற்றுக்கு ஐம்பது விழுக்காட்டிற்கு குறையாத உறுப்பினர்களால் கையொப்பமிட்ட எழுத்துருவிலான கோரிக்கை ஒன்றின்பேரில், கல்விமன்றத்தின் சிறப்பு கூட்டமொன்றைக் கூட்டலாம்.

27. (1) நிதிக்குழு, பின்வரும் உறப்பினர்களைக் கொண்டிருக்கும் அதாவது:- நிதிக்குழு.

(a) துணை வேந்தர்;

(b) நிதித்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(c) உயர்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச்செயலாளர்;

(d) ஆட்சிக் குழுவினால் தன்னுடைய உறுப்பினர்களுக் கிடையேயிருந்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்களில் ஒருவர் பேராசிரியராகவும் ஒருவர் வேந்தரால் ஆட்சிக்குழுவிற்கு பெயர்குறித்து நியமிக்கப்படுபவராகவும் இருப்பார்.

(2) காரணங்கள் எதற்காகவும் நிதித்துறையின் அரசுச் செயலாளர் அல்லது உயர்கல்வித்துறையின் அரசுக் செயலாளர் நிதிக்குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ள இயலவில்லையானால் அவர் அரசின் துணைச் செயலாளரின் படிநிலைக்குக் குறையாத தன்னுடைய துறையின் அலுவலர் எவரையும் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக அனுப்பி வைக்கலாம்.

(3) நிதிக்குழுவிற்குத் துணை வேந்தர், பதவி வழித்தலைவராகவும் நிதி அலுவலர் பதவிவழிச் செயலாளராகவும் இருந்துவருதல் வேண்டும்;

(4) பதவிவழி உறுப்பினர்களை தவிர்த்து நிதிக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும், மூன்றாண்டுக்கால அளவிற்குப் பதவி வகித்துவருவர்;

(5) நிதிக்குழு, கணக்குகளை ஆய்வு செய்வதற்கும் செலவினத்திற்காக கருத்துருக்களைக் கூர்ந்தாய்வு செய்வதற்குமென ஒவ்வோர் ஆண்டிலும் குறைந்தது இருமுறையாவது கூடுதல் வேண்டும்;

(6) நிதி அலுவலரால் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழக ஆண்டுக் கணக்குகள், பரிசீலனைக்காகவும் கருத்துரைகளுக்காகவும் நிதிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; அதன்பின்னர் ஒப்புதலளிப்புக்காக ஆட்சிக்குழுவிற்கு பணிந்தனுப்புதல் வேண்டும்;

(7) நிதிக்குழுவானது, இப்பல்கலைக்கழகத்தின் வருமானம் மற்றும் வள ஆதாரங்கள் ஆகியவற்றின் அடிப்படையில், ஆண்டிற்கான மொத்த தொடர் செலவினம், மொத்த தொடராச் செலவினம் ஆகியவற்றின் வரம்புகளைப் பரிந்துரைத்தல் வேண்டும்;

(8) நிதிக்குழு–

(a) அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் நிதி நிலைமையை மறு ஆய்வு செய்யும்;

(b) ஆண்டு நிதி மதிப்பீடுகளில் வகைமுறை எதுவும் செய்யப்பட்டிராத முதலீடு அல்லது செலவினத்தை உள்ளடக்கியுள்ள, அல்லது ஆண்டு நிதிமதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ள தொகைக்கும் மிகையாக உள்ள செலவினத்தை உள்ளடக்குகிற, கருத்துரு ஒவ்வொன்றின் பேரிலும், ஆட்சிக்குழுவுக்குப் பரிந்துரை செய்யும்;

(c) இப்பல்கலைக்கழகம், அதன் துறை, அதன் உறுப்பமை கல்லூரிகள் ஆகியவற்றின் கணக்குகளை வைத்து பேணி வருவதற்கான முறைகளையும், நடைமுறைகளையும் படிவங்களையும் வகுத்துரைக்கும்;

(d) இப்பல்கலைக்கழக நிதிகள் தொடர்பான அனைத்துப் பொருட்பாடுகளின்பேரிலும், ஆட்சிக் குழுவிற்குப் பரிந்துரை செய்யும்; மற்றும்

(e) வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அலுவற் பணிகளைப் புரிந்துவரும்;

(9) நிதி அலுவலரால் தயாரிக்கப்பட்ட பல்கலைக்கழக நிதி மதிப்பீடுகள் பரிசீலனைக்காகவும் கருத்துரைகளுக்காகவும் நிதிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; நிதிக்குழுவினால் மாற்றியமைக்கப்பட்டவாறான மேற்சொன்ன மதிப்பீடுகள், அதற்குப் பின்னர், பரிசீலனைக்காக ஆட்சிக்குழுவின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும். ஆட்சிக்குழு நிதிக்குழுவினால் செய்யப்பட்ட மாறுதல்களை ஏற்றுக் கொள்ளலாம்;

திட்டமிடும் குழு.

28. (1) இப்பல்கலைக்கழகத்திற்கென திட்டமிடும் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும்; அது பல்கலைக்கழகத்தின் திட்டமிடல் மற்றும் வளர்ச்சி குறித்துக் பொதுவாக ஆலோசனை நல்குதல் வேண்டும்; மேலும் அது பல்கலைக்கழகக் கல்வித்தரம் மற்றும் ஆராய்ச்சியை ஆய்வு செய்துவரும்;

(2) திட்டமிடும்குழு, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும், அதாவது:-

(a) துணை வேந்தர் அவர் அக்குழுவின் பதவி வழித் தலைவராக இருப்பார்; மற்றும்

(b) கல்வியில் சிறந்த எண்மருக்கு மேற்படாதவர்கள்;

(3) திட்டமிடும் குழுவின் உறுப்பினர்கள் துணை வேந்தரின் பரிந்துரையின்பேரில் வேந்தரால் நியமிக்கப்படுவர்; மற்றும் அவர் தீர்மானிக்கக்கூடிய அத்தகைய கால அளவுக்குப் பதவி வகிப்பார்;

(4) திட்டமிடும் குழு, இந்தச் சட்டத்தினால் அதனிடம் உற்றமைந்துள்ள பிற அதிகாரங்கள் அனைத்திடுனோடும்கூட, கல்வி அலுவல்களை எதனையும் குறித்து ஆட்சிக்குழுவிற்கும், கல்விமன்றத்திற்கும் ஆலோசனை கூறுவதற்கும் உரிமை கொண்டதாகும்.

**29.** கற்பிக்கின்ற துறை ஒவ்வொன்றுடனும் இணைக்கப்பட்ட பாடக்குழுக்கள் இருத்தல் வேண்டும். பாடக்குழுக்களின் அமைப்பும் அதிகாரங்களும்; வகுத்துரைக்கப்படக்கூடியனவாக இருக்கும்; பாடக் குழுக்கள்.

**30.** (1) பல்கலைக்கழகமானது நோக்கங்கள் மற்றும் அதனுடைய அலுவற் பணிகளுக்காக நிலைவிதிகளால் வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய புலங்களை அமைத்துருவாக்கலாம். புலங்களை அமைத்துருவாக்குதலும் செயற்பணிகளும்.

(2) புலங்களின் அமைத்துருவாக்கவும் அலுவற்பணிகளும், பிற எல்லாவகைகளிலும், நிலைமுறை விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக் கூடியனவாக இருக்கும்.

(3) புலம் ஒவ்வொன்றும், நிலை விதிகளின் மூலமாக வகுத்துரைக்கப்படக்கூடிய கற்பிக்கின்ற துறைகளைக் கொண்டிருக்கும்.

**31.** பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளென நிலைவிதிகளின் மூலம் விளம்பப்படக்கூடிய பிற அமைப்புகளின்அமைத்துருவாக்குதலும் அவற்றின் அதிகாரங்களும், வகுத்துரைக்கப்படக் கூடியனவாக இருக்கும். பிற அதிகார அமைப்புகளை அமைத்துருவாக்குதல்.

**32.** பல்கலைக்கழக அதிகார அமைப்புகள் அனைத்தும், குழுக்களை அமைத்துருவாக்குவதற்கும் அல்லது மாற்றியமைப்பதற்கும் மற்றும் தங்களுடைய அதிகாரங்களுக்குள் தாங்கள் பொருத்தமெனக் கருதுகிறவற்றை, அவற்றிடம் ஒப்படைவு செய்வதற்கும் அதிகாரம் பெற்றிருத்தல் வேண்டும். அத்தகைய குழுக்கள், பிறவாறு வகை செய்யப்பட்டுள்ளவாறு தவிர, தொடர்புடைய அதிகார அமைப்பின் உறுப்பினர்களையும் அவ்வதிகார அமைப்பு ஒவ்வொரு நேர்விலும் பொருத்தமெனக் கருதக்கூடிய பிற நபர்கள் எவரேனும் இருப்பின் அவர்களையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும். குழுக்களை அமைத்துருவாக்குதல் மற்றும் அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.

## அத்தியாயம் – V

## நிலை விதிகள் (Statutes) துணைமுறை விதிகள் (Ordinances), ஒழுங்குமுறை விதிகள் (Regulations) ஆகியன

**33.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, நிலைவிதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்குமோ, அல்லது அவற்றுள் ஏதொன்றுக்குமோ, வகை செய்யலாம்; அதாவது:- நிலை விதிகள்

(1) பட்டங்களை வழங்குவதற்கு, பட்டமளிப்பு விழாவை நடத்துதல்;

(2) மதிப்புறு (கௌரவப்) பட்டங்களையும் கல்விச் சிறப்புப் பட்டங்களையும் வழங்குதல்;

(3) இப்பல்கலைக் கழக அதிகார அமைப்புகளின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் அலுவற்பணிகள்;

(4) அதிகார அமைப்புகளின் உறுப்பினர்களிடையே எழும் காலியிடங்களை நிரப்புகின்ற முறை;

(5) அதிகார அமைப்புகளின் மற்றும் அவற்றில் குழுக்களின் உறுப்பினர்களுக்குச் செலுத்தப்படத்தக்க படித் தொகைகள்;

(6) அதிகார அமைப்புகளின் கூட்டங்களில் பின்பற்றப் படவேண்டிய நடைமுறை; அத்தகைய கூட்டங்களில் அலுவல் நடத்துவதற்கான குறைவெண்வரம்பு (Quorum) உள்ளடங்கலாக:-

(7) அதிகார அமைப்புகளின் ஆணைகள் அல்லது முடிவுகளுக்கு உறுதியொப்பமளித்தல்;

(8) இப்பல்கலைக் கழகத்திலும், அதன் உறுப்பமைச் கல்லூரிகளிலும் கற்பிக்கின்ற துறைகளை உருவாக்குதல்;

(9) வேந்தர் மற்றும் இணைவேந்தர் அல்லாத இப்பல்கலைக்கழகத்தின் பிற அலுவலர்களின் பதவிக்கால அளவும் அவர்களின் நியமன முறைகளும் மற்றும் பணி பற்றிய வரைக்கட்டுகளும்;

(10) இப்பல்கலைக்கழகத்தினால் பணியிலமர்த்தப்படும் ஆசிரியர்கள் மற்றும் ஏனையோரின் தகுதிப்பாடுகள்;

(11) இப்பல்கலைக் கழகத்தினால் பணியிலமர்த்தப்படும் ஆசிரியர்களையும் ஏனையோரையும் வகைப்படுத்துதல், அவர்களின் நியமனமுறை மற்றும் அவர்களின் பணி பற்றிய வரையறைகளையும் வரைக்கட்டுக்களையும் தீர்மானித்தல்;

(12) இப்பல்கலைக்கழகத்தினால் பணியிலமர்த்தப்படும் அலுவலர்கள், ஆசிரியர்களையும் மற்றும் ஏனையோரின் நன்மைக்கே ஓய்வூதியம், பணிக்கொடை, காப்பீடு அல்லது வருங்கால வைப்பு நிதியத்தை ஏற்படுத்துதல்;

(13) பட்டதாரி உதவித் தொகைகள், பயண உதவித் தொகைகள், படிப்புதவித் தொகைகள், மாணவ உதவித் தொகைகள், உதவிச் சம்பளங்கள், ஆதரவுப் படிப்புத் தொகைகள், பதக்கங்கள், பரிசுகள் ஆகியவற்றை ஏற்படுத்துதலும் அவற்றை அளிப்பதற்கான வரைக்கட்டுகளும்;

(14) கூடங்கள், மாணவர் விடுதிகள், ஆய்வுக் கூடங்கள் ஆகியவற்றை நிறுவியமைத்தலும், பேணி வருதலும்;

(15) கூடங்களிலும், மாணவர் விடுதிகளிலும், இப்பல்கலைக்கழக மாணவர்கள் தங்கியிருப்பதற்கான வரைகட்டுகளும் அவ்வாறு தங்கியிருப்பதற்கான கட்டணங்களையும் பிற தொகைகளையும் விதித்தலும்;

(16) பட்டதாரிகளைப் பதிவு செய்வதற்கான வரைக் கட்டுகளும் மற்றும் அதற்கான பதிவேட்டினை பேணி வருதலும்;

(17) ஒப்புதலளிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு ஏற்பிசைவு அளிப்பதற்கான மற்றும் இப்பல்கலைக்கழகத்தோடு கல்லூரிகளை இணைப்பதற்கான வரைக்கட்டுகள்;

(18) கல்லூரியொன்று தன்னாட்சிக் கல்லூரியாக பெயர் குறித்தழைக்கப்படுதலோ அல்லது அத்தகைய கல்லூரியை அவ்வாறு பெயர் குறித்து அழைக்கப்படுதலை நீக்குதலோ என்ற முறையிலும் எந்த வரைக்கட்டுக்களுக்கும் உட்பட்டும் செய்யப்பட வேண்டும் என்பதும் மற்றும் ஆளுநர்கள் குழுமம், கல்விக்குழு, பாடக்குழுக்கள் தேர்வாளர் குழுக்கள் ஆகியவற்றை நிறுவியமைத்தல் அல்லது திருத்தியமைத்தல் அவற்றின் அதிகாரங்கள், பணிகள் ஆகியவை உள்ளடங்கலாக தன்னாட்சிக் கல்லூரிகளை நிருவகித்தல் தொடர்பான பொருட்பாடுகள்

(19) இப்பல்கலைக் கழக அதிகார அமைப்புகளிடம் அல்லது அலுவலர்களிடம் மேவியுள்ள அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்; மற்றும்

(20) நிலைவிதிகளின் மூலம் கோரப்படுகின்ற அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்;

நிலை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது.

34. (1) ஆட்சிக்குழு, அவ்வப்போது, நிலைவிதிகளைச் செய்யலாம் மற்றும் இந்தப்பிரிவில் இதன்பின்பு வகை செய்யப்பட்டுள்ள முறையில் அந்நிலை விதிகளைத் திருத்தலாம் அல்லது நீக்கலாம்.

(2) கல்விமன்றம் அல்லது துணை வேந்தர், ஆட்சிக் குழுவிற்கு, அவ்வாட்சிக்குழுவால் நிறைவேற்றப்படவேண்டிய நிலைவிதி எதனின் அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது நீக்கம் எதனின் வரைவையும், முன்மொழியலாம், மற்றும் அத்தகைய வரைவானது ஆட்சிக்குழுவினால் அதன் அடுத்த கூட்டத்தில் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்;

**வரம்புரை**:- ஆனால், துணை வேந்தர், அந்த அதிகார அமைப்பிற்கு தன்னுடைய கருத்தை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டாலன்றி இப்பல்கலைக்கழகத்தினுடைய அதிகார அமைப்பு எதனின் தகுதி அதிகாரங்கள் மற்றும் அமைப்பினைப் பாதிக்கும் வகையில் நிலைவிதி ஒன்றிற்குத் திருத்தம் ஒன்றை முன்மொழிதல் கூடாது; அவ்வாறு வெளிபடுத்தப்பட்ட கருத்தானது ஆட்சிக்குழுவால் பரிசீலனைச் செய்யப்படுதல் வேண்டும்.

(3) ஆட்சிக்குழு, (2)–ஆம் உட்பிரிவின்படி கல்விமன்றத்தினால் மற்றும் துணை வேந்தரால் முன்மொழியப்பட்ட வரைவைப் பரிசீலனை செய்யலாம்; மற்றும் அவ்வரைவை நிறைவேற்றலாம் அல்லது மறுத்துவிடலாம் அல்லது திருத்தங்களுடனோ இல்லாமலோ அதை மறுபரிசீலனைக்காகக் கல்விமன்றத்திற்கு அல்லது நேர்விற்கேற்ப துணைவேந்தருக்கு திருப்பியனுப்பலாம்;

(4) (a) ஆட்சிக் குழுவின் உறுப்பினர் எவரும் நிலைவிதியொன்றின் அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது அதன் நீக்கம் எதனின் வரைவையும் ஆட்சிக்குழுவிற்கு முன்மொழியலாம்; மற்றும் ஆட்சிக்குழுவானது அவ்வரைவை ஏற்றுக் கொள்ளலாம் அல்லது அது கல்விமன்றத்தின் அதிகாரவரம்பு எல்லைக்குள் வாராத பொருட்பாடு ஒன்றைப் பற்றியதாக இருக்குமானால் அதை மறுத்துத் தள்ளிவிடலாம்.

(b) அத்தகைய வரைவு, கல்விக்குழுவின் அதிகார வரம்பு எல்லைக்குள் இருக்கிற பொருள் ஒன்றைப்பற்றியதாக இருக்கிற நேர்வில், ஆட்சிக்குழு, அதைப் பரிசீலனை செய்வதற்காகக் கல்விகுழுவிற்குத் குறித்தனுப்புதல் வேண்டும்; அக்குழு அவ்வரைவிற்குத் தான் ஒப்புதலளிக்கவில்லை என்று ஆட்சிக்குழுவிற்கு அறிவிக்கலாம்; அல்லது கல்விகுழு ஒப்புதலளிக்கக்கூடிய வடிவில் ஆட்சிக் குழுவிற்கு அவ்வரைவைப் பணிந்தனுப்பலாம்; மேலும், அவ்வாட்சிக் குழு அவ்வரைவைத் திருத்தங்களுடனோ, இல்லாமலோ நிறைவேற்றலாம் அல்லது மறுத்துத் தள்ளிவிடலாம்;

(5) ஆட்சிக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட நிலைவிதி ஒன்று அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது நீக்கமானது, வேந்தருக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். அவர் அதற்கு இசைவு அளிக்கலாம் அல்லது தாம் இசைவு அளிப்பதை மறுத்து நிறுத்தி வைக்கலாம். ஆட்சிக் குழுவினால் நிறைவேற்றப்பட்ட நிலைவிதி ஒன்று அல்லது நிலைவிதியொன்றின் திருத்தம் அல்லது நீக்கமானது, வேந்தரால் அதற்கு இசைவளிக்கப்பட்டிருக்கின்ற வரையிலும், செல்லுந்தன்மையைப் பெறாது இருத்தல் வேண்டும்.

**35.** இந்தச் சட்டத்தின் மற்றும் நிலை விதிகளில் வகை முறைகளுக்குட்பட்டு, பல்கலைக்கழகத்தின் துணைமுறை விதிகள், பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கேனும் வகை செய்யலாம் அதாவது:- துணைமுறை விதிகள்.

(a) இப்பல்கலைக்கழகத்திற்கும் அதனோடு இணைக்கப்பட்ட அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளுக்கும் மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல்;

(b) இப்பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பட்டங்கள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழி செய்கின்ற குறித்தகாலப் படிப்புப் பிரிவுகள்;

(c) எந்த வரைக்கட்டுகளின்படி, இப்பல்கலைக்கழகப் பட்டங்கள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புப் பட்டங்கள் ஆகியவற்றைப் பெறுவதற்கு வழி செய்கின்ற குறித்த காலப் படிப்புப் பிரிவுகளுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும் என்பது;

(d) இப்பல்கலைக் கழகத்தின் தேர்வுகளை நடத்துதலும் எந்த வரைக்கட்டுகளின் பேரில் அத்தகைய தேர்வுகளுக்கு மாணவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதும்;

(e) தேர்வுகளுக்கு மாணவர்களை ஏற்றுக் கொள்வது தொடர்பாக எந்த முறையில் விலக்கு அளிக்கப்படலாம் என்பது:-

(f) தேர்வு அமைப்புகளின் மற்றும் தேர்வாளர்களின் வரைக்கட்டுகள் மற்றும் நியமன முறையில் அவர்களுடைய கடமைகள்;

(g) இப்பல்கலைக்கழக மாணவர்களிடையே ஒழுக்கத்தைப் பேணி வருதல்;

(h) குறித்த காலப் படிப்புப் பிரிவு, ஆராய்ச்சி பரிசோதனை மற்றும் நடைமுறைப்பயிற்சி ஆகியவற்றிற்காகவும் இப்பல்கலைக் கழகத்தின் பட்டங்கள், பட்டயங்கள், பிற கல்விச் சிறப்புகள் ஆகியவற்றிற்கான தேர்வுகளுக்கு எற்றுக் கொள்வதற்காகவும் விதிக்கப்பட வேண்டிய கட்டணங்கள்; மற்றும்

(i) இந்தச் சட்டத்தினாலோ, நிலைவிதிகளினாலோ, செய்யப்பட வேண்டியதாகவுள்ள அல்லது துணைமுறை விதி ஒன்றினால் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற பொருட்பாடு எதுவும்.

துணைமுறை விதிகள் எவ்வாறு செய்யப்படுகின்றன என்பது.

**36. (1)** இந்தச் சட்டத்தில் பிறவாறு வகை செய்யப்பட்டவாறு தவிர, கல்விமன்றத்தினால் துணைமுறை விதிகள் செய்யப்படுதல் வேண்டும்.

**(2)** கல்விமன்றத்தால் செய்யப்பட்ட துணைமுறை விதிகள் அனைத்தும், கல்விமன்றத்தால் நிர்ணயிக்கப்படக்கூடிய அத்தகைய தேதியிலிருந்து செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும்; ஆனால் அவ்வாறு செய்யப்பட்ட துணைமுறை விதி ஒவ்வொன்றும் அது செய்யப்பட்டதற்குப் பின்னர் கூடிய விரைவில் ஆட்சிக் குழுவிற்கு பணிந்தனுப்பப்பட வேண்டும்; மற்றும் ஆட்சிக்குழு தனது அடுத்தக் கூட்டத்தில் அதனை பரிசீலனை செய்தல் வேண்டும்.

**(3)** ஆட்சிக்குழுவானது, அத்தகைய கூட்டத்தில் வருகைதந்திருக்கும் மூன்றில் இரண்டு பங்குக்கு குறையாத பொரும்பான்மை உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினால், அத்தகைய துணைமுறை விதியை மாற்றியமைக்கவோ, அல்லது நீக்கவோ அதிகாரம் கொண்டதாகும். மற்றும் அவ்வாறான துணைமுறை விதி அவ்வாறான தீர்மானத்தின் தேதியிலிருந்து அவ்வாறு மாற்றியமைக்கப்பட்டவாறான வடிவத்தில் செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும். அல்லது நேர்வுக்கேற்ப அத்தகைய அவ்வாறு செயல்விளைவு கொள்வது அற்றுப்போதல் வேண்டும்.

ஒழுங்குமுறை விதிகள்.

**37. (1)** ஆட்சிக்குழுவும், கல்விமன்றமும் ஒழுங்குமுறை விதிகளைச் செய்யலாம் ஒழுங்குமுறை விதிகளால் இந்தச்சட்டத்தின், நிலைமுறை விதிகளின், துணைமுறை விதிகளின் மூலமாக வகை செய்யப்படவேண்டிய பொருட்பாடுகள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றுள் ஏதொன்றுக்காகவும் மற்றும் அத்தகைய அதிகார அமைப்பு குறித்தாக மட்டுமே இருக்கின்ற பிற பொருட்டு எதற்காகவும் இந்தச்சட்டத்தின், நிலைமுறை விதிகளின் மற்றும் துணைமுறை விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்கிய வகையிலான ஒழுங்கு முறை விதிகளை இயற்றலாம்.

**(2)** அத்தகைய ஒழுங்கு முறை விதிகள் அனைத்தும், ஆட்சிக்குழுவோ அல்லது நேர்விற்கேற்ப கல்விமன்றமோ இதன்பொருட்டு குறிக்கக்கூடிய அத்தகைய தேதியிலிருந்து செயல்விளைவு கொள்ளுதல் வேண்டும்.

**(3) (1)**—ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட அதிகார அமைப்புகள் ஒவ்வொன்றும், அதன் உறுப்பினர்களுக்கு கூட்டத் தேதி குறித்தும், கூட்டங்களில் பரிசீலிக்கப்படவேண்டிய அலுவல்கள் குறித்தும் மற்றும் கூட்டங்களின் நடைமுறைக் குறிப்புகளை வைத்துவருவது குறித்தும் உறுப்பினர்களுக்கு அறிவிப்பு கொடுப்பதற்கு வகை செய்கின்ற ஒழுங்குமுறை விதிகளை இயற்றுதல் வேண்டும்.

**(4)** ஆட்சிக்குழு, இந்தப்பிரிவின்படி செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதியில், திருத்தத்தை அது குறித்துரைக்கும் வகையில் அமைக்கவோ அல்லது அதன்படி தான் இயற்றிய அல்லது கல்விமன்றம் இயற்றிய ஒழுங்குமுறை விதியினை நீக்கவோ பணிக்கலாம்.

## அத்தியாயம் – VI

### மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதலும் அவர்களின் தங்குமிடமும்.

பல்கலைக்கழக படிப்புப் பிரிவுகளுக்கு சேர்த்துக் கொள்ளுதல்.

**38. (1)** நபரெவரும்;-

(a) அதற்கென வகுத்துரைக்கப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலன்றி,

(b) இப்பல்கலைக்கழகத்தால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற கல்வி வரைக்கட்டுகளை நிறைவேற்றினாலன்றி, பல்கலைக்கழகத்தின் பட்டங்கள், விருதுகள் அல்லது பட்டயங்களின் தேர்வுகளுக்கான அனுமதிக்காக இப்பல்கலைக்கழகத்தின் குறித்தகால படிப்புப்பிரிவு ஒன்றில் அனுமதிக்கப்படுதல் கூடாது.

**(2)** பல்கலைக்கழகத் தேர்வு ஒன்றிற்காகத் தேர்வுநாடுகிற ஒருவர், கல்விமன்றத்தின் பரிந்துரையின்பேரில் ஆட்சிக் குழுவினால் செய்யப்படும் தனி ஆணை ஒன்றின் மூலமாக இந்த உட்பிரிவின் வகை முறைகளிலிருந்து அவர் விலக்களிக்கப் பட்டிருந்தாலன்றி, பல்கலைக்கழகக் கல்லூரி ஒன்றின் அல்லது ஆய்வுக் கூடமொன்றின் அல்லது இணைக்கப்பட்ட அல்லது நேர்விற்கேற்ப ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரியொன்றின் உறுப்பினரொருவராகப் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்; அத்தகைய விலக்களிப்பு எதுவும், ஆட்சிக்குழு பொருத்தமென கருதக்கூடிய அத்தகைய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டுச் செய்யப்படலாம்.

**(3)** **(2)**—ஆம் உட்பிரிவின் வகைமுறைகளிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ள மாணவர்களும் பட்டமொன்றுக்கான குறித்த காலப் படிப்புப் பிரிவு அல்லாத பிற குறித்த காலப் படிப்புப் பிரிவுகளுக்கு வகுத்துரைக்கப்படும் வரைக்கட்டுகளுக்கிணங்க சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர்களும், பல்கலைக்கழகத்தின் கல்லூரி சாரா மாணவர்களாக இருத்தல் வேண்டும்.

**39.** தேர்வுநாடுபவர் எவரும் பல்கலைக்கழகக் கல்லூரி, அல்லது ஆய்வுக்கூடமொன்றின் அல்லது இணைக்கப்பட்ட அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரியொன்றின் உறுப்பினரொருவராக அவர் பதிவுசெய்யப்பட்டிருந்தாலன்றியும் மற்றும் அதற்கான ஒழுங்குமுறை விதிகளின்படி தேவைப்படும் வருகைப் பதிவுகுறித்த தேவைப்பாடுகளை நிறைவு செய்திருந்தாலன்றியும், அல்லது வகுத்துரைக்கப்பட்ட ஒழுங்கு முறை விதிகளின்படி செய்யப்பட்ட கல்விமன்றத்தின் பரிந்துரையின் பேரில் பிறப்பிக்கப்பட்ட ஆட்சிக் குழுவின் ஆணை ஒன்றின் மூலமாக, அவ்வாறு பதிவுசெய்யப்படுவது அல்லது வருகைப்பதிவு குறித்த அல்லது இரண்டையும் குறித்த தேவைப்பாடுகளிலிருந்து அவருக்கு விலக்களிக்கப்பட்டிருந்தாலன்றி, பல்கலைக்கழகத் தேர்வு எதற்கும் ஏற்றுக்கொள்ளப்படுதல் கூடாது. இந்தப் பிரிவின்படி வழங்கப்படும் விலக்களிப்புகளானவை, ஆட்சிக்குழு பொருத்தமென கருதக்கூடிய வரைக்கட்டுகளுக்கு உட்பட்டவையாயிருத்தல் வேண்டும். பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கு ஏற்றுக் கொள்ளுதல்.

**40.** இப்பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் அல்லது அதனுடன் இணைக்கப்பட்ட அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்பட்டதல்லாத பிற கல்லூரி அல்லது கல்வி நிலையம் எதிலும் கல்வி கற்பிக்கப்படுவதன் போதான வருகைப் பதிவு எதுவும், பல்கலைக்கழகத் தேர்வு எதற்கும் ஏற்றுக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுடையதாக ஆக்காது. பல்கலைக்கழகத் தேர்வுகளுக்கான வருகைப் பதிவு குறித்த தகுதி.

**41.** இப்பல்கலைக்கழகத்தின், கல்லூரி சாரா மாணவரில்லாத பிற மாணவர், ஒவ்வொருவரும், மாணவர் விடுதியொன்றிலோ அல்லது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய பிற வரைக் கட்டுகளின்படியோ தங்குமாறு கோரப்படுதல் வேண்டும். தங்குமிடமும் மாணவர் விடுதியும்.

## அத்தியாயம் – VII

### பல்கலைக்கழக நிதியங்கள், ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள்

**42.** இப்பல்கலைக்கழகம், பொது நிதியம் ஒன்றைப் பெற்றிருக்கும் அந்நிதியத்தில், பொது நிதியங்கள்.

(a) கட்டணங்கள், மானியங்கள், நன்கொடைகள், கொடைகள் ஆகியவை எவையேனும் இருப்பின் அவற்றிலிருந்து பெறப்படும் அதன் வருமானத்தை;

(b) மைய அரசு அல்லது மாநில அரசு எதுவும் அல்லது உள்ளாட்சி அதிகார அமைப்பு எதுவும் அல்லது பல்கலைக்கழக மானிய ஆணையம் அல்லது அதுபோன்ற அதிகார அமைப்பு, அல்லது மைய அல்லது மாநில அரசுக்குச் சொந்தமான அல்லது அதன் கட்டுப்பாட்டின் கீழுள்ள கூட்டு நிறுவனம் எதனாலும் வழங்கப்பட்ட பங்களிப்பு அல்லது மானியம் எதையும்;

(c) நிலைக் கொடைகளையும் பிற வரவுகளையும் மற்றும்

(d) அதனால் கடனாகப் பெறப்பட்ட பணத்தையும் வரவு வைத்தல் வேண்டும்.

**43.** பல்கலைக்கழகம் நிலைவிதிகளினால் வகுத்துரைக்கப் படலாகும் பிற நிதியங்களைக் கொண்டிருக்கலாம். பிற நிதியங்கள்.

**44.** பல்கலைக்கழக நிதியங்களும் அனைத்துப் பணங்களும் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் மேலாண்மை செய்யப்படுதல் வேண்டும். நிதியங்களை மேலாண்மை செய்தல்.

**45.** பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையானது ஆட்சிக் குழுவால் தயாரிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அது வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தேதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கல்விமன்றத்திற்கு பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அது கல்விமன்றத்தால் அதன் அடுத்த ஆண்டு கூட்டத்தில் பரிசீலனைச் செய்யப்படுதல் வேண்டும். கல்விமன்றமானது அதன்பேரில் தீர்மானங்களை நிறைவேற்றலாம். அதனை ஆட்சிக்குழுவிற்குத் தெரியப்படுத்தலாம்; மற்றும் அது அதற்கிணங்கியவகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். ஆட்சிக்குழுவானது, அதனால் எடுக்கப்பட்ட நடவடிக்கையினை கல்வி மன்றத்திற்கு தெரிவித்தல் வேண்டும். அறிக்கையின்படி யொன்றும், அதன்பேரிலான தீர்மானம் ஏதேனும் இருப்பின் அதன்படி ஒன்றும் அரசுக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். ஆண்டறிக்கை.

**46.** **(1)** இப்பல்கலைக்கழகத்தின் ஆண்டுக்கணக்குகள் அரசு பணிக்கக்கூடிய அத்தகைய ஆய்வுக்கும் தணிக்கைக்கும் உட்படுத்தப்படுதல் வேண்டும் மற்றும் ஆண்டுக் கணக்குகளின் மற்றும் தணிக்கை அறிக்கையின் நகலொன்று அரசுக்குப் பணிந்தனுப்பப்படுதல் வேண்டும். ஆண்டுக் கணக்குகள்.

(2) இப்பல்கலைக்கழகம், அத்தகைய தணிக்கையில் எழுப்பப்பட்ட மறுப்புரைகளைத் தீர்த்து வைத்தல் வேண்டும் மற்றும் அந்தத் தணிக்கை அறிக்கையின்பேரில் அரசினால் பிறப்பிக்கப்படக்கூடிய அத்தகைய அறிவுறுத்தங்களை நிறைவேற்றுதல் வேண்டும்.

(3) கணக்குகள், தணிக்கை செய்யப்பட்டவுடன் ஆட்சிக்குழுவால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் வெயிடப்படுதல் வேண்டும்; மற்றும் அதனுடைய நகல்களை கல்விமன்றம் அதன் அடுத்தக் கூட்டத்தில் வைப்பதற்காகப் பணிந்தனுப்புவதோடு அவற்றை அத்தகைய வெளியீட்டிலிருந்து மூன்று மாதத்திற்குள் அரசுக்கும் பணிந்தனுப்புதல் வேண்டும்.

(4) அரசு, ஆண்டுத் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளையும் ஆண்டு அறிக்கையும் அதன் கருத்துரைகளோடுகூட சட்டமன்றப் பேரவையின் முன்பு வைப்பதற்கு ஆவண செய்தல் வேண்டும்.

## அத்தியாயம் – VIII

## பணி வரைக்கட்டுகள் (நிபந்தனைகள்)

ஓய்வூதியம் பணிக்கொடை முதலானவை.

**47.** (1) இப்பல்கலைக்கழகம், இப்பல்கலைக்கழகத்தால் பணியமர்த்தப்பட்டுள்ள தன் அலுவலர்கள், ஆசிரியர்கள், மற்ற நபர்கள், ஆகியோரின் நலனுக்காக, வகுத்துரைக்கப்படக்கூடிய முறையிலும் மற்றும் அத்தகைய வரைகட்டுகளுக்குட்பட்டும், தான் பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய ஓய்வூதியம், பணிக்கொடை காப்பீடு, வருங்கால வைப்பு நிதியம் ஆகியவற்றை ஏற்படுத்துதல் வேண்டும்.

(2) இப்பல்கலைக்கழகம் (1)ஆம் உட்பிரிவின்படி வருங்கால வைப்பு நிதியம் மையச் சட்டம் XIX/1925
ஒன்றை அவ்வாறு ஏற்படுத்தியுள்ளவிடத்து, இப்பல்லைகக்கழகம் ஓர் உள்ளாட்சி அதிகார அமைப்பாகவும், அந்நிதியம் ஓர் அரசு வருங்கால வைப்பு நிதியமாகவும் இருந்தாற் போன்றே, 1925–ஆம் ஆண்டு வருங்கால வைப்பு நிதியங்கள் சட்டத்தின் வகைமுறைகள் அந்நிதியத்திற்குப் பொருந்துதல் வேண்டும் என்று அரசு விளம்பலாம்.

(3) இப்பல்கலைக்கழகம், நிதிக்குழுவை கலந்தாய்வு செய்து; தான் தீர்மானிக்கலாகும் முறையில் அவ்வருங்கால வைப்பு நிதியத் தொகையை முதலீடு செய்யலாம்.

பணிவரைக் கட்டுகள்.

**48.** இந்தச் சட்டத்தின் வகை முறைகளுக்குட்பட்டு, இப்பல்கலைக்கழகத்தில் பணியிலமர்த்தப்பட்டுள்ள அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்ற நபர்கள் ஆகியோரின் நியமனம், அவர்களை தெரிவு செய்வதற்கான நடைமுறை, அவர்களின் சம்பளம் மற்றும் படித் தொகைகள் மற்றும் பிற பணிவரைக் கட்டுகள் (நிபந்தனைகள்) ஆகியவை, வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

விளக்கம்,- இந்த பிரிவின் நோக்கத்திற்காக, அலுவலர்கள் என்னும் சொல் வேந்தரையும், இணைவேந்தரையும் உள்ளடக்குதல் கூடாது.

தெரிவுக் குழு.

**49.** (1) இப்பல்கலைக்கழகத்தின் பேராசிரியர், உதவிப் பேராசிரியர், சிறப்பு பேராசிரியர், விரிவுரையாளர், நூலகர் ஆகிய பதவிகளுக்கு நியமனஞ் செய்வதற்காக ஆட்சிக் குழுவிற்குப் பரிந்துரைகளைச் செய்வதற்காகத் தெரிவுக் குழு ஒன்று இருத்தல் வேண்டும்.

(2) (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான தெரிவுக் குழுவானது, துணைவேந்தரையும், வேந்தரால் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரையும் அரசால் பெயர் குறிப்பிடப்பட்ட ஒருவரையும் வகுத்துரைக்கப் படக்கூடிய அத்தகைய பிற நபர்களையும் கொண்டிருத்தல் வேண்டும்;

**வரம்புரை**:– தெரிவுக் குழுவால் செய்யப்படும் அத்தகைய நியமனங்கள் பல்கலைக்கழக மானியக் குழுவினால் அல்லது அத்தகைய நியமனம் தொடர்பான பிற முகவாண்மைகளால் பிறப்பிக்கப்பட்ட நெறிமுறைகளுக்கு இணங்கிய வகையில் இருத்தல் வேண்டும்.

(3) துணைவேந்தர், தெரிவுக்குழுவின் கூட்டங்களில் தலைமை வகிப்பார்.

(4) தேர்வுக்குழு ஒன்றின் கூட்டங்கள் துணைவேந்தரால் கூட்டப்படும்.

(5) பரிந்துரைகளைச் செய்வதில் தெரிவுக்குழுவினால் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை என்னவென்று, அவசர விதிகளின் மூலம் விதிக்கப்படுதல் வேண்டும்.

**(6)** தெரிவுக்குழு ஒன்றினால் செய்யப்படும் பரிந்துரைகளை ஆட்சிக்குழு ஏற்றுக் கொள்வதற்கு இயலாதிருக்குமானால், அது தன் காரணங்களைப் பதிவு செய்து, இறுதி ஆணைகளுக்காக, அதை வேந்தருக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும்.

**(7)** தற்காலிகப் பதவிகளுக்கான அல்லது காலியிடங்களுக்கான நியமனங்கள், கீழே குறித்துக் காட்டப்பட்டுள்ள முறையில் செய்யப்படுதல் வேண்டும்:

(i) அத்தற்காலிகக் காலியிடமானது ஒரு கல்விக்காலத் தொடருக்கும் அதிகமானதொரு கால அளவிற்கானதாக இருக்குமானால், அது, முன்சென்ற வகை முறைகளில் குறித்துக் காட்டப்பட்டுள்ள நடைமுறைக்கிணங்கத் தெரிவுக் குழுவின் ஆலோசனையின் பேரில் நிரப்பப்படுதல் வேண்டும்;

**வரம்புரை**:– துணை வேந்தர், பணி நலனை முன்னிட்டு அக்காலியிடத்தை நிரப்புவது தேவையாயிருக்கிறது என்று தெளிவுறக் காண்பாரானால் (ii)–ஆம் உட்கூறில் குறிப்பிடப்படும் உள்ளமை தெரிவுக்குழு (Local Selection Committee) ஒன்றினால், ஒரு தற்காலிக அடிப்படையின்பேரில் ஆறு திங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு அந்த நியமனம் செய்யப்படலாம்.

(ii) அத்தற்காலிக காலியிடமானது, ஓராண்டுக்கு குறைவானதொரு கால அளவுக்கானதாக இருக்குமானால், தொடர்புடைய புலத்தின் (Faculties) தலைவரையும் (Chairman) துறைத் தலைவரையும், துணை வேந்தரால் பெயர் குறிக்கப்பட்ட ஒருவரையும் உள்ளடக்கிய உள்ளமை தெரிவுக்குழு ஒன்றின் பரிந்துரையின்பேரில், அத்தகைய காலி இடத்திற்கு நியமனம் செய்யப்படுதல் வேண்டும்.

முதலாம் **வரம்புரை**:– ஒருவரே தலைவர் பதவியையும் மற்றும் துறைத் தலைவர் பதவியையும் சேர்த்து வகிப்பாரானால், அத்தெரிவுக்குழு துணை வேந்தரால் பெயர் குறிக்கப்பட்ட இருவரை உள்ளடக்கியதாக இருக்கலாம்;

இரண்டாம் **வரம்புரை**:– மேலும் கற்பிக்கின்ற பதவிகளில் இறப்பினாலோ, பிற காரணம் எதனாலுமோ எதிர்பாராத தற்செயல் காலியிடங்கள் ஏற்படும் நேர்வில், புலத்தலைவர் தொடர்புடைய துறையின் தலைவரைக் கலந்தறிந்து ஒரு திங்களுக்குத் தற்காலிகப் பணி நியமனம் ஒன்றைச் செய்து, அத்தகைய நியமனம் குறித்துத் துணை வேந்தருக்கும் பதிவாளருக்கும் அறிவிக்கலாம்;

(iii) தற்காலிகமாக நியமிக்கப்படும் ஆசிரியர் எவரும், இந்தச் சட்டத்தின்படி நியமிக்கப்படுவதற்காக முறையான (Regular) தெரிவுக்குழு ஒன்றினால் அவர் பரிந்துரைக்கப்படவில்லையானால், அவர் தற்காலிக அல்லது நேர்விற்கேற்ப, நிலையான நியமனத்திற்காக ஒரு உள்ளமை தெரிவுக் குழுவினாலோ அல்லது ஒரு முறையான தெரிவுக் குழுவினாலோ பின்னர் தெரிந்தெடுக்கப்பட்டாலன்றி, அத்தகைய தற்காலிக வேலை வாய்ப்பின்பேரில் பணியில் தொட.ந்து இருத்தல் கூடாது.

துறைத் தலைவர்களின் பணியின் வரையறைகளும் வரைக்கட்டுகளும்.

**50. (1)** இப்பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு துறையும் ஒரு பேராசிரியராக இருக்க வேண்டிய ஒரு தலைவரை அல்லது இயக்குநரைக் கொண்டிருக்கும்: மற்றும் அவருடைய கடமைகளும் அலுவற்பணிகளும், நியமனத்திற்கான வரையறைகளும் வரைக்கட்டுகளும் அவசர விதிகளால் வகுத்துரைக்கப்படுதல் வேண்டும்:

முதலாம் **வரம்புரை**:– ஆனால் துறை எதிலேனும் ஒருவருக்கு மேற்பட்ட பேராசிரியர்கள் இருப்பார்களானால், அந்தத் துறையின் தலைவர், அவசர விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் நியமிக்கப்படுதல் வேண்டும்:

இரண்டாம் **வரம்புரை**:– மேலும் பேராசிரியர் எவரும் இல்லாத துறையொன்றில், துணைப் பேராசிரியர் ஒருவர் அல்லது சிறப்புப் பேராசிரியர் ஒருவர் அவசர விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் துறையின் தலைவராக நியமிக்கப்படலாம்.

**(2)** துறைத் தலைவராக நியமிக்கப்பட முன்வந்ததை ஏற்க மறுத்துவிடுவதற்கு ஒரு பேராசிரியருக்கு அல்லது துணைப் பேராசிரியருக்கு அல்லது சிறப்புப் பேராசிரியருக்கு உரிமையுண்டு.

**(3)** துறைத் தலைவராக நியமிக்கப்பட்ட ஒருவர், மூன்றாண்டுக் கால அளவிற்கு அத்தகையவராகப் பதவி வகித்தல் வேண்டும். மற்றும் மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார்.

**(4)** துறைத் தலைவரொருவர், தம்முடைய பதவிக்கால அளவின்போது, எந்த நேரத்திலும் தம்முடைய பதவியை விட்டு விலகலாம்.

**(5)** துறைத் தலைவரொருவர், அவசர விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அலுவற்பணிகளைப் புரிந்து வருவார்.

புலங்களில் தலைவர்கள்.

51. (1) புலங்களின் தலைவர் ஒவ்வொருவரும், அப்புலத்திலுள்ள பேராசிரியர்களுக்கிடையேயிருந்து துணை வேந்தரால் மூன்றாண்டுக் கால அளவுக்கு நியமிக்கப்படுவார்; மற்றும் அவர் மீண்டும் நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராவார்:

முதலாம் **வரம்புரை**:– தலைவர் ஒருவர் அறுபது வயது நிறைவெய்தியதின்பேரில் அத்தகையவராகப் பதவி வகிப்பது அற்றுப் போகும்:

இரண்டாம் **வரம்புரை**:– எந்தச் சமயத்திலேனும் புலம் ஒன்றில் பேராசிரியர் எவரும் இல்லாதிருந்தால், துணை வேந்தர் அப்புலத்தின் தலைவருக்குள்ள அதிகாரங்களைச் செலுத்தி வருவார்.

(2) தலைவரின் பதவி காலியாக இருக்கின்ற போது அல்லது அத்தலைவரானவர் நோய், பணிக்கு வராமை காரணமாகவோ அல்லது பிற காரணம் எதனாலேனும் தம்முடைய பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கு இயலாதவராக இருக்கின்றபோது, அவருடைய பதவியின் கடமைகள் அந்நோக்கத்திற்காகத் துணை வேந்தரால் நியமிக்கப்படக் கூடிய அத்தகைய நபரால் புரிந்து வரப்படும்.

(3) தலைவரானவர் அப்புலத்தின் தலைவராயிருப்பார், மற்றும் அப்புலத்தில் கற்பிக்கப்படுவதன் மற்றும் ஆராய்ச்சி செய்யப்படுவதன் தரங்களைப் பேணி வருவதற்கும் பொறுப்புடையவராய் இருப்பார். தலைவர் அவசர விதிகளின் மூலம் வகுத்துரைக்கப்படக் கூடிய பிற அலுவற்பணிகளையும் பெற்றிருப்பார்.

(4) தலைவர், பாடக்குழுக்களின் அல்லது நேர்விற்கேற்ப புலக் குழுக்களின் கூட்டம் எதற்கும் வருகை தருவதற்கும், அதில் பேசுவதற்கும் உரிமை பெற்றிருப்பார்; ஆனால், அதன் உறுப்பினராக அவர் இருந்தாலன்றி, அதில் வாக்களிப்பதற்கு அவர் உரிமை பெற்றிருக்கமாட்டார்.

## அத்தியாயம் – IX

## கல்லூரிகளை மாற்றுதல்

ஒரு சில கல்லூரிகளைப் பல்கலைக் கழகத்திற்கு மாற்றுதல்.

52. (1) 1978–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் (இதன்பின்பு, 1978–ஆம் ஆண்டுச் சட்டம் எனக் குறிப்பிட்டுவாறான) சட்டத்தின்படிச் செய்யப்பட்ட நிலைவிதிகள், அவசரநிலை விதிகள் ஒழுங்குமுறை விதிகள் ஆணைகள் ஆகியவற்றின் என்ன அடங்கியிருந்த போதிலும் குறிக்கப்பட்ட தேதியன்றும் அதுமுதற்கொண்டும், பல்கலைக்கழக பரப்பிடத்தில் உள்ள கல்லூரிகள் அத்தகைய நாளுக்கு அடுத்து முன்னதாக உள்ள நியமிக்கப்பட்ட தேதியன்று 1978 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்திலிருந்து பிரிக்கப்படுதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 30/1978

(2) அரசு, குறிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் எந்தநேரத்திலும், தாம் பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், அதன் பயன்பாட்டிற்காக உள்ள அதனுடைய நிலங்கள் எதனையும் பல்கலைக் கழகத்திற்கு மாற்றலாம்.

(3) அரசு, குறிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர், எந்த நேரத்திலும், தாம் பொருத்தமெனக் கருதக்கூடிய அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின்பேரில், இப்பல்கலைக் கழகப் பரப்பிடத்திற்குள் அமைந்துள்ள அதன் கல்லூரிகள் மற்றும் நிறுவனங்கள் எவற்றையும் கட்டுப்பாடு மற்றும் மேலாண்மை செய்வதை இப்பல்கலைக்கழகத்திற்கு மாற்றலாம்.

(4) இம்மாநிலத்தில், பல்கலைக்கழகமொன்றை நிறுவுவது தொடர்பான பிறச்சட்டம் எதிலுமோ, அல்லது அதன்படி செய்யப்பட்ட நிலைவிதிகள், அவசரநிலைவிதிகள், ஒழுங்குமுறை விதிகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும் அரசால் அறிவிக்கை செய்யப்பட்ட தேதியன்றும் அதுமுதற் கொண்டும் (3)–ஆம் உட்பிரிவில் சுட்டப்பட்ட கல்லூரிகள் அல்லது நிறுவனங்கள் அறிவிக்கை செய்யப்பட்ட தேதிக்கு அடுத்து முன்னதாக உள்ள தேதியன்று, அவை எந்தப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கட்டிருந்தனவோ அந்தப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரிக்கப்பட்டு இப்பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்படுதல் வேண்டும்.

53. (1), (2) முதல் (8) வரையிலான உட்பிரிவுகளின் வரைமுறைகளுக்குப்பட்டு 2006–ஆம் ஆண்டுச் குறிக்கப்பட்ட தேதியன்றும் அது முதற்கொண்டும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகிற பரப்பிடங்களைப் பொறுத்த அளவில், பொருந்துவது அற்றுப்போதல் வேண்டும். தமிழ்நாடு சட்டம் 30/1978 பொருந்தாது

(2) அவ்வாறு அற்றுப்போவதானது……,

(a) இந்தச்சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகின்ற பரப்பிடங்களைப் பொறுத்த அளவில், 1978–ஆம் ஆண்டுச் சட்டம், முன்னர் செயற்பாட்டில் இருந்ததையோ; அல்லது

(b) 1978–ஆம் ஆண்டு சட்டத்திற்கெதிராகப் புரியப்பட்ட குற்றச்செயல் எதனையும் பொறுத்த அளவில் ஏற்க நேரிட்ட தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை எதனையுமோ அல்லது

(c) அத்தகைய தண்டம், தண்ட இழப்பு அல்லது தண்டனை தொடர்பான புலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி (பரிகாரம்) எதையும் பாதிக்கலாகாது; மற்றும் இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாததுபோன்றே, அத்தகையபுலனாய்வு, சட்ட நடவடிக்கை அல்லது தீர்வழி (பரிகாரம்) எதுவும் தொடுக்கப்படலாம், தொடர்ந்து நடத்தப்படலாம் அல்லது நிறைவேற்றப்படலாம்; மற்றும் அத்தகைய தண்டம், தண்ட இழப்பு, அல்லது தண்டனை எதுவும் விதிக்கப்படலாம்.

(3) (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும், 1978–ஆம் ஆண்டுச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டவையும், மற்றும் அமர்த்துகை செய்யப்பட்ட தேதியில் செல்லாற்றல் பெற்றுள்ளவையுமான நிலை விதிகள், அவசர விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அனைத்தும், அவற்றிற்குப் பதிலாக இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்படக்கூடிய நிலை விதிகள், அவசர விதிகள் மற்றும் ஒழுங்கு முறை விதிகள் ஆகியவை அமைகின்ற வரையிலும், அவை எந்த அளவிற்கு இந்தச் சட்டத்துடன் வகைமுறைகளுடன் ஒவ்வாதவாக இல்லாதிருக்கின்றனவோ அந்த அளவுக்கு இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் தொடர்ந்து நடைமுறையில் இருந்து வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தில் அல்லது, (3)–ஆம் உட்பிரிவின்படி தொடர்ந்து நடைமுறையில் உள்ள அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட நிலை விதிகள், துணைமுறை விதிகள் மற்றும் ஒழுங்குமுறை விதிகளில் என்ன அடங்கியிருந்தபோதிலும், குறிக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முன்னர் 1978 ஆம் ஆண்டு சட்டத்தின் படி நிருவப்பட்ட பல்கலைக்கழகத்தின் ஒப்புதல் அளிக்கப்பெற்ற இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் இருக்கின்ற கல்லூரி ஒன்றின் மாணவராய் இருந்திருக்கின்ற 1978 ஆம் ஆண்டு சட்டத்தின்படி நிருவப்பட்ட அண்ணா பல்கலைக்கழக தேர்வுகளில் எதையும் எழுதுவதற்கு தகுதிவாய்ந்தவராக ஒவ்வொரு நபரும் 1978 ஆம் ஆண்டு சட்டத்தின்படி நிறுவப்பட்ட சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் தனது குறித்தகால படிப்பை நிறைவு செய்வதறகு அனுமதிக்கப்படவேண்டும். மற்றும் பல்கலைக்கழகமானது 1978 ஆம் ஆண்டு சட்டத்தின்படி நிறுவப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்தின் குறித்த கால படிப்பிற்கிணங்க பல்கலைக்கழகத்தால் தீர்மானிக்கப்படக்கூடிய மாணவர்கட்கு, தீர்மானிக்கப்படக்கூடிய கால அளவுக்கு முறையில் அந்த மாணவர்களுக்கு பயிற்றுவித்தல், கற்பித்தல், மற்றும் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்தல் வேண்டும். மற்றும் அத்தகைய மாணவர்கள் அந்தக்கால அளவின்போது 1978 ஆம் ஆண்டு சட்டத்தின்படி நிறுவப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்தால் வைக்கப்படும் அல்லது நடத்தப்படும் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்; மேலும் 1978 ஆம் ஆண்டு சட்டத்தின்படி நிறுவப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்தால் அத்தகைய தேர்வுகளின் முடிவின்பேரில் தகுதி பெற்ற மாணவர்கட்கு, 1978 ஆம் ஆண்டு சட்டத்தின்படி நிறுவப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்தின் பட்டம், பட்டயம், அல்லது பிற கல்விச் சிறப்புகளுக்கு, நேரிணையான பட்டம் அல்லது பிற கல்வி சார் சீர்மைகள் அமைக்கப்பட வேண்டும்.

(5) அமர்த்துகை செய்யப்பட்ட தேதிக்கு முன்னர் –

(a) 1978 ஆம் ஆண்டு சட்டத்தின்படி அண்ணா பல்கலைக்கழகத்தால் இணைக்கப்பட்டவையாய் இருக்கின்ற அல்லது அதனால் ஏற்பிசைவு அளிக்கப்பட்டவையாக இருக்கின்றவையும்; மற்றும்

(b) 1978 ஆம் ஆண்டு சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்தின் பட்டத்தேர்வுக்கு ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான குறித்த காலப் படிப்பிற்கு வகை செய்கின்றவையுமான இந்தச்சட்டத்தின்படி, பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகை முறைகள் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு அதன்படியே பொருந்துதல் வேண்டும்;

(6) குறிக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முன்னர் 1978 ஆம் ஆண்டு சட்டத்தின் படி அண்ணா பல்கலைக்கழகத்தின் பட்டங்கள் மற்றும் பட்டயங்களுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளப் படுவதற்கான குறித்த காலம் படிப்பிற்கு வகை செய்கின்ற அந்த பல்கலைக்கழகத்தினால் தொடர்ந்து ஏற்பிசைவளிக்கப் பெறுகின்ற, இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் உள்ள அனைத்து கல்லூரிகளும், இந்தச் சட்டத்தின்படி பல்கலைக்கழகத்தால் ஒப்புதலளிக்கப்பெற்ற கல்லூரிகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகை முறைகள் எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு அதன்படியே பொருந்துதல் வேண்டும்.

(7) குறிக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முன்னர் 1978 ஆம் ஆண்டு சட்டத்தின்படி அண்ணா பல்கலைக்கழகத்தால் தொடர்ந்த ஏற்பிசைவளிக்கப்பெற்று வருகின்ற இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் உள்ள தங்கும் விடுதிகள், அனைத்தும், இந்தச் சட்டத்தின்படி பல்கலைக்கழகத்தால் ஏற்பிசைவளிக்கப்பெற்ற தங்கு விடுதிகளாகக் கொள்ளப்படுதல் வேண்டும்; மற்றும் இந்தச் சட்டத்தின் வகைமுறைகள்; எந்த அளவுக்கு இயலுமோ அந்த அளவுக்கு, அதன்படியே பொருந்துதல் வேண்டும்.

(8) (2)–ஆம் உட்பிரிவின் வகை முறைகளுக்குட்பட்டு, ஆனால் (3) முதல் (7) வரையிலான உட்பிரிவுகளின் வகை முறைகளுக்கு ஊறில்லாமல், இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் பொருந்துகின்ற பரப்பிடங்கள் எதனையும் பொறுத்து, 1978 ஆம் ஆண்டு சட்டத்தின் வகைமுறை எதனின்படியும் அமர்த்துகைகுறிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் செய்யப்பட்ட செயல் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தின் நேரிணையான வகைமுறையின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப் பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் நேரிணையான வகை முறையின்படி செய்யப்பட்ட செயல் எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் தள்ளிவைக்கப்பட்டாலன்றியும் தள்ளி வைக்கப்படுகின்ற வரையிலும் அதன்படி தொடர்ந்து செயல் விளைவு பெற்றிருத்தலும் வேண்டும்.

## அத்தியாயம் – X

### மாறுதற்கால வகைமுறைகள்

முதல் துணை வேந்தரின் நியமனம்.

**54.** (11)–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்த போதிலும் இந்தச் சட்டமானது நியமனத் தேதியில் இருந்து மூன்று திங்களுக்குள்ளாக, முதல் துணை வேந்தரானவர் அரசினால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கு அதனால் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தின் பேரிலும் அது பொருத்தமெனக் கருதலாம் பிற வரைக்கட்டுகளின் பேரிலும் நியமிக்கப்படுவார்:

**வரம்புரை**:- ஆனால் முதல் துணை வேந்தராக நியமிக்கப்பட்டவர், அவருடைய பதவிக் காலத்தின்போது எழுபது வயதை நிறைவெய்துவாரானால், பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

முதல் பதிவாளரின் நியமனம்.

**55.** (14)–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவில் என்ன அடங்கியிருந்தபோதிலும், இந்தச் சட்டமானது குறிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று திங்களுக்குள்ளாக, முதல் பதிவாளரானவர், அரசினால் மூன்றாண்டுகளுக்கு மேற்படாததொரு கால அளவிற்கும் அதனால் நிர்ணயிக்கப்படும் சம்பளத்தின் பேரிலும் மற்றும் அது பொருத்தமெனக் கருதலாகும் பிற வரைக் கட்டுகளின்பேரிலும் நியமிக்கப்படுவார்:

**வரம்புரை**:- முதல் பதிவாளராக நியமிக்கப்பட்டவர், அவருடைய பதவி காலத்தின்போது அவர் பல்கலைக்கழக பேராசிரியராக இருக்கிற நேர்வில் அறுபது வயதை நிறைவெய்தும்போதும், அவர் அரசுப்பொறியியற் கல்லூரியின் பேராசிரியர் ஒருவராக இருக்கிற நேர்வில், ஐம்பத்தொன்பது வயதை அவர் நிறைவெய்தும்போதும் பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

முதல் துணை வேந்தரின் மாறுதற்கால அதிகாரங்கள்.

**56.** (1) நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து ஆறு திங்களுக்குள் அல்லது அறிவிக்கையின் மூலம் அரசு குறித்துரைக்க கூடிய ஓராண்டுக்கு மேற்படாத அத்தகைய அதிகமான கால அளவிற்குள், ஆட்சிக்குழு, கல்வி மன்றம் ஆகியவற்றையும் மற்றும் இப்பல்கலைக்கழகத்தின் பிற அதிகார அமைப்புக்களையும் அமைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டியது முதல் துணை வேந்தரின் கடமையாகும்.

(2) முதல் துணை வேந்தர் அரசைக் கலந்தறிந்து, இப்பல்கலைக்கழகம் செயற்படுவதற்கு தேவை (Functioning) யாயிருக்கக்கூடிய விதிகளைச் செய்தல் வேண்டும்.

**(3) (1)**– ஆம் உட்பிரிவின்படி அமைந்து உருவாக்கப்பட்ட அதிகார அமைப்புக்கள், அரசு இதன்பொருட்டு அறிவிக்கையின் மூலம் குறித்துரைக்கக் கூடிய தேதியில் அவற்றின் செயற்பணிகளைச் செலுத்தத் தொடங்குதல் வேண்டும்.

**(4)** தேவைப்படக்கூடிய நிலை விதிகள் அவசர விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றை வரைவு செய்து அவற்றை முடிவு செய்வதற்காக, அவை பற்றி நடவடிக்கை எடுக்கத் தகுதி வாய்ந்த அந்தந்த அதிகார அமைப்புகளுக்கு அவற்றைப் பணிந்தனுப்ப வேண்டியது முதல் துணை வேந்தரின் கடமையாகும். அத்தகைய நிலைவிதிகள், அவசர விதிகள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவை, உருவாக்கப்பட்டவுடன் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும்.

**(5)** இந்தச் சட்டத்திலும் நிலை விதிகளிலும், என்ன அடங்கியிருந்தபோதிலும், மற்றும் அதிகார அமைப்பு ஒன்று உரியவாறு அமைக்கப்படும் காலம் வரையிலும், முதல் துணை வேந்தர், இந்தச் சட்டம் மற்றும் நிலைவிதிகளின்படி அத்தகைய அதிகார அமைப்பின் அதிகாரங்கள் மற்றும் கடமைகளில் எதனையும் செலுத்தி வருவதற்கும் புரிந்து வருவதற்கும் தற்காலிகமாக அலுவலர் எவரையும் நியமிக்கலாம் அல்லது குழு எதையும் அமைத்துருவாக்கலாம்.

## அத்தியாயம் – XI

### பல்வகைப்பட்டவை.

**57.** இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் பதவி வழி உறுப்பினர்களல்லாத பிற உறுப்பினர்களுக்கிடையேயும் எழும் தற்செயல் காலியிடங்கள் அனைத்தும், எந்த உறுப்பினருடைய பதவியிடம் காலியாக ஆகியுள்ளதோ அந்த உறுப்பினரைப் பெயர் குறித்து நியமனம் செய்தவரால் அல்லது தேர்ந்தெடுத்தவரால் அல்லது அமைப்பினால் வசதிக்கேற்றபடி எவ்வளவு விரைவில் கூடுமோ அவ்வளவு விரைவில் நிரப்பப்படுதல் வேண்டும் மற்றும் தற்செயல் காலியிடமொன்றுக்கு பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டவர் எவருடைய பதவியிடத்தை அவர் நிரப்புகிறாரோ அவர் ஓர் உறுப்பினராக இருந்திருக்கக்கூடிய காலஅளவின் எஞ்சிய பகுதிக்கு அத்தகைய அதிகார அமைப்பு அல்லது அமைப்பின் உறுப்பினராக இருந்து வருவார்.

தற்செயல் காலியிடங்களை நிரப்புதல்

**வரம்புரை:–** மேலும், இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினரின் பதவிக் காலமும் முடிவடையும் தேதிக்குமுன், ஆறு மாதங்களுக்குள்ளாக அத்தகைய காலியிடம் ஏற்படுமானால், நிரப்பப்படுதலாகாது.

**58.** இப்பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் காலியிடம் ஏதேனும் இருக்கின்ற காரணத்தால் மட்டுமே, அல்லது இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது பிற அமைப்பு எதனின் உறுப்பினர் ஒருவரின் தேர்தலில் அல்லது நியமனத்தில் குறைபாடு அல்லது முறைகேடு ஏதேனும் உள்ள காரணத்தால் மட்டுமே, அல்லது நேர்வுக்குள்ள தகுதிகளை ஊறுபடுத்தாத (பாதிக்காத) அத்தகைய செயல் அல்லது நடவடிக்கையில், குறைபாடு அல்லது முறைகேடு ஏதேனும் உள்ள காரணத்தால் மட்டுமே, அல்லது பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்பு அல்லது பிற அமைப்பானது இந்தச் சட்டம் கோருகிறவாறு அத்தகைய இடைவெளிகளில் கூடவில்லை என்னும் காரணத்தால் மட்டுமே செல்லாததாக ஆக்கப்படுதலாகாது.

பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளின் மற்றும் பிற அமைப்புகளின் நடவடிக்கைகள் காலியிடங்கள் காரணமாகச் செல்லாதவையாக ஆக்கப்படுதல் ஆகாது.

**59.** **(1)** ஆட்சிக் குழுவானது

பல்கலைக்கழக உறுப்பினர் பதவி நீக்கல்.

இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் எவரேனும், ஆட்சிக் குழுவின் கருத்தின்படி, ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கியதாகவுள்ள ஒரு குற்றச் செயலுக்காக குற்றவியல் வழக்கு நீதிமன்றமொன்றினால் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருப்பாரானால், அல்லது கடுந்தவறான நடத்தை (Gross misconduct) இழைத்த குற்றவாளியாக இருப்பாரானால், ஆட்சிக் குழுவின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையராலும் மற்றும் கூட்டத்திற்கு வருகை தந்து வாக்களிக்கும் ஆட்சிக்குழு உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்குக்கு குறைந்ததல்லாத பெரும்பான்மையாராலும் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலமாகவும் இதன் பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்துருவிலான ஆணை ஒன்றின் மூலம் அத்தகைய நபரை, இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கம் செய்யலாம்

(2) நபர் எவரும், மனச் சீர்கேடுற்றவராகவோ அல்லது ஒரு செவிட்டு ஊமையாகவோ ஆகியிருக்கின்றவரென்றால், அல்லது நொடித்த ஒருவராக நீதித் தீர்ப்பு பெறுவதற்கு விண்ணப்பித்துக் கொண்டிருந்தால் அல்லது நொடித்த ஒருவராக நீதித் தீர்ப்பு அளிக்கப் பெற்றிருந்தால், இதன் பொருட்டுப் பிறப்பிக்கப்பட்ட எழுத்துருவிலான ஆணையொன்றின் மூலம் ஆட்சிக் குழுவானது, இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் உறுப்பினர் பதவியிலிருந்தும் அவரை நீக்கம் செய்யலாம்.

(3) நபரொருவரின் மீதும் எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கைக்கு எதிராகக் காரணங்காட்டுவதற்கு, அவருக்கு நியாயமான வாய்ப்பொன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி இந்தப் பிரிவின்படி நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுதல் கூடாது.

(4) (1)–ஆம் உட்பிரிவு அல்லது நேர்விற்கேற்ப (2)–ஆம் உட்பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றின்படி யொன்றினை, அது அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட பின்னர், கூடிய விரைவில், ஒழுங்குமுறை விதிகளால் வகுத்துரைக்கப்பட்ட முறையில் தொடர்புடைய நபருக்குத் கொடுத்துத் தகவல் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

பல்கலைக்கழக அதிகார அமைப்புகளையும் பிற அமைப்புகளையும் அமைத்துரு வாக்குதல் பற்றிய தகராறுகள்.

**60.** இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதனின் அல்லது இப்பல்கலைக்கழக பிற அமைப்பு எதனின் உறுப்பினர் ஒருவராக எவரேனும் உரியவாறு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரா அல்லது பெயர் குறித்து நியமனம் செய்யப்பட்டுள்ளாரா அல்லது உறுப்பினராயிருப்பதற்குத் தகுதியுடையவராயிருக்கின்றாரா என்பது குறித்து வினா ஏதேனும் எழுமானால், அவ்வினா, வேந்தருக்குக் குறித்தனுப்பப்படுதல் வேண்டும். அதன் மீதான அவருடைய முடிவே அறுதியானதாகும்.

தகவல் பெறுவதற்கான அதிகாரம்.

**61.** இந்தச் சட்டத்திலோ அப்போதைக்கு நடைமுறையில் உள்ள பிற சட்டம் எதிலுமோ என்ன அடங்கியிருந்தபோதிலும், அரசு எழுத்துருவிலான ஆணையின் மூலமாக, இப்பல்கலைக்கழக விவகாரங்கள் தொடர்பான பொருட்பாடு எதையும் பற்றி, இப்பல்கலைக் கழகத்திடமிருந்து தகவல் எதையும் கேட்டுப் பெறலாம், மற்றும் இப்பல்கலைக் கழகம் அத்தகைய தகவல் தன்னிடம் இருக்குமானால், அத்தகைய தகவலை நியாயமானதொரு கால அளவுக்குள் அரசுக்கு அளித்தல் வேண்டும்;

**வரம்புரை**:- இப்பல்கலைக்கழகம் கமுக்கமானதெனக் கருதுகிற தகவலைப் பொறுத்தவரையில், இப்பல்கலைக் கழகமானது அதை வேந்தர் மற்றும்இணைவேந்தர் ஆகியோர் முன்பு வைக்கலாம்.

பட்டதாரிகளை பதிவுசெய்தல்.

**62.** (1) குறிக்கப்பட்ட நாளன்றும் அது முதற்கொண்டும்

(a) இந்திய எல்லைப் பரப்பிடத்திற்குள் பல்கலைக்கழகம் எதனின் பட்டதாரியாக மூன்று ஆண்டுகளுக்குக் குறையாமல் இருந்துவந்திருக்கிற அல்லது

(b) இந்திய எல்லைப் பரப்பிடத்திற்குள், உள்ள பல்கலைக் கழகம் எதனின் பதிவுபெற்ற பட்டதாரியாக இருக்கிற இப்பல்கலைக்கழக பரப்பிடத்திற்குள் சாதாரணமாக வசிக்கும் ஒவ்வொரு நபரும் நிலைவிதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய வரைக்கட்டுக்ளுக்கு உட்பட்டு அத்தகையக் கட்டணத்தை செலுத்துவதன்பேரில், ஐந்து ஆண்டு கால அளவிற்கு இந்தச் சட்டத்தின்படி பேணிவரப்படும் பட்டதாரிகள் பதிவேட்டில் தன்னுடைய பெயரை பதிவு செய்ய உரிமைத் தகுதியுடையவர் ஆவார்.

(2) (1)– ஆம் உட்பிரிவின்படி பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் அனைத்தும் வகுத்துரைக்கப்பட்ட கட்டணத்துடனும் நிலைவிதிகளினால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தகுதிகளின் நிரூபணங்களுடனும் பதிவாளருக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

(3) பதிவாளர் (2)–ஆம் உட்பிரிவின்படி விண்ணப்பம் பெற்றுக்கொண்டதன்பேரிலும் தாம் தக்கதெனக் கருதுகிற அத்தகைய விசாரணையை மேற்கொண்டதற்குப் பின்பும் விண்ணப்பதாரருடைய பெயரை பட்டதாரிகளுடைய பதிவேட்டில் பதிவு செய்தல் வேண்டும்.

(4) (3)–ஆம் உட்பிரிவின்படி பட்டதாரிகளுடைய பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும், நிலை விதிகளால் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திற்குள்ளும் அத்தகைய முறையிலும் மற்றும் அத்தகைய கட்டணத்தைச் செலுத்துவதன்பேரிலும் இதன்பொருட்டு பதிவாளருக்கு விண்ணப்பிப்பதன் பேரில் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை அத்தகைய பதிவினை புதுப்பித்துக்கொள்ள உரிமைத் தகுதியுடையவர் ஆவார்.

சிறப்பு நியமன முறை.

**63.** (1) ஆட்சிக் குழு தான் பொருத்தமெனக் கருதுகிற அத்தகைய வரையறைகள் மற்றும் வரைக்கட்டுகளின் பேரில், இப்பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் பதவி ஒன்றை ஏற்றுக் கொள்ளுமாறு, உயர்கல்வி சிறப்பையும் தொழில்முறைத் தேர்ச்சிப் பேறுகளையும் (Professional attainments) பெற்றுள்ள நபரெவரையும் அழைக்கலாம்; மற்றும் அவர் ஏற்றுக் கொண்டதன் பேரில், அவரை அப்பதவிக்கு நியமிக்கலாம்.

(2) ஆட்சிக்குழு, அவசர விதிகளில் விதிக்கப்பட்டுள்ள முறைக்கிணங்க கூட்டுச் செயல் திட்டமொன்றை மேற் கொள்வதற்காக, பிற பல்கலைக் கழகம் அல்லது அமைப்பு எதிலேனும் பணிபுரிகின்ற ஆசிரியர் ஒருவரையோ கல்விப் பணியாளர் தொகுதியின் பிற உறுப்பினர் எவரையுமோ நியமிக்கலாம்.

இணைக்கப்பட்ட கல்லூரி மீதான அறிக்கை.

64.. ஆட்சிக்குழுவானது குறிக்கப்பட்ட தேதியிலிருந்து ஒவ்வொரு மூன்றாண்டுகளின் முடிவிலும், இப்பல்கலைக்கழகப் பரப்பிடத்திற்குள் உள்ள இணைக்கப்பட்ட மற்றும் ஒப்புதலளிக்கப்பட்ட கல்லூரிகளின் நிலையைப் பற்றி அரசிற்கு அறிக்கையொன்றை பணிந்தனுப்புதல் வேண்டும். அரசு, அவ்வறிக்கையின் மீது தான் பொருத்தமெனக் கருதும் நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

65. (1) இந்த சட்டம்வெளியிடப்பட்ட தேதிக்குப் பின்னர் இப்பல்கலைக்கழக அதிகார அமைப்பு எதையேனும் முதல் முதலில் அமைத்துருவாக்குதல் குறித்தோ அல்லது மீண்டும் அமைத்துருவாக்குதல் குறித்தோ, அல்லது பிறவாறு இந்தச் சட்டத்தின் வகை முறைகளைச் செயல்படுத்துதல் குறித்தோ இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, அறிவிக்கையின் மூலமாக அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்காக தேவையானதென்று அல்லது உகந்ததென்று தனக்குத்தோன்றக் கூடிய, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதவையாயிராத அத்தகைய முறையை செய்யலாம்;

**வரம்புரை** :- அத்தகைய அறிவிக்கை எதுவும் 3—ஆம் பிரிவின்படி பல்கலைக் கழகம் நிறுவியமைக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் முடிவடைந்ததற்கு பின்பு, பிறப்பிக்கப்படுதலாகாது.

(2) (1)—ஆம் உட்பிரிவின்படியோ இந்தச் சட்டத்தின் பிறவகை முறைகள் எவற்றின்படியுமோ பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும் அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, நடைமுறைக்கு இயன்ற விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது, அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடர் அல்லது அடுத்த கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அத்தகைய அறிவிக்கை எதிலும் மாறுதல் எதையேனும் சட்டமன்றப் பேரவையானது செய்யுமானால், அல்லது அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படலாகாது என்று சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால், அந்த அறிவிக்கையானது அதன்பின்பு அத்தகைய மாற்றியமைக்கப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்லாற்றல் பெறுதல் வேண்டும்; அல்லது நேர்விற்கேற்ப, செல்லாற்றல் பெறாதுபோதல் வேண்டும்; எனினும், அத்தகைய மாறுதல் அல்லது நீக்கம் எதுவும் அந்த அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

பணிப்புரைகள் வழங்க அரசுக்கு உள்ள அதிகாரம்.

66. அரசானது அவ்வப்பொழுது இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக தான் தக்கதெனக் கருதுகிற அத்தகைய பணிப்புரைகளை பல்கலைக்கழகத்திற்கு பிறப்பிக்கலாம்; மற்றும் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடப்பது பல்கலைக்கழகத்தின் கடமையாகும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

1978 ஆம் ஆண்டு சென்னை அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தை (தமிழ்நாடுச் சட்டம் 30/1978) திருத்தம் செய்வதன் மூலம் அண்ணா பல்கலைக்கழகத்தை ஒருமை வகை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்காகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே அரசானது ‘‘அண்ணா பல்கலைக்கழகம்‘‘ என்ற பெயரில் சென்னையில் ஒரு இணைந்த வகை தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு முடிவு செய்துள்ளது.

2) இந்தச் சட்டமுன்வடிவானது, மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. அன்பழகன்,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்*

## சட்டமியற்று அதிகார ஒப்படைவு குறித்த குறிப்பாணை

இச்சட்ட முன்வடிவின் கூறுகள் **1(4), 7, 11, 19, 20, 21, 22, 23, 24, 26, 27, 30, 31, 34, 36, 42, 43, 44, 47, 48, 49, 52, 53, 54, 55, 56, 57, 58, 59, 60, 61, 62, 63, 65** மற்றும் **66** கருதப்பட்டச் சட்டத்தின் குறித்த வகைமுறைகளுக்கு அவை இயற்றப்பட்டு செயற்பாட்டிற்கு கொண்டுவரப்படும்போது நேர்வுக்கேற்ப உரிய அறிவிக்கைகள், நிலைச்சட்டங்கள், அவசரவிதிகள், ஒழுங்குமுறைநெறிகள் அல்லது கட்டளைகளை வழங்குவதன் மூலம், செயல்விளைவு அளிப்பதற்கான வழிமுறைகளை வகுத்துரைப்பதற்கு அரசுக்கு, ஆட்சிக்குழுவிற்கு, கல்வி மன்றத்திற்கு மற்றும் பிற அதிகார அமைப்புகளுக்கு அதிகாரமளிக்கிறது.

**2.** ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி சிறப்புத் தன்மை வாய்ந்தவையல்ல.

**கே.பி. அன்பழகன்,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்*

**2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.**

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2020**

**1978–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

பொறியியல், தொழில்நுட்பம், அவை தொடர்பான அறிவியல் ஆகியவற்றின் மேம்பாட்டிற்காகவும் பொறியியல், தொழில்நுட்பம் அவை தொடர்பான அறிவியல் ஆகியனவற்றைக் கற்பிப்பதிலும் அவற்றில் ஆராய்ச்சி தொடர்வதிலும் முன்னேற்ற வழிமுறைகளைக் காண்பதற்காகவும் நிறுவப்பட்ட அண்ணா பல்கலைக்கழகமானது 13 உறுப்பமைக் கல்லூரிகள், கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரி, சென்னை கிண்டியிலுள்ள அழகப்ப செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரியிலுள்ள அனைத்து துறைகள், குரோம்பேட்டையிலுள்ள மெட்ராஸ் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றுள்ள கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களை கொண்டு இயங்கி வருகிறது.

அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்ற மாநிலம் முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரிகளை சென்னையிலிருந்து நிர்வகித்து வருவது பல்கலைக்கழகத்தின் அதிக நேரத்தையும் ஆற்றலையும் எடுத்துக்கொள்கிறது.

இணைவு பெற்றுள்ள பொறியியல் கல்லூரிகளை சிறந்த முறையில் கண்காணிப்பதற்கும் பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் உயர்கல்விமற்றும் ஆராய்ச்சியில் கவனம் செலுத்துவதற்காக புதிய இணைவு வகை பல்கலைக்கழகத்தை இணைவு கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்களை கொண்டுள்ள " அண்ணா பல்கலைக்கழகம் " என்ற பெயரில் தோற்றுவிக்கவும், தற்போதுள்ள பல்கலைக்கழகத்தை "அண்ணா தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகம்" என்ற பெயரில் ஒருமை வகை பல்கலைக்கழகமாக மாற்றியமைக்கவும் அரசு தீர்மானித்துள்ளது.

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப்பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:

குறுந்தலைப்பும் தொடக்கமும்.

1. (1) இந்த சட்டம், 2020–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இஃது, அரசு, அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

1–ஆம் பிரிவிற்கான திருத்தம்

தமிழ்நாடு சட்டம். 30/1978.

2. (இதன் பின்பு இதில் முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1978–ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழகச் சட்டத்தின் 1–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவிற்கு பதிலாக பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும்;

''இந்த சட்டம்'', ''அண்ணா தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகச் சட்டம், 1978'' என அழைக்கப்பட வேண்டும்.

1–A என்னும் பிரிவை விட்டு விடுதல்.

3. முதன்மைச் சட்டத்தில் 1–A என்னும் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

2–ஆம் பிரிவிற்கான திருத்தம்

4. முதன்மைச் சட்டத்தின் 2–ஆம் பிரிவில்,–

(1). (a), (aa), (ab), (ac), (ad), (ae), (b), (c), (d)-ஆகிய கூறுகளுக்குப் பதிலாகப் பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(a) "குறிக்கப்பட்ட நாள்'' என்றால் 1–ஆம் பிரிவின் (2)–ஆம் உட்பிரிவின்படி அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதி எனப் பொருள்படும்;

(b), "உறுப்பமைக் கல்லூரி'' என்றால் ஐ–ஆம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட நிறுவனம் எதுவும் எனப் பொருள்படும்;

(c), "முதன்மையர்'' என்றால் புலம் ஒவ்வொன்றின் முதன்மையர் எனப் பொருள்படும்;

(d), "இயக்குநர்'' என்றால் வகுத்துரைக்கப் படக்கூடியவரான உறுப்பமைக் கல்லூரி ஒன்றின் தலைவர், ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி தலைவர் அல்லது மேற்படிப்பு மையம் ஒவ்வொன்றின் தலைவர் எனப்பொருள்படும்;'';

(2). (ha)-எனும் கூறானது விட்டு விடப்படுதல் வேண்டும்;

(3). (l)-எனும் கூறுக்கு பதிலாகப் பின்வரும் கூறுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது :-

(l) "பல்கலைக்கழகம்" என்றால் 3 ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட அண்ணா தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகம் என பொருள்படும்.

(4). (m) எனும் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

3–ஆம் பிரிவிற்கான திருத்தம்

5. ''முதன்மைச் சட்டத்தின் 3–ஆம் பிரிவில்,

(1) ''அண்ணா பல்கலைக்கழகம்'' என்ற சொற்றொடருக்கு பதிலாக ''அண்ணா தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகம்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

2). 2 ஆம் உட்பிரிவிற்குப் பின்பு, பின்வரும் உட்பிரிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:–

''(3) இப்பல்கலைக் கழகமானது தனித்த வகையினதாக இருத்தல் வேண்டும், மற்றும் இதில் சென்னை கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரியும் I–ஆம் இணைப்புப் பட்டியலில் குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களும் அடங்கியிருத்தல் வேண்டும்.

(4) இப்பல்கலைக்கழகத்தின் அதிகார வரம்பானது, 1971–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்–ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம்.35/1972) 2–ஆம் பிரிவின் (23–a)–எனும் கூறில் பொருள் வரையறை செய்யப்பட்டவரான சென்னைப் பெருநகர் திட்டப்பரப்பிடத்தில் அடங்கியுள்ள முழுமையான பரப்பிடத்திற்கும் நீட்டிக்கப்பட்டிருத்தல் வேண்டும்; மற்றும் இப் பல்கலைக் கழகமானது அதன் அதிகார வரம்பிற்குள்ளாக அது தக்கதெனக் கருதக்கூடியவரான அத்தகைய இடங்களில் வளாகங்களை அமைக்கலாம்.''.

5–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

6. முதன்மைச் சட்டத்தின் 5–ஆம் பிரிவின், (ac), (ad), (ae), (af), (ag) (ah) மற்றும் (ai)–ஆகிய கூறுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

5–A எனும் பிரிவை விட்டு விடுதல்

7. முதன்மைச் சட்டத்தின் (5–A)–எனும் பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

8–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

8. முதன்மைச் சட்டத்தின் 8–ஆம் பிரிவில், (5)–ஆம் கூறுக்குப் பதிலாக பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(5) இயக்குநர்கள்;''

13–ஆம் பிரிவிற்கான திருத்தம்

9. முதன்மைச் சட்டத்தின் 13–ஆம் பிரிவில்,–

(1) ஓரத்தலைப்பில் ''தலைவர்கள்'' என்று வருகின்ற சொல்லுக்கு பதிலாக ''இயக்குநர்கள்'' என்னும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும்.

(2). ''புலம் ஒன்றின் தலைவர்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக ''இயக்குநர்'' என்னும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும்.

17–ஆம் பிரிவிற்கான திருத்தம்

10. முதன்மைச் சட்டத்தின் 17–ஆம் பிரிவில், (2) உட்பிரிவுக்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவுகள் அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

''(2) ஆட்சிக் குழுவானது துணைவேந்தருக்குக் கூடுதலாக பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்; அதாவது:–

**வகை I –பதவிவழி உறுப்பினர்கள்**

(a) உயர்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(b) தொழில் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(c) தகவல் தொழில்நுட்பத் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(d) சட்டத்துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர்;

(e) தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்; மற்றும்

(f) கல்லூரிக் கல்வி இயக்குநர்.

**வகை II பிற உறுப்பினர்கள்**

(a) வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், கிண்டி பொறியியல் கல்லூரியின் பேராசிரியர்கள் அல்லது முதன்மையர்களிடமிருந்து ஓர் உறுப்பினர்.

(b) வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும், அழகப்பா செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரியின் பேராசிரியர்கள் அல்லது முதன்மையர்களிடமிருந்து ஓர் உறுப்பினர்.

(c) அரசால் நியமிக்கப்படும், குரோம்பேட்டையிலுள்ள மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரியின் பேராசிரியர்கள் அல்லது முதன்மையர்களுக்கிடையே இருந்து ஓர் உறுப்பினர்.

(d) அரசால் நியமிக்கப்படும், கட்டடக் கலை மற்றும் திட்டமிடல் பள்ளியின் பேராசிரியர்கள் அல்லது முதன்மையர்களுக்கிடையே இருந்து ஓர் உறுப்பினர்.

(e) அரசால் நியமிக்கப்படும் தொழிற்சாலைகள், பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களை, சார்பாற்றம் செய்கிற ஓர் உறுப்பினர்.

(f) அரசால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பொறியியல் மற்றும் தெழில்நுட்பத்தில் சிறப்பு அறிவையும், செயல்முறை பட்டறிவையும் கொண்டுள்ள, ஆராய்ச்சி நிறுவனங்களை சார்பாற்றம் செய்கிற ஓர் உறுப்பினர்.

(g) சென்னை மாவட்ட சட்டமன்ற தொகுதிகளுக்கான சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களால் அவர்களுக்கிடையேயிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர்.

11. முதன்மைச் சட்டத்தின் 19–ஆம் பிரிவில், (2)–ஆம் உட்பிரிவில், ''தலைவர்'' என்று வருகின்ற சொல்லுக்குப் பதிலாக ''முதன்மையர்'' என்னும் சொல்லானது அமைக்கப்படுதல் வேண்டும். 19–ஆம் பிரிவிற்கான திருத்தம்

12. முதன்மைச் சட்டத்தின் 29–ஆம் பிரிவில்,– 29ஆம் பிரிவிற்கான திருத்தம்

(1). (X)–எனும் கூறில், ''மற்றும் இணைக்கப்பெற்ற கல்லூரிகள் அல்லது நிறுவனங்கள்;'' என்கிற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2) (xvi-a) மற்றும் (xvi-b) ஆகிய கூறுகள் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

13. முதன்மைச் சட்டத்தின் 31–ஆம் பிரிவில், (1)–ஆம் உட்பிரிவில், (i)–எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:– 31.ஆம் பிரிவிற்கான திருத்தம்

''(i) பல்கலைக் கழகத்திற்கும் அதன் உறுப்பமை கல்லூரிகளுக்கும் மாணவர்களை அனுமதித்தல்;''.

14. முதன்மைச் சட்டத்தின் VIII அத்தியாயம் விட்டு விடப்படுதல் வேண்டும். VIII ஆம் அத்தியாயத்தை விட்டு விடுதல் வேண்டும்.

15. முதன்மைச் சட்டத்தின் 46–ஆம் பிரிவிற்குப் பின்பு பின்வரும் பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது; புதியபிரிவைப் புகுத்துதல்

47. நிதியினை பங்கீடு செய்தல் ,-

பல்கலைக்கழகத்தின் இருப்பிலிருக்கும் நிதிகளை அரசினால் அமைக்கப்படவிருக்கும் குழுவினால் தீர்மானிக்கப்படலாகும் அத்தகைய விழுக்காட்டளவில் பல்கலைக் கழகத்திற்கும் 2020 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட அண்ணா பல்கலைக்கழகத்திற்கும் இடையில் பங்கீடு செய்தலுக்கான அதிகாரத்தினை அரசானது பெற்றிருத்தல் வேண்டும்.

16. முதன்மைச் சட்டத்தின் II-இணைப்புப்பட்டியலில்,– II-ஆம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்

(1) நிலை விதிகளில் ''தலைவர்கள்'' , ''தலைவர்'' என்னும் சொற்கள் எங்கெல்லாம் வருகிறதோ அங்கெல்லாம், ''முதன்மையர்கள்'', ''முதன்மையர்'' என்னும் சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) 2-A எனும் நிலை விதியானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

16. 9-ஆம் நிலை விதியின் (1) ஆம் கூறுக்கு பதிலாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"9.கல்வி மன்றத்தை அமைத்துருவாக்குதல்.–

(1) கல்வி மன்றமானது பின்வருமாறு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:–

**வகை I–பதவி வழி உறுப்பினர்கள்**

(a) துணைவேந்தர்;

(b) முதன்மையர்;

(c) பல்கலைக் கழக நூலக இயக்குநர்.

**வகை II–பிற உறுப்பினர்கள்**

(a) துணைவேந்தரின் பரிந்துரையின் பேரில் பல்கலைக் கழக பேராசிரியர்களிடமிருந்து வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்படும் எட்டு உறுப்பினர்கள்;

(b) அரசின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் நியமிக்கப்படும், கல்வி, ஆராய்ச்சி மற்றும் கல்வி நிர்வாகம், பொது மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான பொருட்பாடுகளில் செயல் திறமை வாய்ந்த மூன்று கல்வியாளர்கள்;

(c) துணைவேந்தரின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் மாநில அரசுதுறைகள், இருப்பூர்த்தி, இராணுவப் பொறியியல் பணிகள், பாதுகாப்பு, அஞ்சல் மற்றும் தந்திகள், தொலை பேசிகள் மற்றும் மாநிலத்திலுள்ள பிற தன்னாட்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் தலைமைப் பொறியாளர்கள் அல்லது பொது மேலாளர்களிலிருந்து மூன்று உறுப்பினர்கள்;

(d) அரசின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் தொழில்கள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான பொருட்பாடுகளில் செயல்திறமை வாய்ந்த தனியார் தொழில் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களிருந்து மூன்று நபர்கள்;

(e) அரசின் பரிந்துரையின் பேரில் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் தொழில்கள் மற்றும் ஆராய்ச்சி தொடர்பான பொருட்பாட்டின் செயல்திறமை வாய்ந்த மாநிலத்தில் உள்ள மைய மற்றும் மாநிலத் துறைகளின் பொதுத் தொழில் துறைகளிலிருந்து நியமிக்கப்படும் மூன்று நபர்கள்;

(f) அரசின் பரிந்துரையின்பேரில் வேந்தரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் தொழில்சார்ந்த பொறியியல் சங்கங்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து அல்லது அமைப்புகளிடமிருந்து அல்லது கழகங்களிடமிருந்து நியமிக்கப்படும் மூன்று நபர்கள்;

(g) துணைவேந்தரின் பரிந்துரையின்பேரில் வேந்தரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட மைய மற்றும் மாநில அரசு ஆகிய இரண்டின் சிறுதொழில் நிறுவனங்களிலிருந்து அல்லது தொழில் முனைவோர் வளர்ச்சி வாரியத்திலிருந்து அல்லது தொழில் பழகுநர் வாரியத்திலிருந்து உயர்சிறப்பு வாய்ந்த மூன்று நபர்கள்;

(h) துணைவேந்தரின் பரிந்துரையின்பேரில் பின்வரும் நிறுவனங்கள் ஒவ்வொன்றிலிருந்தும் ஆசிரியர்களுக் கிடையேயிருந்து வேந்தரால் நியமிக்கப்படும் நபர் ஒருவர்;

(i) இந்திய அறிவியல் நிறுவனம், பெங்களூரு;

(ii) இந்திய தொழில் நுட்ப நிறுவனம், சென்னை;

(iii) இந்திய மேலாண்மை நிறுவனம், பெங்களூரு மற்றும்

(iv) தேசிய தொழில்நுட்ப நிறுவனம், திருச்சிராப்பள்ளி.

(i) மேலே உள்ள இனங்கள் எவற்றிலும் உள்ளடக்கப்படாத ஆட்சிக்குழுவின் உறுப்பினர்கள்:

வரம்புரை:—பாடக் குழுவொன்றின் தலைவர் எவரையும் அவர்தம் சிறப்பு அறிவானது கலந்துரையாடலின் இனங்களுக்குத் தொடர்புடையதாக இருக்குமேயானால், அவரைக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைக்கலாம்.

ஐயங்களை அகற்றுதல்

17. (1) ஐயங்களை அகற்றுவதற்காக,—இங்கே பிரகடனப்படுத்துவது யாதெனில்,

(i) இந்த சட்டத்தின்படி நியமிக்கப்பட்டு அவ்வாறு சென்னை பல்கலைக்கழக (திருத்தம்) சட்டம், 2020 சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பாக துணைவேந்தராகப் பதவி வகித்து வருகிற சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அவர்தம் பதவிக்காலம் முடிவடையும் வரையிலும் அண்ணா தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகத் தொடர்ந்து பதவி வகித்தல் வேண்டும்.

(ii) சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இந்தச் சட்டத்தின்படி பிறவாறு அவ்வாறான உறுப்பினர்களாகி அண்ணா பல்கலைக்கழக (திருத்தம்) சட்டம், 2020 சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பாக பதவி வகித்து வருகிற நபர்கள், அண்ணா பல்கலைக்கழகத்தின் அதிகார அமைப்புகள் ஏதொன்றின் அத்தகைய உறுப்பினர்களாக பதவி வகித்து வருகின்ற உறுப்பினர்கள் அவ்வாறு உறுப்பினர்களாக இருப்பது அற்றுப்போதல் வேண்டும்.

(2) அண்ணா பல்கலைக்கழக (திருத்தம்) சட்டம், 2020 சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளாக அல்லது மேற்சொன்ன மூன்று மாதம் என்பதான கால அளவானது முடிவடைந்ததற்குப் பின்னர், அரசானது அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய ஓர் ஆண்டுக்கு மேற்படாத அத்தகைய அதிகமான கால அளவிற்குள்ளாக இப்பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவையும் கல்வி மன்றத்தையும் அமைத்துருவாக்குவதற்கு துணைவேந்தரானவர் ஏற்பாடுகளை செய்தல் வேண்டும்.

(3) (2)—ஆம் உட்பிரிவின்படி அமைத்துருவாக்கப்பட்ட ஆட்சிக்குழுவும் கல்வி மன்றமும் அரசானது அறிவிக்கையின் வாயிலாக இது குறித்து வைக்கக்கூடிய அத்தகைய தேதியன்று தமது பணிகளை ஆற்றுவதற்குத் தொடங்குதல் வேண்டும்.

(4) (2)—ஆம் உட்பிரிவின்படி ஆட்சிக்குழுவும் கல்வி மன்றமும் உரிய முறையில் அமைத்துருவாக்கப்படுவதற்கான அத்தகைய கால அளவு வரையிலும், துணைவேந்தர் இந்தச் சட்டத்தின் மற்றும் நிலை விதிகளின்படி அத்தகைய அதிகார அமைப்புகளின் அதிகாரங்களையும், பணிகளையும் தற்காலிகமாகச் செலுத்துவதற்கும் ஆற்றுவதற்கும் அலுவலர்கள் அடங்கிய குழு எதனையும் அமைத்துருவாக்கலாம்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்

18. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு ஒவ்வாதனாவாயிராத வகையில், இந்த இடர்பாட்டை நீக்குவதற்கு தேவையானவையென்றோ உகந்தவையென்றோ தனக்குத் தோன்றுகின்ற வகைமுறைகளைச் செய்யலாம்.

வரம்புரையாக, அத்தகைய ஆணை எதுவும், தமிழ்நாடு அரசிதழில் இந்தச் சட்டத்தினை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுக்கால அளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதலாகாது.

**நோக்கக்காரண விளக்கவுரை**

பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய அறிவியல் பாடங்களின் வளர்ச்சிக்காகவும் பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் தொடர்புடைய அறிவியல் பாடங்களில் கற்றல் மற்றும் ஆராய்ச்சியில் மேம்பாட்டினை மேற்கொள்வதற்காகவும் நிறுவப்பட்ட அண்ணா பல்கலைக்கழகமானது, 13 உறுப்புக்கல்லூரிகளையும், சென்னை கிண்டியிலுள்ள பொறியியல் கல்லூரி, சென்னை, கிண்டியிலுள்ள அழகப்பாசெட்டியார் தொழில்நுட்பக் கல்லூரி, சென்னை குரோம்பேட்டையிலுள்ள மெட்ராஸ் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றையும் அதனுடன் இணைவு பெற்ற கல்லூரிகள் மற்றும் நிறுவனங்களையும் உள்ளடங்கியதாகும்.

2. மாநிலம் முழுவதும் அமைந்துள்ள அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட பொறியியல் கல்லூரிகளின் அலுவல்களை மேலாண்மை செய்வது, பல்கலைக்கழகத்தின் அதிசிறந்த பேராசிரியர்களின் அதிக நேரம் மற்றும் ஆற்றலை பயன்படுத்திக் கொள்கிறது. பொறியியல் மற்றும் தொழில்நுட்பத்தில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சியின் மீது கவனம் செலுத்த வேண்டியிருப்பதால் அரசானது தற்போதுள்ள பல்கலைக்கழகத்தை அண்ணா தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி பல்கலைக்கழகம் என்ற பெயரில் ஒருமை வகையானதாக மீண்டும் அமைக்க முடிவு செய்துள்ளது.

3. இந்தச் சட்டமுன்வடிவு அரசின் மேற்சொன்ன முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே.பி. அன்பழகன்,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு குறித்த குறிப்பாணை**

இச்சட்ட முன்வடிவின் கூறுகள் 1 (2), 4, 17 மற்றும் 18 கருதப்பட்ட சட்டத்தின் குறித்த வகைமுறைகளுக்கு அவை இயற்றப்பட்டு செயற்பாட்டிற்கு கொண்டுவரப்படும்போது நேர்வுக்கேற்ப உரிய அறிவிக்கைகள் அல்லது கட்டளைகளை வழங்குவதன் மூலம், செயல்விளைவு அளிப்பதற்கான வழிமுறைகளை வகுத்துரைப்பதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி சிறப்புத்தன்மை வாய்ந்தவையல்ல.

**கே.பி. அன்பழகன்,**
*உயர்கல்வித் துறை அமைச்சர்.*

Secretariat, Chennai
செப்டம்பர் 15, 2020

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2020**

1987 ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.

இந்தியக் குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1 (1) இந்தச் சட்டம், 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

(2) 6,7,8,9, 10 மற்றும் 15 ஆகிய பிரிவுகள் 2019 ஆம் ஆண்டு மே திங்கள் 29 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்து விட்டதாக கொள்ளப்பட வேண்டும் மற்றும் மீதமுள்ள பிரிவுகள், மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக குறித்திடலாகும் அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1989. 2. (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில்,—

(1) (8)—ம் கூறின் இறுதியில் ‘‘அறிவிக்கையில் குறிப்பிடப்படலாகும் அத்தகைய பகுதிக்காக’’ என்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(2) தற்போதுள்ள (8—a) எனும் கூறு (8—b) கூறாக மறு எண்ணிடப்படுதல் வேண்டும் மற்றும் அவ்வாறு (8—b) ஆம் கூறு என மறு எண்ணிடப்படுவதற்கு முன்பு பின்வரும் கூறு புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:— 2 ஆம் பிரிவிற்கான திருத்தம்

‘‘(8—a) வேளாண் விளைபொருள் தொடர்பான ‘‘நேரடி சந்தைப்படுத்துதல்’’ என்பது சந்தைகளுக்கு வெளியே, சிறப்பு மற்றும் துணைச் சந்தைகள், தனியார் சந்தை துணை முற்றங்களில் பதப்படுத்துபவர்கள், அல்லது ஏற்றுமதியாளர்கள் அல்லது மொத்தமாக வாங்குபவர்களால் உற்பத்தியாளர்களிடமிருந்து வேளாண் விளைபொருளை நேரடியாக மொத்த விற்பனைக் கொள்முதல் செய்தல் என்று பொருள்படும்’’.

(3) (16)—ஆம் கூறுக்குப்பிறகு பின்வரும் கூறுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:—

(16—a) ‘‘தனியார் சந்தை துணை முற்றம்’’ என்பது 7—B ஆம் பிரிவின் கீழ் தனியார் சந்தை துணை முற்றமாக செயல்படுவதற்கென அறிவிக்கப்பட்ட இடம் எதுவும் என்று பொருள்படும்.

(16—b) ‘‘தனியார் சந்தை முற்றம்’’ என்பது 7—A ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பெற்ற ஒரு தனியார் சந்தை முற்றம் என்று பொருள்படும்.

(4) (23) ஆம் கூறுக்குப்பிறகு, பின்வரும் கூறானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(24) ‘‘சந்தைப்பகுதி’’ என்பதற்கு 6 ஆம் ஒருங்கிணைந்த பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அறிவிக்கப்பட்ட அறிவிக்கை வெளியிடப்பட்ட சந்தைப் பகுதியை தவிர தமிழ்நாடு மாநிலம் முழுவதும் என்று பொருள்படும்.

3. முதன்மைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்குப் பிறகு, பின்வரும் பிரிவுகள் புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது—

‘‘7—A. தனியார் சந்தை முற்றத்தினை நிறுவுதல்— (1) வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வரையறைகளுக்குட்பட்டு, வேளாண் விளைபொருளின் வணிகத்திற்காக ஒருங்கிணைந்த சந்தைப் பகுதியில் எங்கேனும் ஒரு தனியார் சந்தை முற்றத்தை நிறுவ நபர் எவரொருவருக்கும் இயக்குநர் உரிமம் அளிக்கலாம். 7-A,7-B,7-C மற்றும் 7-D எனும் புதிய பிரிவுகளை புகுத்துதல்

(2) இப்பிரிவின் கீழ் உரிமம் வழங்குவதற்கான ஒவ்வொரு விண்ணப்பமும் வகுத்துரைக்கப் படலாகும் அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய கட்டணத்துடன் ஒன்றிணைத்து இயக்குநரிடம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1)–ன் கீழ் அளிக்கப்பட்ட ஓர் உரிமமானது மூன்றாண்டுகள் கால அளவிற்கு செல்லுந்தன்மையுடையதாகுதல் வேண்டும்.

(4) இயக்குநர், அத்தகைய மறுப்பு அல்லது இடைநீக்கத்திற்கான காரணங்களை பதிவு செய்வதன் மூலம், வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய அடிப்படையில், உரிமத்தை அளிக்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம் அல்லது உரிமத்தை புதுப்பிக்கலாம் அல்லது புதுப்பிக்க மறுக்கலாம் அல்லது உரிமத்தை இடைநிறுத்தம் செய்யலாம்.

(5) உட்பிரிவு (4)–ன் கீழ் உருவாக்கப்பட்ட ஓர் ஆணையினால் இடருற்ற நபர் எவரும் ஆணை பெற்றுக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அரசிடம் மேல்முறையீடு ஒன்றினை அளிக்கலாம்.

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர் போதுமான காரணங்களினால் அத்தகைய மேல்முறையீடு செய்வதிலிருந்து தடுக்கப்பட்டால் மேல்முறையீடு அளிப்பதற்கு மேலுமொரு முப்பது நாட்கள் காலஅவகாசத்தினை அரசு வழங்கலாம்.

(6) தனியார் சந்தை முற்றத்தின் உரிமம் பெற்றவர் அல்லது அதன் மேலாண்மைக்குழு என எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும், தனியார் சந்தை முற்றத்தில் இயங்க வகுத்துரைக்கப் படலாகிறவாறான அத்தகைய கட்டணத்துடன் வணிகர்கள் உட்பட சந்தை செயல்பாட்டாளர்களை பதிவு செய்து கொள்ளலாம்.

(7) தனியார் சந்தை முற்ற உரிமம் பெற்றவர் அல்லது அதன் மேலாண்மைக்குழு, வகுத்துரைக்கப் படலாகிறவாறான விகிதத்திற்கு மிகாமல் விலை மதிப்பீட்டின்படியான விகிதத்தில், தனியார் சந்தை முற்றத்தில் வணிகம் செய்யப்படும் வேளாண் விளைபொருளின் மீது பயனாளர் கட்டணத்தை தண்டல் செய்யலாம்.

வரம்புரையாக இவ்வுட்பிரிவின் கீழ் அவ்வாறு வகுத்துரைக்கப்படும் வீதமானது 24–ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் வகுத்துரைக்கப்பட்ட வீதத்தை விட குறைவாக இருக்கக்கூடாது.

மேலும் வரம்புரையாக, வேளாண் விளைபொருள் எதையும் விற்பனை செய்யும் உற்பத்தியாளரிடமிருந்து பயனாளர் கட்டணத்தை தண்டல் செய்யப்படுதல் கூடாது:

மேலும் வரம்புரையாக, ஒருங்கிணைந்த சந்தைப் பகுதியில் வாங்கப்படும் அல்லது விற்கப்படும் வேளாண் விளைபொருள் எதன் மீதும் ஒன்றிற்கு மேற்பட்ட முறை பயனாளர் கட்டணம் தண்டல் செய்தல் கூடாது.

(8) தனியார் சந்தை முற்றத்தின் உரிமம் பெற்றவர், 45 ஆம் பிரிவின் கீழ் உருவாக்கப்பட்ட சந்தை வளர்ச்சி நிதிக்கு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விழுக்காட்டில், அத்தகைய பயனாளர் கட்டண தண்டலையும், பதிவுக் கட்டணத்தையும் பங்களித்தல் வேண்டும்.

(9) வகுத்துரைக்கப்படலாகும் விதிகளுடன் இணங்கி, தனியார் சந்தை முற்றத்தில், தனியார் சந்தை முற்றத்தின் உரிமம் பெற்றவர் தொழில் மற்றும் அதன் எஞ்சியுள்ள செயல்பாடுகளை நடத்துவதற்கான நிலையான இயங்கு வழிமுறைகளை வடிவமைத்தல் வேண்டும்.

(10) உட்பிரிவுகள் (2) மற்றும் (3)–இல் உள்ளடங்கிய எதுவும்–

(a) வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய அளவிற்கு மிகாமல் எந்தவொரு அளவிலும் தனது வீட்டுப் பயன்பாட்டிற்காக வேளாண் விளைபொருள் எதையும் கொள்முதல் செய்யும் நபர் ஒருவருக்கு;

(b) வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய அளவிற்கு மிகாமல் எந்தவொரு அளவிற்கும் தனது சொந்த விதை நோக்கத்திற்காக வேளாண் விளைபொருள் எதையும் கொள்முதல் செய்யும் நபர் ஒருவருக்கும் பொருந்துதல் ஆகாது.

7(B) தனியார் சந்தை துணை முற்றத்தினை நிறுவுதல்.— (1) அரசு, அறிவிக்கையின் வாயிலாக, சேமிப்புக்கிடங்கு, பதகை குழி, குளிர் வைப்பறை, வகுத்துரைக்கப்படலாகும் வசதிகள் மற்றும் அத்தகைய பிற கட்டமைப்பு அத்தகைய உட்கட்டமைப்புடன் கூடிய அல்லது இடம் ஆகியவற்றை தனியார் சந்தை துணை முற்றமாக செயல்படுவதற்கு அறிவிக்கலாம்.

விளக்கம்.– 'இடம்' எனும் சொற்றொடரானது சிப்பம் கட்டுமிடம்/ தூய்மைப்படுத்துதல், தரம்பிரித்தல் அல்லது பதனிடுதல் அலகு உட்பட ஏதேனும் கட்டமைப்பு, இணைப்பு, திறந்தவெளிப்பகுதி, தொகுப்பு வீடு, தெரு ஆகிவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(2) அறிவிக்கப்பட்ட தனியார் சந்தை துணை முற்றம் ஒன்றின் உரிமையாளர், வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய வடிவத்திலும், அத்தகைய முறையிலும், அத்தகைய கட்டணத்துடன் ஒன்று சேர்த்து இயக்குநரிடம் உரிமத்திற்காக விண்ணப்பித்தல் வேண்டும்.

(3) தனியார் சந்தை துணை முற்றம் ஒன்றிற்காக அளிக்கப்பட்ட உரிமமானது மூன்றாண்டுகள் கால அளவிற்கு செல்லுந்தன்மையுடைதாகுதல் வேண்டும்.

(4) இயக்குநர், அத்தகைய மறுப்பு அல்லது இடைநீக்கத்திற்கான காரணங்களை பதிவு செய்வதன் மூலம் வகுத்துரைக்கப்படலாகும், அத்தகைய அடிப்படையில், உரிமத்தை அளிக்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம் அல்லது உரிமத்தை புதுப்பிக்கலாம் அல்லது புதுப்பிக்க மறுக்கலாம் அல்லது உரிமத்தை இடைநீக்கம் செய்யலாம்.

(5) உட்பிரிவு (4)இன் படி உண்டாக்கப்பட்ட ஆணை ஒன்றினால் இடருற்ற நபர் எவரும், ஆணை பெற்றுக் கொள்ளப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அரசிடம் மேல்முறையீடு அளிக்கலாம்.

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர் போதுமான காரணங்களுக்காக அத்தகைய மேல்முறையீடு செய்வதிலிருந்து தடுக்கப்பட்டால், மேல்முறையீடு செய்வதற்கு மேலுமொரு முப்பது நாட்கள் காலஅவகாசத்தினை அரசு நல்கலாம்.

(6) தனியார் சந்தை துணை முற்றத்தின் உரிமம் பெற்றவர், வகுத்துரைக்கப்படலாகும் வீதத்திற்கு மிகாது, விலைமதிப்பீட்டின்படியான வீதத்தில், சந்தை துணை முற்ற வணிகம் செய்யப்படும் வேளாண் விளைபொருளின் மீது நுகர்வோர் கட்டணத்தை தண்டல் செய்தல் வேண்டும்.

வரம்புரையாக, வேளாண் விளைபொருள் எவற்றையேனும் விற்பனை செய்யும் உற்பத்தியாளர் ஒருவரிடமிருந்து பயனாளர் கட்டணம் தண்டல் செய்யப்படுதல் கூடாது.

(7) தனியார் சந்தை துணை முற்ற உரிமம் பெற்றவர், 45 ஆம் பிரிவின்படி உருவாக்கப்பட்ட சந்தை வளர்ச்சி நிதிக்கு, வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய விழுக்காட்டில், அத்தகைய பயனாளர் கட்டண தண்டல்களை பங்களித்தல் வேண்டும்.

7 (C) நேரடி சந்தைப்படுத்துதல்.—

(1) உற்பத்திப் பகுதி ஒன்றின் அருகாமையில் அல்லது நியமிக்கப்பட்ட உணவுப் பூங்கா ஒன்றிற்குள், வகுத்துரைக்கப்படலாகும் உட்கட்டமைப்புடன் கூடிய சேமிப்பு அல்லது திரட்டுதல் மையம், நபர் ஒருவரால், வேளாண் விளைபொருள் எவற்றையேனும் சந்தைப்படுத்துவதற்காக, வகுத்துரைக்கப் படலாகிறவாறு சில்லறைத் தொடரி, அல்லது பதப்படுத்துதல்/ ஏற்றுமதி அலகு/வளாகம் அல்லது ஏதேனும் பிற அத்தகைய அலகு / வளாகங்கள் ஆகியவற்றின் இணைப்புகளுடன் அமைக்கப்படலாம்.

விளக்கம்– இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக "நியமிக்கப்பட்ட உணவுப் பூங்கா" என்பது இந்திய அரசின் உணவுப்பதப்படுத்தும் தொழில்கள் அமைச்சகத்தினால், நன்கு வரையறுக்கப்பட்ட வேளாண் அல்லது தோட்டக்கலை மண்டலத்தில் அமைக்கப்பட்டதும் மற்றும் அத்தகையவாறு நிறுவப்பட்டதுமான உணவுப்பதப்படுத்தும் அலகுகள் என்று பொருள்படும்.

(2) உட்பிரிவு (1)–இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், வகுத்துரைக்கப்பட்டலாகிறவாறு சேமிப்பு அல்லது திரட்டுதல் மையம் எவற்றையும் நிறுவாமல், அத்தகைய கொள்முதலுக்கான இடத்தினை அறிவிப்பதன் மூலம், சந்தை, தனியார் சந்தை முற்றம், அல்லது தனியார் சந்தைப்படுத்துதலானது மேற்கொள்ளப்படலாம்.

(3) எந்தவொரு நபரும் நேரடி சந்தைப் படுத்துதலுக்கான உரிமத்திற்காக, வகுத்துரைக்கப் படலாகும் அத்தகைய படிவத்திலும், அத்தகைய முறையிலும், அத்தகைய கட்டணத்துடன் ஒன்றுசேர்த்து இயக்குநரிடம் விண்ணப்பிக்கலாம்.

(4) நேரடி சந்தைப்படுத்துதலுக்காக அளிக்கப்பட்ட உரிமமானது மூன்றாண்டுகள் கால அளவிற்கு செல்லுந்தன்மையுடையதாகுதல் வேண்டும்.

(5) இயக்குநர், அத்தகைய மறுப்பு அல்லது இடைநீக்கத்திற்கான காரணங்களை பதிவு செய்வதன் மூலம் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய அடிப்படைகளின் பேரில் உரிமத்தினை அளிக்கலாம் அல்லது வழங்க மறுக்கலாம் அல்லது உரிமத்தினை புதுப்பிக்கலாம் அல்லது உரிமத்தினை புதுப்பிப்பதற்கு மறுக்கலாம் அல்லது உரிமத்தினை இடைநிறுத்தம் செய்யலாம்.

(6) உட்பிரிவு (5) இன் படி உண்டாக்கப்பட்ட ஆணை ஒன்றினால் இடருற்ற நபர் எவரும், ஆணை பெற்றுக்கொள்ளப்பட்ட நாளிலிருந்து முப்பது நாட்களுக்குள் அரசிடம் மேல் முறையீடு ஒன்றினை அளிக்கலாம்.

வரம்புரையாக, மேல்முறையீட்டாளர் போதுமான காரணங்களுக்காக அத்தகைய மேல்முறையீடு செய்வதிலிருந்து தடுக்கப்பட்டால், மேல்முறையீடு அளிப்பதற்கு மேலுமொரு முப்பது நாட்கள் காலஅவகாசத்தினை அரசு வழங்கலாம்.

(7) நேரடி சந்தைப்படுத்துதல் உரிமம் பெற்றவர், அன்றாட வணிக நடவடிக்கைகள் தொடர்புடைய ஆவணங்களையும், கணக்குகளையும் பேணுதல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய படிவத்தில் மாத அறிக்கையினை இயக்குநருக்கு அனுப்புதல் வேண்டும்.

(8) இயக்குநர், நேரடி சந்தைப்படுத்துதல் உரிமம் பெற்றவரிடமிருந்து ஏதேனும் கூடுதல் தகவலை விரும்பலாம் மற்றும் ஆய்வு மேற்கொள்ளலாம் மற்றும் அத்தகைய மொத்த விற்பனைக் கொள்முதல் மற்றும் அதற்கு இடை நிகழ்வுடைய செயல்களின் நிகழ்வுகள் தொடர்புடையவற்றில் கட்டளையிடலாம்.

(9) நேரடி சந்தைப்படுத்துதல் உரிமம் பெற்றவர் மொத்த விற்பனைக் கொள்முதல்கள் கட்டணத்தை ஒரு ரூபாய்க்குக் குறையாமல், ஆனால் வேளாண் விளைபொருள்கள் வாங்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட மொத்த தொகையின் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்க்கு மிகாத வீதத்தில் செலுத்தப் பொறுப்புடையவராக்குதல் வேண்டும். கூறப்பட்ட கட்டணமானது 45 ஆம் பிரிவின் படி உருவாக்கப்பட்ட சந்தை வளர்ச்சி நிதிக்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

7.D. தகராறு தீர்வு —மின்னணு வணிகம், நேரடி சந்தைப்படுத்துதல், தனியார் சந்தை முற்றம் அல்லது தனியார் சந்தை துணை முற்றம் ஆகியவற்றின் உரிமம் பெற்றவர்களுக்கிடையே அல்லது இடையில் எழும் தகராறு எதுவும் தீர்வுக்காக இயக்குநருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

4. முதன்மைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவில்,—

8 ஆம் பிரிவிற்கான திருத்தம்

(1) ஓரத்தலைப்பிற்காக, பின்வரும் ஓரத்தலைப்பு மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"அறிவிக்கப்பட்ட சந்தைப்பகுதியில் அறிவிக்கப்பட்ட வேளாண் விளைபொருளில் வணிகம்."—

(2) உட்பிரிவு (1) —இல் "எந்தவொரு நபரும், அறிவிக்கப்பட்ட பகுதிக்குள்" —எனும் சொற்றொடருக்கு மாற்றாக "எந்தவொரு நபரும், அறிவிக்கப்பட்ட சந்தை பகுதிக்குள்" எனும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

8—A ஆம் பிரிவிற்கான திருத்தம்

5. முதன்மைச் சட்டத்தின் 8—A ஆம் பிரிவில் (1) ஆம் உட்பிரிவில், "ஏதேனும் அறிவிக்கப்பட்ட சந்தைப் பகுதியில் ஏதேனும் அறிவிக்கப்பட்ட வேளாண் விளைபொருள்" எனும் சொற்களுக்கு மாற்றாக "ஏதேனும் வேளாண் விளைபொருள்" எனும் சொற்களானது அமைக்கப்படுதல் வேண்டும்.

14—ஆம் பிரிவினை மாற்றியமைத்தல்

6. முதன்மைச் சட்டத்தின் 14ஆம் பிரிவிற்கு பின்வரும் பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது.—

"14. வேளாண்மை துணை இயக்குனர் (வேளாண் வணிகம்), அலுவல்வழி உறுப்பினராகுதல்.—

அறிவிக்கப்பட்ட பகுதியின் மீது அதிகார வரம்புரையைக் கொண்ட சந்தைப்படுத்துதல் பொறுப்பிலுள்ள வேளாண்மை துணை இயக்குநரோ (வேளாண் வணிகம்), அல்லது அறிவிக்கப்பட்ட பகுதியின் பல்வேறு பாகங்களின் மீது அதிகார வரம்பைக் கொண்ட சந்தைப்படுத்துதல் பொறுப்பில் உள்ள இரண்டு அல்லது அதிகமான வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) இருக்குமிடத்தில், இதன் பொருட்டு அரசு குறிப்பிடலாகும் அத்தகைய ஒரு வேளாண்மை துணை இயக்குநரோ (வேளாண் வணிகம்), அத்தகையப் பகுதியில் நிறுவப்பட்டுள்ள சந்தைக்குழுவின் அலுவல்வழி உறுப்பினராகுதல் வேண்டும்".

17— ஆம் பிரிவிற்கான திருத்தம்

7. முதன்மைச் சட்டத்தின் 17—ஆம் பிரிவில் "1894 ஆம் ஆண்டு நில கையகப்படுத்துதல் சட்டம்" என்ற சொற்றொடருக்குப் பதிலாக "2013 ஆம் ஆண்டு நியாய இழப்பீடு மற்றும் நிலம் கையகப்படுத்துதலில் வெளிப்படைத்தன்மை, மறுவாழ்வு மற்றும் மீள் குடியேற்றத்திற்கான உரிமைச் சட்டம் (மையச்சட்டம் 30/2013)" என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

8. முதன்மைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவில்,– 24– ஆம் பிரிவிற்கான திருத்தம்

(1) உட்பிரிவு (1)–க்கு பதிலாக பின்வருவன மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(1) ரொக்கத் தொகை அல்லது காலந்தாழ்ந்த பணக்கொடுப்பு அல்லது பிற மதிப்புடை மறுபயனுக்காகவோ வாங்கப்படும் அல்லது விற்கப்படும் அறிவிக்கப்பட்ட வேளாண் விளைபொருட்களில் வகுத்துரைக்கப்படலாகிறவாறான மொத்தத் தொகையில் ஒவ்வொரு நூறு ரூபாய்க்கும் இரண்டு ரூபாய்க்கு மிகாத வீதத்தில் அறிவிக்கப்பட்ட சந்தைப் பகுதியில் வாங்கப்பட்ட அல்லது விற்கப்பட்ட எந்தவொரு அறிவிக்கப்பட்ட வேளாண் விளைபொருளின் மீதும் சந்தைக்குழு கட்டணத்தை விதிக்கலாம்;

விளக்கம்.— இச்சட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய கட்டணத் தொகையை முடிவு செய்கையில் ஐம்பது பைசாவிற்கு குறைவான பின்னமானது புறக்கணிக்கப்படுதல் வேண்டும் மற்றும் ஐம்பது பைசாவின் பின்னம் எதுவும் அல்லது ஐம்பது பைசாவிற்கு அதிகமான பின்னம் எதுவும் ஒரு ரூபாய் எனக்கருதப்படுதல் வேண்டும்.”;

(2) உட்பிரிவுகள் (3) மற்றும் (4) விட்டுவிடப்படுதல் வேண்டும்:

(3) உட்பிரிவு (5)–க்கு பதிலாக பின்வரும் உட்பிரிவானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(3) வகுத்துரைக்கப்படலாகிறவாறான அத்தகைய அளவிற்கும் அதிகமான அறிவிக்கப்பட்ட ஒரு சந்தைப்பகுதியிலிருந்து எடுத்துச் செல்ல தீர்மானிக்கப்பட்ட யாதொரு அறிவிக்கப்பட்ட வேளாண் விளைபொருளும் சந்தைக்குழுவால் இதன் பொருட்டு அமைக்கப்பட்ட துணைவிதிகளுக்குட்பட்டு சந்தைக்குழுவின் செயலாளரால் வழங்கப்பட்ட அனுமதி துணையுடன் இருத்தல் வேண்டும்”.

9. முதன்மைச் சட்டத்தின் 33 ஆம் பிரிவில்,— 33-ஆம் பிரிவிற்கான திருத்தம்

(1) உட்பிரிவு (1) இல் உள்ள வகைமுறையில் “ஒன்பது ஆண்டு” என்ற சொற்களுக்கு மாற்றாக “ஒன்பது ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்” என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2) உட்பிரிவு (5) இன் (C) கூறுக்கு மாற்றாக பின்வரும் கூறு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

“(C) 14 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவிக்கப்பட்ட பகுதியின் மீது அதிகார வரம்பு கொண்ட சந்தைப்படுத்துதல் பொறுப்புடைய வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்)”.

10. முதன்மைச் சட்டத்தின் 35 ஆம் பிரிவில் (2) ஆம் உட்பிரிவில், (b) கூறில் “1894 ஆம் ஆண்டு நில கையகப்படுத்துதல் சட்டம் (மையச் சட்டம் I/1894),” என்ற சொற்றொடருக்கு மாற்றாக “2013 ஆம் ஆண்டின் நியாய இழப்பீடு மற்றும் நிலக் கையகப்படுத்துதலில் வெளிப்படைத்தன்மை, மறுவாழ்வு மற்றும் மீள் குடியேற்றத்திற்கான உரிமைச் சட்டம் (மையச் சட்டம் 30/2013)” என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும். 35-ஆம் பிரிவிற்கான திருத்தம்

11. முதன்மைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவில், (4) ஆம் உட்பிரிவானது விட்டுவிடப்படுதல் வேண்டும். 37-ஆம் பிரிவிற்கான திருத்தம்

12. முதன்மைச் சட்டத்தின் 37 ஆம் பிரிவிற்குப் பின்பு, பின்வரும் பிரிவானது புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது:– 37–A ஆம் பிரிவினைப் புகுத்துதல்.

“37–A. முதன்மைச் செயல் அலுவலரின் அதிகாரங்களும் செயல்பாடுகளும்:– வாரியத்தின் கண்காணிப்பிற்குட்பட்டு, முதன்மைச் செயல் அலுவலர்–

i. வாரியத்தின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது மேற்பார்வை மற்றும் கட்டுப்பாடு செய்தல்;

ii. வாரிய கூட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்தல் மற்றும் வாரிய கூட்டங்களின் நடவடிக்கைகளின் ஆவணங்களை பேணுதல் வேண்டும்;

iii. வாரியத்தின் தீர்மானங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையெனக் கருதும் அத்தகைய நடவடிக்கைகளை எடுத்தல்;

iv. சந்தைக்குழுக்களினால் மேற்கொள்ளப்பட்ட கட்டடங்களின் கட்டுமானம் அல்லது பழுதுபார்க்கும் பணிகளை மேற்பார்வை மற்றும் ஆய்வு செய்தல்; மற்றும்

v. வாரியத்தால் அவ்வப்போது இசைவளிக்கப்படலாகும் அத்தகைய பிற செயல்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்.

46–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**13.** முதன்மைச் சட்டத்தின் **46** ஆம் பிரிவில் **(5)** கூறுக்குப்பின்பு,

பின்வரும் கூறுகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது :–

**(6)** "தனியார் சந்தை முற்றம், சந்தை துணை முற்றம் மற்றும் நேரடிச் சந்தைப்படுத்துதலுக்காக உரிமத்தை வழங்குதல், புதுப்பித்தல், இடைநிறுத்தம் அல்லது நீக்கம் செய்தல்;

**(7)** 7A, 7B அல்லது 7C பிரிவுகளின் வழிவகைகள் அல்லது ஈங்கதனில் உருவாக்கப்பட்ட விதிகளை மீறுதலுக்காக குற்ற வழக்கைத் தொடங்குதல்; தொடர முயற்சித்தல்;

**(8)** சந்தைக் குழுவின் தலைவர் மற்றும் துணைத் தலைவர் மற்றும் வாரியத்தின் துணைத்தலைவர் ஆகியோரின் தேர்தல்களை சரியான நேரத்தில் மற்றும் சரியான முறையில் நடத்துதலை உறுதி செய்தல்,

**(9)** சந்தைக் குழுவின் தலைவர் அல்லது துணைத் தலைவரின் பதவி விலகலை ஏற்றுக் கொள்ளுதல்"

50–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்

**14.** முதன்மைச் சட்டத்தின் **50** ஆம் பிரிவில் "சந்தைக்குழு" என்ற சொற்களுக்கு மாற்றாக "சந்தைக்குழு அல்லது இயக்குநர், நேர்வுக்கேற்ப" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

52–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்

**15.** முதன்மைச் சட்டத்தின் **52** ஆம் பிரிவில் **(1)** ஆம் உட்பிரிவிற்கு மாற்றாக பின்வரும் உட்பிரிவு அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"**(1)** இச்சட்டத்தின் அனைத்து அல்லது ஏதேனும் வகைமுறைகள் எதனையும் நிறைவேற்றுவதற்காக அரசு விதிகளை உருவாக்கலாம்".

55–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**16.** முதன்மைச் சட்டத்தின் **55** ஆம் பிரிவில்,–

**(1)** உட்பிரிவு **(1)**–இல் "வாரியம்" என்ற சொல்லிற்கு மாற்றாக "வாரியம் அல்லது இயக்குநர் " என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

**(2)** உட்பிரிவு **(2)**–இல்,–

(i) (a) கூறில் "சந்தைக்குழு" என்ற சொற்களுக்கு மாற்றாக "சந்தைக்குழு அல்லது இயக்குநர்" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (b) கூறில் "வாரியம்" என்ற சொற்களுக்கு மாற்றாக "வாரியம் அல்லது இயக்குநர்" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

57–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**17.** முதன்மைச் சட்டத்தின் **57**ஆம் பிரிவில் "வாரியம்" என்ற சொல்லிற்கு மாற்றாக "வாரியம் அல்லது இயக்குநர்" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

58–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**18.** முதன்மைச் சட்டத்தின் **58**ஆம் பிரிவில் **(2)** ஆம் உட்பிரிவில் "இயக்குநர்" என்ற சொல்லிற்கு மாற்றாக "சந்தைக்குழு அல்லது இயக்குநர்" என்ற சொற்கள் அமைக்கப்படுதல் வேண்டும்.

59–ஆம் பிரிவிற்கானத் திருத்தம்.

**19.** முதன்மைச் சட்டத்தின **59**ஆம் பிரிவானது அப்பிரிவின்

**(1)** ஆம் உட்பிரிவாக மறு எண்ணிடப்படுதல்வேண்டும் மற்றும் அவ்வாறு **(1)** ஆம் உட்பிரிவாக மறு எண்ணிட்ட பிறகு, பின்வரும் உட்பிரிவானது சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:–

"**(2)** தனியார் சந்தை முற்றம், தனியார் சந்தை துணை முற்றம், மின் வணிகம் அல்லது நேரடி சந்தைப்படுத்துதலின் உரிமை பெற்றவரிடமிருந்து பெற வேண்டிய தொகையும் கட்டண வழியாகவோ, அல்லது மற்ற வகையிலோ நிலுவையில் உள்ள நில வருவாயை திரும்பப்பெறும் அதே முறையில் இச்சட்டத்தின் படி அல்லது விதிகளின்படி திரும்பப் பெறலாம்."

நீக்கறவு மற்றும் காப்புரை

**20. (1)** **2020** ஆம் ஆண்டின் தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2020

தமிழ்நாடு சட்டம் **27/1989**

**(2)** அத்தகைய நீக்கறவு இருந்த போதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான, முதன்மைச் சட்டத்தின் படி செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்த சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்டவாறான மேற்சொன்ன அவசரச் சட்டத்தின் படி செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**நோக்கக் காரண விளக்கவுரை**

மாநிலத்தில் வேளாண் விளைபொருட்களுக்காக சந்தைகளை உருவாக்கிடவும் அவற்றை தகுந்தவாறு நிருவகிக்கவும், வேளாண் விளைபொருட்களை வாங்குவதையும் மற்றும் விற்பனை செய்வதையும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்காக சிறந்த வகைமுறைகளைச் செய்யவும் 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டமானது (தமிழ்நாடு சட்டம் 27/1989) இயற்றப்பட்டது. முன்னதாக, வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்துதலுக்காக மின்னணு சந்தை முறையை மாநிலத்தில் அறிமுகப்படுத்தி மேற்படி சட்டம், தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டம், 2017 (தமிழ்நாடு சட்டம் 8/2017) மூலம் திருத்தம் செய்யப்பட்டது. தற்போது, மைய அரசின் மாதிரிச் சட்டத்தின் அடிப்படையில், தமிழ்நாடு சட்டம் 27/1989–இல் மாநிலம் முழுவதும் வேளாண் விளை பொருளின், புவியியல் ரீதியான தடையற்ற வணிகம் அல்லது பரிவர்த்தனை செய்வதற்கு; விவசாயிகள் அவர்களின் விளைபொருட்களை நேரம் மற்றும் இடக்கட்டுப்பாடு ஏதுமின்றி விற்க உரிமை வழங்குவதற்கு; வணிக செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கு; போட்டிச் சந்தைக்கு பன்மடங்கான வழிமுறைகள் உருவாகுவதை ஊக்குவிப்பதற்கு; மாநிலத்தில் சந்தைகளையும் அவற்றின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு முதலீடுகளை ஊக்குவிப்பதற்காகவும் தகுந்த மாற்றங்களை மேற்கொள்வது தேவையானதாகிறது. தனியார் சந்தை முற்றங்கள், தனியார் சந்தை துணை முற்றங்களை நிறுவுவதற்கான வகைமுறைகள், நேரடி சந்தைப்படுத்துதலுக்கு வழிவகுக்கும் சேகரிப்பு மற்றும் திரட்டல் மையங்கள் நிறுவுவது ஆகியவையும் மேற்சொன்ன நோக்கத்தினை அடைவதற்கு தேவையானதாகிறது.

2. மேற்கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 27/1989–ன் 33 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சந்தைக் குழுக்களின் விவகாரங்களை நிர்வகிக்க பணியமர்த்தப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக் காலமானது 29.05.2020 அன்று காலாவதியாகிவிட்டது மற்றும் சந்தைக் குழுக்களுக்கு உறுப்பினர்களை தேர்வு செய்ய இன்னும் சில காலம் தேவைப்பட்டது. எனவே, 29.05.2020–க்கு அப்பால் மேலும் ஆறு மாதங்கள் காலம் அல்லது சந்தைக் குழுக்களை மீள் உருவாக்கம் செய்திடும் வரையில் எது முந்தையதோ அது வரையில் மேற்கூறப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்காலத்தை நீட்டிக்க வேண்டியது கட்டாய தேவையாகின்றது.

3. எனவே, மேற்சொன்ன நோக்கத்திற்காக கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 27/1989–ஐ திருத்துவதென அரசு முடிவு செய்தது.

4. மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக, 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருட்கள் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் (தமிழ்நாடு அவசரச் சட்டம் 6/2020), 2020 ஆம் ஆண்டு மே திங்கள் 28 ஆம் நாளன்று ஆளுநரால் பிரகடனப்படுத்தப்பட்டு, அது 2020 ஆம் ஆண்டு மே திங்கள் 29 ஆம் தேதியிட்ட ***தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில்*** வெளியிடப்பட்டது.

5. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன அவசரச் சட்டத்தை மாற்றியமைக்க விழைகிறது.

**இரா. துரைக்கண்ணு,**
*வேளாண்மைத்துறை அமைச்சர்.*

Secretariat, Chennai
செப்டம்பர் 16, 2020

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/2020**

**சென்னை போயஸ் தோட்டத்தில் உள்ள (மறைந்த) தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் வாழ்ந்து வந்த "வேதா நிலையத்தை", அறக்கட்டளையாக மாற்றுவதற்காக நீண்ட கால ஏற்பாடுகள் செய்து நினைவில்லத்தை நிறுவுவதற்கும் அதனைப் பேணிக்காத்து மேலாண்மை செய்வதற்கும், அது தொடர்பான அல்லது அதற்கு இடைவிளைவான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கானதொரு சட்ட முன்வடிவு.**

சென்னை போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள, (மறைந்த) முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் வசித்த இடமான "வேதா நிலையத்தை", தமிழ்நாடு மக்களுக்காக, அவர்களின் சாதனைகள் மற்றும் தியாகங்களின் நினைவாக, நினைவிடமாக மாற்றப்படுவதற்கும் பொதுமக்களுக்காக திறக்கப்படுவதற்கும் 17.08.2017 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டதாலும்;

மற்றும் 2013ஆம் ஆண்டு, நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படையாக நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தச் சட்டத்தின் (மத்திய சட்டம் 30/2013) கீழ் மாநில அரசால் மேற்சொன்ன நிலம் மற்றும் கட்டிடத்தை கையகப்படுத்தப்பட்டுள்ளதாலும்;

மற்றும் மேற்சொன்ன நிலம் மற்றும் அறைகலன்கள், புத்தகங்கள், அணிகலன்கள் முதலிய அசையும் பொருட்கள் உள்ளடங்கலான கட்டடம் போன்றவை மூன்று ஆண்டுகளுக்கு மேலாக பயனற்று இருப்பதாலும்; அவை உரிய முறையில் பராமரிக்கப்படாமலிருப்பதால் அவை சேதமடைவதிலிருந்தும் அழிவடைவதிலிருந்தும் உடனடியாகத் தடுக்கப்பட வேண்டியது அவசியமாக இருப்பதாலும்;

மற்றும் ஒரு நினைவிடத்தை நிறுவுவதற்கும், அதனை ஒரு நினைவு இல்லமாக மாற்றுவதற்காக, நீண்டகால ஏற்பாடுகளைச் செய்து "வேதா நிலையத்தை" ஒப்படைக்கவும், அதனைப் பேணிக்காத்து பராமரிப்பதற்காக மாநில அரசிற்கு மேற்சொன்ன அசையும் பொருட்களை உடைமைமாற்றம் செய்வதற்கு மாநில அரசானது முடிவு செய்துள்ளதாலும்;

இந்திய குடியரசின் எழுபத்தி ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:-

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டமானது, 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளைச் சட்டம் என்று வழங்கப்பெறும்.

(2) இது, 2020ஆம் ஆண்டு மே திங்கள் 22ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்திருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,—

(a) "உரிமை கோரும் ஆணையர்" என்பது 10ஆம் பிரிவின் கீழ் நியமனம் செய்யப்பட்ட உரிமை கோரும் ஆணையர் என்று பொருள்படும்;

(b) "அறக்கட்டளை" என்பது, 4—ஆம் பிரிவின் கீழ் நிறுவப்பட்ட புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளை என்று பொருள்படும்;

(c) "அரசு'' என்பது, மாநில அரசு என்று பொருள்படும்;

(d) "வகுத்துரைக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் கீழ் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(e) "சொத்து" என்பது, சென்னை போயஸ் கார்டனில் அமைந்துள்ள (மறைந்த) முன்னாள் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் வசித்த இடமான "வேதா நிலையம்" ஆகும். மேலும் குறிப்பாக, இணைப்புப் பட்டியலின் பகுதி—அ-வில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் இணைப்புப் பட்டியலின் பகுதி—ஆ-வில் குறிப்பிடப்பட்டுள்ள நூல்கள், அறைகலன்கள், அணிகலன்கள் மாதிரியான அசையும் சொத்துக்கள் உள்ளடங்கலான மற்றும் பிற பொருட்கள் என்று பொருள்படும்;

(f) "இணைப்புப் பட்டியல்'' என்பது, இந்தச் சட்டத்தின் இணைப்புப் பட்டியல் என்று பொருள்படும்.

சொத்தின் உரிமை மாற்றம்.

**3.** **(1)** இணைப்புப் பட்டியலின் பகுதி–ஆ-வில் குறிப்பிடப்பட்டுள்ள அசையும் சொத்துக்கள் தொடர்பான நபர் எவரின் உரிமை, உரிமை மூலம் மற்றும் உரித்தமானது. இந்தச் சட்டத்தின் காரணமாக அரசிடம் உரிமை மாற்றம் செய்யப்பட்டு அதனிடம் உற்றமைந்திருத்தல் வேண்டும்.

**(2)** அரசானது, அறிவிக்கையின் வாயிலாக **2013**ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படையாக நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தச் சட்டத்தின்படி அரசினால் கையகப்படுத்தப்பட்ட இணைப்புப் பட்டியலில் பகுதி–அ-வில் குறிப்பிடப்பட்டுள்ள அசையாச் சொத்து மற்றும் பகுதி–ஆ-வில் குறிப்பிடப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை அறக்கட்டளைக்கு உரிமை மாற்றம் செய்யலாம்.

**(3)** அரசானது, இணைப்புப் பட்டியலின் பகுதி–ஆ–வில் குறிப்பிடப்பட்டுள்ள அசையும் சொத்துக்களை மதிப்பீடு செய்து உரிமை கோரும் ஆணையரிடம் தொகையினை வைப்பீடு செய்தல் வேண்டும்.

அறக்கட்டளையை நிறுவுதல்.

**4.** (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக இந்தச் சட்டத்தின் நோக்கத்திற்காக, புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா அறக்கட்டளை என்று அழைக்கப்படும் ஒரு நினைவு அறக்கட்டளையை நிறுவலாம்.

(2) அறக்கட்டளையானது, மேற்சொன்ன பெயரில் தொடர்ந்த நிலைப்பாடும், தனியுறு இலச்சினையும் கொண்டு அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களாகிய இரண்டையும் ஈட்டுவதற்கு, வைத்திருப்பதற்கு மற்றும் அயலடைவு செய்வதற்கான மற்றும் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கான அதிகாரத்துடன் ஒரு கூட்டுருக்குழுமமாக இருத்தல் வேண்டும் மற்றும் மேற்சொன்ன பெயரால் வழக்கிடுதலும், வழக்கிடப்படுதலும் வேண்டும்.

(3) அறக்கட்டளையானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும், அதாவது:-

(a) மாண்புமிகு முதலமைச்சர் –தலைவர்;

(b) மாண்புமிகு துணை முதலமைச்சர்;

(c) மாண்புமிகு அமைச்சர் (செய்தி மற்றும் விளம்பரம்) ;

(d) அரசு தலைமைச் செயலாளர்;

(e) நிதித்துறை அரசுச் செயலாளர் ;

(f) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர்;

(g) பொதுப்பணித்துறை, தலைமைப் பொறியாளர்(கட்டடங்கள்);

(h) அருங்காட்சியகத்தின் இயக்குநர்;

(i) (மறைந்த) முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையேற்றிருந்த அரசியல் கட்சியின் உறுப்பினர்களுக்கிடையிலிருந்து, அக்கட்சியுடன் ஆலோசனை செய்து அரசால் நியமிக்கப்படக்கூடிய ஆறு உறுப்பினர்கள்;

(j) செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் – உறுப்பினர் செயலாளர்.

(4) நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகள் ஆகும் மற்றும் அவர்கள் மறு நியமனத்திற்கு தகுதியுடைவராகுதல் வேண்டும்.

(5) (a) அறக்கட்டளையானது,–

(i)இணைப்புப்பட்டியல்பகுதி–அ-வில்குறிப்பிடப்பட்டுள்ளஅசையாச் சொத்துக்களை நல்ல நிலையில் நிர்வகிக்க மற்றும் மேலும் தேவைப்படும்போதெல்லாம் பழுதைச் சரிசெய்ய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்;

(ii) இணைப்புப் பட்டியலின் பகுதி–ஆ-வில் குறிப்பிடப்பட்டுள்ள அசையும் சொத்துக்கள் அனைத்தையும் பராமரித்து பேணிக்காத்து பாதுகாத்தலுக்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்;

(iii) சொத்தினைத் திருட்டு, தீ விபத்து அல்லது பிற சேதங்களிலிருந்து பாதுகாப்பதற்கு தகுதியானது என்று கருதும் முன்னேற்பாடு நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்;

(iv) நினைவிடமாக சொத்துக்களை மாற்றம் செய்வதற்கான செயல் திட்டம் தயாரித்தல் மற்றும் அதனை அரசின் ஒப்புதலுக்காக அனுப்புதல் வேண்டும்;

(v) **3** ஆம் பிரிவின் **(2)** ஆம் உட்பிரிவின் கீழ் நினைவிடச் சொத்தினை அறக்கட்டளையாக உரிமை மாற்றம் செய்யும்போது சொத்தினை உரிமை மாற்றத்தின் மற்றும் செயல்திட்டத்தின் ஒப்புதலுக்காகவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்;

(b) அறக்கட்டளையானது நன்கொடைகள் பெறவும் மற்றும் நபர் எவரிடமிருந்தும் அரசு உள்ளடலங்கலாக மானியங்கள் பெறவும் உரிமையுடையதாகும் மற்றும் அது தக்கதெனக் கருதும் முறையில் நிதியைத் திரட்டுவதற்கும் உரிமையுடையதாகும்.

ஊதியம் மற்றும் படிகள்.

**5.** அறக்கட்டளையின் தலைவர் மற்றும் பிற உறுப்பினர்கள் ஊதியம் மற்றும் படிகள் எவற்றையும் பெற உரிமையற்றவராவர்;

வரம்புரையாக, நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள், வகுத்துரைக்கப் படலாகும் அத்தகைய கட்டணம் மற்றும் படிகளைப் பெறுவர்.

கூட்டங்கள்.

**6.** **(1)** அறக்கட்டளையானது, தலைவரால் நிர்ணயிக்கப்படலாகும் அத்தகைய நேரத்தில் ஆண்டிற்கொரு முறையாவது கூடுதல் வேண்டும்.

**(2)** அறக்கட்டளையின் கூட்டம் எதிலும் எடுக்கப்படும் அனைத்து முடிவுகளும், வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் பெரும்பான்மையினால் எடுக்கப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக, வாக்குகள் சமமாக இருக்கும் நேர்வில், அறக்கட்டளையின் தலைவர் அறுதி செய்யும் வாக்கினை அளிக்கலாம்.

காலியிடங்கள் முதலியவை நினைவிடத்தின் நடவடிக்கைகளை செல்லா நிலையதாக்காது.

**7.** அறக்கட்டளையின் செயல் அல்லது நடவடிக்கைகளானது, அதன் உறுப்பினர்களிடையே ஏதேனும் காலியிடம் அல்லது அதன் அமைத்துருவாக்கத்தில் ஏதேனும் குறைபாடு ஆகியவை இருப்பதன் காரணத்தினாலோ மட்டுமே செல்லா நிலையது ஆகாது.

நினைவிடத்தின் அலுவலர்கள்.

**8.** **(1)** அரசானது, அறக்கட்டளை தலைவரின் கீழ் வகுத்துரைக்கப்படலாகும் அல்லது தலைவரால் அவருக்கு ஒப்படைக்கப்படலாகும் அத்தகைய கடமையை நிறைவேற்றுவதற்கும், அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் அரசு இணைச் செயலாளர் பதவிக்குக் குறையாத அலுவலர் ஒருவரை அறக்கட்டளைக்குச் செயலாளராக நியமிக்கலாம்.

**(2)** செயலாளரின் பதவிக்காலம் மற்றும் பிற பணி நிபந்தனைகள் அத்தகைய வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

**(3)** வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய கட்டுப்பாடுகள், வரையரைகள் நிபந்தனைகளுக்குட்பட்டு அறக்கட்டளையானது அதன் செய்கடமைகளை திறம்பட நிகழ்த்துவதற்காக தேவைப்படலாகும் அத்தகைய பிற அலுவலர்கள் மற்றும் பணியாளர்களை பணியமர்த்தலாம்.

நிர்வாகக் குழு.

**9.** **(1)** அறக்கட்டளையின் அலுவல்களை நிர்வாகிக்கும் நோக்கத்திற்காக, அறக்கட்டளையானது, கூட்டம் ஒன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம் நிர்வாகக் குழுவை நியமித்து அத்தகைய தீர்மானத்தில் குறித்துரைக்கப்படலாகும் மற்றும் அத்தகைய அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பணிகளை அவற்றிற்கு ஒப்படைக்கலாம்.

(2) அறக்கட்டளையானது, தீர்மானத்தின் மூலம், எந்தவொரு நபரையும், அத்தகைய நபர், அறக்கட்டளையின் உறுப்பினராக இருந்தாலும் இல்லாவிட்டாலும், நிர்வாகக் குழுவின் உறுப்பினராக நியமிக்கலாம் மற்றும் அவ்வப்போது, இந்தப் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட எந்தவொரு தீர்மானத்தையும் வேறுபடுத்தலாம் அல்லது ரத்து செய்யலாம்.

உரிமை கோரும் ஆணையரை நியமித்தல்.

10. (1) அரசானது, பகுதி–ஆ-வில் குறிப்பிடப்பட்ட அசையும் சொத்துகளின் மீது நபர் எவரும் உரிமை கோருவதை முடிவு செய்யும் நோக்கத்திற்காக அறிவிக்கையின் வாயிலாக, ஓர் உரிமை கோரும் ஆணையரை நியமித்தல் வேண்டும்.

(2) உரிமை கோரும் ஆணையரானவர், உரிமை கோரிக்கைகளை பெறுவதற்காகவும் முடிவு செய்வதற்காகவும் தன்னுடைய சுய நடைமுறையை முறைப்படுத்தலாம்.

(3) கூறப்பட்ட அசையும் சொத்துக்களின் மீது உரிமை கோரும் நபர் எவரும் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் உரிமை கோரும் ஆணையரிடம் கோரிக்கை ஒன்றினை வைக்கலாம்.

வரம்புரையாக, உரிமைகோருபவர் கூறப்பட்ட தொண்ணூறு நாட்களுக்குள் உரிமை கோரிக்கை செய்வதிலிருந்து போதிய காரணத்தினால் தடுக்கப்பட்டிருந்தார் என உரிமை கோரும் ஆணையர் மனநிறைவு அடைவாரானால், அவர் மேலும் அறுபது நாட்கள் கால அளவிற்குள் உரிமை கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளலாம் மற்றும் அதன்பின்பு உரிமைகோர முடியாது.

அறக்கட்டளையின் தலைவர் உறுப்பினர்கள் முதலானோர் அரசுப் பணியாளர்கள் ஆவர்.

11. அறக்கட்டளையின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் மற்றும் அறக்கட்டளையின் உரிமை கோரும் ஆணையர், செயலாளர் மற்றும் பிற அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், இச்சட்டத்தின் ஏதேனும் வகைமுறைகளின் பின்பற்றுதலைச் செய்யும்போது அல்லது செய்ய முற்படும்போது, இந்திய தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் பொருளின்படி அரசுப் பணியாளர்களாகக் கருதப்படுவர். மத்திய சட்டம் XLV 1860.

அரசுப் பணியாளர் எவராலும் நல்லெண்ணத்தில் எடுக்கப்படும் நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

12. உரிமை வழக்கு, குற்ற வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும், இந்த சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும் அரசுப் பணியாளருக்கெதிராக, அவரின் அலுவல் கடமையாற்றுகையில் அல்லது அவரின் அதிகாரங்களைச் செலுத்துகையில் தொடரப்படுதல் ஆகாது.

விதிகளை செய்வதற்கான அதிகாரம்.

13. (1) அரசானது, அறிவிக்கையின் வாயிலாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்குச் செயல்திறம் அளிப்பதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் மற்றும் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அல்லது ஆணைகள் அனைத்தும் ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படுதல் வேண்டும் மற்றும் அவை குறிப்பிட்டதொரு நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டுமென வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலன்றி, அவை அவ்வாறு வெளியிடப்பட்ட நாளில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அல்லது ஆணை ஒவ்வொன்றும், அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும், மற்றும் அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தொடரின் காலமுடிவிற்கு முன்னர் அல்லது அடுத்த கூட்டத் தொடரில் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை எவற்றிலும் பேரவை மாற்றம் எதையும் ஏற்படுத்தினால், அல்லது அவ்விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணை ஏற்படுத்தப்பட அல்லது வழங்கப்பட கூடாதென பேரவையானது முடிவு செய்தால், அதன்பின்பு, அவ்விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையானது, நேர்வுக்கேற்ப, அவ்வாறு மாற்றிய வடிவத்தில் செயல்வடிவம் கொண்டிருத்தல் வேண்டும் அல்லது செயல்வடிவம் பெறாது போதல் வேண்டும். எனவே, எனினும், அவ்விதி அல்லது அறிவிக்கை அல்லது ஆணையின் கீழ் முன்னதாக செய்யப்பட்ட எவற்றின் செல்லுந்தன்மைக்கு ஊறுபயக்காதவாறு அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் இருத்தல் வேண்டும்.

**14.** இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்பாடு எதுவும் எழுமானால், அரசானது, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் இந்த இடர்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ தோன்றுகிற அத்தகைய வகைமுறைகளைச் செய்யலாம். இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

வரம்புரையாக, இந்தச் சட்டம் தொடங்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கால அளவு முடிவடைந்த பின்னர், அத்தகைய ஆணை எதுவும் பிறபிக்கப்படுதல் ஆகாது.

**15.** அரசானது, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு செயல்வடிவம் அளிப்பதற்காக தனக்கு தக்கதெனத் தோன்றும் அத்தகைய பணிப்புரைகளை அவ்வப்போது வழங்கலாம். பணிப்புரைகளை வழங்குவதற்கு அதிகாரம்.

தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2020 **16.** **(1)** **2020**ஆம் ஆண்டு தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளை அவசரச் சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது. நீக்கறவு மற்றும் காப்புரை.

**(2)** அத்தகைய நீக்கறவு இருந்தபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதுவும் எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், அல்லது பிறப்பிக்கப்பட்ட கட்டளை எதுவும் இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்டிருப்பதாக அல்லது எடுக்கப்பட்டிருப்பதாக அல்லது பிறப்பிக்கப்பட்டதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**இணைப்புப் பட்டியல்**

**(3ஆம் பிரிவைக் காண்க)**

**பகுதி –அ**

**அசையாச் சொத்து**

| | |
|---|---|
| வட்டம் | மயிலாப்பூர் |
| நகரம் | மயிலாப்பூர் I |
| வட்டார எண் மற்றும் நில அளவை எண் | வட்டார எண்.31, நில அளவை எண் 1567/50. |
| நகராட்சிக் கதவு எண் | 36/81. |
| நிலத்தின் வகைப்பாடு | இரயத்துவாரி மனை உரிமைத் துறப்பு வரி. |
| பரப்பளவு | 0.22.60.0 ஹெக்டேர் |
| எல்லைகள் | வடக்கு 1567/1 |
| | கிழக்கு 1567/1, 1567/63, 1567/64 மற்றும் 1567/43 |
| | தெற்கு 1567/73 |
| | மேற்கு 1567/1 |
| கட்டமைப்புகள் | 3 அடுக்கு கட்டடம் (தரைத்தளம் +2 தளங்கள்) |
| மரங்கள் | மாமரங்கள்–2, பலாமரம்–1, தென்னை மரங்கள்–5, வாழை மரங்கள்–5 |
| உரிமையாளர் | (மறைந்த) முன்னாள் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா |

## பகுதி – ஆ

## அசையும் சொத்துக்கள்

| வ.எண் | இனங்களின் பெயர் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தங்கம் | 14 இனங்கள் = 4 கிலோ மற்றும் 372 கிராம்கள். |
| 2. | வெள்ளி | 867 இனங்கள்= 601 கிலோ மற்றும் 424 கிராம்கள். |
| 3. | வெள்ளி இனங்கள் (சிறு பாத்திரங்கள்) | 162 இனங்கள் |
| 4. | தொலைக்காட்சிகள் | 11 |
| 5. | குளிர்பதனப்பெட்டி | 10 |
| 6. | காற்று கட்டுப்பாட்டு கருவிகள் | 38 |
| 7. | அறைகலன் (சமையல் அறை அலமாரிகள் நீங்கலாக) | 556 |
| 8. | சமையலரைப் பாத்திரங்கள் | 6514 |
| 9. | சமையலரை அலமாரிகள் மற்றும் அறைகலன்கள் | 12 |
| 10. | வெட்டுக் கருவிகள் (காட்சிப்பெட்டி) | 1055 |
| 11. | பூஜைப் பாத்திரங்கள் | 15 |
| 12. | துணி வகைகள்/துண்டுகள்/படுக்கை விரிப்பு/பிற துணி வகைகள்/தலையணை உறைகள்/ திரைச்சீலைகள்/ காலணிகள் | 10438 |
| 13. | தொலைபேசிகள்/கைபேசி | 29 |
| 14. | சமையலறை மின்சாதனப் பொருள்கள் | 221 |
| 15. | மின் தொடர்பு சாதனங்கள் | 251 |
| 16. | நூல்கள் | 8376 |
| 17. | நினைவுப் பரிசுகள் | 394 |
| 18. | உரிமம், நீதிமன்ற ஆவணங்கள் மற்றும் வருமான வரி அறிக்கை போன்ற ஆவணங்கள் | 653 |
| 19. | எழுது பொருட்கள் | 253 |
| 20. | அலங்கரிக்கப்பட்ட துணைப்பொருட்கள் | 1712 |
| 21. | சுமந்து செல்லும் பெட்டி (உடைப்பெட்டி) | 65 |
| 22. | அழகு சாதனப் பொருட்கள் | 108 |
| 23. | கடிகாரங்கள் | 6 |
| 24. | கெனான் நகலெடுக்கும் இயந்திரம் 2525 | 1 |
| 25. | ஒளி அச்சுப்பொறி T 1588 | 1 |
| 26. | இதர இனங்கள் | 959 |
| | **மொத்தம்** | **32721** |

**நோக்கக் காரண விளக்கவுரை**

சென்னை போயஸ் தோட்டத்தில் அமைந்துள்ள (மறைந்த) தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா அவர்கள் வசித்த இடமான ''வேதா நிலையத்தை'' தமிழ்நாட்டு மக்களுக்கு அவர் செய்த சாதனைகள் மற்றும் தியாகங்களை நினைவுகூறும் விதத்தில் நினைவிடமாக மாற்றப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 17.08.2017 அன்று அறிவித்தார்.

2. 2013ஆம் ஆண்டு நிலம் கையகப்படுத்துவதில் நியாயமான இழப்பீடு மற்றும் வெளிப்படையாக நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு மற்றும் மறுகுடியமர்த்தச் சட்டத்தின் (மத்திய சட்டம் 30/2013) கீழ் மேற்சொன்ன நிலம் மற்றும் கட்டடம் கையகப்படுத்துதல் நிலுவையிலுள்ளபோது மாநில அரசுக்கு தற்காலிகமாக வேதா நிலையத்தை உடைமை மாற்றம் செய்வதற்காகவும், மாநில அரசிடம் வேதா நிலையத்தில் அடங்கியுள்ள அசையும் சொத்துக்களான அறைகலன்கள், நூல்கள், அணிகலன்கள் போன்றவற்றின் உரிமை மாற்றம் மற்றும் ஒப்படைப்பதற்காகவும் மற்றும் ஒரு நினைவில்லத்தை உருவாக்கி அதனை ஒரு நினைவுச் சின்னமாக மாற்றுவதற்காக, நீண்ட கால ஏற்பாடுகளைச் செய்வதற்காகவும் வகைசெய்து 2020ஆம் ஆண்டு தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளை அவசரச் சட்டமானது (தமிழ்நாடு அவசரச் சட்டம் 3/2020) 2020ஆம் ஆண்டு மே திங்கள் 21 ஆம் நாளன்று ஆளுநரால் பிரகடனப்படுத்தப்பட்டது.

3. தற்போது, மேற்சொன்ன நிலம் மற்றும் கட்டடம், கூறப்பட்ட மத்திய சட்டம் 30/2013–இன் கீழ் மாநில அரசால் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

4. இந்தச் சட்ட முன்வடிவானது, மேற்சொன்ன அடுத்தடுத்துவரும் வளர்ச்சியினைக் கருத்தில் கொண்டு கூறப்பட்ட அவசரச் சட்டத்தினை மாற்றியமைக்க விழைகிறது.

**கடம்பூர் ராஜூ,**
*செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.*

**சட்டமியற்று அதிகார ஒப்படைவு பற்றிய குறிப்பு.**

இந்தச் சட்ட முன்வடிவின் 1 (2), 3 (2), 4 (1), 5, 8, 10 (1), 13, 14 மற்றும் 15ஆம் கூறுகளானது அதில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நேர்விற்கேற்ப அறிவிக்கை அல்லது ஆணைகள் அல்லது பணிப்புரைகளை அல்லது விதிகளை உருவாக்குவதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கிறது.

2. ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரங்கள் இயல்பானவையேயன்றி தனித்தன்மை வாய்ந்தவையல்ல.

**கடம்பூர் ராஜூ,**
*செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.*

**நிதி பற்றிய குறிப்பு**

**2020** ஆம் ஆண்டு தமிழ்நாடு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ ஜெயலலிதா நினைவு அறக்கட்டளைச் சட்ட முன்வடிவானது இயற்றப்பட்டுச் செயற்பாட்டிற்கு கொண்டு வரப்படும்போது இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் மாநிலத்தின் தொகுப்பு நிதியிலிருந்து செலவு செய்ய நேரிடும். எனினும் கருதப்பட்டுள்ள இச்சட்டத்தை இயற்றுவதன் விளைவாக ஏற்படக்கூடிய செலவினத்தை இந்த நிலையில் எந்தக் கோணத்திலும் துல்லியமாக மதிப்பிட இயலாது.

**கடம்பூர் ராஜூ,**
*செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர்.*

Secretariat, Chennai
**2020** செப்டம்பர் **15.**

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

2020—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16—ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130—ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/2020**

**2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தினை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்து ஒன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2020—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரி (திருத்தச்) சட்டம் என அழைக்கப்பெறும்.

(2) இது 2020—ஆம் ஆண்டு மே திங்கள் 4—ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 32/2006.

இரண்டாம் இணைப்புப் பட்டியலுக்கான திருத்தம்.

2. 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப்பட்டியலில்,—

(1) வரிசை எண் 6—க்கு எதிராக, (4)—ஆம் நெடும்பத்தியில், ''34 விழுக்காடு'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''15 விழுக்காடு உடன் லிட்டருக்கு 13.02 ரூபாய்கள்'' என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(2) வரிசை எண் 7—க்கு எதிராக, (4)—ஆம் நெடும்பத்தியில், ''25 விழுக்காடு'' என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''11 விழுக்காடு உடன் லிட்டருக்கு 9.62 ரூபாய்கள்'' என்ற சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்.

**நோக்க—காரண விளக்கவுரை.**

உலகப் பொருளாதாரமானது, சுழல்முறை விளைவுகளின் காரணமாக அண்மை காலங்களில் குறைந்து வருகிறது. இந்த நிலை தற்போது உலகெங்கிலும் பரவியுள்ள அண்மையிலான கோவிட்—19 பெருந்தொற்றுநோயுடன் மேலும் இணைந்ததன் விளைவாக உலகச் சந்தைகளில் குழப்பம் ஏற்பட்டுள்ளது. இது உலகளாவிய எரிசக்தி சந்தைகளில் எதிரான தாக்கத்தை உண்டாக்கும் மற்றும் பெட்ரோலிய கச்சா மற்றும் பெட்ரோலிய பொருட்களின் விலையில் அசாதாரண மாற்றங்களை எதிர்வருகின்ற காலத்தில் ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. மாநில நிதிகளைப் பாதுகாக்கவும், இந்தப் பொருட்களின் மீது நுகர்வோர் சார்ந்திருப்பதை குறைக்கவும், சேர்மங்களுடனோ அல்லது இல்லாமலோ உள்ள பெட்ரோலைப் பொருத்த வகையில், 34 விழுக்காட்டிலிருந்து '15 விழுக்காடு விலை மதிப்பீட்டின்படியான வரி உடன் லிட்டருக்கு 13.02 ரூபாய்கள் குறிப்பிட்ட வரிக்கும்'; மற்றும் அதிவேக டீசல் எண்ணெய்க்கு, 25 விழுக்காட்டிலிருந்து, '11 விழுக்காடு விலை மதிப்பீட்டின்படியான வரி உடன் லிட்டருக்கு 9.62 ரூபாய்கள் குறிப்பிட்ட வரிக்கும்' என தற்போதுள்ள வரி முறையை மாற்றுவதென அரசானது முடிவு செய்தது.

2. மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுப்பதற்காக, அந்தச் சட்டத்தின் இரண்டாம் இணைப்புப் பட்டியலைத் திருத்துவதற்கு 2006—ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86—ஆம் பிரிவின் (1)—ஆம் உட்பிரிவின்படி அறிவிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. கூறப்பட்ட சட்டத்தின் 86—ஆம் பிரிவின் (2)—ஆம் உட்பிரிவின்படி தேவைக்கேற்ப, மேற்சொன்ன அறிவிக்கையை மாற்றியமைப்பதற்கானதொரு சட்டமுன்வடிவை சட்டமன்ற பேரவையில் அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும்.

3. இந்தச் சட்டமுன்வடிவானது மேற்சொன்ன முடிவிற்கு செயல்வடிவம் கொடுக்க விழைகிறது.

**கே. சி. வீரமணி**
*வணிகவரித் துறை அமைச்சர்*

2020–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 16–ஆம் நாளன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்வரும் சட்டமுன்வடிவு, நோக்க காரண விளக்கவுரையுடன் சேர்த்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 130–ஆம் விதியின் கீழ் பொதுத் தகவலுக்காக வெளியிடப்படுகின்றது.

**சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/2020**

**2020–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டமுன்வடிவு.**

இந்தியக் குடியரசின் எழுபத்தொன்றாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

1. இந்தச் சட்டம், 2020–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 4) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பு.

2. மாநில அரசு, 2020–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவைப்படுகிற பன்னிரெண்டு ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்து ஐந்து கோடியே பத்தொன்பது இலட்சத்து எழுபத்து ஐந்தாயிரம் ரூபாய்க்கு மேற்படாத மேலுமானதொரு தொகையை–

2020–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்திலிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

(a) இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

## இணைப்புப் பட்டியல்.

(2–ஆம் பிரிவைக் காண்க).

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) (ரூ.) | *(4)* (ரூ.) | (5) (ரூ.) |
| 1 | மாநிலச் சட்டமன்றம் | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 38,90,000 | ... | 38,90,000 |
| 3 | நீதி நிருவாகம் | வருவாய் | 2,000 | ... | 2,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 4 | ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 11,000 | ... | 11,000 |
| | | மூலதனம் | 12,01,05,000 | ... | 12,01,05,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 5 | வேளாண்மைத் துறை | வருவாய் | 34,96,86,000 | ... | 34,96,86,000 |
| | | மூலதனம் | 11,00,10,000 | ... | 11,00,10,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 82,59,82,000 | ... | 82,59,82,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) (ரூ.) | (4) (ரூ.) | (5) (ரூ.) |
| 7 | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 8 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 4,92,75,000 | ... | 4,92,75,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 9,000 | ... | 9,000 |
| | | மூலதனம் | 7,27,65,000 | ... | 7,27,65,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 11 | முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 3,400,91,82,000 | ... | 3,400,91,82,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 103,25,00,000 | ... | 103,25,00,000 |
| 14 | எரிசக்தித் துறை | வருவாய் | 101,41,78,000 | ... | 101,41,78,000 |
| | | மூலதனம் | 437,00,00,000 | ... | 437,00,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 16 | நிதித் துறை | வருவாய் | 5,00,06,000 | ... | 5,00,06,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) (ரூ.) | *(4)* (ரூ.) | (5) (ரூ.) |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | வருவாய் | 1,109,62,09,000 | ... | 1,109,62,09,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 20 | உயர் கல்வித் துறை | வருவாய் | 190,95,03,000 | ... | 190,95,03,000 |
| | | மூலதனம் | 12,00,00,000 | ... | 12,00,00,000 |
| | | கடன் | 1,76,46,000 | ... | 1,76,46,000 |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | 16,000 | ... | 16,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 22 | காவல் (உள்துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 6,000 | ... | 6,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 26 | வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 32,20,13,000 | ... | 32,20,13,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 27 | தொழில் துறை | வருவாய் | 7,50,00,000 | ... | 7,50,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 170,28,00,000 | ... | 170,28,00,000 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 1,51,46,000 | ... | 1,51,46,000 |
| | | மூலதனம் | 67,88,60,000 | ... | 67,88,60,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 29 | சுற்றுலா – கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை) | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | வருவாய் | 21,000 | ... | 21,000 |
| | | மூலதனம் | 2,00,00,000 | ... | 2,00,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 33 | சட்டத் துறை | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
| (1) | (2) | | (3) | *(4)* | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 1,005,30,78,000 | ... | 1,005,30,78,000 |
| | | மூலதனம் | 15,16,00,000 | ... | 15,16,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 2,000 | ... | 2,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 38 | பொதுத் துறை | வருவாய் | 6,74,89,000 | ... | 6,74,89,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 39 | கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) | வருவாய் | 3,000 | ... | 3,000 |
| | | மூலதனம் | 192,59,06,000 | ... | 192,59,06,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 40 | பாசனம் (பொதுப் பணித் துறை) | வருவாய் | 11,000 | ... | 11,000 |
| | | மூலதனம் | 1,00,33,000 | *28,02,72,000* | 29,03,05,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 41 | வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை | வருவாய் | 213,83,08,000 | *11,10,000* | 213,94,18,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 12,50,000 | ... | 12,50,000 |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 1,110,55,34,000 | ... | 1,110,55,34,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 5,000 | ... | 5,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | *(4)* | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை | வருவாய் | 100,00,00,000 | ... | 100,00,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | வருவாய் | 99,30,000 | ... | 99,30,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 48 | போக்குவரத்துத் துறை | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | 82,15,00,000 | ... | 82,15,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 6,15,00,000 | ... | 6,15,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 50 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | வருவாய் | 4,227,03,00,000 | ... | 4,227,03,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 52 | மாற்றுத் திறனாளிகள் நலத் துறை | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | 2,26,06,000 | ... | 2,26,06,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 54 | வனம் (சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை) | வருவாய் | 2,000 | ... | 2,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | 56,67,00,000 | ... | 56,67,00,000 |
| | கடன் செலவுகள் | வருவாய் | ... | *2,000* | 2,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண் | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது | *மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்டது* | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | *(4)* | (5) |
| | | | (ரூ.) | (ரூ.) | (ரூ.) |
| | மொத்தம் | வருவாய் | 11,642,24,01,000 | *11,12,000* | 11,642,35,13,000 |
| | | மூலதனம் | 842,34,04,000 | *28,02,72,000* | 870,36,76,000 |
| | | கடன் | 332,47,86,000 | ... | 332,47,86,000 |
| | பெருமொத்தம் | | 12,817,05,91,000 | *28,13,84,000* | 12,845,19,75,000 |

**<u>நோக்க—காரண விளக்கவுரை.</u>**

இச்சட்ட முன்வடிவானது—

(a) 2020—ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1—ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டிற்காக தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் அனுமதிக்கப்பட்ட துணை மானியங்களையும்;

(b) அந்த ஆண்டிற்காக, மாநிலத் தொகுநிதியத்தின்மீது சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும்,

எதிர்கொள்வதற்குத் தேவைப்படும் தொகையை அந்நிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்காக, அரசமைப்புச் சட்டத்தின் 204—ஆம் உறுப்பின் (1)—ஆம் கூறுடன் இணைத்துப் பொருள் கொள்ளப்பட வேண்டிய 205—ஆம் உறுப்பினையொட்டி அறிமுகப்படுத்தப்படுகின்றது.

**ஓ. பன்னீர்செல்வம்,**
*துணை முதலமைச்சர்.*

Secretariat Chennai,
2020 செப்டம்பர் 16.

**கி. சீனிவாசன்,**
*செயலாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.